3 1761 11915289 0

gc-Sh5
no. 647
ROBARTS

வள்ளுவர் புக் பைண்டிங் ஆபீஸ்,
2, வெள்ளியம்பலத் தெரு,
மதுரை.

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

சானந்தகணேசர்புராணம்

மூலமும்-உரையும்.

காப்பு.

விநாயகர்-துதி.

வெண்பா.

என்ற னகத்தல்லே யிரித்தே கதிராக்கி
ஞன்றி நெறிக்கான நடைகாட்டி-நின்றகி
தையான னத்தா னரியாக்கை நீக்கியன
கையான னத்தான் கழல்.

(என்பது) என்னிடத்திலிருக்கப்பட்ட
நீக்கி, சுஞ்ஞான பிரகாச முண்டாக்கி, ஆன
நடையைக்காட்டி, பூமியினிடத்தே
இரட்சிப்பது எவருடைய பாதமென்னி
பூதிய விஷ்ணுவிற்குச் சாபத்தால்வந்
அழகிய துதிக்கையையும் யானை
னேஸ்வருடையபாதம். என்றவா

பாயிர

உமாட

பருதிமதிதீயெனுமூன்றும்
கருகுதிமிரம்புலராதகளத்
சுருதிபரவுமிமையமக

(எ-து.) சூரியன் சந்திரன் அக்கினியென மூன்றும் கண்க ளாக விருந்தாலும், கரியவிருள் நீங்காத கண்டத்தையுடைய பரமேஸ்வரன் மகாமேருவை வில்லாகவளைத்தவர், வேதங்கள் துதிக்கப்பட்ட மலையரையன்மகளுக்குப்பதியானவர், இப்படிப் பட்ட சிவனுடையபேரைத் தெப்பமாகப் பிடித்துக்கொண்டு மிகதுக்கமாகிய அலைகளொழியாத பிறவிக்கடலைக் கடத்து வாம். எ-று. (க)

உமையவள்-துதி.

அலகின்முதுபேரண்டமளித் தருளுமயிலையயன்முதலாய்ப்
பலருமிறைஞ்சுமுயரரசின் பாலிற்படர்ந்தபசுங்கொடியை
யிலகுமொருகொம்புடைக்கரியை யீன்றபிடியையுளக்கமலத்
துலவுமிளவோதிமப்பெடையையுன்னிப்புகழ்ந்துவணங்குவாம்.

(எ-து.) எண்ணிறந்த பெரிய பிரமாண்டங்களாகிய முட் டைகளைப்பெற்ற மயிலையும், பிரமன்முதலான தேவர்கள் பணி யப்பட்டவுயர்ந்த பரமேஸ்வரனிடத்தேபடரப்பட்ட பச்சைக் கொடியையும், பிரகாசிக்கப்பட்ட வொற்றைக்கொம்புடைய [illegible]பகனென்னும் யானையை யீன்றருளிய பெட்டையானை [illegible] அன்பர்களுடைய ஹிருதயதாமரையிலே சஞ்சரிக்கப் [illegible]யுள்ள பெண்ணன்னப்பட்சியையும் ஒத்த உமா [illegible], மனதினாலேநினைத்து, வாக்கினாலேதுதித்துக் [illegible]ங்குவாம். எ-று. (உ)

வேறு.

விக்கினேசுரர்-துதி.

[illegible]ங்கோன் வளர்சடைத்தரங்கநீரை
[illegible]ரத்தான் முகந்துவிண்ணவர்கண்மீது
[illegible]ம் நெடுமதக்களிநல்லியானை
[illegible]நாடொறுமிறைஞ்சல்செய்வாம்.

[illegible]டய சிரசுக்கு மருமையான பர
[illegible]ருக்கப்பட்ட கெங்காஜலத்தைத்
[illegible]க்கையினாலே அடிக்கடி முகந்து
[illegible]ர்பேரிலே நிறைந்த சந்தோஷ
[illegible]ம்பீரமதமுள்ள யானையாகிய
[illegible]னைபொருந்திய பாதாரவிந்

சுப்பிரமணியர்-துதி.

காவிசெங்கமலமாம்பல் செழுங்குமிழ்காந்தளென்னும்
பூவொடுவழங்குமென்ற புனத்துறுமொருகொடிக்கு
மேவுநன்னீழல்செய்து வேங்கையந்தருவாய்நின்ற
கோவையம்பிகைப்பயந்த குமரனையிறைஞ்சல்செய்வாம்.

(எ-து.) கண்ணாகிய நீலப்பூவும், முகமாகிய செந்தாமரைப் பூவும், வாயாகியகுமுதப்பூவும், நாசியாகியகுமிழம்பூவும், கையாகியகாந்தட்பூவும், என்று சொல்லப்படுமிவைகளை உறுப்பாகக் கொண்டு விளங்கிய வள்ளியம்மனென்னு மொருபூங்கொடிக்கு இத்தினைப்புனத்தில்நல்ல நிழல்பொருந்த வேங்கைவிருக்ஷமாக நின்றவரும், பெண்ணாகிய பார்வதியம்மனாற் பெற்றவருமாகிய குமாரசுவாமியை நமஸ்காரம் பண்ணுவாம். எ-று. (௪)

வேறு.

திருஞான சம்பந்த சுவாமிகள்-துதி.

தீநடந்துண்டிடுஞ் சிறியவென்புபோய்
நானமென்குவிமுலை நாரியாகவோர்
பானலம்பொருவுசொற் பதிகம்பாடிய
ஞானசம்பந்தனை நாடிவாழ்த்துவாம்.

(எ-து) நெருப்பானது பற்றிவெந்த சாம்பலான எலும்பு போய்க் களபமணிந்த மிருதுவான குவிந்த தனவாரத்தை யுடைய ஒரு பெண்ணாக அமிர்தம்போன்ற நலமானசொல்லைப் பொருந்தியதிருப்பதிகம்பாடியருளினதிருஞானசம்பந்தமூர்த்தியை நோக்கித் துதிப்பாம். எ-று. (௫)

அப்பர்சுவாமிகள்-துதி.

அற்படுமிடத்தின னருளினாலொரு
கற்புணையாகமாக் கடல்கடந்தவர்
நற்பெயர்தன்னையே நவிறியுள்ளநீ
பற்பலபிறவியாம் பரவைநீந்தவே.

(எ-து) இருள்பொருந்திய கண்டத்தினையுடைய பரமேஸ்வரனருளினாலே ஒரு கல்லைத் தெப்பமாகப் பெரிய சமுத்திரத்தைக்கடந்த அப்பர்தம்பிரானிட திருப்பெயரை நெஞ்சமே அனேக பிறவியென்னும் சமுத்திரத்தை நீந்திட நீ தோத்திரம் பண்ணிக்கொள். எ-று (௬)

சுந்தரமூர்த்திசுவாமிகள்-துதி.

அன்றுவன் செங்கல்லை யம்பொன்னாக்கிய
தென்றமிழ்நாவலன் றீயவென்னைமுத்

துன்றியநலந்திகழ் தூயனுக்குவ
னென்றவனிணையடி யிறைஞ்சுவேனரோ.

(எ-து.) வலிமைபொருந்திய செங்கல்லையெல்லாம் அன்று பொன்னாகப்பாடிய அழகுபொருந்திய தமிழ்ப்புலவனானசுந்தரப்பெருமானனவர் திமைபொருந்திய என்னையும் நன்மைவளங்கப்பட்ட ஞானதேகமாக்குவரென்று அவரிரண்டு பாதங்களையுமிறைஞ்சுவேன். எ-று. (எ)

வேறு.

மாணிக்கவாசகசுவாமிகள்-துதி.

முதிர்பெரும்புகழ் முத்தமிழ்மாறன்முன்
மதுரைவீதியில் மால்விடையூர்பவன்
குதிரையேறி வரக்கவிகூறிய
சதுரனெண்மலர்த் தாளையிறைஞ்சுவாம்.

(எ-து.) மேலான பெருங்கீர்த்தியை வாய்ந்த இயலிசை நாடகமென்னு முத்தமிழ்விளங்கிய பாண்டியன் முன்னே, மதுராபுரிவீதியில் மாலாகிய ரிஷபமேறி நடத்தப்பட்ட பரமேஸ்வரன் குதிரைமேலேறிவரத்தக்கதாக திருவாசகஞ் செய்தருளிய மாணிக்கவாசகருடைய பிரகாசமுள்ள மலர்போன்ற பாதத்தை நமஸ்கரிப்பாம். எ-று. (அ)

வசவேசர்-துதி.

மல்லலம்புவி மீதுவளைந்துகொண்
டெல்லையின்றி யிருந்தசமணெனு
மல்லகற்றி யருள்வசவேசனை
யொல்லையேத்தி யுளத்திருள்மாற்றுவாம்.

(எ-து.) வளப்பமான அழகிய பூலோகமெங்கும் வளைந்துகொண்டிருந்த எண்ணிலாத் சமணமாகிய விருளைத் துறத்தியருளின வசவேசனைச்சீக்கிரமாகத் துதித்து மனதிலுள்ள அஞ்ஞானவிருளை நிவர்த்திப்போம். எ-று. (கூ)

வேறு.

சானந்தகணேசர்-துதி.

அத்தியினகன்றமா நிரையத்தாழ்ந்துளோர்க்
கெத்தவத்தோர்களு மெய்தொணாததோர்
முத்தியையுதவுசா னந்தமூர்த்தியைப்

(எ-து.) சமுத்திரத்திலும் விசாலமான பெரிய நரகங்களிலே அழுந்திக்கிடந்த பேர்களுக்கெல்லாம் அறியதவங்களைச் செய்தபேர்களு மடைதற்கருமையான மோக்ஷத்தைக் கொடுத்தருளிய சானந்த கணேசமூர்த்தியைப் பத்தியுடனே மிகத்தெண்டனிட்டுத் தோத்திரம் பண்ணுவாம். எ-று. (கo)

வேறு.

திருத்தொண்டர்கள்-துதி.

நீக்கரும்பிற வித்தளை நீங்கவும்
போக்கில்லா தநன் முத்திபொருந்தவுந்
தேக்குமன்பிற் சிவசிவவென்னுமோர்
வாக்கையென்றும் வழுத்திவணங்குவாம்.

(எ-து.) விலக்கவரிதாகிய பிறவிபின்னலை நீங்கவும், அழியாத நல்லமுத்தியிலே சேர்ந்திருக்கவும், முதிர்ந்தவன்பினால் சிவசிவவென்னும் வாக்கையுடைய ஒப்பற்ற அடியார்களை வணங்குவாம். எ-று. (கக)

வேறு.

அவையடக்கம்.

மேலுயர்மதியுட னாடவேண்டியோர்
பாலகன்விளித்திடும் பான்மைபோலுமால்
ஞாலமேழ்புகழ்கண நாதன்மாக்கதை
வாலறிவொன்றிலேன் வழுத்தநின்றதே.

(எ-து) உயர்ந்த ஆகாசத்திலிருக்கப்பட்ட சந்திரனுடனே விளையாடவேண்டி ஒன்றுமறியாத ஒருபிள்ளையானது அழைத்தவிதம்போலாகும் ஏழுலோகமும் புகழப்பட்ட சானந்தகணநாதருடைய மகாகதையை மெய்யறிவில்லாத நான் பாடத்தொடங்கினது. எ-று. (கஉ)

விடந்தனையமுதென மிசைந்தகோனரு
ளடைந்தசானந்தனோ ரறிவிலேன்சொலின்
நடந்திடுபுன்மையும் நன்மையென்றுகொண்
டுடன்படுமெனவவன் கதையையோதுகேன்.

(எ-து.) ஆலகாலவிஷத்தை யமுதமாகக்கொண்ட பரமேஸ்வரனருள்பெற்ற சானந்தகணேசரர் ஓரறிவுமில்லாத வென்னுடைய சொல்லிலே உண்டான களங்கங்களையும் நன்மையாகக்கொண்டருளுவரென்று அவர்கதையைச்சொல்லப் புகுந்தேன்.

பாயிரம் - முற்றிற்று.

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்.

புராணவரலாறு.

தாதவிழ்மலர்பொழி தருநிறைந்ததோர்
கோதறுநைமிச வனத்திற்கூடிய
போதமாமுனிவரர் புகலருந்தவ
சூதனைநோக்கிமற் றினையசொல்லுவார்.

(எ-து.) மகரந்தங்களுதிராநின்ற புஷ்பங்களைப் பொழியும் விருக்ஷங்கள் நிறைந்தஒப்பிலாதகுற்றமற்ற நைமிசாரணியவனத்திலே கூடியிருக்கப்பட்ட ரிஷிகளெல்லாம் சொலற்கரிய தவ சிரேஷ்டராகிய சூதமகாரிஷியைப்பார்த் திதனைச் சொல்லுவார்கள். எ-று. (க)

கண்ணுதலெம்பிரான் கதைகள்யாவையு
முண்ணயந் தெங்களுக் குதவல்செய்தனை
யண்ணனன்மாதவ னுதிதேவருக்
கெண்ணரும்பரமனே யிலையென்றோர்ந்தனம்.

(எ-து.) நெற்றிக்கண்ணையுடைய பரமேஸ்வரனது கதைகளெல்லா மெங்களுக்கு மனது சந்தோஷமாகச் சொன்னீர், சூதமகாரிஷியே விஷ்ணுமுதலான தேவர்களுக்கெல்லாம் எண்ணுதற்கரிதாகிய பரமேஸ்வரனே மேலான கர்த்தாவென்று அறிந்துகொண்டோம். எ-று. (உ)

கயல்விழிப்பிரைநுதற் கன்னிபாலுறை
புயனிகர்கண்டனுக் கன்புபூண்டிடு
மயலறுமினியசா னந்தமாதவ
னுயர்கதைகேட்கவெம் முள்ளத்தெண்ணினோம்.

(எ-து.) மீனைப்போன்ற கண்ணும், பிரைபோன்ற நெற்றியுமுள்ளபார்வதிதேவி,பக்கத்திலுறைந்தமேகம்போன்ற கண்டத்தையுள்ள பரமேஸ்வரனுக்கு அடிமைபூண்டுமயக்கங்களையெல்லாமறுத்த சானந்தமகாரிஷியினுடைய கதையைக்கேட்கவேணுமென்று எங்களுடையமனதில் நினைத்தோம். எ-று. (ங)

அன்னவனிய்மபுர மடைந்ததன்மையும்
பன்னருநிரையமுற் றமந்தம்பாயுகை

யின்னலில்சிவபுரத் திருத்துநீர்மையு
முன்னருளாலெமக் குரைத்தல்வேண்டுமால்.

(எ-து.) அந்த சானந்தமகாரிஷி இயமலோகத்திற்குப் போனவிருத்தாந்தமும் அவ்விடத்தில் சொல்லுதற்கரியதாயிருச்கும் நரகங்களில் விழுந்தழுந்திக்கிடந்த பாவிகளையெல்லாம்துக்கமில்லாதசிவலோகத்தி லடைவித்ததன்மையும் சூதமகாரிஷியேயெங்களுக்கு அருள் செய்யவேணுமென்றார்கள். எ-று. (ச)

அக்கதைகேண்மினென் றாசையானது
மிக்கெமையீர்த்தது விளம்புவாயெனப்
புக்குறுசவுனகா தியற்குப்போதனை
யொக்கநற்புராணமா முநிவனோதுவான்.

(எ-து.) அந்தச்சானந்தமகாரிஷியின்கதையைக்கேளுங்களென்று விருப்பமானது மிகவுமெங்களைத்தூண்டுகின்றது, தேவரீர் சொல்லவேண்டுமென வந்தடைந்தநைமிசாரணியத்திலிருக்கும் ரிஷிகள் நாற்பத்தெண்ணாயிரவர்களுக்கும், பதினெண்புராணமும் போதிக்கவல்லவராகிய சூதமகாரிஷியானவர் சொல்லுகிறார். எ-று. (ரு)

புராணவரலாறு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உற்பத்திச் சருக்கம்.

ஆரணருரைக்குமெட் டாதிருந்திடுங்
காரணமுணர்ந்தவர்க் காதலாலுறுஞ்
சீரணிபதரிகாச் சிரமந்தன்னிலோர்
பூரணவித்தெனும் புனிதன்வாழ்ந்தனன்.

(எ-து.) வேதவாக்கியத்துக்கும் எட்டாமலிருக்கப்பட்ட மூலகாரண கர்த்தாவாகிய பரமசிவனையறிந்த பெரியோர்களெல்லாம் ஆசையுடனே சேர்ந்திருக்கும் அழகான பதரிகாசிரமத்திலே பூரணலித்தென் றொருபெயரையுடைய தூயவன் வாழ்ந்துகொண் டிருந்தான். எ-று. (க)

அத்தவன்பெருமையை அனந்தனென்றுள
வித்தகன்விளம்பினும் விளம்பவொண்ணுமோ
வுத்தமநல்லற முடம்புமெய்ச்சிவ
பத்தியாருயிரெனப் படைத்தமேன்மையான்.

(எ-து.) தவமுள்ள அந்தப்பூரணவித்து என்னும் மகாரிஷியின் பெருமையை ஆதிசேஷனாகிய விற்பன்னனால் சொன்னாலுஞ் சொல்லி முடியுமோ, உத்தமமானநல்லதர்மங்களெல்லாஞ் சரீரமாகவும் சிவபத்தியே தனக்குப்பொருந்திய சீவனாகவும் படைத்த மேன்மையுள்ளவர். எ-று. (உ)

அருமறைநான்குமா றங்கமுங் கெடா
உரனருள்புராணமீ ரொன்பதுந்தவ
வரர்புகழாகமப் பரப்புமற்றவுங்
கரதலநெல்லியி னுணர்ந்தகாட்சியான்.

(எ-து.) அந்தப்பூரணவித்து மகாரிஷியானவர் அரிதாகிய நாலுவேதமும் ஆறுசாத்திரமும் அழியாதஞானந்தரப்பட்ட பதினெண்புராணமும் தவசிரேஷ்டர்கள்புகழும் இருபத்தெட்டாகமமும் மற்றவனைத்தும் உள்ளங்கைநெல்லிக்கனிபோலக்கற்றுணர்ந்த காட்சியையுள்ளவர். எ-று. (ங)

அதிகமாலயன்முத லாருயிர்க்கெலாம்

சிதைவிலனவனிரு செம்பொற்றுண்மல
ரிதையதாமரைமிசை யிருத்துமன்கிஞன்.

(எ-து.) உயர்வாகிய விஷ்ணுமுதலிய பசுக்களுக்கெல்லாம் உயர்ந்தவர் பரமசிவனே என்று நினைவில்மாறுமல்கொண்டவர் அப்பசுபதியினதுஉபையதிருவடிப்பொற்றுமரையைஇருதைய கமலத்திலிருத்தும் அன்புடையவர். எ-று. (ச)

மயலறுமைவகை மகனெனப்படும்
பயிரிடைவருமுயர் பயனைப்பெற்றுளான்
வியன்மிகுகடலுடைப் புவியின்மேவிய
வுயிரெலாந்தன்னுயி ரொக்கவோம்புவான்.

(எ-து.) மயக்கமறுக்கும் * ஐந்துவகையாகமென்னும்பயிரினிடத்தேவரப்பட்ட அதிகபலனைப்பெற்றவர், விரிவானசமுத்திரஞ் சூழ்ந்த பூமியினிடத்திலேயிருக்கு முயிரையெல்லாந் தன்னுயிர்போலக் காக்கப்பட்டவர். எ-று. (ரு)

புலனெறியறிவினைப் போக்கல்செய்திடாத்
தலைமைபெற்றுடையவன் றனையடைந்தவன்
குலைவறத்தவநெறி யுதவும்பான்மையா
னலகில்பேரருட்கட லாயபண்பினன்.

(எ-து.) ஐம்புலன்வழியிலேதன்னுடையபுத்தியைப்போகவிடாமல் நிறுத்தியமேன்மைபெற்றவர்தன்னைவந்தடைந்தபேர்களுக்குச் சஞ்சலம்நீங்கத் தவசுசெய்யும் வழியைக் கற்பிக்குங் குணமுள்ளவர் மிதமில்லாதகிருபைக்கடலாகியபண்புள்ளவர்.()

விரதமெய்ப்பூரண வித்தென்றோதுமவ்
வரமுனிக்கினியவில் வாட்கைக்கேற்றிடு
முரியவள்கற்பினுக் கொப்பிலாள்பெயர்
தரைபுகழ்பத்திர தத்தையாமரோ.

(எ-து.) மெய்யாகிய சிவவிரதங்களைப்பூண்டபூரணவித்தென்றுசொல்லப்பட்டஅச்சிறந்தமுனிவருக்குஇனிமையானவில்லறவாட்கைக்குரியஒப்பிலாதகற்பினையுடையமனைவியின்பெயரை பெரியோரால் பத்திரதத்தையம்மையென்று சொல்லுவர். (எ)

அருந்ததியுடனன சூயையாதியாம்
திருந்திழையார்களுஞ் செப்பத்தக்கதோ

---

* ஐந்து சிவயாகங்களாவன:—சிவனையே குறித்துச்செய்யுந்தவமும், சிவனையே அர்ச்சிக்குஞ் சிவபூசாகர்மமும், சீருருத்திரபிரணவ பஞ்சாக்ஷர முதலானசெபமும், சிவமடங்களையே நினைந்தெண்ணுதலும், சிவாகமத்

ரிருந்தவமுடையவ ளிறைவனானதன்
பெருந்தவனேயுயி ரென்னப்பெற்றுளாள்.

(எ-து.) அருந்ததியுடனே அனசூயை முதலான பெண்களெல்லாருங் கொண்டாடத்தக்கதற்புள்ளவள், ஒப்பிலாதபெருமையையுடைய பூரணவித்து மகாரிஷியேதன்னுடைய சிவனெனப்பெற்றவள். எ-று. (அ)

கொழுநனைவன்சினங் கூறனேக்கினே
ருழுவையாயுதிப்பரென் றுன்னித்தான்றினங்
தொழுதெழுமிறையவன் முனிந்துசொல்லினும்
வழுவறுமுளத்திடை மகிழ்வுகூர்வளால்.

(எ-து.) புருஷனை கடுங்கோபங்கொண்டுபார்த்தஸ்திரீகள் புலியாகப் பிறப்பார்களென்றறிந் ததைநினைத்து தினந்தோறும் தான் பணியப்பட்ட புருஷனைவர் கோபித்துச் சொன்னாலும் தவறில்லாததன்மனதினிடத்தேசந்தோஷங்கொள்ளுவாள் எ-று

மாறிநின்றுத்தரஞ் சொல்லிவைதவர்
சீறிடுங்கொள்ளிவா யாகிச்சீரிழந்
தீறிலாதுழல்வரென் றெண்ணிக்கோனொடு
பேறுறத்தொழுதுமென் மொழிகள்பேசுவாள்.

(எ-து.) புருஷனுக்கெதிராக நின்றுகொண்டு உத்தரஞ் சொல்லிவையப்பட்ட பெண்கள் சீறப்பட்ட கொள்ளிவாய்ப்பிசாசமாகிச் சிறப்புகெட்டு வெகுநாளைக் குழலுவார்களேயென்றெண்ணித்தன் பதியுடனேபிறவிப்பயனையடையவேண்டி வணங்கி இனியவார்த்தைக்கொண்டு வேசுவள். எ-று. (கo)

பேசருங்கணவர்முன் கிடந்தபெய்வளைப்
பாசிழைமடந்தையர் பாந்தளாகிமற்
றேசுறுமுழைகளிற் கிடப்பரென்றுதன்
னேசமோடிறைவரி லெழுந்து நிற்பளால்.

(எ-து.) புருஷனுக்கு முன்பாகக் காலைநீட்டியும் படுத்துக்கொண்டுமிருந்த வளையலணிந்த பெண்கள், பெரும்பாம்பாகப் பிறந்து குகையிலே கிடப்பார்களென்று தன் புருஷன் வந்தால் அன்புடனே யெழுந்து நிற்பாள். எ-று. (கக)

மேவியதன்பதி யன்றிவேறொரு

ளாவியாங்கணவனைத் தூற்றுமாய்வளைப்
பாவையரானனம் பார்க்கக்கூசுவாள்.

(எ-து.) பொருந்திய தன் புருஷனே தனக்குத் தெய்வமல்லாமல் வேறு ஒருதெய்வமுண்டென்னும்வார்த்தையைதன்மனதிலேயுட்கொள்ளாதவள், சீவனைதங்கள்புருஷரைத்தூறுசொல்லப்பட்ட பெண்களுடைய முகத்தைப்பார்க்கக் கூசுவாள். ()

இத்தகைச்செயலுட னியையும்பத்திர
தத்தையுஞ்செயற்கருந் தவத்துப்பூரண
வித்தெனுமுனிவனும் வேறெனுதுநெஞ்
சொத்துநன்மனையறத் தொழுகுநாளிலே.

(எ-து) இந்தப்பெருமையானநடக்கையுடனேஒப்புரவான பத்திரதத்தையம்மையும் ஒருவாற்செய்ய வருமையானதவத்தையுள்ள பூரணவித்தெனுமுனிவரும்பேதமில்லாமல், ஒருமனதாகவிருந் திருவரு மில்லற தர்மத்தில் நடந்துவருகிறநாளையில்.

என்னனைபத்திர தத்தை யென்பவள்
மன்னியசீருடை மகவிலாமையால்
தன்னுளமென்னுடல் சாம்பித்தன்னுயிர்
மன்னனையினையடி வணங்கிக்கூறுவாள்.

(எ-து.) என்மாதாவாகிய பத்திரதத்தைஅம்மையானவள் நிலைபெற்ற சிறப்புடைய புத்திரனில்லாதபடியினாலே தன்மனதைப்போலத் தன்சரீரமும் மெலிந்துபோய் தன்னுடைய பிராணநாயகரான பூரணவித்து மகாரிஷியினது இரண்டுபாதத்தையும் வணங்கிச் சொல்லுவாள். எ-று. (கச)

வேறு.

இந்துவானதி மிலைச்சியசெஞ்சடையிறைவ
*னந்துசீர்பல வளித்தனனருளொடுநமக்கு
மைந்தனீந்தில னன்னதைமரபொடுமதித்து
நொந்துநொந்தயர் கின்றதென்சிந்தனை நடங்கி.

(எ-து.) சந்திரனையும், கங்கையையும், தரித்தருளிய சிவந்தசடையினையுடைய பரமேஸ்வரன்மிக்கசெல்வத்தையும் சிறப்பினையுங்கொடுத்தவர் கிருபயோடு நமக்கு ஒருபுத்திரனைத் தயவு பண்ணவில்லைஅதனால்குலம்விளங்கவேணுமேயென்று யோசித்துஎன்சிந்தையானதுவாடிநொந்து நொந்திளைக்கின்றதென்றாள்.

தாதுலாவுசெந் தாமரையிலாதபைந்தடமும்
சோதிதந்தவெண் கலைமதிதோன்றிடாவிரவும்
போதிலாதுசெய் திடுமுயர்பூசையும்பொருவு
மாதரந்தரு நன்மகவின்மையாமகமே.

(எ-து.) தாதுப்பொடிகள்விளங்கப்பட்டசிவந்ததாமரைகளில்லாத தடாகம்போலும்,வெள்ளையானகாந்திதரப்பட்ட கலையுள்ள சந்திரனில்லாத இராக்காலம்போலும், புஷ்பமில்லாமற் செய்யும்உயர்ந்த பூசையைப்போலும்இருக்கின்றதுபிரியங்கொடுக்கும் நல்ல பிள்ளைகளில்லாத வீடுகள். எ-று. (கசு)

மகவிலாதவற் குயர்கதியிலையெனமறைநூல்
புகலுகின்றது முருகனையீன்றநம்புனித
னகமகிழ்ந்துமைந் தனையளித்தருளுவனருளா
லிகலின்மாதவஞ் செய்திடப்போதிரென்றிசைத்தாள்.

(எ-து.) புத்திரனில்லாதபேருக்கு மேலான கதியில்லையென்று வேதங்கள்சொல்லுகின்றது, சுப்பிரமணியரைப்பெற்றநம்மிட பரமேஸ்வரன் மனது சந்தோஷமாய் நமக்குப்புத்திரனைத் தயவு பண்ணுவார், நீரிப்போது அன்புடனே நிலைபெற்ற தபசு பண்ணப்போமென்றுபூரணவித்துமகாரிஷியுடனே சொன்னுள் பத்திரதத்தை யம்மை. எ-று. (கஎ)

என்னுமாற்றமங் குரைத்தலுமேந்திழைகேட்டி
யொன்னலார்புர மெரித்தவனுமைக்கொருதலைவன்
உன்னருங்கொடைக் கிறையவன்கொடாததொன்றுளதோ
பன்னியென்றெலா முணர்ந்தருள்முனிவரன்பகரும்.

(எ-து.) இப்படிக்கொத்த வார்த்தையைப் பத்திரதத்தையம்மைசொல்ல, முனிவர் தன்பெண்சாதியைப்பார்த்துகேளும் பெண்கள்நாயகமேசத்துருக்களுடைய திரிபுரத்தையெரித்தவர் உமாபரமேஸ்வரிக்கு நாயகரானபரமேஸ்வரர், நினைக்கவரிதான கொடைகளுக் கதிபதியா யிருக்கின்றவர்,அவர்கொடாததொன்றுண்டோ, வருந்தாதேயென்றுமனைவிசொல்லியயெல்லாமறிந்த முனிவர் சொல்லுகின்றார். எ-று. (கஅ)

அரியமாநவ நிதிகளைத்தனபதிக்களித்தான்
பொருவிலிந்திரற் களவறுபோகமீய்ந்தனனாற்
பரவுசீதாற் கருளினன்சுக்கிரப்பயனை

(எ-து.) அரிதானசங்கநிதிபத்மநிதியென்றுசொல்லப்பட்ட புதுமையுள்ள திரவியபொக்கிஷத்தைக் குபேரனுக்கும், ஒப்பற்றதேவேந்திரனுக்குஅளவற்றவைபவங்களையும்,பூசிக்கப்பட்ட விஷ்ணுவுக்கு சக்கிராயுதத்தையும்கூடிய தேவர்களுக்குமகாமேருவையும் கொடுத்தார் பரமேஸ்வரர். எ-று. (கசூ)

அருள்விநாயகற் களித்தனன்விஞ்சைகளனைத்து
மிரதிமாதினுக் குதவினனெழிலுடைமதனை
வரனெடுஞ்சடை தனிலிடங்கொடுத்தனன்மதிக்கன்
றொருசுவேதனுக் குதவினனுயர்பதந்தனையே.

(எ-து.) கிருபையுள்ள விநாயகமூர்த்திக்குச் சகலவித்தைகளையும், அழகுடையரதிதேவிக்கு இறந்துபோனமன்மதனைவரவழைத்தும்,தன்னுடையநெடியசடையிலேயிருக்கச் சந்திரனுக்கு இடமும், முன்னொருசுவேதனுக்கு மேலான பதவியையுங் கொடுத்தார், பரமேஸ்வரர். எ-று. (உ0)

இன்னுமாங்கவ னளித்தனனியாமிவணிருந்து
பன்னினுலவை முடியுமோபனிமதிச்சடையோன்
றன்னருந்திரு வருளிலியானினைத்ததுந்தருவ
னென்னவோதியே மனையிடைப்பன்னியையிருத்தி.

(எ-து.) இன்னம் அந்தப் பரமேஸ்வரன் கொடுத்தருளியதை நாமிங்கேயிருந்துசொன்னுலுமதுதொலையுமோ,குளிர்ந்த சந்திரனைத்தரித்த சடாமகுடத்தையுடைய பரமேஸ்வரன் தம்முடைய திருவருளினுலே நாம் நினைத்த காரியந் தருவாரென்று சொல்லி மனையினிடத்திலே தன்பெண்சாதியானபத்திரதத்தையம்மையை வைத்து. எ-று. (உக)

கண்ணுதற்பிரா னிமையவற்கரியகங்கடவு
ளண்ணல்சேவடிக் கமலமீதுளந்தனையமைத்து
நண்ணருந்திரைக் கடலுடைநங்கைசெய்தருளும்
புண்ணியந்தனை யொத்ததோர்வனத்திடைபுகுந்தார்.

(எ-து.) தேவர்களுக்கும் அருமையான நமதுதேவனுகிய நெற்றிக்கண்ணுள்ள கர்த்தாவான பரமேஸ்வரனுடையபாதகமலத்திலே மனதைவைத்து சொல்லுதற்கரிய அலையுள்ள சமுத்திரத்தை யுடையாகத் தரிக்கப்பட்ட பூமிதேவிபண்ணிய புண்ணியம்போலதழைத்தவொருவனத்திலேதவஞ் செய்யப்போய்ப்

குலவுனிலத் துள்ளனதருக்களுங்கொடியும்
பலநிறைந்திடு புதற்களும்பிறவுமிப்படிமே
லிலகியோரிடத் திருந்திடவேண்டுமென்றெண்ணி
மலரினுன்முகம் படைத்ததொத்திருந்ததவ்வனமே.

(எ-து.) பூரணவித்துமகாரிஷி தபசு செய்யப்போன வனமானது பூலோகத்திலுண்டான விருக்ஷங்களையும், கொடிகளையும், பலசெடிகளையும்மற்றுமுண்டானபலவளப்பங்களும்நெருங்கி நிறைய ஓரிடத்திலேவர்த்தித்திருக்க வேணுமென்றெண்ணி பிரமதேவனுனவன் சிருஷ்டித்து வைத்ததுபோலவிருந்தது. ()

சித்திரக்கொழும்பிடவுகள் சிறப்புறநிரையே
மொய்த்ததண்மலரொடுமிக முடிவிலாதுறைத
லத்தனித்திருவனத்தற மகளீர்பார்த்தருள
நித்திலத்தினிற்புரிநிலைத் தேர்களைநிகர்க்கும்.

(எ-து.) அழகான செழிப்புள்ள பிடவ விருக்ஷங்கள் அங்கு சிறப்புடனே வரிசையாக மொய்த்திருக்குங்குளிர்ச்சியானபூக்களோடே முழுதுநிறைந்திருப்பது அந்தவொப்பில்லாதவனத்தினுடைய அலங்காரத்தை ரம்பாஸ்திரீகள் ஏறிப்பார்க்கவேண்டி முத்தினுலேசெய்த நிலைத்தேர்களைப் போலிருக்கிறது. எ-று. ()

காந்திபெற்றுமேலெங்கணுங் கவினுறத்தளிர்த்த
மாந்தருத்தலையிடையொரு தோகைதான்வதிதல்
சேர்ந்ததீயிடைகுளித்திடு காலையச்செழுந்தீ
யேந்திநின்றருள்சீதையை நிகர்த்திடுமியம்பில்.

(எ-து.) அந்தவனத்திலே சிவப்பான காந்தியைப்பெற்று மேலெங்குமழகுபொருந்தித் தளிர்கள்குழைந்திருக்கும்மாமரத்துச்சி நடுவே யொரு தோகை மயிலிருப்பது சீதா தேவியாரை சிரைமீட்டி நெருப்பிலே முழுகிவாவென்று ஸ்ரீராமர் சொன்ன போது அந்தத் தேவியார் சிவந்த தீயினிடத்திலே முழுகின காலையில் அந்தச் செழிப்பான அக்கினி அந்த வம்மனையேந்திக் கொண்டு நின்றதுபோல விருந்தது. எ-று. (உரு)

விண்புக்கோங்கிய தருக்களின் வெண்மலர்வீழ்ந்து
தண்பெற்றீர்ந்தளிர்நிழல்களிற் றகையுறக்கிடத்தல்
நண்புற்றேவனம்பார்த்திட நண்ணுமாதவர்க்கு
வெண்பட்டாதனம்விரித்திடுந் தன்மையின்விளங்கும்.

(எ-து.) ஆகாசமளவும் புகுந்தோங்கிவளர்ந்த விருக்ஷகங்

ள்ள மரத்தினிழல்களிலே உதிர்ந்து கிடக்கிறது ஆசையோடு அந்த நந்தனவனம்பார்க்க வேண்டிவரப்பட்டமகாரிஷிகளுக்கு வெள்ளைப்பட்டாலாசனம்விரித்ததுபோலவிளங்கியது.எ-று.()

சாலவேமலர்ந்திடுநறும் பலாசமென்ற ருவி
லேலமாகிய பசுங்கொடி படர்ந்துமேலிலங்கல்
வாலபானுந்தன்மிசையொளிர் மரகதமணிமா
மாலைபற்பலபுனைந்து வீற்றிருந்திடல்மானும்.

(எ-து.) பின்னையும் அந்தவனத்திலே மிகுதியாகப்புஷ்பங்கள் மலர்ந்திருக்கப்பட்டமிருதுவானவாசனையுள்ளபுன்முருக்க மரத்தின்மேலே படர்ந்த பசுங்கொடிகள்,விளங்குகிறதுஇளஞ் சூரியனுனவன் தன்சரீரத்தின்மேல் பெருமையுடனே பிரகாசிக்கிற மரகதமணிமாலைகளனேகந்தரித்துக்கொண்டுவீற்றிருக்கின்றதுபோல விருந்தது. எ-று. (உஎ)

மலர்நிறைந்திடுகன்னி காரமுமதின்மருங்கே
யிலைசிறந்ததோர்புன்னையு மிணைந்துநின்றிடுதல்
துலவில்நான்மறைவேதனும்முகுந்தனுந் தொடர்போ
டிலகியோரிடத்தெய்திவீற் றிருந்திடல்பொருவும்.

(எ-து.) புஷ்பங்கள் நிறையப் பூத்திருக்கப்பட்டகோங்கு மரமு மதன்பக்கத்திலேயிலைகள்தழைந்தவொருபுன்னைமரமும் இணைந்து நிற்றலானது முடிவில்லாத நான்குவேதத்தையுடைய பிரமதேவனும், மஹாவிஷ்ணுவுஞ் சினேகத்தோடே தங்கள் பொன்னிறமும் பச்சைநிறமும் பிரகாசிக்க வோரிடத்திலேகூடி வீற்றிருந்ததுபோல விளங்கியது. எ-று. (உஅ)

திசையில்யோசனை கமழுமிவ்வனத்திடைசெறிவி
லிசைபொருந்தளிப் படலம்வந்திடுமெழிலோக்கி
வசையில்விண்ணிடை நடந்ததண்முகிலெனமதித்து
நசையொடுஞ்சிறை விரித்தருந்தோகைகணடிக்கும்.

(எ-து.) பின்னையும் எட்டுத்திசையிலேயு மொருயோசனை தூரத்துக்குவாசனைபரிமளிக்கப்பட்டஇந்தவனத்தில் கிதம்பொருந்தியவண்டுக்கூட்டங்களிடந்தேடிவரும்அழகைப்பார்த்துநிர்மலமான வாகாசத்திடத்தே தவழுங்குளிர்ச்சியுள்ளமேகமெனயெண்ணிஆசையுடனே சிறகைவிரித்துக்கொண்டு அரிதானமயில்களாடும். எ-று. (உகூ)

தரித்தசீரிளங்கழைமிசை தனிக்குயிலொன்று

டருத்திபெற்றிடுமாங்குறு கம்பமீதாட
வொருத்தியேறியேகாண்மினென் றிறைத்திடலொக்கும்.

(எ-து.)அழலினால்தகிக்கப்படும்போத்துமூங்கிலின்மேலே யொப்பில்லாத இளமைதங்கிய வொரு குயிலானது திருத்த மாகவிருந்துகொண்டுகூவுகிறதுஒருதொம்பரப்பெண்ணானவள் மிக்க சிறப்போடு களரியில் நட்டிருக்கும் கம்பத்தின்பேரிலேறி ஆடப்போவதை எல்லாரும் பாருங்களென்றுஆசையுடன் கூப் பிடுதல்போலவிருந்தது அந்தவனத்தில். எ-று. (௩0)

மீதுயர்ந்திடுநெட்டிலையிருப்பையின் விரைகொள்
போதனந்தம்வீழ்ந்தெங்கணும் பொலிவுறக்கிடத்தல்
ஆதவன்பொருதுடுக்கண மன்னிரைபொழிலின்
சீதம்வேண்டிவந்தொளியொடு திகழுதல்பொருவும்.

(எ-து.) மேலேயுயர்ந்து வளர்ந்து நீண்ட இலைகளையுள்ள இலுப்பைமரத்திலிருக்கப்பட்ட வாசனையுள்ள புஷ்பங்களுதிர்ந் தெங்கும் பொலிவுடனே கிடைக்கிறதுசூரியனதுஉஷ்ணம்பொ றுக்கமாட்டாமல்நட்சத்திரக்கூட்டங்களெல்லாம்நிறைந்து அந் ததோப்பிலேகுளிர்ச்சிவேண்டிவந்துபிரகாசத்துடனே விளங்கி னதுபோலவிருந்தது. எ-று. (௩௧)

நெடுவிசும்புதோய்கோளியாமாசினிநிரையிற்
குடமெனும்படி தூங்கியநறுங்கனிகுலவல்
வடுவின்மைந்தர்பாலுளத்தினிற் குழைவொடுமறுவிக்
கடினமானது காட்டியதந்தையற்கடுக்கும்.

(எ-து.) உயர்ந்த ஆகாசத்தையளாவிய பூவில்லாமல்காய்க் கும் பலாமரங்களில்வரிசையாகக்குடங்களென்று சொல்லும்ப டிக்குஅசைவில்லாம லுறங்கிக்கிடக்கிறமணமுள்ளபலாப்பழங் கள் விளங்குவதுகுற்றமில்லாத பிள்ளைகளிடத்தில்மனதுக்குள் ளேபக்ஷத்துடனேகூடி வெளியே கோபத்தைக்காட்டிக்கொ ண்டிருக்கும் தகப்பனைப்போல அந்தப் பலாப்பழங்களுள்ளே கனியும் மேலே முள்ளுமாயிருக்கின்றது. எ-று. (௩௨)

வான்றொடப்படர்ந்தெழுந்துமே வளர்ந்ததேமாவி
னான்றபொன்னிறப் பைங்கனித்தன்மையையறையி
லேன்றவன்கடினந்தனை யுள்ளுறவிருத்தித்
தேன்றரும்படி யொழுகிடுவாறெனத்திகழும்.

(எ-து.) மேகமண்டலத்தை யளாவி கிளைத்தெழுந்துவளர்

மாகப்பழுத்த மாம்பழத்தின் குணமானது உண்டான கடுரத்தை மனதுக்குள்ளே யிருக்கவைத்துவெளியிலேதேனைப்போல ருசிக்கும்படி யிங்கிதம் பேசிக்கொண்டு வாழ்பவர்களைப்போல மாம்பழமானது உள்ளே துவர்த்த கொட்டையும் மேலேயினிப்புமாயிருக்கின்றது. எ-று. (௩௩)

மாதவிக்குலம்போதலா தளவின்மாவகுளம்
பாதிரித்தொகைமாதளை பணைவழைமாவுந்
தாதகித்திரள்புன்னையால் சண்பகந்திலகஞ்
சீதளப்பலாமுதலிய செறிந்ததவ்வனமே.

(எ-து.) குறுக்கத்தியினம்புஷ்பத்திருப்பதுமல்லாமல்அளவற்ற மாமரங்களும் மகிழமரங்களும், பாதிரிமரங்களும் மாதளைப்புதர்களும், அரசமரங்களும், சுரபுன்னையும், குங்குமமரங்களும் ஆத்திவிருக்ஷங்களும், புன்னை, ஆல், சண்பகம், சிறுசண்பகவிருக்ஷங்களும், சீதளப்பலாமுதலான இன்னமனேக விருக்ஷங்களெல்லாம் நெருங்கி புஷ்பித்திருந்தது அந்தப்பூரணவித்துமகாரிஷி தபசுசெய்யப் புகந்தவனமானது. எ-று. (௩௪)

இன்னதன்மையின் விண்டொடவெழுந்தகானிடையே
நன்னதிப்புனல் பரந்தவேணியன்றிருநயன
மன்னபன்னமே பொதுளியதலரிவிற்புகறத்
துன்னருந்தனி வில்வநல்வனமுமொன்றுளதால்.

(எ-து.) இப்படிப்பட்டதன்மையுடன் மேகமண்டலத்தை அளாவி வளர்ந்திருந்த அந்த ஆரணியத்து நடுவே நல்ல கங்காஜலந் தவழ்ந்த சடையையுள்ள பரமேஸ்வரனிட திருநேத்திரம் போல் இலைகள் துளிர்த்ததாய் சூரியனது வெயிலும் நுழையமாட்டாத தாய் நினைக்கவரிதாகிய ஒப்பற்ற வொருவில்வவனமுண்டாயிருந்தது அதனை பூரணவித்துமகாரிஷிகண்டார் எ-று.

அந்தவில்வநல்வனத்திடை யவனியாமரிவை
யுந்தியொத்துளம் வழுவுதலிலாதகற்புடைய
சந்தமங்கையருள்ளமும் போன்றதுதகுநீர்க்
கந்தநாண்மலர்பைந்தடங் கவினுறவிளங்கும்.

(எ-து.) அந்தவில்வ வனத்து நடுவே பூமிதேவியினுடைய உந்திக் கமலம்போன்ற ஒருதடாகம், அதில் தவறில்லாதகற்பும் அழகும் வாய்ந்த பெண்களது மனதைப்போல மாசற்றஜலமும் மணமுமுள்ள புதிய மலர்களும் பூத்து விளங்கியிருந்ததையுங்

கரையினின்றவெண்மலரொடு கலந்தமந்தாரை
தருவளங்கெழுநிழல்செழும் புனலிடைதயங்கல்
வருமரா த்தனை விழுங்கிடா வகைமதிமதித்துப்
பரையிலார்கலியுள்ளொளித் திருந்திடல்பொருவும்.

(எ-து.) அத்தடாகத்தின்கறையில்நிற்கிறவெள்ளைமலரோடுகூடிய மந்தாரை மரத்தின் நிழலானது செழிப்பானஜலத்தினிடத்தில் பிரகாசித்துத் தோன்றுவது, வருகின்றகேதுவென்னும் பாம்பானதுதன்னைவிழுங்காத வகையையோசித்துக்கெடுதலில்லாத சத்தமுள்ள சமுத்திரத்தினுள்ளே சந்திரன்ஒளித்துக்கொண்டிருப்பதுபோல விருந்தது. எ-று. (௩எ)

திருந்தனங்கடாமரைகளிற் செறிந்துவீழ்ந்திடலும்
பொருந்தளிக்கணமெழுந் தெழுந்தப்புறம்போதல்
வருந்திமுற்பவத்தியற்றிய புண்ணியம்வருங்கா
லிருந்தபாவம்விட்டகன்றிடு மியல்பினையொக்கும்.

(எ-து) அழகிய அன்னப்பக்ஷிகளந்தத்தடாகத்திலே யிருக்குந் தாமரைப்பூக்களில் நெருங்கிவந்துவிழ முன்னந்தப் பூவிலிருந்த வண்டினங்களெழுந் தெழுந்து புறப்பட்டுப்போவது வருத்தப்பட்டு முற்பிறப்பில்செய்த புண்ணியபலன்வருங்காலத்திலே, யொருவரைத் துன்பப்படுத்திக்கொண்டிருந்த பாவமானது விட்டுப்போகிறதுபோல விருந்தது. எ-று. (௩அ)

மிகநலங்கிளரமுதமும் வெள்ளைவாரணமும்
புகலருங்களியரியு மேனகையுமர்ப்புதமு
மிகலிலன்புகொண்டண்டருஞ் சிருமெய்த்திடலாற்
றகமைபெற்றிடுதுறக்கமே யொத்ததத்தடமே.

(எ-து.) அமிர்தமும் வெள்ளையானையும் தேவேந்திரனும் மேனகையும் அதிசயமும் பகையுமில்லாத அன்புகொண்டு வாழும் தேவர்கள் சொர்க்க லோகத்திலிருப்பதுபோல இந்தத் தடாகமானது மிகுதியான நலமுள்ளதண்ணீரும்வெள்ளைச்சங்கும் சொல்லுதற்கரிய சந்தோஷத்தையுள்ள வண்டுகளும் அங்கே வந்தபேர்களுக்கு மேலான நகைப்பும் அதிசயமும் மாறுபாடில்லாத பக்திகொண்டு பெறற்கரிய சிறப்பும்உண்டாதலினாலே பெருமைபெற்ற சொர்க்கத்திற்குச் சமானமாகவிருந்தது.எ-று.

உலைவின்முத்திதன்பான்மிகத் தோய்ந்தவர்க்குதவும்

லிலைகளைப்பெரும்பாணிதான் பெற்றமைக்கேற்கு
மலைவிலாமுகம்படைத்தது போன்றதையன்றே.

(எ-து.) தன்னிடத்திலே அடுத்து முழுகினபேருக்கு அழிவில்லாத மோக்ஷத்தைக்கொடுக்கும்நிலைபெற்றவந்தப்பொய்கை பொற்றாமரை நெருக்கத்தோடேயிருப்பதுகங்கையொன்றிற்கே அனேக முகங்களுண்டானதுபோல, அளக்கவரிதானஜலத்தைத்தான் பெற்றதுக்கேற்ப அளவில்லா முகங்களைப் படைத்துக்கொண்டிருந்ததுபோல விருந்தது. எ-று. (௪0)

சாற்றுமித்தடத் துளவளந்தனைமிகநோக்கிற்
றேற்றமோடுயர் பூரணவித்துவன்சிவனைப்
போற்றியன்பொடு சலந்திருந்தருந்தவம் புரிதற்
கேற்றதிவ்விட மென்றுளத்தெண்ணிவந்திருந்தான்.

(எ-து.) இவ்வாறு சொல்லப்பட்ட இந்தத் தடாகத்திலேயுண்டான வளப்பங்களைப் பூரணவித்து. மகாரிஷியானவர்மிகுதியாகப்பார்த்துத் தெளிவான மனதுடனே வுயர்வாகிய பரமசிவனைத் தோத்திரம்பண்ணி அன்போடே சிவனுநாமும் ஏகீபாகமாகக் கலந்திருந்துகொண்டு அரிதாகிய தபசுபண்ணுதற்கேற்ற விடமிதுவே யென்று மனதிலெண்ணி வந்திருந்தார். எ-று. (௪௧)

வேறு.

அரும்பதுமாசனத்தி னமர்ந்துநற்பூதசுத்தி
புரிந்துவெண்ணீறணிந்து புனிதனெண்மணிதரித்து
விரும்புமைந்தெழுத்தையுன்னிவிழைவெலாமுளத்தடக்கித்
திருந்துமட்டாங்கயோகத் திருநெறியிடைப்புகுந்து.

(எ-து.) அரிதாகிய பதுமாசனத்திலே யிருந்து நல்லபூதசுத்திபண்ணி வெண்மையுள்ள திருநீறணிந்து பரிசுத்தமுள்ள உருத்திராக்ஷமாலைகளைத்தரித்து மேலோர்களால்விரும்பத்தக்க பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்து ஆசையெல்லாமுள்ளத்திலேயடக்கி திருத்தமான அஷ்டாங்கயோக மார்க்கத்தினைச் செய்யத் தலைப்பட்டு. எ-று. (௪௨)

முன்புபெற்றொன்றிரண்டு மூன்றுநான்கைந்தாறேழெட்
டொன்பதுபத்தடக்கி யொளிர்சுழிமுனைகாலேற்றி
வன்பணிதனையெழுப்பி வரைகளாறையுங்கடந்து
யின்புறுமதியினோடு மேவியவமுதைவீழ்த்தி.

(எ-து.) முன்னே யொரு சிவஞானத்தைப்பெற்று, இடை

களையுங் கடந்து, நான்கு கரணங்களையு நிருத்தி, ஐம்புலன்களையுந் தடுத்து, ஆறுபகையைச் செயித்து, ஏழு ஆத்துமதத்துவத்தையும் விட்டு, எட்டுச்சிந்தையுந்தள்ளி, ஒன்பதுநவத்துவாரங்களையுமடைத்து,பத்துதசவாயுக்களையடக்கி, பிரகாசிக்கப்பட்ட சுழிமுனைவழியிலே பிராணவாயுவையேற்றி, நாபிக்குங்கீழேமூலத்திலே வளைந்துகிடக்கிற குண்டலி யென்னும் வலியபாம்பை யெழுப்பி சடாதாரங்களாறையும் மேலாக்கி,அங்கேசந்திரமண்டலத்திலுள்ள அமிர்தத்தை விழுகப்பண்ணி அந்தஅமிர்தத்தாலுடலெங்குந் தேக்கவிட்டு. எ-று. (சங)

புரையிலாநாதங்கேட்டுப் புகலருமொளிதனைக்கண்
டிருதயகமலபீடத் திருவருந்தேடிக்காணாப்
பரசிவன்றனையிருத்திப் பாவனைப்பொருளினாலே
அருமையிற்பூசைசெய்தாங் குரைந்தனன்முனிவர்கோமான்.

(எ-து.) களங்கமில்லாத பரனாத சத்தங்களைக் காதிலே கேட்டு சொல்லுதற்கரிய பேரொளிப் பிரகாசத்தைத் தரிசித்து ஹிருதய கமல பீடத்திலே பிரம விஷ்ணுக்களிருவருந்தேடியுங் காணாத பரமசிவனைவைத்து தியானித்துதிருமஞ்சனம், புஷ்பங்கள் முதலானதுகளெல்லாம் பாவனையாகநினைத்துஅப்பொருள் களினாலே பெருமையாகப் பூசைபண்ணிக்கொண் டங்கேயிருந்தார்முனிவர்களுக்கெல்லாம்பெரியவரான பூரணவித்துமகாரிஷி.

சூரியகிரணத்திற்குஞ் சொரிந்திடுபுயன்மாரிக்கும்
பேருறுமனிலத்திற்கும் பேசருங்குளிர்பனிக்குங்
கோரவாளரியோரியாளி கொடும்புலுசர்ப்பாதிக்குஞ்
சீருளமஞ்சாலுகிச் செழுந்தவம்புரியுங்காலை.

(எ-து.) சூரியனால் காயப்பட்ட வெய்யலுக்கும், மேகம் சொரியப்பட்ட மழைக்கும்,பெருங்காற்றுக்கும், சொல்லுதற்கரியகுளிருக்கும்,பனிக்கும், பொல்லாத சிங்கம், யாளி, புலி, சர்ப்பமுதலானதுஷ்டமிருகங்களுக்கும்உள்ளம் பயப்படாதவனாகித்தடுமாற்றமில்லாதமனதுடனே பூரணவித்துமகாரிஷியானவர் தபசு பண்ணுகிறகாலத்தில். எ-று. (சரு)

அமரர்துந்துமிமுழங்க வளப்பருங்கணங்கள்சூழ
விமையவர்முனிவர்சித்த ரியக்கர்கந்தருவர்போற்றக்
கமையொடுமலருளானுங்கண்ணனும்புடையின்மேவ
விமலவெண்பாரிசாத விரைமலர்மாரிசிந்த

(எ-து.)தேவதுந்துமிமுழங்களண்ணுதற்கரியசிவகணங்கள் புடைசூழத், தேவர்கள், முனிவர்கள், சித்தர்கள், இயக்கர், கந்தருவர், தோத்திரம் பண்ணிக்கொண்டுவர, பிரமாவும், விஷ்ணுவும்,பக்கத்தில் அடங்கிநிற்க,நிருமலமான ஆகாசத்தினிடமாயிருந்து வாசனையுள்ளபாரிசாதபுஷ்பமாரிவருஷிக்க. எ-று.

தருமதேவதையென்றோதுந் தனிவிடையேறியெங்கோன்
பரசுமான்பிடித்தகையும் பணிதவழ்புயமும்போர்த்தக்
கரியினதுரியும்வேணிக் கங்கையுந்திகழ்முக்கண்ணு
மொருகளக்கடவுந்தோன்ற வுமையொடுந்தோன்றினனால்.

(எ-து) எமது கர்த்தனை பரமேஸ்வரனைவர் தருமதேவதையென்று சொல்லப்பட்ட வொப்பில்லாதரிஷபவாகனத்தின் மேலேறிக்கொண்டு மழுவையும், மானையும்பிடித்த கைகளும் சர்ப்பங்களாரப்பட்ட புசங்களும் மேலேபோர்த்திருக்கப்பட்ட யானைச்சருமமும், சடையிலிருக்கப்பட்டகங்கையும், பிரகாசிக்கிற மூன்றுகண்களும், ஒப்பற்ற கண்டத்திலேயிருக்கும் ஆலகால விஷமும், இதுவெல்லாம் பூரணவித்துமகாரிஷிக்குத் தெரியத்தக்கதாக உமையவளுடன் பரமேஸ்வரன் பிரசன்னமாகத் தோன்றினார். எ-று. (சஎ)

வரமுனியெழுந்து தாழ்ந்து வாழுநம்முக்கட்டேனை
யிருகணுற்பருகிப்பின்னு மிறைஞ்சிமெய்புளகமெய்திச்
சிரமிசையங்கைகூப்பி செறிமயிர்சிலிர்ப்பநெஞ்ச
முருகநின்றாடிப்பாடி யுளங்கொளத்துதிக்கலுற்றான்.

(எ-து) இப்படி பரமேஸ்வரரெழுந்தருளி வந்தமாத்திரத்தில் பூரணவித்து மகாரிஷியானவர் எழுந்திருந்து தீர்க்கதெண்டனாக விழுந்து நித்தியனான மூன்றுகன்களுள்ள நமது சிவனான தேவனை இரண்டு கண்ணினாலேயும் குளிரப்பார்த்து பின்னையுந் தொழுது சரீரமானது பூரித்து சிரசின்பேரிலே கையைக்குவித்து நெருங்கிய மயிர்குச்செரிய மனமுருகிநின்றுகொண்டு ஆடிப்பாடி நேசமானது உள்ளத்திலே நிறையப் பூரணவித்து மகாரிஷியானவர் பரமேஸ்வரன் முன்பாகத் தோத்திரம் பண்ணத் தலைப்பட்டார். எ-று. (சஅ)

அய்யனேபோற்றியெங்க ளருட்பெருங்கடலேபோற்றி
மெய்யனேசிவனேபோற்றி விண்ணவர்கோவேபோற்றி
தையலோர்பாகாபோற்றி சதுமறைப்பொருளேபோற்றி

(எ-து.) சகலசீவன்களுக்கும்பிதாவானகர்த்தாவேபோற்றி அடியார்களான எங்களுடைய பெரியகிருபா சமுத்திரமே போற்றி, உண்மையானவனே, சிவனேபோற்றி, தேவர்களுக் கரசே போற்றி, பெண்ணொருபாதியானவனே போற்றி, நான்கு வேதத்தின் பொருளானவனே போற்றி, படத்தையுள்ள நாகத் தைக் கச்சையாகவிடையிற்கட்டியதேவனே போற்றி போற்றி.

விழித்துணைகாணப்பெற்றேன்மெய்யினால்வணங்கப் பெற்றேன்
கழற்கமலந்தனக்கென் கையினைக்கூப்பப்பெற்றேன்
பழுத்தபேரருட்கண்ணனே பரமனேவுன்னைநாவால்
வழுத்திடப்பெற்றேனென்ன மாதவமியற்றினேனோ.

(எ-து.) பரமசிவனே, உம்மை என திரண்டு கண்களால் தரிசிக்கவும்,தேகத்தினால்வணங்கவும்பெற்றேன், உமது பாதார விந்தங்களுக்குஎனதிரண்டு கைகளையுங் குவித்துக் கும்பிடவும் பெற்றேன், கனிந்தபேரருட்கண்ணுள்ளவனேசிவனே, உம்மை என்னுவினால் தோத்திரஞ் செய்யவும் பெற்றேன், இவைகளெ ல்லாமடைய நான் என்னதவம் பண்ணினேனோ. எ-று. (ரு0)

அரும்பெறற்பிரமாண்டங்க ளனைத்தையுங்கற்பாந்தத்திற்
சரந்திரமாகுமாவி தம்மொடுதுடைக்கநின்ற
கருங்கடுமிடற்றுயன்று கருதலார்முப்புரத்தை
யொருங்குறவெரித்தாயென்ப ருனக்கதுபுகழதாமோ.

(எ-து) திரிகிறது நிற்கிறதுமான சராசரப் பிராணிகளுட னே கிடைக்கவரிய பிரமாண்டங்களெல்லாவற்றையுங்கற்பாந்த காலத்தில் சர்வசங்காரம் பண்ணவிருக்கிற கறுத்தவிஷத்தை யுண்ட கண்டத்தையுள்ள சிவனே, முன்னொருநாள்அசுரர்களு டைய திரிபுரமடங்கலு மெரித்தவனென்று உலகத்தார் சொல் லுவது உமக்குப் புகழாமோ. எ-று. (ருக)

படைத்தருள்பிரமனீயே பரிவொடுகாத்துநிற்கு
முடைப்புகழ்முகுந்தனீயே வுலகமோடுயிரையெல்லாந்
துடைத்தருள்வானுநீயே தொல்லுயிர்க்குயிருநீயே
விடைத்தனிக் கொடியாயுன்றன்மெய்மையாரறியவல்லார்.

(எ-து.) சிருஷ்டிக்கப்பட்ட பிரமனுநீயே, சந்தோஷத்து டனே இரட்சிக்கும் கீர்த்திபைவகித்த விஷ்ணுவுநீயே,சகலலோ கங்களுடனே சராசரமான சீவன்களையெல்லாமொருமிக்கச்சங் காரம்பண்ணும் உருத்திரனுநீயே, பரமனுமாகிய நீயே [illegible]

ஞயிருப்பவனும்நீயே, ஒப்பில்லாத ரிஷபக் கொடியையுடைய கர்த்தனேஉன்னுடையஉண்மையையாரறியவல்லவர்கள். எ-று.

முத்தியங்கனியோவெய்ய மோகவாரிதிகடத்துஞ்
சித்திரப்புணையோகஞ்சத் திருமலர்க்குறவோநல்ல
பத்தர்தம்பதமோவுள்ளப்பதுமமோவுயிரோமானு
நித்தியமளிக்குந்தூய நிதிகொலோநின்பொற்றுனே.

(எ-து.) சுவாமி, உன்னுடைய பாதமானது அழகுள்ள மோக்ஷமானபழமோ!பொல்லாதமோகவிகார சமுத்திரத்தைக் கடத்தும் பேரழகுள்ள வோடமோ ! திருவிருக்கிற தாமரை மலருக்கு உறவோ!நல்ல அடியார்களுடைய பதவியோ! சர்வப் பிராணிகளுடைய ஹிருதய கமலமோ ! சீவன்றுனோ! அழிவில் லாதநிலைமையைத் தரப்பட்ட சுத்தமான நிக்ஷேபமோ. எ-று.

என்பனபலவும்பன்னி யிதமுனிதுதித்துநிற்க
வன்புறுசேய்சொற்கேட்குமன்னைபோற்செவியைத்தாழ்த்தி
யுன்பெருந்தவந்தனைக்கண் டுளத்திடையருள்சுரந்தோ
மன்பெறுவரங்கேளென்றுன் மறைகளுந்தேடநின்றுன்.

(எ-து.) இப்படி பல துதிகளுஞ்சொல்லிஇதமுள்ளபூரண வித்து முனிவனுனவர் நின்றமாத்திரத்தில் அன்புள்ள பிள்ளை சொல்லைக் கேழ்க்கிற தாயைப்போலச்செவிகொடுத்துக்கேட்டு பூரணவித்து மகாரிஷியே உன்னுடைய பெரிதான தவத்தைக் கண்டு நம்மனதிலே தயை யுண்டானேம் நிலைபெற்றபெரியவர த்தைக் கேளென்றுர் வேதங்களுந்தேடநின்ற பரமேஸ்வரர். ()

அன்னசொல்லமுதமென்ன தன்செவிபுகுதலோடும்
முன்னருஞ்சிலாதனுக்கன் றெழிவினந்தியையளித்த
தென்னவுன்பதத்திவன்புற் றிருந்திடும்ஞானப்பிள்ளை
தன்னையேற்குதவல்வேண்டுமென்றனன்றருமமிக்கான்.

(எ-து.) பரமேஸ்வரன்சொன்ன அந்த சொல்லாகிய வமு தம் அழகிய தன்செவியிற் புகுந்த மாத்திரத்தில் நினைக்கவரி தான சிலாதப்பிரமரிஷிக்கு முன்னே அழிவில்லாத பத்தியை யுடைய நந்திகேஸ்வரரைத்தந்ததுபோல, உமது திருவடிக்குப் பத்திசெய்யும் ஞானமுள்ள புத்திரனை யடியேனுக்குக்கொடுக்க வேணுமென்றுர்தருமமேசொரூபமாகியபூரணவித்துமகாரிஷி.

நமதிடத்தன்புஞ்சாந்த நலமுமெய்யருளுமுள்ளத்

விமலமும்புவனம்போற்றும் மேன்மையுமெழிலும்பெற்ற
குமரனையளித்தோம்போதி யென்றருட்குழகன்போனான்.

(எ-து.) அப்படிகேட்டபூரணவித்துவைப்பார்த்துநம்மிடத்தில் அன்புஞ் சாந்தமு நன்மையுஞ் சத்தியமுமருளும் மனோவடக்கமும் தீர்க்காயுளும் பந்தபாசமில்லாதநின்மலமும்உலகங்கொண்டாடப்பட்டமேன்மையும்அழகுமுதலிய வெல்லாமுள்ள புத்திரனையுனக்குக்கொடுத்தோம் போவென்றருளிச்செய்து கிருபா சொரூபனான சுந்தரேஸ்வரன் மறைந்தார். எ-று. (ருசு)

எந்தைதான்போயபின்றை யிணைதவிர்முனியுமில்லில்
வந்துதன்மனைவியோடு மகிழ்வுறவாழுநாளில்
தந்தியிருரியணிந்த சங்கரன்கருணைதன்னாற்
கந்தவார்குழல்வயிற்றிற் கருப்பம்வந்துதித்ததன்றே.

(எ-து.) எந்தையான பரமேஸ்வரர் அந்தர்த்தானமான பிறகு ஒப்பில்லாத பூரணவித்து முனியானவர் தன்வீட்டில் வந்து தன்னுடைய பெண்சாதியான பத்திரதத்தையம்மனோடு மகிழ்ச்சியுடனே வாழ்கின்ற நாளையில், ஆனையையுரித்ததன்சருமத்தையணிந்தபரமேஸ்வரனுடையவருளினாலேவாசனை வீசும் அளகபாரத்தையுடைய பத்திரதத்தை யம்மன்வயிற்றில்கருப்பமுண்டாயது. எ-று. (ருஎ)

தமனியக்குடமுகட்டிற் றக்கநன்னீலந்தன்னை
யமையுறவைத்ததேபோ லணிமுலைக்கண்கறுத்தாள்
கமையொடுபுவனமூன்று முய்யவேகருப்பத்துற்றான்
விமலவான்புகழ்பரந்த தெனவுடல்வெளுத்ததன்றே.

(எ-து.) பொற்குடத்தின் முகட்டிலே விலையுயர்ந்தநீலரத்தினம் பதித்ததுபோல பத்திரதத்தை யம்மனுக்கு அழகுள்ள முலைக்கண் கறுத்தது மூன்றுலோகமும் பிழைக்க பொறுமையோடு கெர்ப்பத்திலிருக்கும் நிர்மலனதுபிரபலகீர்த்திபரவினது போலபத்திரதத்தை யம்மனுடைய சரீரமெல்லாம்வெளுத்தது.

மயலிலாக்கும்பனன்ன மாதவப்பெரியோனைத்தா
னியலுறத்தாங்கலானே னெழுந்திடப்படாதிருந்தா
ளுயர்புடைவயிற்றிலியோகத் துறங்குவானுரைதலானே
வியனுடைமுனிவன்பன்னி வுறக்கமேமிகுந்தாளன்றே.

(எ-து.) மயக்கமில்லாத அகத்தியரைப்போன்ற மகத்துவமுள்ள [illegible]

தாங்குகிறபடியினாலே எழுந்திருக்கப் படாமலிருந்தாள், மேன்மையுள்ள முனீஸ்வரன் மனைவியாகிய பத்திரதத்தையம்மனது உயர்ந்தகருப்பத்தில்யோகநித்திரைசெய்பவனிருப்பதனால் உறக்கமே மிகுந்திருந்தாள். எ-று. (ருகூ)

இன்னணங்கருப்பச்சின்ன மெய்தவீரைந்தாந்திங்க
டன்னில்வன்கிரகமெல்லாந் தகுமிடத்தினிலிருப்ப
நன்னிலையோரைதன்னில் நவைதவிர்மகப்பயந்தாள்
பன்னருங்கற்பின்மிக்க பத்திரதத்தையென்பாள்.

(எ-து.) இவ்விதமாகக் கருப்பச்சின்னம் பத்துமாதமான பின்வன்மையுள்ளகிரகங்களெல்லாம்இருக்கிறதானத்திலே நன்மையாயிருக்கநிலையானநல்லலக்கினத்திலேகுற்றமற்ற புத்திரனைப்பெற்றாள் சொல்லுதற்கரிய கற்பில்மிகுந்த பத்திரதத்தையம்மை. எ-று. (சூ0)

பெறற்கருமினியமைந்தன் பிறந்திடுங்காலையம்ம
துறக்கமீதிருக்குந்தெய்வ துந்துமிமுழங்கித்தங்க
ணறைக்கொழும்பூவின்மாரி சிந்தினர்நவையில்வானோ
ரறப்பெருந்தெய்வந்துள்ளியெழுந்தெழுந்தாடிற்றன்றே.

(எ-து.) கிடைத்தற்கருமையும்இனிமையுமான அந்தமைந்தன் பிறந்திடும்வேளையிலே தேவேந்திரலோகத்திலுள்ள தெய்வ துந்துமிமுழங்கியது, அவ்விடத்திலுள்ள மணமும் வளமுமான பாரிசாதமலர்மாரியைமாசற்றதேவர்கள்பொழிந்தார்கள். அன்றியும் தர்மதேவதை மிகுந்தகளிப்புடனே துள்ளியெழுந்தெழுந்து கூத்தாடியது. எ-று. (சூக)

மேனிலைச்சுற்றத்தோடு மேவிவந்தினியமைந்த
னானந்தன்னைநோக்கி யந்தணர்தமக்குமுக்கண்
வானவனடியருக்கும் வளர்கனகாதிநல்கி
மானநற்றந்தைமிக்க மகவிழாநடத்தினானால்.

(எ-து.) மேலான நிலையுள்ள தன்னுறவினோடு கூடிவந்து இனிமையான தன்புத்திரன் முகத்தைப்பார்த்து மனமகிழ்ந்து பிராமணர்களுக்கும் திரிநேத்திரதாரியானபரமசிவனடியார்களுக்கும் உயர்வாகிய சொர்ணதானமுதலான சோடசதானங்களுங் கொடுத்து பெருமையுள்ள பிதாவான பூரணவித்துமகாரிஷியானவர் அப்பிள்ளைக்கு புத்திரோற்சவம்பிரபலமாகநடத்தினார். ()

வேறு.

ஆனந்தமுறுமுனிவ ரனைவோருமவணெய்தி
மானந்துபவந்தீர்க்கும் மருந்தானதிருநீற்றை
பூனந்தானணுகாதிட் டுயர்மகவுதனக்கினிய
சானந்தமுனிவனெனுந் திருநாமந்தரித்தார்கள்.

(எ-து.) பிர்மானந்தமுற்ற முனிவர்களெல்லாரும் அவ்விடத்திலேவந்து ஒழியாத மாபாவங்களைத் தீர்க்குமருந்தாகிய திருநீற்றையெடுத்துப் புத்திரனுக்கு யாதொரு துன்பங்களுமணுகாதிருக்கும்படிதரித்துநல்லசுபதினத்தில் சானந்தமுநிவனென்னுந் திருநாமந் தரித்தார்கள். எ-று. (சுங)

மற்றுமுளகருமமெல்லாம் வழுவாதுபுரிந்ததற்பின்
சுற்றமெல்லாங்களிப்பெய்த தோன்றியவத்தோன்றலுக்குப்
பற்றுபவக்களைகளைந்த பாவகராந்தவராச
ருற்றுமறைநூல்வழியே யுரத்தினினூலிருத்தினரால்.

(எ-து.) பின்னேயுமுண்டான அன்னப்பிராசனஞ்சவளமுதலான சடங்குகளெல்லாம் தப்பாமற்செய்து, பிறகு சுற்றத்தாரெல்லாஞ் சந்தோஷிக்கப்பிறந்த அந்தச்சானந்த முநிவனாகிய பிள்ளைக்குப்பீடிக்கப்பட்டபாவ மென்னுங்களையையறுத்து சுத்தஞ்செய்யவல்லவராகிய தவசிரேஷ்டரெல்லாரும்வந்துகூடிவேதசாஸ்திரஞ்சொன்னபடிக்கு மார்பிலே பூணநூல்தரித்தார்கள்.

உயர்பிறைபோல்வளர்நாளி லொருபெரியோன்முன்னிலையாய்
மயலறமுன்வைத்தபொருள் பின்னெடுத்தவாறென்ன
வியன்மறைநூல்பக்கமுயர் மிகுதிமுதற்கலையாவும்
பயனுடையவுலகத்தில் வடுத்தவிரப்படித்தனனால்.

(எ-து.) வளர்பிறைபோலே அந்தச்சானந்த முநிவன்வளருநாளையில் முன்ஒருவன்தேடிவைத்தபொருளைமயக்கமின்றிபின்னெடுத்த வாறுபோல ஒருபெரியவர்முன்னிலையாக அழகிய வேதநூல் மற்றசாஸ்திரமுதலான பயனுள்ள கலைகளெல்லாம் உலகத்திற் குற்றமறப்படித்தார். எ-று. (சுரு)

அயற்கரியான்றனைப்பணிதலன்றியொருவெருவிளையாட்
டியற்றியிடான்சிவசரிதை யல்லாமலியாதொன்றும்
பயிற்றல்புரியான்சிவநூல் பாராட்டலன்றியொரு
மயற்கலையும்புகன்றிடான் [illegible]

(எ-து.) பிரமாவுக்கும் அருமையானசிவனை வழிபாடுசெய்வதேயல்லாமல் விருதாவாகிய விளையாட்டுளொன்றையும்விளையாடுகிறதேயில்லை,சிவனிடசரித்திரமேயல்லாமல்மின்னைவேறொன்றையும் பழக்கம்பண்ணுவதேயில்லை, சிவபுராணங்கள் தவிர மூவாசையை விளைவிக்கும் நூல்களைப்படிப்பதேயில்லை, அழகுள்ள வாயுஞ் சிற்றடியுமுள்ள பிள்ளையாகிய அந்தச்சானந்த முநிவன். எ-று. (சுசு)

பெற்றவிருகுரவருக்கும் பெரும்புவியிலியாவருக்கும்
மற்றமுநிவரருக்கும் மகிழ்வெய்தநன்னெறிக்க
ணுற்றெழுகுநாண்மைந்த னொருசார்பின் மாதவர்கள்
கற்றசிவகதையுரைக்குங் காலையவணெய்தினனால்.

(எ-து.) தன்னைப்பெற்ற மாதாபிதாவாகிய, பத்திரதத்தையம்மைக்கும், பூரணவித்துமகாரிஷிக்கும், பெரிதாகியபூலோகத்திலுண்டான பேர்களெல்லோருக்கும், பின்னையுமுண்டானமுநிவர்களுக்கும், நல்லமகிழ்ச்சியுண்டாக சன்மார்க்கத்தினிடத்திலே தானே அடங்கி நடந்துவருகின்றநாளையிலே ஒருநாள் அந்தச்சானந்தமுநியாகிய பிள்ளையானவர்ஒரிடத்தில்ரிஷிகளெல்லாருங் கூடிச்சிவகதைகள் படிக்கிறவேளையிலேஅவடத்திற்குப்போனார்.

உற்பத்திச்சருக்கம் - முற்றிற்று.

ஆ பாயிரம் உட்பட - திருவிருத்தம்-அரு.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

நல்விலைச்சருக்கம்.

அன்னமுநிவரர்வாழு மாச்சிரமந்தனிலென்றுந்
துன்னுமரும்பறவைகளுந் தொலையாதவிலங்குகளுந்
தன்னெடியபகையின்றி தவருநண்பொடுவாழு
மென்னிலதன்பெருமைதனை யாவரேயுரைசெய்வார்.

(எ-து.) தவங்களைச்செய்தும்.சிவபுராணங்களைப்படித்தும், அதைப்பிரசங்கம் பண்ணிக்கொண்டுமிருந்துவாழுகின்ற அந்த முநிவர்கள் ஆச்சிரமத்திலேயிருக்கிற பட்சிகளு மிருகங்களும் ஒன்றுக்கொன்று தங்களுக்குண்டான கடும்பகைகளைநீக்கி ஒழியாதவுறவோடு வாழ்ந்துகொண் டிருக்குமென்ரு லவ்வனத்தின் பெருமையையாவரால் சொல்லப்படும். எ-று. (க)

புலிக்குருளைக்குழையன்பு புணர்ந்துமுலைப்பாலூட்டும்
எலிக்குழவிக்கரும்பணிகளெழிற்படத்தானிழல்காட்டும்
கலைக்குழுவும்புலிக்குழுவும் கலந்துறையுநெறிப்பரலை
யிலைத்துணராலகற்றுமற மலிமுநிவர்வருங்காலை.

(எ-து.) அந்தவனத்திலே மான்கள் புலிக்குட்டிக்கு அன்புடன் முலைப்பாலூட்டும், எலிக்குஞ்சுகளுக்கு வெயில்படாமல் பாம்புகளானது படத்திஞலே நிழல்காட்டும், மான்கூட்டமும் புலிக்கூட்டமு மொன்ருய் வாழ்ந்திருக்கும், அம்முநிவர்கள் வருகிரவேளைபார்த்து யானைகள் பூங்கொத்துகளை யொடித்துக்கொண்டு வழிகளிலேகிடக்கிற பருக்கைக்கல் முதலியவைகளையும்

கீரத்தைக்கண்டவுடன் கிளரன்புகொளும்பூசை
சாரத்திக்குறவாகுந் தலையானமாவரசுஞ்
சீருற்றபுண்டரிக மாம்பலொடுசேர்ந்திருக்கு
மூரப்பூநிரைந்தணையு முயரரியும்பூமயிலும்.

(எ-து.) மேலும் கிளிப்பிள்ளையைக் கண்டவுடனே பூனையானது அன்புகொண்டிருக்கும், அழகியயானைக்குச்சிங்கமானது உறவாகவிருக்கும், புலியானதுயானையினுடனே சேர்ந்திருக்கும் உயர்ந்தரத்திநத்தைத்தரும்பாம்பும் அழகியமயிலும், பகூமாகக் கூடியிருக்கும். எ-று. (௩)

பூவையொடுகிள்ளையினம் புகலரியபசுவுக்குத்
தாவிலுயர்சங்கரனே பதியென்றுசாற்றியிடும்
மேவரியநன்பினொடு வெய்யகருங்கறடிக்கொண்
காவிலுறும்யூகங்கள் கையுகிரான்மயிர்வகிறும்.

(எ-து.) பின்னையும் நாகணவாய்ப்பிள்ளையுடனேகிளிப்பிள்ளையானது பசுவர்க்கங்களுக்கெல்லாம் பதியாயிருக்கப்பட்டவர் சங்கரனுகியபரமேஸ்வரனேயென்று சொல்லிக்கொண்டிருக்கும் பொல்லாத கரடிகளுக்கெல்லாம் வானரங்கள் வாஞ்சையுடன் தன்கைநகத்தினுலே மயிர்வகிர்ந்து பேனெடுக்கும். எ-று. (௪)

இத்தகைமைத்தாயவனத் தியல்புடையதாபதர்முன்
சித்தியுறப்பவதிமிரந் தீரநெடுநிலவெறிக்கும்
மெத்தவளத்திருநீறும் விமலமுடையக்கமணிக்
கொத்துமுருவிற்பிறழக் குறுகினன்மாதவக்குமரன்.

(எ-து.) இப்படிமிருகசாதிகளும் பக்ஷிசாதிகளும்பகையில்லாமல்ஒன்றுக்கொன்றுஉறவாகவிருக்கப்பட்ட அந்தவனத்திலே புராணசாஸ்திரங்களை வாசித்துக்கொண்டிருக்கிறசடாதாரிகளானதபசிகளுக்கு முன்பதாக நிலவெரிப்பதுபோலவிபூதியும்உருத்திராக்ஷமாலைகளுஞ்சரீரத்திலணிந்துகொண்டு சானந்தமுனிவர் ஞானமென்னு மொளியுண்டாக பாவமானவிருள்நீங்க அவடத்திற்குவந்தார். எ-று. (௫)

வந்தவுடனினிதெழுந்து மறைமுநிவரனைவோரும்
மிந்தவிளம்பருவத்தி விவனைப்போல்சிவபத்தி
புந்தியுள்வைத்தவரில்லை யென்றுமிகப்புகழ்ந்தவர்க்கு
நந்தமருக்கியமாதி நல்கியருகிருத்தினரால்.

(எ-து.) சானந்தமுநிவர் அவடத்திற்குவந்தமாத்திரத்திலேவே தாகமங்களுணர்ந்தமுநிவர்களெல்லாருமெழுந்திருந்து இந்த இளம்பருவத்திலே இவரைப்போலேசிவபத்தியுண்டானபேர்களை நாம்கண்டதே இல்லையென்றுபுகழ்ந்து அவர்க்குபாதப்பிரக்ஷாடனஞ்செய்ய ஜலமுதலானதுங்கொடுத்து தங்கள்பக்கத்திலே யிருக்கவைத்துக்கொண்டார்கள். எ-று. (சு)

இருந்துமறைவாயமைந்த னியல்முநிவீர்பரமகதி
பொருந்துமனுபவநன்னூல் புகன்றிடுவதெதுநீவீர்
திருந்தவுரைத்திடுமினெனச் சிவகதையேபாராட்டு
மருந்தருமப்பிரசங்க னென்னுமுநியறைகின்றான்.

(எ-து.) முநீஸ்வரர்கள் எல்லாமிருக்கச்சொல்ல இருந்து முநிவர்களே நீங்கள்பரமகதியடையத்தக்கதாய் வாசிக்கிறதென்னபுத்தகஞ்சொல்லுங்களென்று கேழ்க்க அவர்களுக்குள்ளே பெரியவராக சிவகதைகளைப்படிக்கிற தர்மப்பிரசங்க ரிஷியென்கிறமுநிவர் வேதசொரூபியான சானந்தமுநிவரைப் பார்த்துச் சொல்லுகிறார். எ-று. (எ)

இப்போதுபெருந்தரும மியற்றினோரெய்துகதி
தப்பாமலுரைக்கின்றோ மெனவதனைத்தாழாம
லொப்பேதுமில்லாத வுயர்முநிவநீயெனக்கு
மெய்ப்போதமுறப்புகறீ யென்னவவன்விளம்புவான்.

(எ-து.) இப்பொழுது வாசிக்கிற சிவதர்மவுத்தரத்திலேபெரியதருமஞ்செய்தபேர்போம்வழியைச் சொல்லுகின்றோமெனத் தருமப்பிரசங்கரிஷிசொல்லச் சானந்தமுநிவர்கேட்டுஒப்பில்லாத ரிஷியே மெய்ஞ்ஞானம்வரச்சொல்லுமையாவென்றுகேட்கஅவரைப்பார்த்துச் சொல்லுகிறார். எ-று. (அ)

வேறு.

தருமமியற்றிய தாழ்வறுநல்லோ
ரரியவிமான மிவர்ந்தளவற்ற
திருமருவிப்புகு சென்னெறியின்சீ
ரொருமணிவாய்கொ டுரைக்கப்படுமோ.

(எ-து.) பூலோகத்திலே தருமங்களைப்பண்ணின புண்ணியவான்கள் இயமலோகத்துக்குப் போகிறபோது விமானமேறிக்கொண்டு வெகுசிறப்போடுபோவார்கள், அவர்கள்போகிறவழியினிட சம்பிரமங்களை யொருவரால் சொல்லிமுடியாது. எ-று. (ரு)

மேதகுதெய்வத நன்னறைவீசுந்
தாதவிழ்தாமரை யோடைதயங்கும்
போதலர்வாவியி னூடுபுகுந்து
சீதமளாவிய தென்றலுலாவும்.

(எ-து.) அவ்வழிகளில் மேலான தெய்வீகபரிமளம்வீசும், தாமரையுள்ளவோடைகள்பிரகாசிக்கும், புஷ்பவாசனைகளோடு அத்தடாகங்களுள் தென்றல்காற்றுப்படிந்து குளிர்ச்சியுடன்வந்து வீசும். எ-று. (கo)

பன்மலரின்பொடி பாடிதமன்ன
மென்மணலம்ம விளங்குறுமெங்கும்
நன்மறையோய்வழி நாடிருபாலும்
பொன்மலர்சிந்துபு பூவனமெங்கும்.

(எ-து.)அவ்வழியெங்கும்நானாவிதபுஷ்பத்தின்பொடிகளும் பச்சைகற்பூரப் பொடியைப்போல் நொய்ய வெண்மணல்களும் பரப்பியிருக்கும்நல்லமறையவரேவழியினிருபுறமும்பொற்பூவுகளுதிரப்பட்டதாயிருக்கும் அந்த பூங்காவனமெங்கும். எ-று. ()

துன்றியமாதவி சூழவுயர்ந்த
மென்றளிர்மானிழல் மேவிடுமெங்கும்
மன்றனறும்புனல் வைத்திடுபந்த
ரொன்றியமாலிகை யோடுவயங்கும்.

(எ-து.) பின்னுமவ்வழிகளிலே துளிர்த்துநெருங்கியகுருக்கத்திபடர்ந்தநிழல்களுண்டாயிருக்கும்அடிக்கடிவாசனையூட்டிய தண்ணீர்க்குடங்கள் வைத்திருக்கிற பந்தல்களில் மலர்மாலைகள் கட்டி தொங்கவிட்டிருக்கும். எ-று. (கஉ)

மாடுதொறுஞ்சிறு வன்குயிலென்னப்
பாடுமரம்பையர் பல்லிசைமல்கும்
நீடியதாள விதங்கணிரம்பக்
கோடுதழங்குறு முன்னர்குலாவி.

(எ-து.)பின்னும்இரண்டுபக்கங்களிலும்குயில்களைப்போல தேவரம்பைகள்பாடுகிறபலசங்கீதங்களுண்டாயிருக்கும், தாளத்தின் விநோதங்களுடனே நாகசுரமுதலான கொம்புகள் எதிரில் முழங்கும். எ-று. (கங)

மின்னனையார்நடை யென்னவியப்ப
நன்னெடுவேம நடந்தெழில்செய்யுந்

தன்னிகர்தண்டை— சதங்கைதயங்க
முன்னதுரங்க முழங்கநடிக்கும்.

(எ-து.) மேலும்மின்னலுக்குச்சமானமானபெண்கள்நடக்கிற நடையைப்போல, அசைந்து அசைந்து யானைகள் நடந்து வரும்,பின்னேயும்எதிரில்தேவக்குதிரைகளானது நாலுகால்களிலேயுந் தரிக்கப்பட்ட தண்டைசதங்கைகள்முழங்கநடனம்பண்ணும். எ-று. (கச)

உறுநவமாமணி யோடொளிரம்பொற்
சிறுகொடிமேவிய தேர்கள்வயங்கும்
கறைதவிழ்வாழைகள் கானமெனத்தா
ணிறைதுகிலின்கொடி நின்றுகுலாவும்.

(எ-து.) மேலும் அந்தவழிகளிருபக்கத்திலும் நவரத்தினமாலைகளாலேஅலங்கரித்துபிரகாசிக்கப்பட்ட அழகுள்ளபொன்னினாற்செய்தசிறியகொடிகள்நாட்டியதேர்கள்அங்கங்கேநிறுத்தியிருக்கும் அந்தவழிகள்முற்றும்வாழைக்காடுகள் போலஆலவட்டங்கள் நாட்டியிருக்கும். எ-று. (கரு)

செறுநவமாமணி யாலணிசெய்த
மறுவறுதோரண நின்றுவயங்கும்
நறுமுதலார்செய் நடத்திசையானே
யுறுமுபலங்களும் மூடுருகும்மே.

(எ-து.) இன்னும் அந்தவழிகளில்நவரத்தினங்கள்கோர்த்துத் தொங்கவிட்டதோரணங்கள்அடிக்கடிகட்டியிருக்கும், ஜவ்வாது பொட்டுள்ள நீங்காதநெற்றியையுடையபெண்கள்செய்கின்றநடனசங்கீதங்களினால் கல்லுகளும் உருகிப்போம். எ-று. (கசு)

ஆரமுதந்திக ழாறுகளோடுஞ்
சீரியவிண்மலர் மாரிகள்சிந்தும்
வேரிகொள்பூமனை மேவுறுமம்ம
வோரரசேர்வை யுகந்தவுளத்தோய்.

(எ-து.) ஒப்பில்லா சிவதரிசனமுவந்த சானந்தமுநிவரே பின்னேயும்அவ்வழிகளில்அமிர்தத்தையொத்தஆறுகள்அடிக்கடியோடும் மேகமானது புஷ்பமாரிவருஷிக்கும் வழிகளில் தங்கியிருந்துபோக வாசனையுள்ள புஷ்பங்களினால் அலங்கரித்த வீடுகளும் பப்பந்தல்களும் உண்டாயிருக்கும். எ-று. (கஎ)

இவ்வணியாயின யாவையுநோக்கி
அவ்வியமற்ற வறத்தொழிலுற்றார்
செவ்வியமான கணங்கள்சிறந்த
நவ்விலியம்புர நண்ணிடுகாலை.

(எ-து.) இப்படி வேடிக்கைகளை யெல்லாம்பார்த்து மனமகிழ்ச்சியுடனே தர்மஞ்செய்த புண்ணியவான்கள்போகும்வேளையில் செவ்வியோர்கூட்டத்தால்சிறப்புற்றிருக்கிறஇயமபுரத்திலே நடக்கிற சம்பிரமத்தைச் சானந்தமுனிவருக்குத் தர்மப்பிரசங்க ரிஷி சொல்லுகிறார். எ-று. (கஅ)

வேறு.

தேவர்மாதரியக்கர்மங்கையர் சித்தர்சாரணர்மின்னனா
ரோவிலாதுகெருங்குபன்மணி யோங்குமாளிகைவீதியில்
யாவரும்புகழ்தருமநாயக னேவலாளர்கைகூப்பியே
தாவிலாதவனந்தமாமுப சாரநின்றுவிளம்புவார்.

(எ-து.) மேலுமங்கே தேவர் இயக்கர் சித்தர் சாரணர்முதலிய பெண்கள் எல்லாருங்கூடியிருக்கிற பலவிரத்தினங்களாலிழைத்த உப்பரிகைகளையுடைய வீதிகளிலே புண்ணியவான்கள் வருகிறவேளையில் அவடங்களில் இயமதூதரானபேர்கள்கையெடுத்து கும்பிட்டு நின்றுகொண்டுஅனேகமுபசாரங்கள்சொல்லுவார்கள். எ-று. (கக)

விண்ணுடைக்கனிவாயரம்பையர் மிக்கநன்னடனந்தனைக்
கண்ணிணைக்கினிதாகவன்பொடுகாண்மினென்றுவிளம்புவார்
பண்ணுறுஞ்சிறுபல்லியந்திகழ் பாணிவிஞ்சையர்மாதரார்
நண்ணுகின்றனர்தேவரீர்மிக நாடுவீரெனவோதுவார்.

(எ-து.) இமயபுரத்துக்குள்வீதியிலே வந்தபுண்ணியவான்களைப்பார்த்து இமயதூதர் சுவாமீஇவர்கள் தேவலோகத்து ரம்பைகள் தேவரீர் அண்டையிலே நாட்டியம் பண்ண வந்தார்கள் அந்த நாட்டியத்தைச்சற்றே நின்றுபார்க்க வேணுமென்றும் இவாள் விஞ்ஞையப்பெண்கள் தம்பூருகளினாலேபாட கூடிவந்திருக்கிறார்கள்தேவரீர்சற்றே கேழ்க்கவேணுமென்றும்சொல்லுவார்கள். எ-று. (உ0)

சந்தனம்புனுகாதிகொண்டு தயங்குசாரணர்மின்னனார்
[illegible] வாய்பகைக்கவிளம்புவார்

நந்துவாரமுதத்தையொத்தசொன் னன்மடந்தையரேந்தினா
ரந்தமாலிகைதோளிடத்தி லணிந்துகொள்ளுமினென்பரால்.

(எ-து.) சாரணப்பெண்கள் சந்தனம் புனுகுசவ்வாதுமுதலானகதம்பங்கள் கொண்டுவந்துநிற்கிறார்கள், அதைத் தேவரீர் பூசிக்கொள்ள வேணுமென்றும், அமிர்தம்போன்ற வார்த்தையையுடையபெண்கள் பாரிசாதகப்புஷ்பமாலைகளேந்திக்கொண்டுநிற்கிறார்கள், அந்தமாலையைத்தோளிலே அணிந்துக்கொள்ளுங்களென்று வாய்பொத்தி இயமதூதர்கள் உபசாரஞ் சொல்லுவார்கள். எ-று. (௨௧)

ஏரிருந்தமணிக்கிரீடம தாணியாழியிலங்குகே
யூரமொண்குழையாதிபூண்மி னெனக்கொடுப்பருவந்துபோய்
வேரிதங்கியவிண்சுவைப்புன லுண்மினென்றுவிளம்பிவிண்
ணாரரம்பையர்நின்றுமுன்ன ரளிப்பர்சித்தைகளிக்கவே.

(எ-து.) பின்னுந் தேவரம்பையர்கள் உபசாரமாக மனக்களிப்புடன் அழகுள்ளநவரத்தினக்கிரீடங்கள்பதக்கங்கள்கணையாழிமோதிரம் வாகுவலையம் குண்டலமுதலான பொற்பூஷணங்களைப் பூண்டுகொள்ளுங்களென்றும் வாசனையுள்ளஆகாயகங்கையைக் கொள்ளுங்களென்றுஞ்சொல்லிமுன்னுகநின்றுக்கொண்டுகொடுப்பார்கள். எ-று. (௨௨)

பானுரைக்கிணையானவாடை பரிந்துடுத்துமினென்பரா
னனமொன்பதுபாளிதப்பொடி நாடியள்ளியிரைப்பராற்
றானலந்திகழாடிகொண்டெதிர் சொற்றரும்படிநிற்பரா
லானபற்பலகற்பகக்கனி யன்பினோடுமளிப்பரால்.

(எ-து.) தேவகன்னிகைகள் புண்ணியஞ்செய்தவர்கள்வீதிகளிலேவரும்போது அவர்களுக்குபால்நுரைபோலொத்தபட்டுவஸ்திரங்களைக் கொண்டுவந்து இதையுடுத்துங்களென்றுசொல்லுவார்கள், சந்தனக்குழம்பு கற்பூரம்கதம்பப்பொடிகளிதுகளையள்ளி யள்ளி யெங்குமிரைப்பார்கள், கண்ணாடியைக்கொண்டுவந்து உபசாரஞ்சொல்லி எதிர்காட்டிநிற்பார்கள்,பலபலகற்பகவிருக்ஷத்தின் பழங்களைக்கொண்டுவந்துமிக்க அன்புடன்கொடுப்பார்கள். எ-று. (௨௩)

மிக்கசர்க்கரையாதிகொண்டு வியந்தமைத்ததுமோதகம்
தக்கபால்தயிர்தேன்னெயைக்குவி சருகுவித்தொகைபலகறி

யொக்குமென்றலிலாதபொற்கல னுள்ளிருத்தியருத்தியா
லிக்குநேர்மொழிமின்னனார்பல ரீவர்சுந்தரமேவவே.

(எ-து.) மிகுந்த சர்க்கரை ஏலம் முதலியபலவஸ்துக்களைச் சேர்த்துசெய்த அப்பவர்க்கம், இதுபால் தயிர் தேன்நெய்இவைகளைத் தக்கதாய்ச்சேர்த்துசெய்த தேவருணவாகிய சோறு, இச்சிறியதொகைகள் பலகறிகளாம், என்றுகரும்பையொத்த சொல்லும் மின்போன்ற சாயலுமுடைய பலஸ்திரீகள் இனிமையான மொழிகளால் இதற்கொப்பிலையென்றுசொல்லத்தக்க பொற்றூம்பாளத்தில்வைத்துக்கொண்டு சொல்லிக்கொடுப்பார்கள். எ-று.

மாலைவெண்குடைகொண்டுசெல்குவர் மாசில்சாமரைவீசுவா
ராலவட்டமெடுப்பர்கோலமோ டாடுவார்பலர்பாடுவார்
மேலுமேலுமிருந்துசீரொடு வாழ்கவென்றுவிளம்புவார்
சாலவக்கதைநின்றிரைப்பர் சரம்படுங்கணரம்பையார்.

(எ-து.) மேலும் அவர்களுக்கு மாலைதொங்கவிட்ட வெள்ளைக்கொடையெடுப்பார்கள், வெண்சாமரைவீசுவார்கள் ஆலவட்டம்பிடிப்பார்கள், ஆடுவார்கள் பலர்பாடுவார்கள், மேன்மேலுஞ் சிறப்புடனேயிருந்து வாழ்கவென்றுவாழ்த்துவார்கள், மிக்கஅட்சதைகொண்டுஇரைப்பார்கள், இப்படியாக அம்பைப்போலொத்தகண்களையுடைய தேவரம்பையர்கள் உபசரிப்பார்கள். எ-று.()

கேடின்மங்கையரிவ்வகைத்தொழில்கிட்டியங்கணியற்றவர்
தூடெழுங்களியோடருஞ்சம னுற்றகோவிலின்வாய்தலிற்
கோடிசந்திரர்கோடியாதவர் கூடுபேரொளிவீசுஞ்சீர்
நீடுமானமிறங்கிநிற்பர்க ளேவலாளர்நிகழ்த்தவே.

(எ-து.) புண்ணியவான்களாயிருக்கப்பட்டபேர்கள் இயமதருமராஜனுடையபட்டணத்துவீதிவழியேபோகிறபோது அந்தப்பட்டணத்திலுள்ள குற்றமற்ற மங்கையர்களிக்தப்படி யனேகம் வேடிக்கைகள்நடத்தஅதிக சந்தோஷத்துடனேகூடவந்து இயமதரும ராஜனிருக்கப்பட்டஅரண்மனைவாசலுக்குமுன்பாகக்கோடிசூரியனும் கோடிசந்திரனுமொன்றுகக்கூடினதுபோல பிரகாசிக்கப்பட்டதங்கள்விமானத்தைவிட்டுக்கீழேயிறங்கி இயமதூதரானவர்கள்சொல்லஅவடத்திலே நிற்பார்கள். எ-று. (௨௬)

வேறு.

இயமனதவையையநண்ணி யேவலரிறைஞ்சியைய
பயனுடையநீருரைத்த பணிவிடைசிரமீதேற்று

நயனுறுமறவோர்தம்மை நன்குறவழைத்துவந்தோம்
புயறவிழ்கோயின்வாயிற் புறத்திடைநின்றுரென்றார்.

(எ-து.) இயமதருமராஜன் சபையிலே தூதர்கள்போய்த் தெண்டன்பண்ணிசுவாமிதேவரீர்சொன்னபெருமையுள்ளபணி விடையைத்தலைமீதேற்றிபூலோகத்திலேதர்மஞ்செய்தபுண்ணிய வான்களைநன்மையோடுஅழைத்துவந்தோம் அவர்கள்மேகம்த வழும்நமதுஅரண்மனைவாசற்புறத்தில்நிற்கிறார்களென்றார்கள்.

நவைதலிற்சாந்தமெல்லா நசைக்கொடுநடந்ததென்னக்
கவினுடையாதவன்றன் கான்முளையெழுந்துவந்து
தவறறுமறவோர்தம்மைத் தனித்தனிநோக்கிநன்றாய்
புவனியிலும்மைக்காணப்புண்ணியஞ்செய்தேனென்றான்.

(எ-து.) பின்னுந்தூதர்கள் சந்தனமுதலிய உபசாரங்கள் நடந்ததென்றுசொல்லக்கேட்டுமிகுந்தசாந்தகுணத்துடன்சூரிய குமாரனான எமதர்மராஜன் தமது சிங்காதனத்தைவிட்டெழுந் திருந்து கோபுரவாயல்மட்டும் நடந்துவந்து அவடத்திலே நிற் கிற தர்மவான்களையெல்லாம் தனித்தனியாகப்பார்த்து உங்களை இவடம்நான்பார்க்கப்புண்ணியஞ்செய்தேனென்றான். எ-று. ()

என்றபின்சித்திரகுற்ற ரெனுமிருவரையுநோக்கி
நின்றிடுமிவர்தாஞ்செய்த நெறிமுறையாவநீவீர்
மன்றவேயுரைமினென்ன வாய்ந்ததங்கணக்குவாங்கி
மென்றிருவமுதுசெய்தாங் கவரிவைவிளம்பலுற்றார்.

(எ-து.) இப்படிப் புண்ணியவான்களைப்பார்த்துச் சொன் னபிறகுஎமதர்மனானவன்சித்திரகுற்றரென்கிறகணக்கரிருவரை யும்பார்த்து இங்கேநிற்கிற விவர்கள் பண்ணினபுண்ணியங்களை யெல்லாம்நீங்கள்சொல்லுங்களென்றுகேட்க, அப்போதுசித்திர குற்றிரர்கள் தங்கள்கணக்கைவாங்கிக்கொண்டுதேவாமுதங்கொ ண்டவர்களைப்போல களிப்புடன் சொல்லுகிறார்கள். எ-று. ()

நீடபகாரஞ்செய்த நெறியிலார்தமக்குவன்பின்
னோடுபகாரஞ்செய்த வுத்தமரிவரேகண்டாய்
பீடுயர்தமதுதார மன்றியேபிறதாரத்தை
தேடருந்தாயாய்க்கண்ட சீரியரிவரேகண்டாய்.

(எ-து.) எமதர்மராஜனே கேளும். இவர்தனக்கு எந்நாளு மபகாரங்களைச்செய்தபேருக்கு அன்புடனேஉபகாரங்களைப்பண்

ணினவர், இவர்பெருமையுள்ள தன்னிடதாரமேயல்லாமல்அய லார்மனைவிகளைதேடுதற்கரிதாகியதாயைப்போலெண்ணுஞ்சீர்த் தியைவாய்ந்தவர் பாரும். எ-று. (௩௦)

இவர்சிவதலத்திற்கீறென் றெய்திடாவாறுசெய்தோ
ரிவர்சிகரத்திலொன்று மெழிலுடைத்தீபமிட்டோ
ரிவர்சிகரத்தின்மிக்க பொற்குடமெடுத்துவைத்தோ
ரிவர்பிறர்புரியறத்திற் கீறுறவகைபுரிந்தோர்.

(எ-து.) இவர் சிவதலத்திற் கோரழிவுவராமல் பண்ணினவர், இவர்கோபுரத்திலே நித்தம்தீபமேற்றிவைத்தவர்,இவர்கோபுரத்துக்குப் பொன்னாலே குடம்பண்ணிவைத்தவர், இவர்ஒருத்தர் செய்யுந்தர்மம் தவறாதபடிக்கு நிறைவேற்றினவர். எ-று. ()

சிவனுக்குப்பூவனங்கள் செய்தவரிவரதற்குச்
சுவைபெற்றகேணிதொட்டுத் தோயமீய்ந்தவரித்தூயோ
ரவமறப்பத்தராபத் தகற்றினரிவர்நெய்யோடு
நவமிக்கதிபதானம் நல்கினரிவரெங்கோவே.

(எ-து.) இவர்சிவனுக்குநந்தனவனம்வைத்தவர், இவர்அதற்கு ருசிபெற்ற ஜலமுள்ளகேணிவெட்டிக்கொடுத்தவர்,இவர்சிவபத்தருக்குஆபத்தைநீக்கினவர், இவர்,நெய்யுடனேபுதுமையான தீபதானம்பண்ணினவர் எங்கள் ராஜாவே. எ-று. (௩௨)

கங்கையாகியதீர்த்தங்க ளாடுகவென்றுகையில்
மங்குறாப்பொருளையள்ளி யீய்ந்தவரிவர்காண்மன்னா
பங்கமாயுலகிலுற்ற சிறுவிலைப்பருவத்தியாற்குந்
தங்குமோதனமளித்த தவரிவர்சூலவேலோய்.

(எ-து.) இவர்கெங்கை முதலாகிய தீர்த்தங்களிலே முழுகிவாருங்களென்று அவரவர்கள் கையிலே மங்காதபொருள்களைக் கொடுத்தவர், ராசாவே இவர்அகவிலைகுறைந்தபஞ்சகாலத்திலே யெல்லாருக்கும்அன்னங்கொடுத்தவர் சூலாயுதம்பிடித்தஎமதர்ம ராசனேயென்று பின்னுஞ்சொல்லுவார்கள். எ-று. (௩௩)

திடமொடுபருப்பதாதி சிவதலத்தேகுவோர்க்குத்
தொடுகழலளித்துநின்ற தூயவரிவர்காண்மன்னா
நெடுநெரியின்கண்மாறா நீர்மையிற்சாலைசெய்தாங்
கிடர்படாதன்னதான மீய்ந்தவரேபாராய்.

(எ-து.) இவர் பர்வதமுதலான சிவஸ்தலங்களுக்கு திடமாகப்போகிறவர்களுக்குபாதரக்ஷை கொடுத்தவர்,இவர் நெடுந்தூர

மான வழிகளினிடையிலே மாறுதநிழலுண்டாக சாலைவைத்து இடரில்லாமல் அன்னதானம் பண்ணினவர். எ-று. (௩௪)

அறிவுள்ளோர்தளராவண்ண மளித்தவரிவர்தானங்கள்
நெறிகொள்பாத்திரருக்கீய்ந்த நீர்மையரிவர்மாதுன்ப
முறுபொழுதடைந்தோர்க்கின்ப முதவினரிவர்காறேய
விரைதலங்களுக்குச்சென்ற வினியவரிவர்காண்வேந்தே.

(எ-து.) இவர்ஞானமுள்ள பெரியோர்களை தளராதபடிக்கு இரக்ஷித்தவர், இவர்நல்ல சற்பாத்திரமானவர்களுக்குத் தானங் கொடுத்தவர், இவர்பயந்து அடைக்கலம்வந்த பேர்களுக்குஅந்த பயத்தைநீக்கி இன்பங்கொடுத்தவர், இவர்பாதந்தேயச்சிவஸ்தல ங்களுக்குப்போன நல்லோர்அரசனை இவர்களைப்பாரும்என்றார் கள். எ-று. (௩௫)

இவர்தடங்கோவில்சோலை யிலங்கவுண்டாக்கினோரா
மிவரறிஞரையழைத்தே யிருந்தகன்னியையளித்தோர்
இவர்மறையவர்புரந்தோ ரிணியவாலாத்தியென்று [தே.
மிவர்விடையுடையோன்முன்ன ரெடுத்தவரிவர்காண்வேந்

(எ-து.) இவர் தடாகங்கள் திருக்கோவில்கள் சோலைகள் விளங்கவுண்டாக்கினவர், இவர்அறிவுள்ளவொருவரையழைத்து தன்மகளைகன்னிகாதானமாகப்பாணிக்கிரகணஞ்செய்துகொடுத் தவர், இவர் வேதங்கற்ற பிராமணரை இரக்ஷித்தவர், இனிமை யுள்ளவாலாத்தியை யென்றைக்கும்ரிஷபத்தையுடையபரமேஸ் வரன்முன்னே எடுத்தவரிவர்,பாரும் அரசனேயென்றார்கள். ()

ஈண்டுநின்றோர்கடங்கட் கேற்றகாலத்திலன்பு
தூண்டமுன்னூற்கல்லியாணம் புரிவித்ததூயர்கண்டாய்
ஈண்டுநின்றோர்தாய்தந்தை சுற்ற மென்றிருந்தோர்கோபந்
தூண்டவேபிழைசெய்தாலும் பொருத்தருயேர்வேந்தே.

(எ-து.) இவ்விடத்திலேநிற்கிறவர்கள் தங்களுக்குத்தக்ககா லத்திலே அன்புடன்உபவீதகல்லியாணம்பண்ணிவைத்தவர்கள் இவ்விடத்திலே நிற்கிறவர்கள் தாய் தகப்பன்சுற்றத்தார்கள்கோ பம்பிறக்கஎன்னபிழைசெய்தாலும்அவற்றையெல்லாம்பொருத் திருந்தவர்கள். எ-று. (௩௭)

கோவொடுபூமிபூரி குலமணியென்னுந்தானந்
[illegible]

வோவிலேழையருந்தம்போ லுற்றிடவளித்தோரின்னோர்
மேவியபொருளைநல்லோர் மேவுழியளித்தோரின்னோர்.

(எ-து.) இவர்கள்கோதானம் பூதானம் சொர்ணதானம்நவரத்தினதானங்களென்றுசொல்லப்பட்ட தானங்களைத்தாழ்வில்லாமற்பண்ணினபேர்கள், இவர்கள் தர்மத்தோடே சம்பாதித்த பொருள்களை நல்லோர் பெரியோர்களைப் பார்த்துக் கொடுத்தவர்கள். எ-று. (௩அ)

புண்ணியகாலந்தன்னிற் பரிவொடுவிரதநோன்பு
பண்ணினோரிவர்தாய் தந்தைதமைத்தினம்பணிந்தோரின்னோ
நண்ணினரலந்தணுற்ற நாளிற்றன்றிருவனைத்து [ர்
முண்ணயப்பொடுபகிர்ந்தே யுதவினரிவர்காண்மேலோய்.

(எ-து.) இவர் புண்ணியகாலங்களிலே சந்தோஷமாய்தவம் நோன்புகளைப்பண்ணினவர், இவர் தாய்தகப்பனைத் தினந்தோறும்பணிந்தவர், இவர் சினேகிதர்கள்தரித்திரமடைந்தபோது தன்னுடையசெல்வங்களை யெல்லாஞ் சந்தோஷத்துடனேபங்கிட்டுக்கொடுத்தவர், கூர்மையுள்ள வேலைத்தாங்கிய அரிசேஇவர்களைப்பாரும் என்றார்கள். எ-று. (௩௯)

அறிவுளோரீசன்றானத் தமைந்துறமடஞ்சமைத்து
நெறியுடனளித்தோரீண்டு நிற்கின்றவறவோரைய
மறுவில்பேரறமென்றோதும் வழிபிழையாமலென்றும்
பிறிவறநடந்துகொண்ட பெரியவரிவர்காண்மேலோய்.

(எ-து.) ஐயனே, ஞானமுள்ளபெரியோர்கள் சிவஸ்தலங்களிலேயிருக்கமடங்கட்டிக்கொடுத்தவரிங்கே நிற்கிறதருமவான்கள்குற்றமில்லாதபெரியபுண்ணியத்தின்வழியிலே எக்காலத்திலுந் தப்பாமல் நடந்துகொண்ட மகாபெரியவர் இவர்களைப்பாரும் மேலானவரசனே என்றார்கள். எ-று. (௪0)

உயர்சிவசரணர்வந்தா லெதிரெழுந்துவப்பினோடு
நயனுறவிறைஞ்சிநின்ற நன்மையரிவரேபாராய்
வியனுடைசிவபூசைக்கு வேண்டுபகரணமியாவும்
பயனுறக்கொடுத்தநீதிப் பண்பினரிவரேபாராய்.

(எ-து.) மேலான சிவசரணர்வந்தால் எதிராகவெழுந்திருந்து சந்தோஷத்துடனேகும்பிட்டுநிற்கிறமகாநல்லவர்களிவரைப்பாரும், இவர் சிவபூசைக்கு வேண்டும் பண்டங்களைக்கொடுத்து [illegible]க்கிவைத்தநீதியும் பண்பமுள்ளவரிவரைப்பாரும். எ-று. ()

அவமுறு துயில்கொளாம லணைமிசைச்சாய்ந்திடாமல்
கவலைவேறுற்றிடாமற் காதலோடறிவொருங்கித்
தவலறுமுணவுமெய்யும் புளகமேசாரவென்றுஞ்
சிவகதைகேட்டிருந்த செம்மையரிவரேபாராய்.

(எ-து.) சிவபுராணம்சிவகதைபடிக்கிறபொழுது அவலமானதூக்கங்கொள்ளாமல் மெத்தைதழுவணையிலே சாயாமல் வேறொருகவலைகொள்ளாமல்சிவகதைமேலேயாசையாய்அறிவுபொருந்தி மனதுஞ் சரீரமும்பூரிக்கத்தினந்தினம் சிவகதைகேட்டிருந்த செம்மையானவரிவரைப்பாரும். எ-று. (சஉ)

என்றுயர்கணக்கர்கூற விருமறத்தவரைநோக்கி
தன்றிருபாணிகூப்பித் தனிமணிமுடிதுளக்கித்
துன்றியமகிட்சிபொங்கத் தூவயன்வாய்மலர்ந்து
பொன்றிகழ்தண்டந்தாங்கும் புரவலனிசைக்கலுற்றான்.

(எ-து.) இப்படி சித்திரக்குற்றிரர் என்னும்கணக்கர்வாசித்துக்காண்பிக்க அப்பொழுது இயமதர்மனவன் தர்மவான்களையெல்லாம் பார்த்து தன்கையைக்குவித்து கும்பிட்டு கிரீடமுடியையசைத்துசந்தோஷம்பொங்கிவழியவாயைத்திறந்துகாலதண்டந்தாங்கிய இயமதருமராசன்சொல்லுகிறார். எ-று. (சங)

இனிதறம்புரிந்தநீவி ரீண்டெழுந்தருளுதற்கு
முனமெனத்தவஞ்செய்தேனோ முடிவிலென்றாதரும்மை
நனியழைத்திடலும்வந்தீர் நன்குநீரளைத்திர்கொல்லோ
புனிதனீரவர்செய்தீமை யாவையும்பொருமினென்று.

(எ-து.) இனிமையான தர்மஞ்செய்தநீங்களிவ்விடத்திலெழுந்தருளுவதற்கு நான்முன்னே என்னதவங்களைப் பண்ணினேனோ! அந்தியகாலத்திலே என்னுடைய தூதர்கள் உங்களைவந்தழைக்க விங்கேவந்திர்கள் நன்மையுள்ளநீங்கள்வழிநடைப்பட்டு இளைத்தீர்களோ அவர்கள்செய்தகொடுமையைபொறுக்கவேண்டுமெனச்சொல்லி. எ-று. (சச)

மற்றவர்தம்மைத்தூய மணிவிமானத்திலேற்றிப்
பொற்றொடிக்கனிவாய்விண்ணிற்பூவையர்தமையுங்கூட்டிக்
குற்றமிற்றருமனோனேன் குறைவறுதுறக்கத்தேவப்
பற்றொடுதருமஞ்செய்தோர் செல்குவர்பரிவினோடும்.

த்தினங்களினாற்செய்த விமானத்திலேற்றித்தங்கவளையலுஞ்சிவந்தகனிவாயுமுள்ள தேவரம்பைகளை அவர்களுடன்கூட்டிகுற்றமில்லாத இயமதர்மனானவன் குறைவில்லாத சொர்க்கலோகத்துக்குஅனுப்பஅவர்கள்சந்தோஷத்துடனேபோவார்கள். எ-று.

சென்றிடுகாலைமிக்க தேவர்வந்தெதிர்கொளப்போய்
நன்றுடைக்காமதேனு நன்மணியாதியெல்லாந்
துன்றிநின்றேவல்கேட்பத் தூயர்தம்முளமகிழ்ந்து
மன்றவீற்றிருப்பரந்த வானுலகத்திலென்றும்.

(எ-து.) தருமவான்கள்விமானமேறிப்போகிறவேளையிலே அந்த சொர்க்க லோகத்திலுள்ள தேவர்களெதிர்கொண்டுவந்து அழைத்துப்போகப்போயந்தப்பதவியிலேகாமதேனு கற்பகவிருக்ஷம் சிந்தாமணிமுதலான இஷ்ட காமியங்களைக்கொடுத்து, ஏவற்பணிவிடைகேழ்க்கத் தங்கள் மனது சந்தோஷத்துடனே அந்தத்தேவலோகத்தில் என்றைக்கும் நித்தியகலியாணகரமாக வீற்றிருப்பார்கள்.—எ-று. (சசு)

என்பனவறத்தோர்செய்கை யாவையுமினிதெடுத்துத்
தன்பரிவுடனேமிக்க தருமப்பிரசங்கனோத
வன்பில்சானந்தமென்னு மாதவனிணையிலாநல்
லன்பெனுங்கடலுண்மூழ்கி யருத்தியோடறையலுற்றான்.

(எ-து.) இப்படி தர்மவான்களுடைய செய்கைகள் எல்லாவற்றையு மினிமையாகவெடுத்து சந்தோஷத்துடனேதர்மப்பிரசங்கமகாரிஷியானவர் சொல்லக்கேட்டு மகாதபசியான சானந்தமுனிவர் அன்பென்னுங்கடலிலேமுழுகி அதிகவாசையுடனே சொல்லத்தொடங்கினார்.—எ-று. (சஎ)

நல்வினைச்சருக்க முற்றிற்று.

ஆ பாயிரம்உட்படசருக்கம்-உ-க்கு
திருவிருத்தம்-கஉஉ.

கணபதிதுணை.



திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

தீவினைச்சருக்கம்.

தருமப்பிரசங்கனென்னுந் தனிப்பெயர்நினக்கேயொக்கும்
மருளற்றமுனிவநின்போ லறக்கதைசொல்வாருண்டோ
புரிவற்றமனத்தினோடும் புல்லியவினைகள்செய்தோ
ரிருள்மிக்ககதியையோது கென்றலுமுரைக்கலுற்றான்.

(எ-து.) தருமப்பிரசங்கரிஷியென்கிறபேருமக்கேதகும், தயவுள்ளமுனிவரே? உம்மைப்போலே தருமகதையைத்தீர்க்கமாய் சொல்லுவாருண்டோ! இரக்கமில்லாதமனதுடனேபாவங்களைச் செய்தபேர்கள்போகிறவழிகளையும்சொல்லவேணுமென்றுசானந்தமுனிவர்கேட்க, தருமப்பிரசங்கமுனிவர்சொல்லுகிறார். எ-று.

வேறு.

ஒள்ளியகால னகர்க்கதிபாவர் புகுந்தாரி
கொள்ளிசுடுங்கற் சல்லியனுக்குங் கொடிதாகுந்
துள்ளநெரிஞ்சிக் கனிகளுறுத்துந் தொலையாமல்
வெள்ளரியின்பழ மென்னநிசழ்ந்து வெடிக்குங்கால்.

(எ-து.) நீதிதவராத காலனிருக்குநகரமாகியஇயமலோகத்திற்குகொடும்பாபிகள்போகும்வழிகளிலேகொள்ளிகள் சுடும் கால்களிற்சல்லிக்கல்லுகளறுக்கும் பொல்லாத நெரிஞ்சிமுள்ளுகள் துள்ளும்படிகாலுகளிலேயுறுத்தும், இப்படி தொலையாமலிருக்கிறபடியினாலே வெள்ளரிப்பழம்போலே வெந்து வெடிக்கும் கால்கள்.—எ-று.

நீடியுடற்றுங் கோடியிருக்கும் நெடுமுள்ளின்
காடுபுடைக்குந் துக்கமுறுத்துங் காணுங்காற்
கேடுகொடுக்குங் கோரமிகுக்குங் கிளர்தாரி
பாடுபடுத்துந் துற்கந்தங்கள் பரந்தேறும்.

(எ-து.) நெடுங்காலம் வருத்துவதாய் வளைந்திருக்கப்பட்ட நெடியமுள்ளுள்ள இண்டங்காடுகள்மேலே மோதும், துக்கந்தானேநெஞ்சையுளைக்கும், பார்க்குமிடத்தில் பொல்லாதகேடுகளைக் கொடுக்கிற கொடுமையே மிகுந்திருக்கும், வெகுபாடுகளை யெல்லாம்படுத்தும் கெட்டநாற்றமெங்குவீசும்.—எ-று. (௩)

ஓடுதனிற்கன லிட்டுவறுத்திடலொப்பாகுங்
கோடியவெந்திட வெவ்வெயிலேறுங்கொடுவண்டு
பீடிலுடம்பு தடிக்கவடிக்கும் பெரிதாகத்
தூடுபிளக்கு நெடும்புலியெங்கணு முளதம்மா.

(எ-து.) நெருப்பிலே யோட்டைக்காயவைத்துவறுத்தது போல் உடம்பு அழிந்துவெந்துபோகப் பொல்லாதவுக்கிரமான வெயிலெரிக்கும் உடம்புவீங்கும்படி விஷவண்டுகள்வந்துஅடிக்கும், வீங்கிய உடம்பைஅடித்துப்பிளந்துபோடும்படி நீண்டபுலிகள் எங்கே பார்த்தாலுமிருக்கும். —எ-று. (௪)

அங்கமனுங்க வருத்துங்குளவியு மருநீழற்
றங்குமிடத்தி லழுத்தியிருக்குந் தடைமுள்ளுப்
பொங்கிவிழுங்கிட வாய்கடிறந்து பொருபேயும்
துங்கநெடுங்கண வாய்களுமெங்குந் தொகுமாதோ.

(எ-து.) வழிகளில்குளவிகள்சரீரம்வாடும்படி வருந்தச்செய்யும், தோன்றும் அருநிழலில் தங்கும்படி போகிறபோது முள்ளுகளழுந்தத்தைக்கும், பக்கங்களில் பூதவேதாளங்கள் எடுத்து விழுங்க ஆக்கிரமித்து வாயைத்திறக்கும், அடுத்தடுத்து நெடிய கணவாய்களு முண்டாயிருக்கும்.—எ-று. (௫)

மாருதம்விண்ணிற் கொடுபோயெறியும் வலிதன்னால்
கூரியமுள்ளில் விழுந்துகிடக்குங் கொடியோர்தம்
பேருடலென்புமுறித்திடலோடும்பிடித்தம்மா
காரினமென்ன வறைந்திடுபேயின் கணமாடும்.

(எ-து.) பின்னும் பாவிகளைவொருசுழல்காற்றுவந்து ஆகாசத்திலே தூக்கிக்கொண்டுபோய் கரகரவென்றுசுழற்றியெறிவதி

ஞல் கூறிய முட்புதரில் விழுந்துகிடக்கும் அந்தப் பாவிகளுடைய பெரிய உடலும் எலும்புமுறிய அவடத்திலுள்ள பேய் கூட்டங்க ளிடிபோல் கொக்கரித்துப் பிடித்திழுத்து ஆடிக்கொண்டுதிரியும்.—எ-று. (சு)

படைநிகருகிராற் சருமமுரித்துப் பரிவோடு
கடிதுளிருக்குந் தசைகளைமெல்லுங் கடியும்பேய்
வடியுமிரத்தந் தலையோடதனில் வறிதேற்றுங்
குடியுமெனுனின் றதிருங்குறளுங் குதிகொள்ளும்.

(எ-து.) வழியிற்கொடிய பசாசுகள் வாளொத்த நகத்தினுலேபாவிகளுடையஉடம்பின்மேலேயுரித்து சந்தோஷத்துடனேயுள்ளேயிருக்கிறமாங்கிஷங்களைப்பிடிங்கித்தின்னும் அதிலொழுகுகின்ற இரத்தங்களை மண்டையோட்டிலே பிடித்துக்கொண்டு ஒன்றுக்கொன்று குடியுங்களென்று நின்றுகொண்டதிரும் குறளிப்பசாசுகளுங்கூட குதிக்கும்.—எ-று. (எ)

அங்கியினுடுசி வந்தகரும்பொன் னசலத்தே
மங்குறவேறும் பொழுதுநெருப்பு மழைபெய்யும்
பொங்கியெழுந்தே கடுவெம்பவனம் புடைவீச
அங்குவெடித்தே நீர்சொரியப்பே ருடல்வீங்கும்.

(எ-து.) அக்கினியிலே சிவக்கக்காய்ந்த இரும்புமலைமேலே பாவிகள் ஏறும்போது நெருப்புமழைபேயும், அதிகஉக்கிரமாய் கடுங்காற்றெழுந்து பக்கங்களில்வீசும், அதினுல்அந்தப்பாவிகளுடம்பு வீங்கிவெடித்து ஊன்தண்ணியொழுகும்.—எ-று. (அ)

இடையளவாகுந் தேளின்குழியு மிரங்குற்றுற்
கொடியபிசின்போ லொட்டிவிடாத குழைசேறு
நெடிதுகொதிக்குஞ் சுண்ணமடுக்க ணிலையாத
உடலினகற்றும் புனலின்கால்களு முளமாதோ.

(எ-து.) பின்னுமந்த வழியிலே இடைமட்டும் பள்ளமான தேள்களிருக்குங் குழிகளும்காலில்கொடியபிசின்போலவொட்டிக்கொண்டுபிடுங்கப்படாத குழைந்தசேறுகளும், அனல்போற் கொதிக்கப்பட்டசுண்ணமடுக்களும்நிலைக்காத சிறுநீர்வாய்க்கால்களுமுண்டாயிருக்கும்.—எ-று. (கூ)

சுடுகூர்மணலுங் கபடக்கிணறுஞ் சுத்திக்கொண்
டடிமீதேறிக் கவ்வும்புணிய மடுங்கோபம்

படர்சாகினிடாகினி கண்முழங்கப் படியாழ்வீ
ழிடியோதையுமுண் டன்பில்லார்போ மிடமெங்கும்.

(எ-து.) சுடப்பட்டநொய்யமணலும், கால்வைத்தாலிடியும் படியான மேலேமூடிக்கபடமான கள்ளக்கிணறுகளும், கால்கள் மீதேறிச் சுற்றிக்கொண்டுகவ்வும் பாம்புகளும், கோபத்தோடுசாகினிடாகினியென்னும்பூதங்கள்முழங்குஞ்சத்தங்களும், அதனால் பயமும் உண்டாயிருக்கும், அன்பில்லாத பாவிகள் போகுமிடமெங்கும்.—எ-று. (கo)

ஒன்றினெடுந்தாள் வைத்திடில்வாங்க வொருசாமஞ்
சென்றிடுமளறுங் குருதிகுடித்துச் செறியூனைத்
தின்றிடுமரவுங் கொத்துங்கழுகுஞ் செறிசூறும்
துன்றிவெகுண்டு கடித்திடுநாயுந் தொகுமெங்கும்.

(எ-து.) பாவிகள் போகின்றவழியிலே வைத்தகாலைவாங்க ஒரு சாமம் செல்லும்படியான சேறும், இரத்தங்களைக்குடித்து ஊனைத்தின்னும் பாம்புகளும், கொத்திக்கொத்திப்பிடுங்குங்கழுகுகளும், கூட்டங்கூடிகடிக்கும் மூஞ்சுறுகளும், கூடிக்கொண்டு சீறிக்குலைத்துக்கடிக்கும் நாய்களும் இருக்கும்.—எ-று. (கக)

வேறு.

காலன்படர் பாசங்கொடு கழுத்திற்பிணித் திழுப்பார்
சூலங்களி லெடுத்தாப்பொடு தூக்கிக்கொடு செல்வார்
வாலென்புமு றிந்தேவிஷ மயிர்பற்றியு தைப்பார்
சீலங்களை மறந்தேமறஞ் செய்தோர்களை வைதே.

(எ-து.) இப்படி அவதிப்படவும், இயமதூதாள்சிலரைப்பாசத்தினாலே கழுத்திற்சுருக்கிட்டுஇழுப்பார்கள், சிலரைசூலங்களிலேகுத்தி தூக்கியெடுத்து கொக்கரித்துக்கொண்டு போவார்கள் சிலரை எலும்புமுறிய மயிரைப்பிடித்துவுதைப்பார்கள், தருமங்களைமறந்து பாபங்களைச்செய்தசிலரைப் பின்னும்வைது கண்டிப்பார்கள்.—எ-று. (கஉ)

மேட்டேற்றுவர் பள்ளத்திடை வீழத்தள்ளி மிதிப்பார்
காட்டாற்றுவன் மீனனவை கவ்விக்கொள விடுப்பார்
மாட்டாதிருப் பார்தங்களை வன்றூள்கொடு புடைப்பார்
சேட்டாளிக ளெனவந்தெதிர் சீறிக்குதி கொள்வார்.

(எ-து.) இயமகிங்கிராள் சிலரை உயர்ந்தமேட்டிலேற்றிப் பள்ளத்திலே குப்புறத்தள்ளிமேலேமிதிப்பார்கள்,சிலரைக்காட்டாற்றிலே முதளைக்கவ்விக்கொள்ளவிடுவார்கள்,நடக்கமாட்டாதிருக்கப்பட்ட சிலரைபலனுள்ளதங்கள் காலினாலேஉதைப்பார்கள்,யாளிபோல்வந்தெதிர்த்துச்சீறிக் குதிப்பார்கள்.—எ-று. ()

மிகவெந்திடு புளினந்தனை மிதித்தோடவி டிப்பார்
இகல்கொண்டுபு ரண்டோலமிட்டிளைப்பத்துறந் தடிப்பார்
அகநொந்திட மறுதாரியி னழைப்பார்சின மிழைப்பார்
தகுமங்கியி டும்பாரையில் வறுப்பார்மிக நறுக்கி.

(எ-து.) பின்னுந்தூதர்கள்சிலபாவிகளை வழிகளிலேமிகுதியும் வெந்துசுடப்பட்டமணல்மேட்டிலேமிதித்தோடச்சொல்லி இடிப்பார்கள், சிலபேரை அதில் பிரண்டுவிழுந்து ஓலமிட்டுகதறியிளைக்கும்படி துறத்தியடிப்பார்கள்,சிலரைமனங்கலங்கபோற வழியைவிட்டுவேறுவழியிலழைப்பார்கள், சிலரைக்கோபிப்பார்கள், சிலர்தேகத்தை நெருப்பிட்டு காய்ந்தபாறையிலே துண்டு துண்டாக நறுக்கி வறுப்பார்கள்.—எ-று. (கச)

இருக்கும்பொழுதெழுந்தோடெனவிடிபோல்பசுந்தடியாற்
பெருக்குந்துயர் படமோதுவர் பேரூருவை முறிப்பார்
நறுக்குங்குதி யறவென்பர்கள் நடுநாக்கினை யறுப்பா
ரெரிக்கும்படி பிரண்டைக்கொடி யிடித்தேநலங்கிடுவார்.

(எ-து.) வழியில் நடக்கமாட்டாதிருக்கிற சிலரை யெழுந்தோடச்சொல்லியிடிபோலேயதிர்ந்துபச்சைத்தடியாலேதுயரம் பெருகஅடிப்பார்கள்,பெரியதொடையைமுறிப்பார்கள்குதிக்காலையறநறுக்குமென்பார்கள்சிலபேரைபேசுநாக்கையறுப்பார்கள் சிலபேரை வுடம்பெல்லாமெரியும்படி பிரண்டைக்கொடியையிடித்து சர்வாங்கமு நலங்கிடுவார்கள்.—எ-று. (கரு)

போவாவென மார்பிற்பெரு வெரினிற்புடைத் திடுவா
ரோவாதெழுந் தலரும்படிக் கொருபாரெடுத்தரைப்பார்
கோவாய்கொடி னுடையக்கரங் கொடுமோதி யலைப்பார்
தீவாய்களில் கத்தும்புனல் விடுப்பார் படர்சிலரே.

(எ-து.) தூதர்கள், சிலரைப்போவென்றும் வாவென்றும் மார்பிலும் பிடரியிலுமிடிப்பார்கள்,சிலரையேநடுங்கும்

ரத்தக்கதாகஉபத்திரவம்பண்ணுவார்கள்,சிலரை அம்மியில்வை த்தரைப்பார்கள், சிலபேர்களைத் தாள்வாய்களும் தாடைகளுமு டையும்படி குத்துவார்கள், சிலருடையவாயிலே சிறுநீரைவிடு வார்கள் சிலதூதர்கள்.—எ-று. (கசு)

ஆங்கேபெரு மலமூத்திர குழியுத்தன னவற்றிற்
பாங்காயருந் திடுவீரெழு பசிதாப மடங்கப்
போங்கோளென வுதிரந்தசை சிதரும்படி புடைப்பார்
தீங்கானவை தாமிவ்வகை செய்வார்மிக வைவார்.

(எ-து.) சிலரை அதோமலக்குழியும் மூத்திரக்குழியுமிருக் கின்றன, அதிலே உங்களுக்குண்டானபசியடங்கத்தின்னுங்கள் தாகமடங்கக் குடிக்கப்போங்கள்என்றுசொல்லிஉதிரமுஞ்சதை யும் சிதரும்படி அடிப்பார்கள்,இயமதூதர்கள்பாவிகளை இப்படி துன்பப்படுத்தியும்,கடுஞ்சொல்லால்வைவார்கள்.—எ-று. (கஎ)

பாதங்களு ளைந்தேநனி பதைத்தேபடி யுதையால்
மோதுங்கதை யாலங்கை முறிந்தேவிழ வுடைந்தே
காதம்பல வாயோரடி களைதேயுட லிளைத்தே
யோதுந்தம பாவங்களை நினைவார்மன முளைவார்.

(எ-து.) பாவிகள் இப்படிப்பட்ட உபத்திரத்தினாலே தங் கள் கால்களெல்லாம் வலியெடுத்து மிகுதியும்பதைத்து அடியா லும் உதையாலும், மோதுங்கதையாலும், கைகள்முறிந்தும், கண்களுடைந்தும், ஒருகாதவழி அனேகங்காதவழியாகக்கண்டு வோரடியெடுத்துவைக்க துர்ப்பலமாய்களைத்து உடலிளைத்து தங்கள் தங்கள் பாவங்களை நினைத்துக்கொண்டு மனக்கவலையுற் றார்கள்.—எ-று. (கஅ)

இனைந்தேபசி வெயிலாலுட லிருபுண்கணினீரா
னனைந்தேவலி குறைந்தேநடு நடுங்கானிடு யொடுங்கா
மனந்தான்மிகப் பயந்தேதடு மாற்றங்கொடு தீயோர்
முனந்தீமைகள் செய்தோமெனமொழிவாருளமழிவார்.

(எ-து.) பசியாலும் வெயிலாலும் மனமிரங்கி துக்கித்து அழுதகண்ணீரா லுடல்நனைந்து பலங்குறைந்து நடுநடுங்கி மிக வும் ஒடுங்கிப்பயந்துதடுமாற்றங்கொண்டுதாங்கள் முன் பூமியில் வாழ்கின்றபோது பாவங்களைப்பண்ணினோமேயென்று சொல்லி நெஞ்சமழிவார்கள்.—எ-று. (கசு)

நல்லோர்களை யொறுத்தோமுயர் நடுநீதியை வெறுத்தோம்
புல்லோருட னடைந்தோமொளிர்போதத்தினைக்களைந்தோ
மொல்லாதன செய்தோமற மொழிந்தோந்தவ மழிந்தோங்
கொல்லாவுயிர் கொன்றோமதி கோபத்துட னின்றோம்.

(எ-து.) நல்லவர்களை மனநோவப்பண்ணினோம், நடுவுநிலை மையைத்தள்ளினோம் அறிவில்லாதவரோடு கூடினோம், நல்லவுண்மையான ஞானத்தை யெடுத்தெரிந்தோம், அடாதகாரியங்களைச்செய்தோம், தருமத்தை யொழிந்தோம், தவங்களை யழித்தோம் கொல்லாத சீவனைக்கொன்றோம், அதிகமான கோபத்துடனேயிருந்தோம்.—எ-று. (உ0)

தீர்த்தங்களி லெய்தோமுயர் தெய்வங்களை வைதோம்
பார்த்துண்டிலமிரப்போர்தமைப்பழித்தோ மவம்புரிந்தோம்
ஏற்றும்பெரி யோர்வந்திடி லெழுந்தோ மிலமிருந்தோ
மாத்துன்மதி யடைந்தோம்பவ வழியூடு நடந்தோம்.

(எ-து.) ஒரு தீர்த்தங்களிலே சென்று முழுகோம், உயர்ந்த தெய்வங்களைப்பழித்தோம்பகுத்துண்டிலோம், இரக்கின்றவரைப்பழித்தோம், அவமானகாரியத்தைப்பண்ணினோம், சிவனைத்துதிக்கும்பெரியோர்கள் வந்தால் எழுந்திராமலிருந்தோம், மகத்தான துர்ப்புத்தியையடைந்து அந்தபாவவழியிலே நடந்தோம்.

அரனன்பரைத்துறந்தோம்பெறுமனைதந்தையைமறந்தோம்
தருமங்களை யிரித்தோமிகழ் காமாதியைச் செறிந்தோம் [ம்
துருமந்தனைத் தடிந்தோமிதர்ச்சொலுமுண்மையைக்கடிந்தோ
பெருகும்பய னறநீதிகள் பிழைத்தோமிவ ணுழைத்தோம்.

(எ-து.) சிவனடியார்கள்நேசத்தைவிட்டோம், பெற்றமாதாபிதாவை மறந்தோம், தருமங்களை நீக்கினோம், இகழப்பட்டகாமக்குரோதலோபமோகமத மாச்சரியங்களையடைந்தோம், தோப்புகளைவெட்டினோம், இதஞ்சொன்னவர்களைக் கோபித்தோம், மிக்கபயனைத்தரு நீதியைத்தப்பிநடந்தோம், அதனால் இவ்விடம் உழைத்தோம்.—எ-று. (உஉ)

என்றின்னன பன்னியிவ ணிடர்பட்டிடு வோர்பால்
நின்றிங்கது நினைத்தாவதென் நீர்செய்பிழை பலவாந்
துன்றுங்களைக் கண்டாலுயர் தோஷந்தொடர்ந் தடரும்
[illegible]

(எ-து.) இந்தப்படிசொல்லி இவடத்தில் வியசனப்படுகிற பாவிகளைப்பார்த்து இயமதூதர்கள், இவடத்தினின்றுஇப்போ துநினைந்தாலாவதேது, நீங்கள் முன்னே பலபாவங்களைச்செய் தீர்கள், உங்களைக்கண்டால்எங்களுக்குத் தோஷந்தொடர்ந்தட ரும் என்றுசொல்லி உங்களைக் கொன்றுத்தின்கிறோமென்று வந்து கோபிப்பார்கள்.—எ-று. (உங)

ஒடுஞ்சகட் டெதிரேயிரு கால்நீட்டிடு மவர்போல்
கோடும்பல பாவம்புரி கொடியீருமை வருத்திக்
கேடிங்கின மெடுத்துப்பல கிட்டிப்புரிந் திடினும்
தேடுந்தவ மாமுங்களைச் செறிந்தே விடலாமோ.

(எ-து.) ஓடிவரப்பட்டவண்டிக்கெதிரில்இரண்டுகாலையும் நீட்டுவார்களைப்போல் நீங்கள்செம்மையில்லாத அனேகபாவங் களைப்பண்ணின தீமையாளர், உங்களையிங்கே வருத்தப்படுத்தி யென்னென்ன கெடுதிகள்செய்தாலும்அதுவெல்லாம்எங்களுக் குத்தேடின தவங்களாகும், உங்களை யெளிதிலே விடலாமோ! என்பார்கள்.—எ-று. (உச)

வேறு.

இடர்படி னும்மைப் புரந்திட வொணாதிங்
கெம்மிரை யாணையிவ் விடைக்கு
மடல்புரி யெமனூர் தனக்குமெண் பத்தா
ருயிர யோசனை யுளதா
முடலுயி ரின்னும் படுசெய லறியீ
ரொழிந்தது பூசினி கனியிற்
கடுகளவேனு மிலையெனச் சென்மின்
கடிதெனத் தடிகொடு புடைப்பார்.

(எ-து.) எங்களெசமானுடைய ஆக்கினைப்படிக்குதுன்பப் படுகிற வுங்களை நாங்கள் இரக்ஷிக்கக்கூடாது இன்னம் இவடத் திற்கும் இயமபுரத்திற்கும்எண்பத்தாருயிரம்யோசனைகாதவழி யிருக்கின்றது, உடலும் உயிரும் இன்னம்படப்போகிறகாரியம் அறியமாட்டீர்கள். நீங்களின்னேரவரைக்கும்பட்ட துன்பங்க ளெல்லாம் ஒரு பூசினிக்காயிலே கடுகளவுமாத்திரமில்லை, இனி வேகமாகப்போங்களென்று அந்தப் பாவிகளை இயமதூதர்கள் தடியினைப்பார்கள்.—எ-று. (உரு)

சிலர்தமை யுதறி யுதறியே தரையிற்
செம்புனல் பெருகநின் றடிப்பார்
சிலர்தமை யோடு மோடுமென் றதிர்த்துத்
தெறுகதை கொண்டுமெய் புடைப்பார்
சிலர்தமை யுற்கை கைக்கொடு சுடுவார்
சிலர்தமைப் பாறைமே லறைவார்
சிலர்தமை யெழுக வென்றுமோ திடுவர்
சிலர்தமைத் தசைபிடித் தரிவார்.

(எ-து.) எமதூதர்கள் சிலபேர்களை இரண்டு கால்களையுஞ் சேர்த்துத்தூக்கி நெற்சூடுபோல வுதறியுதறித் தரையிலே உதிர மோட நின்றுகொண்டடிப்பார்கள்; சிலபேர்களையோடுங்களோ டுங்களென்று தண்டாயுதத்தாலே அடிப்பார்கள்; சிலபேர்களை நெருப்புக்கொள்ளியைக் கையிலேயெடுத்துக்கொண்டு சுடுவார்கள்; சிலரைப் பாறைமேல் அறைவார்கள்; சிலரை யெழுந்திரு வென்று மோதுவார்கள், சிலபேர்களை சதையைப்பிடித்து அரிவார்கள்.—எ-று. (௨௬)

சிலர்தமை யெடுத்து மருங்கினை யொடிப்பார்
சிலர்மிசைத் தேட்டொடை புனைவார்
சிலர்தமை யரவந் தனையெடுத் திடுவார்
சிலர்தமைப் புலிக்கிரை கொடுப்பார்
சிலர்தமைப் பெரிய சிலைகளிற் குருதி
சிதறிட முட்டவைத் திடிப்பார்
சிலர்தமைக் காய்ந்த குறட்டினு லுடலைத்
தீய்ந்திடப் பிடுங்கிநின் றதிர்ப்பார்.

(எ-து.) பாவிகளானசிலரைஇடையைஒடிப்பார்கள்,தேள்களை மாலையாகக்கட்டிகழுத்திலேபோடுவார்கள், சிலர்மேல்பாம்புகளை யெடுத்துப்போடுவார், சிலபேரை புலிகளுக் கிரையாகக் கொடுப்பார், பெரியகுண்டுகல்லுகளிலேஉதிரஞ்சிதரத்தக்கதாய் தலையைப்பிடித்து முட்டுவார்கள்,சிலபேர்களைக்கனலிற்காய்ந்த குறட்டினாலே உடல்தீயச் சதையைப்பிடுங்கிக்கொண்டு ஆக்கிரமிப்பார்கள்.—எ-று. (௨௭)

கறடிமுன் வலியரிவ ரெனப் பிணித்துக்
கடிகொடுத் தெரிகுவர் சிலரை

தெறுதகர் வலிதிற் பாய்ந்திட வெதிரே
சிரங்களை வளைப்பர்சிற் சிலரை
மறுகுற வெகுண்டு குரைத்திடு ஞமலி
வாய்க்கெதிர் தள்ளுவர் சிலரை
குறுகிநின் றிசைபாடுக வென விழியிற்
கொடுமிள கிடுகுவர் சிலரை.

(எ-து.) சிலரைப் பலமுள்ளவர் இவர்களென்று காலையுங் கையையுங்கட்டிக் கறடிக்கிமுன்னுக வெடுத்தெறிவார்கள், சிலரைகோபமுள்ள ஆட்டுகிடாக்கள் பலன்கொண்டுபாய வெதிராகத் தலைகளை வளைத்துப்பிடிப்பார்கள் சிலரைக்கோபித்துக்குலைக்கின்றநாய் வாய்க்கெதிராக யலரத்தள்ளுவார்கள், சிலபேர்களை பக்கத்தில்கின்றுராகம்பாடச்சொல்லிக்காரமுள்ளமிளகையறைத்துக்கண்ணில் அப்புவார்கள்.—எ-று. (உஅ)

கூரிய சுண்ணப் பொடியினைக் கரைத்துக்
குடிக்கவென் றடிப்பர்கள் சிலரைப்
பாரிய பரியி னுட்புன லெருக்கம்
பாலொடு புகட்டுவர் சிலரை
நீர்விடா யகல நெருப்பினை யருந்தித்
தின்மினென் றடிப்பர்கள் சிலரை
யாருமுட் பசிநோ யகற்றிட மலத்தை
யருந்துமென் றிழுப்பர்கள் சிலரை.

(எ-து.) சிலரை கூரிய சுண்ணும்பைக்கரைத்துக்குடிக்கச் சொல்லி அடிப்பார்கள், சிலரைக் குதிரைமூத்திரமும்எருக்கம் பாலுங்கலந்து வாயிலேபுகட்டுவார்கள், சிலரைநீர்விடாநீங்கநெருப்பைமுழுங்குங்களென்று சொல்லுவார்கள், சிலரை உள்ளே பொருந்தியபசியாகியவியாதிபோக மலங்களைத்தின்னுங்களென் றிழுப்பார்கள்.—எ-று. (உகூ)

மங்கையர் தம்மை நினைந்து வேகின்ற
மற்றிவ ரென்றுதே ளணைமேற்
பங்கவா ளரவின் றலையணை கொடுத்துப்
படர்விடந் தன்னைமேற் றிமிர்ந்து
வெங்கன லொழுகு மயத்தினோ வியத்தை
மேவுமின் மேவுமின் னெனவே

தங்கையி லுறுமத் திகையினு லடிப்பார்
சாலவுஞ் சிற்சிலர் தமையே.

(எ-து.) சிலபேர்களை இவர்கள் நினையாதபெண்களைநினைத்துக் காமாக்கினியிலே வேகிறபேர்களென்று அவர்களுக்குத்தேள்மெத்தைபரப்பி பாம்புதலைக்கணைகொடுத்து, அவர்கள்மேல் விஷங்களைத்திமிர்ந்து கடூரமான அக்கினியொழுகக்காய்ந்த இரும்பினுலேசெய்தஒருபெண்பதுமையைஅணைத்துக்கொள் அணைத்துக்கொளென்று இயமபடாக்கள் தங்கள் கையிலேயிருக்கிற குதிரைச்சம்மட்டியினுலே அடிப்பார்கள்.—எ-று. (ஙo)

மயிர்பிடித் திழுத்து வீழ்த்தி மேலேறி
வாள்கொடு குளத்தினைத் துளைப்பர்
செயிர்கொடு விழியைப் பிடுங்குவ ரெலும்பு
சிதறிட வுலக்கையா லெறிவர்
குயமெடுத் துடலைக் கொந்துவர் வாயைக்
குடைகுவர் கைகளை முறிப்பர்
தயவிலா தலரத் தலைகளை யுடைப்பர்
சாடுவர் தூதர்சிற் சிலரை.

(எ-து.) எமதூதர்கள் சிலபாவிகளைமயிரைப்பிடித்து இழுத்து விழத்தள்ளி மேலேயேறிக்கொண்டு கத்தியினுலே நெற்றியைத்துளைத்துக் கண்ணைப்பிடுங்குவார்கள்; எலும்புசிதற உலக்கையாலே இடிப்பார்கள்; கொடுவாளெடுத்து உடம்புகளைக் கொத்திவாயைக்குடைந்துகைகளைமுறிப்பார்கள்;தயவில்லாமற் படிக்குஅலரஅலரத்தலைகளைஉடைத்துஅடிப்பார்கள்.—எ-று.

சிலரிடைப் பணியூர் பிலத்திடைப் புகுத்திச்
சிலரிடை வசியின்மேல் நிருத்தி
சிலரிடை யலகைப் பரிபிடித் தேகும்
செயலெனப் பற்றிவெங் கடுவிற்
சிலரிடை வருத்திச் சிலரிடைக் கருங்கற்
செறிவினுள் ளடிபிடித் தீர்த்துச்
சிலரிடை யுருட்டிச் சிலரிடைத் துறத்திச்
சீறுவர் வீறுடைப் படரே.

(எ-து.) மகாபாவிகளானபேர்களைச் சிறுதிடத்திலே சர்ப்பங்களிருக்கப்பட்ட பாதாளபிலத்துவாரத்திலே புகுவித்தும்,

சிலஇடங்களில்வசியைநாட்டிநிருத்தியும்,சிறுதிடத்தில்குதிரைக் குப் பேய்பிடித்துப்போகுஞ் செயல்போல பிடித்துக்கொண்டு கூருள்ள முள்ளுகளில் வறுத்தியும், கருங்கற்செறும்புகளிலே படுக்கப்போட்டுக் காலைப்பிடித்திழுத்து உருட்டியும்,சிறுதிடங் களில் ஓடத்துறத்தியும்இப்படிக்குச் சீறுவார்களியமபடாக்கள்.

வெய்யவை தாணிக் கனற்புன லிடையே
வேகவைத் தக்கரை யேத்தி
துய்யசா னந்த முநிவனு லிவர்தங்
தொடர்தவப் பந்தநீங் குதல்போல்
மெய்யுறப் பிணித்த நாண்களை யவிழ்த்து
விறலுடைச் சமன்முனந் தொழுத
கையுடைத் தூதர் விடுத்தலு மிவரைக்
காண்குதல் பாவமென் றறைவான்.

(எ-து.) ஊஷ்ணமண்டலத்திலேயுள்ள அக்கினிமயமான ஜலத்தினில்வேகவைத்து அக்கரையிலேயேற்றிச் சுத்தப்பிரகாச முள்ள சானந்தமுநிவராலே இவர்களைத்தொடர்ந்த பாவக்கட்டு கள் நீங்குகிறதுபோல அந்தப்பாவிகளை அழுந்தக்கட்டியபாசங் களை யவிழ்த்து வெற்றியுள்ள இயமதர்மன்முன்னே தூதர்கள் கைதொழுது கொண்டுபோய்விடவும் இந்தப்பாவிகளைப்பார்க்கி றது தனக்குப் பாவமென்று அருவருப்பான்.—எ-று. (௩௩)

ஆங்கிவர் புரிந்த தீவினை யனைத்து
மோர்ந்தபின் வருத்தது மெனவே
தீங்கொரு சிறிது மணுகொணு திருந்த
சித்திர குற்றரை நோக்கி
பாங்குற வுரைமி னென்றலுந் தொழுத
பாணிய ராகிவந் தடைந்து
தாங்கிய கணக்கி னேட்டினை ப் புரட்டிச்
சாற்றுவர் கூற்றன்மு னின்று.

(எ-து.) அந்த இயமதர்மராஜனைவன் குற்றமற்றசித்திர குற்றரைப்பார்த்து அங்கேயிவர்கள்செய்தபாவங்களையெல்லாம் ஒன்றுதப்பாமல்சொல்லுங்களென்றுகேட்க,அவர்கள்கும்பிட்ட கையராகி கிட்டவந்து கணக்கினையெடுத்து ஏடுகளைப்புரட்டிப்

அரனுருத் தெரிசித் தவரல ரிவர்மெய்
யறமறிந் தவரல ரிவர்நீள்
பரிவொடு புனித தீர்த்தமா மிவையிற்
படிந்தவ ரலரிவர் பசித்தோர்க்
குரிமையி னுடனே யோதனம் பகுந்திட்
டுண்டவ ரலரிவர் மதுவைப்
பருகின ரிவர்தொல் லறமுடை யவரைப்
பார்த்தவ ரலரிவர் பெரியோய்.

(எ-து.)இவர்கள்சிவரூபத்தைத்தெரிசனம்பண்ணவர்களல்லர், மெய்யானதர்மங்களை யறிந்தவரல்லர், சந்தோஷத்துடனே புண்ணியதீர்த்தங்களிலே முழுகினபேரல்லர், பசித்துவந்தபேர்களுக் கன்னமிட்டுவந்தவரல்லர், கள்குடித்தவர்கள், முறைமையானதர்மமுடையோர்களையுங்கண்டவர்களல்லர்பெரியஎமதர்மராஜனேயென்று பின்னையுஞ்சொல்லுவார்கள்.—எ-று. (௩௫)

கனவினு மரனை யருச்சனை புரிதல்
கண்டவ ரல்லமற் றிவர்தாந்
துனிவினை யகற்றுஞ் சிவப்பிர சாதந்
தொட்டவ ரல்லமற் றிவர்தாம்
புனிதரைக் காணில் வழிவில காத
புல்லிய ரிவர்கொடு வினைக்கு
மனமொரு சிறிதஞ் சாதவ ரிவர்காண்
வன்மைகூ ருளத்தின ரிவர்காண்.

(எ-து.) இவர்கள் கனவிலும் சிவபூசைபண்ணினதைக்கண்டவர்களல்ல,சிவனுக்கற்புதமான பத்திரம், புஷ்பம்,விபூதி,சந்தனம் இதுமுதலானசிவப்பிரசாதங்களைக் கைகளினாலும்தொட்டவர்களல்ல, புனிதர்களைக்கண்டால் அவர்களுக்குவழிவிலகாத புல்லர்கள், கொடியபாவங்களுக்குச் சற்றுகிலு மனமஞ்சாதவர்கள், இரக்கமில்லாத நெஞ்சுள்ளவர்கள்.—எ-று. (௩௬)

இவர்சிவன் பெயர்சொல் லாதநா வுடையோ
ரிவர்பெரும் பொய்க்கரி யுரைத்தோ
ரிவரய லவருக் கிடங்கொடுத் துரிய
வினத்தவர் தங்களைக் கெடுத்தோ
ரிவர்குறை யில்லார் மீதுகோ ளுரைத்தே

ரிவர்தவத் தவரை நிந்தனை புரிந்தோ
ரேதமோர் சிறிதுமி லாதோய்.

(எ-து.) இவர்கள் சிவனுடையபேரைச்சொல்லாத நாவுடையவர்கள், பொய்சாக்ஷி சொன்னவர்கள், அயலாருக்கிடங்கொடுத்து இனத்தாரைக் கெடுத்தவர்கள், குற்றமில்லாதபேர்களபேரில் கோளைச்சொல்லித் தெண்டங்கொடுக்கப்பண்ணினவர்கள், தவமுடையபேர்களை நிந்தித்தவர்கள் எமதர்மராஜனேயென்றார்கள்.—எ-று. (௩எ)

மற்றிவர் பற்றும் பொருள் சிறிதேனு
மவருயிர் வாட்டியே பரித்தோர்
மற்றிவர் பிக்ஷை யெனவடைந் தவர்மேல்
மடிசெவி ஞாளியை விடுத்தோர்
மற்றிவ ரறிஞர்க் கேதுமீய்ந் திடாது
வல்வினை வழிப்பொருள் பரித்தோர்
மற்றிவ ரனந்தச் சொல்லிலொன் றேனும்
வாய்மைசொல் லாதபொய் மறவர்.

(எ-து.) இவர்கள் கொண்டுபோகும் பொருள் அற்பமானதானாலும் அவர்கள் சீவனைக்கொன்றுவழிபரித்தவர்கள், பிக்ஷையென்று வந்தபேர்களின்மேல் நாயை உசுப்பிடிக்கவிட்டவர்கள் அறிவுடையபெரியோர்களுக்குயாதுங்கொடாமல்பாவமானவழியில் பொருளைத்தேடினவர்கள், ஒரு மெய்யாகிலுஞ் சொல்லாத பொய்யுடையபாதகர்கள்.—எ-று. (௩அ)

வருபொரு ணயப்பால் மனிதரை வருத்து
மனிதராக் கதரிவர் தினமும்
புரையினுன் மறையோர் பொருள்பல கவர்ந்து
புல்லியர்க் களித்தவ ரிவரே
தரையில் வண்பசுவைக் கொன்றடிச் செருப்புத்
தானமீய்ந் திடுவது போல
பெருவினை நெறியா நீட்டிய பொருளை
பேதையர்க் களித்தவ ரிவரே.

(எ-து.) இவர்கள் திரவியம் சம்பாதிக்கும் ஆசையினாலே மனிதர்களையெல்லாம் வருத்தப்படுத்துகிற மனிதராக்ஷதர்கள், நல்ல வேதப்பிராமணர்கள் பொருளை அபகரித்துப் புல்லர்களுக்

ருப்பை தானங்கொடுத்ததுபோல பெரிதான புண்ணியத்தின் வழியே ஞாயத்துடனே தேடிவைத்த பொருள்களை யெல்லாம் வேசிகள்முதலான பேர்களுக்குக் கொடுத்தவர்கள்.—எ-று. ()

பெருமடை யுதவு காலையில் பந்தி
பேதமே பண்ணின ரிவர்கா
ணொருமனையவளை யடியவ ளாக்கி
யடியள்பா லுற்றவ ரிவர்கா
ணிறையவன் றன்னை யமரிடை விடுத்தே
யிருந்துபோய் வந்தவ ரிவர்கா
ணிறைதரு களவு படைத்தவ ரிவர்கா
ணெறிமுறை தவறிடா மனத்தோய்.

(எ-து.) இவர்கள் அன்னம்பரிமாறும் வேளையிலே பந்தி பேதம்செய்தவர்கள், மனையாட்டியைவெள்ளாட்டியாக்கிவெள் ளாட்டியினிடத்திலே பொருந்தியிருந்தவர்கள், அரசனை யுத்த முகத்தில் விட்டு ஓடிப்போய் பிழைத்தவர்கள், நிறைந்த அப கீர்த்தியே சம்பாதித்தவர்கள், நீதிமுறைதவறாதமன்னனே என் றார்கள்.—எ-று. (௪0)

உடனுதித் தவர்க்கே விடத்தினை யருத்தி
யொழித்தவ ரிவர்கரிச் சாந்தைச்
சுடுதல்போ லொருவர் தருபொருட் காகத்
தூயரைக் கெடுத்தவ ரிவர்காண்
கொடைகொடா நினைவே பிறிவரு முறவு
கூறிலஞ் ஞானமே யன்னை
கெடுமதி பிதாவென் றடைந்தவரிவர்காண்
கிளர்வலிப் பாசவெண் கரத்தோய்.

(எ-து.) இவர்கள் கூடப்பிறந்த சகோதரர்களை நஞ்சிட்டுக் கொன்றவர், கரிவேண்டி சந்தனமரத்தைச் சுட்டதுபோல் ஒரு வர் கொடுக்கிற இச்சகப்பொருளினிமித்தம்நல்ல உத்தமர்களைக் கெடுத்தவர், கொடைகொடுக்காதநினைவையே தங்களுக்குறவா கவும் அவிவேகமே தங்களுக்குத் தாயாகவும் கெடுபுத்தியே தங் களுக்குத் தகப்பனாகவும், அடைந்திருக்கின்றவர்களிவர்கள்,பல முண்டான பாசக்கயிறுபிடித்த கையையுடைய இயமதர்மராஜ னே யென்றார்கள்.

கடியர்பா லுறவு கொண்டவ ரிவரே
கையடை யிருத்திய பொருளை
நெடிதுநா ளகன்ற பின்றம தெனவே
நின்றுபோ ராடின ரிவரே
கொடுமையே மனைவி யசத்திய மெனுமோர்
கோதையே தங்கையென் றிருந்த
முடிவிறீ வினைய ரிவர்கணீ பாராய்
முழவுறழ்த் தினிபுயத் துறவோய்.

(எ-து.) இவர்கள் பொல்லாதமூர்க்கரிடத்திலே உறவுகொண்டிருந்தவர்கள், அடைக்கலமாகவைத்தபொருளைநெடுநாள் சென்றபின்வைத்தவர்கள் (வந்து)கேட்டாலதைதங்களுடையதென்று வழக்காடினவர்கள், பொல்லாங்கையே தமக்குப்பெண்சாதி யென்றும்அசத்தியமேதங்களுக்குத்தங்கையென்றும்எண்ணிக்கொண்டிருந்தஅளவில்லாதபாவிகளிவர்கள், பாரும்மத்தளம் போலுந்திரண்டுபலங்கொண்டதோளினையுடையவனேயென்றார்கள்.()

விழைவொடு நாடக் கொடுத்திடு பொருளை
வெள்ளியின் றளிக்கொணு தெனக்கை
யுழிபிடித் தவர்கா ணிவரிதம் பேசி
யுட்பகை யிருத்தினோ ரிவர்காண்
பழுதற முன்னர் வாங்கிய கடனைப்
பண்பொடு கொடாதவ ரிவர்காண்
குழைவொடு மெலிந்தோர் மனைவியைக் கண்டு
கூடவேண் டியகல ரிவர்காண்.

(எ-து.)ஆசையுடனேகொடுத்தபொருளைவாங்கிக்கொண்டின்றைக்குவெள்ளிக்கிழமைஎன்கையில்வந்தது உன்கையில்கொடுக்கப்படாதென்றுசொல்லுகிறவர்கள், (உத்தமர்பொருளைக்கவறஎண்ணி)வாயினாலேயிதமாய்ப்பேசியுட்பகையைவைததிருக்கின்றவர்கள், பழுதில்லாமல் முன்னால் வாங்கினகடனை பண்போடு கொடாதவர்கள், மெலிந்திருக்கப்பட்டவர்கள் பெண்சாதியைக் கண்டு கூடவேணுமென்று இச்சித்த இழிஞரிவர்கள் அரசே.—எ-று. (சங)

சாற்றிடிற் றனக்கு வருவன பெற்றுத்
தாமளித் தருள்வன கொடாத
பேற்றின ரிவர்மற் றரசரை யடைந்து
பேசருந் துன்மதி யுரைத்தே
யாற்றுநல் லறத்தைக் கெடுத்தவ ரிவர்பூ
வாவெறிந் தவர்கமை யேவு

ஆற்றமோ டெரிதல் போலிதஞ் செய்வோர்க்
குயிர்பிழை செய்தவ ரிவரே.

(எ-து.)சொல்லுமிடத்தில் தமக்குவருவனவெல்லாம் பெற்றுத்தாம்கொடுக்கவேண்டியவைகளுக்கு ஒன்றுமேகொடாத பேற்றைவாய்ந்தவர்கள், இராஜசமுகத்தையடுத்து சொல்லக்கூடாத துர்ப்புத்தியையுரைத்துநல்லதர்மஅரசைக்கெடுத்தவர்கள், பூவாலெறிந்தவர்கள்மேல்அம்புகளையூற்றத்தோ டெய்பவர்களைப்போலஇதஞ்செய்யுமவர்களுக் குயிர்பிழைகள்செய்தவர்கள்—எ-று.

களவுசெய் புலைஞர்க் குரையிடங் கொடுத்தோர்க்
கலகமிட் டுறவின ரிடத்தில்
வளர்பிணக் கெழுப்புந் தீயவ ரேவல்
வழுவறச் செய்தவர் தமக்கு
தளர்வறக் கூலிகொ டாதவர் சோறு
சாருவிற் றவர்பொரு டிருடர்
கிளர்மனு மகளீர்சிசுபசு முதலாங்
கேடுசெய் கொடியவ ரிவரே.

(எ-து.) இவர்கள்களவுசெய்யப்பட்டவர்களுக்கு இருக்க இடங்கொடுத்தவர்கள்,உறவின்முறையாரிடத்தில் கலகம்பண்ணிபிணக்குண்டாக்கியதீமையுள்ளவர்கள்,தளர்வில்லாமல்தமக்குப்பணிவிடைசெய்தபேர்களுக்குத்தகுந்தகூலிகொடாதவர்கள், சோற்றை விற்றவர்கள்,பொருளைத்திருடினவர்கள், மனுக்கள் ஸ்திரீ, சிசு, பசு, முதலானதுகளைக்கொலைசெய்தமகாபாவிகள்.—எ-று.

அந்தணர்க் கிடரே புரிந்தகண் டகர்பொய்
யாணையிட் டவர்பிறர்க் குரியச்
சந்தமங் கையரைக் கவர்ந்தவ ரினிய
தவவிர தங்களை யிழந்தோர்
புந்தியற் றுயர்தெய் வங்களைப் பழித்தோர்
புண்ணில்வீ ழீயெனக் கொடிய
விந்திய நெறியே யறிவினை விடுத்தோ
ரிவரிவ ரெனவுரைத் தனரால்.

(எ-து.)பிராமணர்களுக்குஇடரையேசெய்தகண்டகர், பொய்யாணை,பொய்ச்சத்தியம் பண்ணினவர்கள், ஒருத்தருக்குப்பாரியான அழகுள்ளபெண்களை அபகரித்துக்கொண்டவர், இனிமையான தவவிரதங்களையிழந்தவர், புத்திகெட்டுப்போய் உயர்ந்த தெய்வங்களைப்பழித்தவர், புண்ணிலேவந்துவிழுகிறயீயைப்போல்பாவமான ஐம்புலன்வழியிலேமனதைவிட்டவர்கள், இவரிவர்களென்றுஇயமதர்மனுடனேவிபரமாகச்சொன்னார்

வேறு.

இவ்வாறு மதிக்கணக்க ருரைத்திடலு மழலினிடை
யிழுது பெய்தாங்
கொவ்வாத சினங்கெழுமவ் வுலகசங் கரனெனவோங்
கார மோங்கச்
செவ்வான மெனச்சிவந்த கண்ணிணைகள் புலிங்கமெழத்
திகழ்வில் வீசுங்
கைவாளை யுதிர்த்துநகைத் திதழ்துடிக்கத் தீயர்தமைக்
காலன் பார்த்தான்.

(எ-து.) இந்தவிதமாகச் சித்திரகுற்றர்கள்சொல்ல, நெருப்பினிடத்திலே நெய்யையூத்தினதுபோலஇயமதருமருக்கு மஹாகோபமுண்டாகி சகலலோகத்தையுஞ் சம்மாரம்பண்ணப்பட்ட பிரளயகால உருத்திரனைப்போல ஓங்காரமாக ஒருஆற்பாடம்பண்ணிச் செவ்வானம்போலச்செவந்திருக்கிற கண்ணிரண்டிலும் அக்கினிப்பொறிகள்பறக்க பிரகாசிக்கப்பட்டதன்கைவாளைக்குலுக்கிநகைத்து பல்லைக்கடித்துஉதடுமடித்து நிற்கும்பாவிகளைப் பார்த்தான்.—எ-று. (சஎ)

கடுமொழியர் சாந்தமில ரச்சமுறுத் தியபடிவற்
கனன்ற கண்ணர்
தடவரையொத் தவர்பரசு தண்டமுச லங்கணைகோ
தண்ட மாழிப்
படைபயில்முத் தலைச்சூலந் தோமரமுந் தாமேந்தி
பாசங் கொண்ட
நெடியகர ராகியவ ணிற்கின்ற படரொடிவை
ணிகழ்த்தல் செய்வான்.

(எ-து.) எமதர்மரானவர் பார்த்துத் தன்னைச்சூழ்ந்துநிற்கிற இயமபடாக்கள் கடுபாஷிணர்களாயும், சாந்தமிலர்களாயும், பயோற்பாதரூபிகளாயும், அக்கினிநேத்திரர்களாயும், பருவதாகாரங்களாயும், பரசுபாணிகளாயும், தண்டபாணிகளாயும், முசலபாணிகளாயும், வளைதடிக்கையராயும், கோதண்டபாணிகளாயும், சக்கிரபாணிகளாயும், அஸ்திரபாணிகளாயும், திரிசூலபாணிகளாயும், தோமரபாணிகளாயும், முற்கரபாணிகளாயும், ஏதிபாணிகளாயும், பாசபாணிகளாயும், நிற்கிறவர்களுடன் சொல்லுகிறார்.—எ-று. (சஅ)

இவர்தம்மை யீர்வாளாற் கழுத்தையறுத் திடுமின்க

குவைகொண்ட மாறுகொடு புடைமின்க ளிவரையுடல்
குறைத்தவ் வூனின்
சுவைமென்று மென்றறியக் கொடுமின்க ளிவரைநெடுந்
தூணில் யார்த்து
நவைதுன்று கூரியமுட் கணையாலெய் திடுமின்க
ளூடி நின்று.

(எ-து.)இயமதர்மரானவர்தன்னுடையபடாக்களுடன் இந்தப் பாவிகளை அரிவாளாலேகழுத்தையறுங்கள், மேலேகட்டித் தூக்கி குவித்திருக்கிற மாறுகளாலேயடியுங்கள், உடலையறுத்து அச்சதையை மென்றுத்தின்று சுவையையறியும்படி அவர்களுக்குத்தானேகொடுங்கள், பெரிய தூணிற்கட்டிபொல்லாதகூருள்ள முள்ளம்பினால் எய்யுங்கள்.—எ-று. (சகூ)

ஓடவடித் தெறிவேலா லெறிமின்களிளரைவனத்
துயரே னத்தை
நீடெரியிற் சுடுவதுபோற் சுடுமின்க ளிவரைமிக
நெடிது கூவக்
கோடியசொல் வாய்ப்பல்லைக் களைமின்க ளிவரைநெடுங்
கோபத் தோடு
வீடரிய வுயிர்த்தூண்டி லிடுமின்க ளிவரையருள்
விடுத்து நின்றே.

(எ-து.) இவர்களையடித்து ஓடப்பண்ணி வேலாலே யெறியுங்கள், இவர்களைக் காட்டுப்பன்றியை நெருப்பிலே சுடுகிறது போல தீயிலே புரட்டிப்புரட்டிச்சுடுங்கள், இவர்களைகூவக்கூவ அகந்தைபேசின வாயிலுள்ளபல்லைப் பிடுங்குங்கள், இவர்களைத் தயவில்லாமற்படிக்குமிகுந்த கோபத்துடனே உயிர்த்தூண்டிலிற்போட்டுவிடுங்கள்.—எ-று. (ருo)

பரசுகொடு தறித்திடுமி னிவரைநெடும் பேழ்வாயிற்
பாணி யிட்டு
விரவினொடு கிழித்திடுமி னிவரைநெடுங் கழுநுனியின்
மீது வைத்துச்
சிரமிசைபாய்ந் துருவவிழித் திடுமினிவர் தமையுதிரஞ்
சிதறவாளால்
உருவநறுக் கிடுமிவரை யிவரையெடுத் தெறியுமெலும்
பொடிந்து வீழ.

(எ-து.)இவர்களைக்கோடாலிகொண்டு துண்டந்துண்டமா

மின்னலைப்போலுமிடையும் தளர்நடையுமுடையதேவரம்பை கள்கையிலே முறைதப்பாமலேந்திய பொற்றட்டிலே தீபவகை கள் பிரகாசித்தது.—எ-று. (கரு)

இந்துவைப் பணிபழி யறவெடுத்து நின்றதுபோற்
சந்தமாமணிக் காம்புடை வெண்குடை தயங்கக்
கந்தரந்தனை விழியெதிர் கண்டநன் மயில்போ
னேந்தசிற்றிடைப் பருமுலை யரம்பையர் நடிப்ப.

(எ-து.) கேதுவாகியசர்ப்பமானதுசந்திரனைவிழுங்கினபழி தீர அந்தச்சந்திரனை அந்தப்பாம்பு சுமந்துநின்றதுபோல, நிற முள்ள மாணிக்கக்காம்பையுடைய வெள்ளைவட்டகுடை இயம தர்மராஜனது முடிமீதுவிளங்கியது, மேகத்தைக்கண்ணுக்கெதி ராகக்கண்ட நல்லமயில்கள்போல தளர்ந்தசிறிய இடையும்பருத் ததனமுமுள்ள அரம்பாஸ்திரீகள்நாட்டியம்பண்ணவும்.—எ-று.

அனகனுமிவ னென்றுமுன் றரும மாடுதல்போ
லினியவெண்ணிறக் கவரிக ளெழுந்தெழுந் திரட்டப்
புனைகருங்குழல் விஞ்சைய ரியக்கர் கிம்புருடர்
துனிவில்கின்னரர் கந்திரு வாதியர் துதிப்ப.

(எ-து.) பாவமில்லாதவன்இவனென்றுமுன்னுகத்தருமமான துகளிப்போடெழுந்தாடுகிறதுபோல, இயமதர்மனுக்குமுன் பாக வெண்மயமானவுபையசாமரைகளெழுந்தெழுந்துவீசியது பெருமையுள்ள வீரதண்டைகள் தரித்த வித்தியாதரர் இயக்கர் கும்புருடர் துன்பமில்லாதகின்னரர்கந்திருவர்இவர்கள்முதலா னபேர்கள்இயமதர்மராஜனைத் துதித்துச்சேவிக்கவும்.—எ-று.

காலனுதிய நிருபுடை நின்றுளங் களிப்பச்
சூலமாக்கதை முதலிய படைகள்முன் றுலங்கப்
பாலிருங்கடல் மீதுமா லிருந்த பண்பெனவே
கோலமுற்றரியணையில் வீற்றிருந்த னன்கூத்தன்.

(எ-து.) மந்திரியாகிய காலன்முதலான அனேகம்பேர்கள் இயமதர்மனுடைய இரண்டுபக்கத்திலேயும், மனக்களிப்புடன் நின்றுகொண்டிருக்க, சூலாயுதம்மகத்தானகாலதண்டமுதலான ஆயுதங்கள் முன்னின்று பிரகாசிக்க, இவ்வித சம்பிரமங்களுட னே இயமதர்மராஜனுனவன் திருப்பாற்கடலில் கரியநிறமுள்ள திருமாலிருந்த பண்புபோலே அழகுள்ளமுத்துகளிழைத்த சிங்

ஆக்கமோடுயர் கூற்றன்வீற் றிருந்தரு ளவையி
னூக்கமிக்கதன் மகதிதன் வீணையி னுழையே
தாக்குதென்றலா லெழுமிசை தனக்குள மகிழத்
தேக்குசிருடை நாரதன் வந்தனன் சிறக்க.

(எ-து.) இப்படி இயமதர்மராஜன் சகலவைபவத்துடனே கொலுவீற்றிருக்கும் சபையில் உற்சாகமிகுந்ததனதுநல்லமகதி வீணையினிடத்தில் தென்றற்காற்று மோதுதலினால் எழுகின்ற இசைகளுக்கு மனமகிழுஞ்செல்வமேநிறம்பிசிறந்த நாரதமுநிவ ரானவர் வந்தார்.—எ-று. (கசு)

வேறு.

மேவியநாரதன் றனைவியந்துபோய்ச்
சேவடிதொழுதுகீ டணையிற்சேர்த்தலுந்
தாவிலுன்றிருவொடு தரிக்கிவைகினை
யோவெனுமுநிவனுக் கியமனோதுவான்.

(எ-து.) இப்படிவரப்பட்டநாரதமகாமுநியை அதிசந்தோ ஷமாய் இயமதர்மனெதிர்கொண்டுபோய் அவர்பாதத்திலேவண ங்கி அழைத்துவந்து உன்னதமானஆசனத்திலிருக்கச்செய்தார் அவரிருந்து பின் இயமதர்மனைப்பார்த்துகுறைவிலாதஉன்னிட செல்வத்தோடே சுகமாகவிருக்கின்றையோவென்றுகேட்டநார தமகாரிஷிக்கு இயமதர்மராசன் சொல்லுவான்.—எ-று. (உ0)

அன்னையிலாதவ னருளுமாசிலா
யுன்னுடையருளுமென் னுழியிருத்தலால்
மன்னுயமகிழ்வொடு வைகினேனிவ
ணின்னலென்பதுபிறி தில்லையெம்பிரான்.

(எ-து.) தாயில்லாதபரமேஸ்வரனுடையதயவும் உம்முடைய தயவும் என்னிடத்திலிருக்கிறபடியினாலேநிலைபெற்றசந்தோஷத் துடனேயிருக்கிறேன் இவடத்திலேதுன்ப மென்பதுவேறொன் றுமில்லை யெமதுகர்த்தனான நாரதமுநிவரே யென்றார்.—எ-று.

உலகிடைநிகழ்ந்தன வேதிங்குன்னுளத்
திலகியநினைவுமற் றேதுசொல்லுகென்
றலர்புகழ்தென்றிசை யண்ணல்கூறலுங்
கலைவலமாதவன் கழறன்மேவினான்.

(எ-து.)உலகத்தினிடத்திலேநடந்தபுதுமைகளேதாகிலுமுண் டோ? இங்கே உமதுகிருவளத்தில்தோன்றிய எண்ணமேதாகிலு

முண்டாயிருந்தால் சொல்லவேணுமென்று விரிந்தபுகழ்பரந்த தக்ஷிணதிசைக்கதிபதியானஇயமதர்மராஜன்வினவ, அப்போது அறுபத்துநான்கு கலைக்கியானங்களில் வல்லவரான நாரதரிஷி சொல்லத்தலைப்பட்டார்.—எ-று. (௨௨)

என்னினைவின்படி யிதத்தைச்செய்வதற்
குன்னையல்லதுபிற ருளர்கொலோசொலாய்
மன்னவோருரைதனை மறந்தனன்கருத்
துன்னுதல்வேறிலா துற்றுக்கேண்மினே.

(எ-து.)என்னுடையநினைவின்படிக்குஎனக்கு இதஞ்செய்கிற தற்கு உன்னையல்லாமல்வேறேயுண்டோ, சொல்லுமியமதர்மரா ஜனே ? ஒருவார்த்தைபாடு மறந்தேன் அதனை உன்கருத்துவே ருன்றையு நினையாம லுற்றுக்கேளுமென்று நாரதர்சொல்லுகி ருர்.—எ-று. (௨௩)

நற்றவப்பூரண வித்துநன்கொடு
பெற்றவனரனருள் பிரிந்திடாதவ
னற்றமிலைந்தெழுத் தகன்றிடான்வினை
முற்றுசானந்தமா முநிவனென்பவன்.

(எ-து.) நல்லதவமுள்ள பூரணவித்தெனுமுநிவர் நற்றவத்திற் பெற்ற பிள்ளையானவர், பரமேஸ்வரனருளைப்பிரியாதவர்,சோர் விலாத பஞ்சாக்ஷரநாவிலே யகலாத சத்கருமத்தில் முதிர்ந்த சா னந்தமாமுநிவர் என்பவர்.—எ-று. (௨௪)

நிரையவாசிகடமை நீலகந்தரன்
புரியிடையிருத்துவான் புந்திமேற்கொடு
விரைதருபுஷ்பகத் தேரிலேறிமெய்ந்
நெறிவரரொடுங்கூடி வருகின்ருனரோ.

(எ-து.) இப்படிக்கொத்த சானந்தமுநிவரானவர் நரகத்திலு ள்ள பாவிகளையெல்லாம் நீலகண்ட பரமேஸ்வரனிடசிவபுரத்தி லேவைக்குங்கருத்தை மேற்கொண்டு அதிசீக்கிரமாகபுஷ்பவிபா னத்திலேறி மெய்ந்நெறியுள்ள சிலரிஷிகள்,கணநாதருடனேவரு கிருர்.—எ-று. (௨௫)

உரியவுன்னுலகுபா ழுற்றிடாவகை
விரைவொடுநிறுத்துக வென்றுமேதகு
முரனுடையமாதவ னுரைத்தகாலையிற்

(எ-து.) உனக்குரிமையான இயமலோகம் பாழாகாதபடிக்கு இயமதர்மனே நீ சீக்கிரமாய் ஒரு உபாயத்தினாலேநிறுத்திக்கொள்ளுமென்று மேலான ஞானமுள்ள நாரதமுநிவர்சொல்லஇயமதர்மன் நகைத்து இதைச்சொல்லுகிறான்.—எ-று. (உசு)

உன்னுடனெதிர்மொழி யுரைக்கொணுதுமற்
றென்னிலுமோர்மொழிக் கிடங்கொடுமிவர்
தன்னிலும்பெரியர்க டாமிருந்தன
ருன்னினரோவிது முநிவகேட்டியால்.

(எ-து.) முனிவரே? கேளுமையா, உம்முடனே எதிர்வார்த்தை சொல்லவொண்ணுது, ஆனாலும்ஒருவார்த்தைக்குஇடங்கொடுக்கவேணும், அதாவது இந்த சானந்தமுநிவரிலும் பெரியவர்களிருந்தார்கள் அவர்கள் இந்தநரகத்திலேகிடக்கிறபேர்களைச்சிவலோகத்திலே வைக்கநினைத்தார்களோ வென்றான்.—எ-று. ()

வேறு.

அயனொடுமா றிட்டெதிரே சிருட்டி செய்தோ
னரியொடுபோர் செய்துவென்றோனடிக்க ணுள்ளோன்
உயருததி குடித்தோன்கோ சிகனை வென்றோன்
உயர்நந்தி தனைப்பெற்றோ னிவரு மன்றிச்
சயமுடைய மான்மழுத்தீ யாதி யீசன்
தரித்தருள விடுத்தோரு மிருக்கின் றார்கள்
வியனுடைய ரிவரினுந்தான் வலியின் கொல்லோ
விளம்பிலவர் தயவிலரோ தன்னைப் போல.

(எ-து.) பிரமதேவனுடனேமாறிட்டுவேறுலோகங்களைச்சிருட்டிசெய்த விசுவாமித்திரரிஷி, நாராயணனோடெதிர்த்துயுத்தம் பண்ணிச்செயித்த தெநிசிமகாரிஷி, பாதத்திலேகண்ணுள்ளகண்ணபாதரிஷி, பெரிய சமுத்திரத்தைக்குடித்த அகத்தியமகாரிஷி, கவுசிகனைவென்றவதிஷ்டமகாரிஷி, உயர்ந்தநந்திகேஸ்வரரைப் பெற்ற சிலாசனப்பிரம்மரிஷி, இவரையல்லாமற்பின்னையும்வெற்றிப்பாடுள்ள மான் மழு டமரகம் அக்கினி இதுமுதலானதெல்லாம் பரமேஸ்வரனே தரித்தருளயாகத்திலுண்டாக்கிவிட்டதாருகாவனரிஷிகளுமிருக்கிறார்கள் இவர்களெல்லாம்இவரைப்பார்க்கிலும்வலிமையில்லாதவர்களோ, தயவில்லாதவர்களோசொல்

[illegible]

இம்முநிவ னிரையத்தோர் தம்மை மீட்டு
மென்றெண்ணி யணுகிடினு மெளிய னோநான்
செம்மையுள ரியாரேனு மென்ன கர்க்குச்
செல்லாமற் செல்லவொண்ணு தெப்ப தத்தும்
வம்மெனவா ளுள்முடிந்தோர் தம்மை யன்றி
மற்றோரை விளியாரென் றூத ராலோ
ரம்மவறஞ் செய்தோரை யன்பு செய்தே
யமரர்பதத் தணுகுமினென் றேகுவே னியான்.

(எ-து.) இந்தசானந்தமுநிவர் நரகத்திலேகிடக்கிற பாவிகளை யெல்லாம் விடுவிக்கிறோமென்றுஎண்ணிக்கொண்டு வந்தாலும், நானென்ன எளிதானவனோ! புண்ணியமுள்ளபேர்களானாலும் என்னுடைய லோகத்துக்குவராமல் எந்தப்பதவிகளுக்கும்போ கப்படாது, அல்லாமல்என்னுடைய தூதரானபேர்கள் பூலோக த்திலே ஆயுள்முடிந்தபேர்களையல்லாமல்மற்றபேர்களைவாருங்க ளென்று அழைக்கிறதேயில்லை, தர்மவான்கள்என்னிடத்தில்வந் தால் அவர்களுக்கு அன்புபண்ணி சொர்க்கபதவிக்குப் போங்க ளென்று நானனுப்பிவிடுகிறவிதி என்றான்இயமதர்மராசன். ()

சாற்றறிய தீவினைசெய் தோரைக் காணிற்
றயவில்லை யென்பாலுன் பாதத் தாணை
நீற்றினொளி பழுத்ததிரு நுதலோய் மீளா
நிரையத்தி லழுத்திடு வனவரை வாட்டி
மாற்றலரி தென்னிடத்தில் நீதி யன்றி
மறஞ்சிறிதுஞ் சாராது தரும னென்பே
ரூற்றமுடைச் சானந்த முநிவன் சால
வுளத்தின்மரு ளூற்றனனோ விது நினைந்தான்.

(எ-து.) சொல்லுதற்கரிய பாவம்பண்ணினபேர்களைக் கண் டாலுன்பாதத்தாணை அவர்கள்பேரில்என்னிடத்தில்தயவில்லை, விபூதியின்பிரகாசமே முதிர்ந்து அழகுசெய்யும் நெற்றியினையு டையநாரதமுநிவரே? அந்தப்பாவிகளை வாட்டிமீளாதநரகத்தி லேபோட்டழுத்திவிடுவேன், அதையொருவராலும்விடுவிக்கஅ ரிது, என்னிடத்தில்நீதியேயல்லாமல்அநீதிசற்றுகிலுமிராதுஆன படியினாலேதான்இயமதர்மனென்றெனக்குப்பேர்வந்தது, இப்ப டியிருக்க, சானந்தமுநிவர்உள்ளத்தில்மிகப்பயித்தியங்கொண்டா ரோ! இந்தப்பாவிகளை நரகத்தைவிட்டு கைலாசத்தில் சேர்க்க நினைந்தது என்று பின்னுஞ்சொல்லுகிறான்.—எ-து. (௩0)

கனவலகைத் தேரேறி நடத்த லாங்கற்
கரைந்திடவே புரிந்திடலாங் கநோப லத்தான்
மனையெடுக்க லாங்கதிரை மறிக்க லாந்தண்
மதியுழையைப் பிடிக்கலா முடைந்த வோட்டை
நனியுலோகம் போலுருக்க லாகுங் காற்றை
நற்புரவி யாக்கலாஞ் சாம்ப லுக்கு
ளினியதயி லங்கொளலா நிலவைக் கூட்டி
யெடுக்கலா முகில்கொடுவீ டியற்ற லாமால்.

(எ-து.) மிகுதியான கனலைத்தேராக்கியேறிநடத்தலாம், மலைகளைக்கரையப்பண்ணலாம், ஆலாங்கட்டியால்மனைகோலி யெடுக்கலாகும், சூரியனை இரதமேறவொட்டாமல் மறிக்கலாம், குளிர்ச்சியுள்ள சந்திரனிலேயிருக்கிற மானைப் பிடிக்கலாம், உடைந்து போன வோட்டை மிகுதியும் பொன் வெள்ளி தங்கம்போலே உருக்கலாம், காற்றை நல்ல குதிரையாக்கலாம், சாம்பலுக்குள்ளேயினிமையான தயிலம்வடிக்கலாம், நிலாவைக்கூட்டியெடுக்கலாம், மேகத்தைக்கொண்டுவீடுகட்டலாம் என்றும்.—எ-று. ()

காடியிடை நவநீதங் காட்ட லாஞ்செல்
கடும்புனலி லெழுந்திடலா முடுவை யூதி
யோடிவிழப் பண்ணலா நதியைச் செவ்வே
யோட்டலா மனல்விழுங்கி யுள்ளங் கைமெய்
யாடகவெற் பினையடக்க லாம னந்த
னும்பணியைத் தடுக்கலாம் பொருசிங் கத்தை
நீடுவலைப் படுத்தலாங் கமல நூலால்
நெடியமத வேழத்தைப் பிணிக்க லாமால்.

(எ-து.) காடியினிடத்திலேவெண்ணெ யெடுத்துக் காட்டலாம், விரைவாயோடுகிற நீரிலேயெழுத்துப்பதிக்கலாம், நட்சத்திரங்களை ஊதி ஓடிவிழப்பண்ணலாம், ஆறுகளைச்செவ்வையாயோட்டலாம், நெருப்பைவிழுங்கலாம், உள்ளங்கையில் மஹாமேருவையடக்கலாம், ஆதிசேஷனாகியபாம்பைத்தடுக்கலாம், போர்செய்யும்சிங்கத்தைப்பெரியவலையிலேபிடிக்கலாம் தாமரைநூலாலேபெரியமதயானையைக் கட்டலாம்.—எ-று. (௩௨)

மந்தரத்தை யுடைக்கலாம் வடவைத் தீயை
மாற்றலாங் கடுவையெடுத் தருந்த லாமிவ்
வந்தரத்தி லிருக்கலாம் பணியாற் சீத
மகற்றலா மெனினைமம [illegible]

முந்துசிவ புரத்திருத்தப் படுமோ வைய
முக்கணுடைப் பரசிவனை யுணர்ந்தோ ரன்றி
யெந்தநிலை யுளரேனு மென்பு ரத்திற்
கெய்தாம லெப்பதத்து மெய்த லாமோ.

(எ-து.) மந்தரகிரியை யுடைத்துப்போடலாம், வடவாக்கினியை அவித்துப்போடலாம், விஷத்தை யெடுத்துக் குடிக்கலாம், ஆகாசத்திலே யிருக்கலாம், பனியிலே குளிர்காயலாம், இப்படியாலும் அக்கினிமயமான நரகத்திலே கிடக்கும் பாவிகளைமேலான சிவபுரத்திலே வைக்கப்படுமோ! ஐயா நாரதமுநிவரே? மூன்றுகண்ணையுள்ளபரமசிவனையுணர்ந்தபெரியோர்களையல்லாமல் எப்படிப்பட்ட நிலைமையுள்ளபேர்களாலும்என்பட்டினத்திற்குவராமல் எந்தப்பதவியிலேயும் போகலாமோ! என்றான் இயமதர்மராஜன்.—எ-று. (௩௩)

மருவனசைத் தலைக்கோல மணியின் சோதி
மணந்துதிகழ் சீரடியம் பிகைபொற் கொங்கை
பொருநறவு கொப்பளிக்கு மிதழி யந்தார்
புனிதனுத வியவெனது பதவி தன்னை
அரிபிரம ராலுமரி தகற்ற
வையவருந் தவமுநியும் வந்தா லென்னை
வரமருளி யாசிபுகன் றகல்வா னென்றான்
மன்னுயிரின் வாணாளை மதிக்குங் கூற்றன்.

(எ-து.)வாசனைபொருந்தியதாமரையிலிருக்கப்பட்ட சரஸ்வதி,இலட்சுமிஇவர்கள துசிரசுகளிற்றரித்தஅழகுள்ளகிரீடமணிகளின்பிரகாசத்தைத்தழுவித்திகழ்கின்றசிறந்தபாதத்தையுள்ள உமாபரமேஸ்வரியினுடைய அழகுபொருந்திய கொங்கையானதுமுட்டிப்பொருதும்போதுதேன்களைக்கொப்பளிக்குங் கொன்றைமாலையணிந்த பரமேஸ்வரன்கொடுத்தஎன்பதவியை மாற்றுதற்கு அரிபிரமாக்களாலேயுமருமை!ஆகையினாலேஅரிதானதவத்தையுள்ளஅந்தசானந்தமுநிவரிங்கேவந்தால் எனக்குவரங்கொடுத்து ஆசீர்வாதம்பண்ணிப்போவார்நாரதரேயென்றான்உலகின்கணுள்ள சீவர்களுடைய ஆயுள்பிரமாணங்களைமதித்திருக்கும் இயம தர்மராஜன்.—எ-று. (௩௪)

தன்னைமதித் துயர்மறலி யுரைத்தல் கேட்டுச்
சற்றுமுளத் துணர்விலா னனைந்த மஞ்ச

மென்னவுரத்திருக்கின்றான் வருவ தோரா
னிவன்முட்டுப் பட்டதற்பின் னறிய லாகுஞ்
சென்னிவலி முன்னரியப் படுமோ பொல்லாத்
தீயவற்குத் தருமநெறி செப்பி னாலும்
நன்னிலைவந் தெய்துமோ வென்ன முன்னி
நாரதமா முனியெழுந்து போயி னானால்.

(எ-து.) தன்னைத்தானே மதித்துயர்ந்த இயமனிப்படிசொன்னவார்த்தையெல்லாம் நாரதர்கேட்டுசற்றானாலும்'உள்ளத்திலே விவேகமில்லாதவன்னைந்தகட்டில்போல்முரணித்துக்கொண்டிருக்கிறான், வருங்காரியமறியமாட்டான் இவன் முட்டுப்பட்டபின்பே யறிவான், தலையின்வலியை அதற்குமுன் னறியப்படுமோ! பொல்லாத திமையாளர்களுக்குதருமநீதிசொன்னாலுங்நல்லசன்மார்க்கம்வருமோ!வென்றிப்படிமனதிலெண்ணிக்கொண்டு நாரதமகாமுனிவர் இயமதர்மன்சபையை விட்டெழுந்துபோய்விட்டார்.—எ-று. (௩௫)

அப்பொழுது சானந்த முனிவ னேறும்
அணிதிகழும் புஷ்பகவி மானந் தன்னை
மைப்படியும் பருதிவரை சூழ் கிடந்த
மானிலத்திற் கோடான கோடி பானு
மெய்ப்படிவந்திரண்டொன்றாய் வருவ தெய்ப்ப
மிளிர்காந்தி பரந்துலக மெங்கும் பொற்பச்
செப்பரிய வோசையுடன் விண்ணின் மீது
சிறந்துவர வியமபுர வாணர் கண்டார்.

(எ-து.) அந்தவேளையிலே சானந்தமுனிவர் ஏறிவரப்பட்ட அழகுபொருந்திய புஷ்பகவிமானமானதை மேகம்படியப்பட்ட சக்கிரவாளகிரிசூழ்ந்திருந்தபூலோகத்திலே கோடான்கோடிசூரியர்களுடைய வடிவமெல்லாந்திரண்டு ஒன்றாக உருவங்கொண்டு வருவதுபோல அந்தவிமானந்துலங்குங்காந்திபரந்து உலகமெங்கும் மூடிக்கொள்ள சொல்லுதற்கரிய வாத்தியவோசையுடனே ஆகாசத்தின்மேலேசிறந்துவருகிறதைஇயமபுரத்திலுள்ளஜனங்கள் கண்டார்கள்.—எ-று. (௩௬)

வேறு.

விண்ணிடைப் பரந்து செல்லும் வடவையோ விமல னெற்றிக்
கண்ணழற் கொழுந்தோ தூய கணிதமில் சோதி மின்னாற்
பண்ணிய மேடை யோவெம் பருதிகள் கோடி சூழ்ந்து
நண்ணிய வொளியோ [illegible]

(எ-து.) அந்தவிமானத்தின் காந்தியைக்கண்டு ஆகாசத்திலேபரந்துபோகும் வடவாமுகாக்கினியோ! பரமேஸ்வரனுடையநெற்றிக்கண்ணிற்பிறந்தஅக்கினிக்கொழுந்தோ கணக்கிலாதசுத்தமான ஜோதியுள்ள மின்னலாலியற்றியவொரு உப்பரிகையோ! உஷ்ணமுள்ள கோடியாதித்தர் சூழ்ந்துவரப்பட்டபிரகாசமோ! மற்றென்னமோ! தெரியவில்லையென்றுபார்த்து நின்றார்கள்.()

அணுகிட வந்த காலை யணிதிகழ்நாதகீதப்
பணியுடை நார தன்றன் பருதிசே யுடனே சொன்ன
தினிபுகழ் முநிவ னேறுஞ் செய்யபுஷ் பகமீ திங்கு
நணியது பாரீ ரென்று ரதைமிக நாடிச் சில்லோர்.

(எ-து.) அந்தச்சானந்தமுநிவரேறிவரப்பட்ட புஷ்பகவிமானம் இயமபுரத்தைநெருங்கிவந்தபோது, அழகுள்ளநாதகீதவல்லோராகியநாரதமுநிவர் சூரியன்பிள்ளையான இயமதர்மராஜனுடனே சொல்லியவிமானம் இதுதான் வந்துவிட்டது பாருங்களென்று அதனைப்பார்த்தசிலபேர்கள்.—எ-று. (௩அ)

அரனருள் பெற்ற கொற்ற வமலசா னந்த ரிங்கு
வருதலா லியாமு முய்ந்தோ மானிலத் துயிரு முய்ந்தார்
நிரையமுற் றழுந்தி னோரு நீடிய துன்பந் தீர்ந்து
விரவினி லின்பந் துய்ப்ப ரென்றனர் வியந்து சில்லோர்.

(எ-து.) பரமேஸ்வரனுடைய கிருபைபெற்றவெற்றியுள்ளநிர்மலமான சானந்தமுநிவர் வருகிறபடியினாலே,இந்தஇயமபுரத்திலுள்ளநாமெல்லாம் பிழைத்தோம்பூலோகத்தாரும்பிழைத்தார்கள், இருபத்தெட்டுகோடி நரகத்திலேவிழுந்தழுந்தியபாவிகள் வெகுநாளாய்ப்படுந்துன்பங்கள் தீர்ந்து சீக்கிரமாக இன்பத்தையனுபவிப்பார்களென்று சிலபேர்கள் அதிசயப்பட்டுசொன்னார்கள்.—எ-று. (௩௧)

அருணனு லகலா வல்லு மகத்தியன் கரத்த டங்காப்
பரவைமற் றைந்தெ ழுத்தான் மாறிடாப் பவமுந் தீயா
லுருகுரு மெழுகு மிச்சா னந்தனு லொழிந் திடாத
நிரையவெங் கதியு முண்டோ வென்றனர் நின்றசில்லோர்.

(எ-து.) சூரியனாலே நீங்காதவிருட்டும் அகஸ்தியர்கையிலடங்கர்த சமுத்திரமும், ஐந்தெழுத்தினால் மாறாதஜனனமும்,நெருப்பினா லுருகாதமெழுகும், இந்தச்சானந்தமுநிவரால்ஒழியாதகொடியநரகமுமுண்டோ வென்றுசிலர்சொன்னார்கள்.-எ-று.()

இவ்வியல் பலருங் கூற வெழுந்தசா னந்த னேறுந்
திவ்விய விமானம் வந்து சேர்ந்தது சேர்ந்தகாலை
வெவ்விய தூத ரோடி விளம்பலு முள நடுங்கி
யவ்வியமற்ற கூற்ற னரியணை விட் டெழுந்தான்.

(எ-து.) அந்தஇயமபுரத்திலுள்ளவர்கள்இவ்வாறுசொல்ல எழுந்தருளிய சானந்தமுநிவனேறிவருகிறதிவ்வியவிமானங்கோட்டைவாசலுக்கருகில் வந்துசேர்ந்தது, அப்போது அங்கிருந்த யமதூதர்களோடி அரசனிடத்தில் சொல்லவும், அவனுள்ளம் நடுங்கி பயந்து மனதழுக்கில்லாத யமதர்மனுனவன் தானிருந்த சிம்மாதனத்தை விட்டெழுந்திருந்தனன்.—எ-று. (சக)

எழுந்துகிங் கிரர்தான் சூழ வெழின்மணிக் கோபுரத்தின்
செழுந்திரு வாசல் மட்டுஞ் சிறப்புட னடந்து வந்தா
னழுந்திய முரணு நீங்க வதிசயித் ததி சயித்து
விழுந்துதீ வினையி னோடு மென்கரங் கூப்பி நின்றான்.

(எ-து.) இயமதர்மனெழுந்துகிங்கிரர்கள்சூழ்ந்துவரஅழகு பொருந்திய மணிகளிழைத்த தன் அரமனையின் கோபுரவாசல் மட்டுக்கும் சிறப்புடனேபாதசாரியாய்நடந்துவந்துமுன்னேஇறுமாந்திருந்த வரப்புகளெல்லாம் விட்டு அதிசயித்து அதிசயித்து வணங்கி தீவினையோடேமிருதுவான கையினுல்கும்பிட்டுக்கொண்டு கோபுரவாசலிலே நின்றான்.—எ-று. (சஉ)

பருதியி னிடையி ருக்கும் பரனெனப் புஷ்ப கத்தின்
மருவிய வரனே வானி னணுகுடு விடை வயங்கு
மொருமதி போல வையர் கணத்திடை யுற்று ளானை
யரனருட் டேனை வுண்ணு மகத்தனை மயலி லானை.

(எ-து.) சூரியனடுவே பரமேஸ்வரனிருப்பதுபோல வெகுகாந்தியுள்ள புஷ்பகவிமானத்தினடுவேயிருக்கிறவரும், ஆகாசத்திலேநக்ஷத்திரக்கூட்டத்தினடுவே பிரகாசிக்கிறவொருசந்திரனைப்போல அனேகரிஷிகள்கணங்களுக்குநடுவேயெழுந்தருளியிருக்கிறவரும் பரமேஸ்வரருடையஅருளாகிய தேனையுண்ணுமுள்ளமுடையவருமாகிய மயக்கமில்லாதசானந்தமுநிவரை.—எ-று.()

கோவண மரைநாண் கற்றேய் கொழுங்கலை மண்டலத்தோ
டோவரு தண்டங் கொண்ட வுயர்புடை யானை நீறு
மேவிய நுதலி னானை வியனுடை யக்க மாலை

(எ-து.) கௌபீனமும் அரைஞாணும் காவிதோய்த்த திவ்வியவஸ்திரமும் தண்டுகமண்டலமுடையபெருமையைவகித்து விபூதிதரித்ததெற்றியும் அழகியஉருத்திராக்ஷமாலையும்பூணநூல் புரளு மார்பையுமுடையவரை.—எ-று. (சச)

உயர்சடா மகுடங் காதிற் குண்டல முடையான் றன்னை
மயலறு சபவ லங்கல் வயங்கிய கையி னானைச்
செயிரில்சா னந்தனென்னுஞ்சேயனைக்கண்ணிற்கண்டான்
வியனுரு மிவன்றனக்கு நிகரிலை யெனவி யந்தான்.

(எ-து.) சிரசில் உயர்ந்தசடாமகுடமும், காதிலேகுண்டலமும், செபமாலை நீங்காதவராயுமுடைய சாந்தகுணமுள்ளசானந்தமுநிவரென்னும்பிள்ளையைநோபுரவாசலிலேகும்பிட்டுக்கொண்டுநிற்கின்ற இயமதர்மராஜன்கண்ணிற்கண்டுசிலாக்கியமுள்ள இவருக்குச் சமானமானவரில்லையென்று அதிசயப்பட்டான். ()

சீரிய விவரி ரண்டாஞ் சிவனென மனத்தி லெண்ணிப்
பாரிடை நடந்தட் டாங்க பஞ்சாங்க முறப் பணிந்து
நேரிலாத் துதிகள் செய்து நீவர யானு முய்ந்தேன்
வேரிகொள் புவியுமுய்ந்த தென்றனன் வினைக டீர்ப்பான்.

(எ-து.) சிறப்புடைய இவரை இரண்டாவது சிவனென்று மனதிலெண்ணிப் பூமியிலே எதிராகநடந்துபோய் சாஷ்டாங்கமாகப்பணிந்தெழுந்துநின்றுதுதிசெய்து நீர்வரவும் யானும்பூமண்டலமும்பிழைத்ததுஎன்றுன்வினைகளைத்தீர்த்துக்கொள்ளும் இயமதர்மராஜன்.—எ-று. (சசு)

வரனதி முடவன் றன்பால் வந்ததொத் தென்பால் வந்தாய்
திரனுடைத் தென்சீர் நல்ல தினமெனக் கானதின்று
பொருவிலாய் நின்னைக் காணப் புரிதவம் பெற்றேன் முன்னர்
விரைவிலென் மனைக்கண் வாரா யென்றனன் றருமன் றானே.

(எ-து.) கெங்காதீர்த்தமானது முடவனிருந்த இடத்திலேவந்ததுபோல என்னிடம்வந்தீர் என்னிடசெல்வம் நிலைத்தது,இன்றைக்குஎனக்குநல்லதினம்வாய்த்தது, முன்நான்செய்ததவப்பயனால் ஒப்பில்லாதவும்மையுங்காணப்பெற்றேன்சானந்தமுநிவரே சீக்கிரமாகஎன்மனையிடத்துவரவேணுமென்றுசொன்னான் இயமதர்மராஜன்.—எ-று. (சஎ)

தன்றுதிக் கிரங்கி யெங்க டவமுநி விமான நீத்து
நன்றுகொள் முநிவ ரோடு நடந்துமுன் செல்வுங் காலை

மென்றளி ரங்கை தாங்கி விரிபுல னடக்கிச் சோதித்
துன்றிய மறுகி னோடு தொல்லிய மனோர்பாற் சென்றான்.

(எ-து.) வணக்கமாக உபசரித்துச்சொல்லுகிற தோத்திரத்துக்கு மனதிரங்கி யெங்கள் சானந்தமுநிவரானவர் ஏறிவந்தபுஷ்பக விமானத்தைவிட்டு கீழேயிரங்கி நன்மையே குடிகொண்டிருக்கும் முநிவர், கணங்கள்புடைசூழ,ஜோதிமயமான வீதியிலே முன்னாக நடந்துபோகும்போது, அவருடையமிருதுவானமாந்தளிர்போன்ற கையைத்தாங்கி வுரிந்தபுலன்களையடக்கிக்கொண்டு பழமையான இயமதருமனொருபக்கமாகச்சென்றான்.—எ-று()

அழைத்துபோய் வண்டு கிண்டு நலங்கிளர் வலங்கல் தூங்கும்
நிழற்பொலி புரையில் சுத்த நித்தில மதையா ளிக்க
ணிழைத்தமா மணிப் பீடத்தி னிருத்திமா தவக்கோ மானைத்
தழைத்தபே றுவகையோடு தாங்குபூ சனைசெய் தானால்.

(எ-து.)இவ்விதமாய் அழைத்துப்போய்வண்டுகள்கிளரும் வாசனையுள்ள மாலைகள்தொங்கும்அசுமானகிரியினிழலில்ஆணிமுத்துகளினால் இழைத்த யாளிகள்பொருந்திய ஒருபீடத்தில் மகாதவசுடையோர்களில்சிறந்தசானந்தமுநிவரை யிருக்கச்செய்து இயமதர்மராஜன்அதிகசந்தோஷத்துடனே அவருடையவிரண்டு பாதங்களையும் பூசித்தான்.—எ-று. (சகூ)

பூசனை புரிந்த கூற்றைப் புரிந்திரு கண்ணு னோக்கி
மாசிலுன் பூசனைக்கு மகிழ்ந்தனந் தரும னென்னு [டோ
மோசைகொள் பெயர் நினக்கே யுரித்துனக் குவமை யுண்
வேசிலாய் வாழி வாழி யென்றனன் முநிவர் கோமான்.

(எ-து.) இப்படி பூசைபண்ணின இயமதர்மனைச் சந்தோஷத்துடனே இரண்டு கண்ணினாலேயும்பார்த்து குற்றமில்லாத உன்னுடையபூசைக்குமனமகிழ்ந்தோம்தர்மராஜனென்றுசொல்லப்பட்டபேரு முனக்கேதகும், உனக்குச்சமான மொருவருண்டோ ! புகழினேவாய்ந்தஇயமதர்மராஜனேநீவாழக்கடவதுவாழக்கடவது என்று ஆசிகூறினார் முநிவர்களுக்கரசனானசானந்தமுநிவர்.—எ-று. (ரo)

என்னுளத் திசனாய் வந்தென்னையுந் தரும னாக்கி
மன்னினை யுனக்கு நாயேன் வழங்கு கைம்மாறே தையா
உன்னுடை தரிசனத்தா லுயர்ந்தன னெனது பானீர்
[illegible]

(எ-து.) இப்படிவாழ்த்திய முநிவனுடனே இயமதர்மராஜன் சுவாமி ? என்னுடைய ஹிருதயத்திலேயிருக்கிறபரமேஸ்வரன்போல் இவ்விடத்திலெழுந்தருளிவந்துஎன்னைத்தருமமுள்ளவனாகச்செய்தீர்உமக்குநான்செய்யும்பிரதியுபகாரமென்னவிருக்கின்றது ! ஐயனே ? உன்னுடைய தரிசனத்தால் பிழைத்தேன் தேவரீர் என்னிடத்திலேநினைத்துவந்தகாரியத்தைச்சொல்ல வேணுமென்றான். —எ-று. (ருக)

நீதியாய் நின்னைக் காண வந்தன நின்னைக் கண்டே
மேதினுன் புரத்தி னுள்ள வியல்பினைக்காண்டல்வேண்டும்
கோதறக் காட்டு தற்குக் கூடநீ வருதி யாலென்
றோதினன் முநிவன் பின்னர் நடுவனீ துன்ன லுற்றான்.

(எ-து.) இப்படிகேட்டஇயமதர்மனைப்பார்த்துநீதியுள்ளவனே ! உன்னைப்பார்க்கவந்தோம், அப்படியேபார்த்தோம்; இனி உன்னிடபட்டினத்திலுள்ளசிறப்புகளைப்பார்க்கவேணும்,அதைக்காண்பிக்க நீர் கூடவரவேணுமென்று சானந்தமுநிவர்சொல்ல அதின்பிறகு இயமதர்மன்இப்படிஆலோசிக்கத்தலைப்பட்டான்.

இந்தமா முநிவர் செய்தி யாவையும் நாரதன்றான்
வந்து கூறின னறிந்தேன் மாதவர் குணங்கள் கூறிற்
சந்ததஞ் செய் தவங்க டண்ணளி யுடைய ரேனும்
வந்துதான் பிறர் தமக்கு வலிதுயர் விளைப்ப ரம்மா.

(எ-து.) இந்த சானந்தமுநிவருடைய செய்திகளெல்லாம் நாரதர்வந்துசொன்னாரறிந்திருக்கிறேன், அல்லாமல் மகத்தான தபசுள்ளவர்களுடைய குணங்களைச்சொல்லுமிடத்தில்சார்வதாகாலமுஞ் செய்யுந்தவங்களால் பொருந்திய அருளும் தயையுமுடையவர்களானாலும் பிறருக்குவொருவேளைகளி லதிகதுக்கம்விளைவிப்பார் என்று ஆச்சரியமுற்று.—எ-று. (ருங)

நடுநிலை தவமுளா ரென் றிவர்தமை நம்பொ ணாது
கடிதழை யாவிருந் தாய் வந்தனர் கருத்திற் காத
லொடுநமைப் பார்க்க வந்தா ரவர்நமதூர்பா ழாக்கி
விடநினைத் தீண் டிருந்தார் விடலருந் தயவுளார்போல்.

(எ-து.) நடுநிலையுந்தவங்களுமுள்ளவரென்றுஇந்தச் சானந்தமுநிவரை நம்பப்போகாது, சீக்கிரமாகநாமழைக் காதவிருந்தாகவந்தவர் அகையோடு நம்மைப்பார்க்ககருதிவந்தவரல்லர்,நமது

ஊரைப்பாழாக்கநினைத்து நீங்காத தயவுள்ளவரைப்போல்இங்கேயிருக்கிறாரென்றுஇயமதர்மன்மனதிலே நினைத்தான்—எ-று

இவருரை கேட்ப தன்றி யெதிருரை கூ றொணாது
தவரிவ ருரைக்கு மாறு சாற்றிடிற் சாப மீவா
ரவனியிற் பிறரைப் பீடித் தலைத்திட வுன்னி னாரேற்
பவமறு முநிவ ருக்குப் பாரமோ பாரமன்று.

(எ-து.) இந்தச் சானந்த முநிவருடையவார்த்தைக் குடன்படுவதல்லாமல் மறுத்துச்சொல்லப்போகாது! மகாதபசி! இவர் சொல்லும்வண்ணஞ் செய்யாவிட்டால் சாபங்கொடுப்பார், பூமியில் எவரையாவது துன்பப்படுத்த நினைத்தார்களேயானால்பாவமற்ற முநீஸ்வரர்களுக்கு அது வொருபாரமோ! பாரமல்லவென்று நினைத்து இயமதர்மன்.—எ-று. (ருரு)

இந்திரன் சம்பத் தெல்லா மிருங்கட லதனில் வீழ்ந்து
நந்துக வென்று சாப நவின்றன னொருவன் மிக்க
புந்தியா நூறு யாகம்புரிந்தரு ணகுடன்றன்னை [ஞன்.
யுந்துமெய்ப் பாந்த ளாகிப் போதியென் றொருவன் சொன்

(எ-து.)முற்காலத்தில்தமக்கபராதம்பண்ணினதேவேந்திரனுடைய சம்பத்தெல்லாங் கடல்கொண்டுபோகக் கடவதென்று துர்வாசரிஷியானவர் சபித்தார், அல்லாமல் நூறுயாகஞ்செய்து தேவேந்திர பட்டத்திற்குவந்தநகுடராஜனைநகரும்படியான பெரும்பாம்பாகக்கடவதென்றுஅகஸ்தியமுநிவர்சபித்தார்—எ-று.

அறுபதி னாயிரம் பே ராகிய சகரர் தம்மை
வறிதுநுன் பொடியாய்வீழ நோக்கினன் மதித்தொருத்தன்
பறையனுக் கடிமை யாக்கிப் பகரரு மயோத்தி வாழு
மிறைவனைப் படாத பாடு படுத்தினு னெழுந் தொருத்தன்.

(எ-து.) கபிலரிஷியானவர் அறுபதினாயிரம்பேராகியசகல ராஜர்களையெல்லாம்ஒருநிமிஷத்தில்சாம்பலாகயெரிந்துவிழகண்ணினால்பார்த்தார், பின்னையும் விசுவாமித்திர மகாரிஷியானவர் அயோத்தியாபுரியில்வாழ்கின்றஅரிச்சந்திரராஜனைபறையனுக்கு அடிமையாகப்பண்ணி படாதபாடுகளைப்படுத்தினார்.—எ-று. ()

சாந்தரா யிருந்தா லென்ன தவமுநி வருக்குச் சீற்றம்
போந்துமூக் கிடை யிருக்கும் புளிதனன் னியமமொன்று
சார்ந்திடி லதனைத் தப்பார் சாற்றினு திவர்முன் யாதும்
வாய்ந்தநன் மாமிக் காடை சோர்ந்தது போல மன்னே.

(எ-து.) சாந்தமுள்ளவரா யிருந்தாலும் தவமுநிவருக்குக் கோபம்மூக்கிடையிருக்கும்,பரமேஸ்வருடையகல்ல நேமநிஷ்டையொன்றில்மாத்திரம்வழுவாதவர்களாகையால் எதுவுஞ்சொல்லப்படாது,மாமியார் உடுத்தினகல்லவஸ்திரம்நழுவினால்மருமகளொன்றுஞ் சொல்லப்படாததுபோல நினைத்துப் பின்னையும் நினைக்கிறான் இயமதர்மராஜன்.—எ-று. (ருஅ)

பணியொடு பழக லொண்வாட் படையொடு படை பயிற்றல்
துணிவி னுண்மிசை நடத்தல் சொல்லரும் வேங்கைதன்னை
யணுகல்போ லிவரை மேவின் மோசம்வந் தடையு மம்ம
நணுகிவர் சித்த மொப்ப நடப்பதிங் கெவர்க்குங் கூடா.

(எ-து.) பாம்பொடு பழகுகிறதும், பிரகாசமுள்ளவாளாயுதத்தோடு வாளாயுதம் பழகுகிறதும், துணிந்துகயிற்றின்மேலே நடக்கிறதும்சொல்லுதற்கரிய வேங்கைப்புலியை மருவுகிறதுமாகிய இவற்றால் சீவனுக்கபாயநேரிடுவதுபோல இவரையடைந்தவர்க்குஅப்படியேவரும்.அம்மா! நம்மிடத்தில்வந்த இந்தச்சானந்தமுநிவரிட சித்தத்திற்கிணங்க நடக்கிறதுஎவர்களுக்குங்கூடாமை.—எ-று. (ருகூ)

பொய்யுரை கூறினது கூறிடிற் புகல்வர் சாபம்
உய்யலாங் கதிபின் னுண்டோ வுடையனு மிவர்பா னிற்பர்
துய்யரா மிவ ருரைத்த சொற்படி புரிது மென்று
வையகம் புகழுங் கூற்றன்மனத்திடை யுன்னினானால்.

(எ-து.)இவருடனேபொய்சொல்லக்கூடாதுசொன்னால்சாபமிடுவார், அதிலிருந்து நாம் பிழைக்கத்தக்கவகையுமில்லைசகலமுந் தம்முடைமையாயுள்ள பரமேஸ்வரனும் இந்தச் சானந்தமுநிவரிடத்தி லன்புடனேநிற்பார், ஆதலினால் பரிசுத்தமனமுடைய இவர்சொற்படி செய்வதேநமக்குநற்கருமமென்று நினைத்தான் வையகம்புகழப்பட்ட இயமதர்மராஜன்.—எ-று. (சுo)

மனத்திடை யிவற்றை யுன்னி மறலிதன் னேவ லாள
ரினத்தினை நோக்கி நம்மு ரெங்கணு மலங் கரிக்க
நினைக்குமுன் னேவிச் சொல்வீ ரென்னுமுன்னெடிய வீதி
யனைத்தையுங் கைவல் லோர்க ளணியுறப் புரித லுற்றார்.

(எ-து.) இப்படி பலவாறாக மனதிலேநினைத்து இயமதர்மராஜன் தன்னேவலாளர்களைப்பார்த்துநம்முடைய பட்டினமுழுதும் [illegible] செய்யவேணுமென்று சொல்லுதற்குமுன்

னமே அத்தொழில் வல்லவர் அரசனே ? உத்திரவாகவேணு மென்றுமுன்னாகப் பட்டினத்தின்பெரியவீதிகளெல்லாமலங்கா ரஞ்செய்யத்தலைப்பட்டார்கள்.—எ-று. (சுக)

வேறு.

கடிகொண் மாநகர் கன்னிதன் னல்குலி
னிடை யணிந்தநன் மேகலை யென்னவே
வடு விலாத மரகதத் தோரணம்
நெடிய வீதிக ளெங்கு நிரைத்தனர்.

(எ-து.) காவல்கொண்டு விளங்கும் அந்த இயமபுரமாகிய பெண்ணினிடையிலே யணிந்த நல்ல மேகலா பரணம்போலே குற்றமில்லாதபச்சைத்தோரணங்கள்பெரியவீதிகளெங்கும் வரி சைவரிசையாகக் கட்டினார்கள்.—எ-று. (சுஉ)

சந்தமுற்ற பைம் பூகங்க டன்னையே
பந்த ரேறு நிறுத்திளர் பாவையர்
கந்தரத் தெழி லேக்க வரும்படி
வந்துபூங் கடை காப்பது மானுவே.

(எ-து.) அழகுபொருந்தியபச்சைக்கமுகுகளைப் பந்தல்கள் தோறும் நிறுத்திவைத்தார்கள், அப்பட்டினத்திலுள்ளபெண்க ளுடையகழுத்தின் அழகைக்கிரகிக்கவேண்டி அவர்களுடையவீ ட்டுகடைவாயிலிலேகாத்துக்கொண்டிருப்பதுபோலவிருந்தது.

பரிமுகம் பொரும் பைங்குலை வாழைகள்
விரவி நாட்டினர் வீறுக் கரும்பொடு
பொருவி னீல விளிம்பு பொருந்தியப்
பரிய முத்துவி தானம் பரப்பினர்.

(எ-து.) குதிரை முகங்களைப்போலவளைந்த குலைகளையுடைய பச்சைவாழைகளைப் பெருமையுள்ள கரும்போடு கலந்துநட்டு, நீலரத்தினக்கரைபொருந்திய பெரியமுத்துமேற்கட்டிவிரித்துப் பந்தலிட்டார்கள்.—எ-று. (சுச)

தாவி லாடியி னோடியர் சாமரம்
பூவ லங்கல் பொருத்தின ரெங்கணும்
தேவர் காண மணிநிலத் தேரின்மேற்
பாவை யாடும் படிபுரிந் தானரோ.

(எ-து.) தாழ்வில்லாதகண்ணாடிகளும்அதனோடுகவரிமான் ம யிர்களுங்கட்டிபூமாலைகளும்எங்குந்தொங்கவிட்டார்கள் தேவர் கள்கண்டு மகிழத்தக்கதாக இரத்தினமிட்டிழைத்தநிலத்தேரின் மேலே பதுமைகளாடும்படிக்குப் பண்ணினார்கள்.—எ-று. ()

வண்ண வீதியின் மங்கைய ரேற்றிய
தண்ணுலா மணித் தீப மிலங்குத
லண்ண லாரும் பதங்கன ருண்மகா
ரெண்ணி லார்வந் திலங்குதல் போலுமால்.

(எ-து.) அழகிய வீதிகளிலே பெண்கள்ஏத்திவைத்தசீதள மூலாவியவிரத்தினதீபங்கள்பிரகாசிக்கின்றன, பெருமைபொருந்தியசூரியன்பெற்றஎண்ணில்லாத பிள்ளைகள்வந்திருப்பதுபோலஇருந்தது.—எ-று. (சுசு)

பொருவில் விண்டொட வோங்கிய பூங்கதிர்
விரவு மாடக மேடையின் மீதிலோர்
சரிவளைக் கரத் தையலர் மேருமால்
வரையின் மேலிவர் மஞ்சையி லேறுவார்.

(எ-து.) மேருமலைகளின்மேலேஏறுகின்றமயில்போல் ஒப்பற்ற மேகமண்டலத்தையளாவிபொலிவுள்ளபொன்னாற்செய்த மேடையின்மீது சரிவளையணிந்தகையையுடைய அழகியபெண்கள் ஏறுவார்கள்.—எ-று. (சுஎ)

மின்றயங்கக் குயிற்றுப் பொன் மேடைகள்
மன்றல்வாயி ரூறுந் தொறும் வைகுதல்
பொன்னின் மேரு புனைவடி வோடவ
ணென் றிமிக்கு விளங்குத லொக்குமால்.

(எ-து.) வாசனையுள்ளவாசல்தோறும்மின்னல்போல்பிரகாசிக்கும்படியாகச்செய்த பொன்மேடைகளானதுமகம்மேருவானதுஅலங்காரவடிவங்கொண்டுவிளங்குவதுபோலிருந்தது. ()

முழவி னங்கண் முழங்குதல் கேட்டரோ
வெழலி வந்து முழங்கிய தென்னவே
செழும யூரக் குழுநடஞ் செய்யுமால்
நுழைநு சும்பிடைக் கூத்தியர் நோக்கவே.

(எ-து.) மத்தளக்கூட்டங்கள் முழங்குவதை மேகமுழக்கமென்றெண்ணி அழகியசிறகினைவாய்ந்த மயிற்கூட்டங்கள்அதனைநுண்ணியஇடையினையுடையநாடகப்பெண்கள் பார்க்கநடனம்பண்ணும்.—எ-று. (சுகூ)

ஏம பூரண கும்ப மிருத்தினர்
தோமில் சீத விமசலந் தூத்தினர்
தாமம் வேய்ந்தனர் தாழ்வர விவ்வகை

(எ-து.) திண்ணைகள்தோறும்பொன்னாற் செய்தபூரணகும்பம் வைத்தார்கள், வீதிகள்தோறும் குற்றமில்லாத பன்னீர்தெளித்தார்கள், மாலைகள்கட்டித்தொங்கவிட்டார்கள், இவ்வண்ணமாக உயர்ந்தமாடகூடமுள்ள இயமபுரம்யாதுங்குறைவுபடாமல் அலங்கரிக்கப்பட்டது.—எ-று. (எ0)

நந்திடாத நக ரணி செய்ததை
வந்து தூதர் விளம்பவு மாமெனச்
சந்த முற்ற தனிநகர் நோக்குதற்
கெந்தைவா வென்றியம்பின னின்புற.

(எ-து.) அழிவில்லாத இயமபுரஞ் சிறப்புசெய்ததை இயமதர்மராஜனுடனே சொல்லவும், அவர் ஆச்சரியமுற்று நல்லதென்று சானந்தமுநிவரைப்பார்த்து அழகுபொருந்திய ஒப்பற்றஎன்பட்டினச் சம்பிரமத்தைப் பார்ப்பதற்கு என்னையனே? வாருமென்று அன்புடனேசொன்னான்.—எ-று. (எக)

சொன்ன காலைச் சுடர்மணிப் பாதுகை
தன்னிலொண் சரண் வைத்துத் தவமுநி
அன்ன கால னவர்கரந் தாங்குறத்
துன்னுமா தவர் சூழ நடந்தனர்.

(எ-து.) அப்படிசொன்னவளவிலே பிரகாசமுள்ளரத்தினப்பாதக்குறட்டிலே ஒளியுள்ள தன்பாதங்களைவைத்துஅந்த இயமதர்மன் கைலாகுகொடுக்க நெருங்கியமுநிவர்கள்கணநாதர்கள் தன்னைச்சூழ்ந்துவரத் தவமுள்ளசானந்தமுநிவர் எழுந்து நடந்தருளினார்.—எ-று. (எஉ)

எகின ராசி யெழுந்து நடித்தென
மிகவருங் கவ ரித்தொகை வீசினார்
நகமதிக் குழ நாடவந் தாலெனப்
புகரில் வெண்குடைத் தாங்கினர் பூவையர்.

(எ-து.) சானந்தமுநிவர் இயமபுரத்தைப்பார்க்க எழுந்தருளியகாலத்தில் அனேக அன்னங்களெழுந்து ஆடினதுபோல அனேக வெண்சாமரைகளிருபுறத்திலும்வீசினார்கள், பிரகாசமுள்ளசந்திரர்கள் அனேகர் அவரைப்பார்க்கவந்ததுபோல, மாசற்ற வெள்ளை வட்டக்குடை அனேக மெடுத்தார்கள் அரம்பா ஸ்திரீ

அரவினம் படிந் தாடி யெழுந்தென
வரனல் லாலவட் டம்பணி மாரினர்
பொரு வில்லாத விடைக்கொடி பொற்புற
விரு புறத்தினு மேந்தின ரெண்ணிலார்.

(எ-து.)பாம்பினங்களிவரைப்பார்த்து ஆடியெழுந்ததுபோல ஆலவட்டம்பணிமாறினர்கள் ஒப்பில்லாதரிஷபக்கொடியைஅழகுபெற இருபக்கங்களிலும் ஏந்திப்பிடித்தார்கள், எண்ணிறந்த பேர்கள்.—எ-று. (எச)

நந்தி தானுன் னுளத்திடை நண்ணுத
லிந்தநீரென் றெதிருறக் காட்டல்போல்
வந்து தீபத் தளிகைகள் வண்கைமேற்
சந்தமங் கையர் தாங்கொடு சுற்றினர்.

(எ-து.) சானந்தமுனிவரே ? உம்முடைய இருதயத்திலே பரசிவனானவரிருப்பதுஇப்படிதானென்றுஎதிராகக்காட்டுவது போல அழகுள்ளதெய்வரம்பையர்கள்,அம்முநிவருக்குமுன்பாகவந்து தங்கள் வளப்பமுள்ள கைகளிலேந்தியதீபாலாத்திகளை சுத்தினர்கள்.—எ-று. (எரு)

சித்திரங் கொள் பலமணிச் சித்திர
வத்தி யேத்திவந் தார்பல் லரம்பைமார்
புத்தியா னறும் போதுக ளேவியே
பத்தி யோடு பணிந்தன ரெண்ணிலார்.

(எ-து.) அழகுள்ள பலமணிகளாலும்செய்தசித்திரஆலாத்தி யேந்திக்கொண்டுவந்தார்கள்,பல தேவப்பெண்கள்,பின்னும்புத்தியினாலேதெரிந்தெடுத்தவாசனையுள்ளபுஷ்பங்களைத் தூவிபத்தியுடனே பணிந்தார்கள் எண்ணிறந்த பேர்கள்.—எ-று. (எசு)

அண்டர் போற்று மருண்முநி நீற்றொளி
மண்டு கின்ற மதிநில வென்றுநீர்
முண்ட கங்கண் முகிழ்ந்தன வாமெனக்
கண்ட யாவருங் கைகுவித் தாரரோ.

(எ-து.) தேவர்கள் துதிக்குங்கிருபாநிதியானசானந்தமுநிவர் திருமேனியிற்றிகழும் விபூதியின்விளக்கமானது சோடசகலையோடும் விளங்குஞ் சந்திரன் பிரகாசமென்றுநல்ல தாமரைகளி தழ்மூடினதுபோல, சானந்தமுநிவரைப் பார்த்தபேர்களெல்லா

தங்கு நீற்றொளி மேனியர் தங்களை
கங்கை நித்த மெனக்கரு திக்கதிர்
பொங்கு மன்னக் குழாய் வரல் போலவே
மங்கை மார்மறு கெங்கணும் வந்தனர்.

(எ-து.) விபூதியினாற்பிரகாசிக்குந்திருமேனியராய்வருங் கணநாதர்களையெல்லாம் சுத்தமுள்ள கங்கையென்றெண்ணி ஒளி பொருந்தியஅன்னப்பட்சிகூட்டங்கள்வருவதுபோலஇயமபுரத்திலுள்ள பெண்களெல்லாரும் வீதிகளெங்குஞ்சூழவந்தார்கள்.

ஞான பாநு நணுகுத லாலுள
மான கஞ்ச மலர்ந்து நலன்பெனுந்
தேனு லாவ விறைஞ்சித் திகழ்ந்தனர்
தூநல் வீதியின் மேவு சுராதிபர்.

(எ-து.) சானந்தமுநிவராகிய ஞானசூரியன் உதையமாகிவந்தபடியினாலே இருதயதாமரைமலர்ந்துஅதில் நல்லஅன்பென்னுந் தேனுலாவத் தெண்டனிட்டு விளங்கினார்கள் சுத்தமாகிய நல்ல வீதியிலேவந்த தேவர்கள்.—எ-று. (எகூ)

சகம ளிக்குந் தடமலர் வேதனே
வகல்பெருங் கடல் மேற்றுயி லண்ணலோ
நிக ரிலாத நிரையரு ளீசனே
விகலிலா விவ னென்றுரைப் பார்சிலர்.

(எ-து.) உலகங்களைச்சிருஷ்டிக்கிறவிசாலமான தாமரைவாசனாகிய பிரமதேவனே! அகன்று பெரிதான திருப்பாற்கடலின் மேலே நித்திரைசெய்யப்பட்ட விஷ்ணுதேவனே! அல்லது ஒத்தாரு மிக்காருமில்லாத கிருபைநிறைந்த பரமேஸ்வரனே!பகையிலாதஇவராரோவென்றுசொல்லுவார்கள்சிலபேர்கள்.—எ-று

திருவுறுந் தருமர்க் கருள் செய்யவே
கருதி வந்த கணேசனென் பார்சிலர்
ஒருமு கத்தொடு மோரிரு கையொடும்
வருக டம்பணி வள்ளலென் பார்சிலர்.

(எ-து) சிலர் அயிஸ்வரியமுள்ள இயமதருமராஜனைக்கிருபையோடு இரட்சிக்கவந்தகணநாதரென்பார்கள்,சிலர்ஒருமுகத்தோடும் இரண்டுகையோடும்வந்த சுப்பிரமணியராகும் இந்த வள்ளலாகிய தானந்தமுநிவரென்றுஞ் சொல்லுவார்கள் —எ-று. ()

மாசுறுத மதியு நுதற் கணுங்
தேசுலாவு பரசுந் திருந்திய
காசின் மானுங் கரந்திவண் வந்தரு
ளீசனு மிவ னென்றுரைப பார்சிலர்.

(எ-து.) மாசற்றசந்திரனும், நெற்றிக்கண்ணும், பிரகாசமுள்ள மழுவும், குற்றமற்ற அழகியமானும், தெரியாமல்மறைத்துக் கொண்டுஇவடம்வந்தருளியபரமேஸ்வரனு மிவரென்றுசொல்லுவார்கள் சிலர்.—எ-று. (அஉ)

பொங்கு பேரரு லோடு பொருந்தியே
நங்கணுற்ற நவை தவிர்த் தீறிலாத்
துங்க முத்தி யளிக்க வித்தூயவ
ரிங்கு வந்தன ரென்றுரைப் பார்சிலர்.

(எ-து.) அடங்காதபெரியஅருளுடனேகூடிநம்மிடத்திலேயுள்ள குற்றங்களைத்தீர்த்துஅழிவில்லாத நன்முத்தியைத்தரவேண்டி இவரிங்கேவந்தாரென்று சொல்லுவார்கள்சிலபேர்கள். ()

இன்ன வாறெவ ருந்தொழு தேற்றலுந்
தன்னுள் வாழ்ந்து நடக்குந் தவமுநி
குன்னருந் திறற் கூற்றனெ துங்கிநின்
றன்ன நன்னக ரத்தணி யோதினன்.

(எ-து.) இவ்வண்ணமாய்இயமபுரத்தி லுள்ளோரெல்லாருங் கும்பிட்டுத்துதிக்கவும்தன்னுள்ளமகிழ்ந்துநடந்தருளியசானந்த முநிவருக்கு நினைக்கவரிதானசவுரியமுள்ளவியமதர்மராஜன் பக்கமாக வொதுங்கிநின்று அந்தஇயமபுரத்தின்வளங்களைச்சொல்லத் தொடங்கினன்.—எ-று. (அச)

நற்பளிங் கிழைத்திடு மொருமுன் றிலினடுவ
னெற்பொருந்து பொற்றெற்றியி னிருந்தபாலிகைதான்
பொற்புறும்புனற் றடத்திடை யலர்ந்தவம் புயத்தி
னிற்பிறங்குதண் பொகுட்டென விளங்குதல் பாராய்.

(எ-து.) நல்லபளிங்கினாலிழைத்த வொப்பற்றவாசலில் பிரகாசம்பொருந்திய புறந்திண்ணையிலிருந்த முளைப்பாலிகையானது அழகுள்ள தடாகத்தினடுவேபூத்ததாமரையிற் பிரகாசிக்குங் குளிர்ச்சியான தாமரைப்பூங்கொட்டைபோல விளங்குகின்றது [illegible] (அரு)

விண்ணினைத் தொடவளர்ந்த நன்மரகத மேடைக்
கண்ணிலங்கு மின்னார்க ளம்மரகதக் கதிரால்
வண்ணம்வேறு பட்டிமகிரி யீன்றமங் கையர்கள்
எண்ணிலார்கொ லென்றயிர்த் திடவியங்குதல் பாராய்.

(எ-து.) ஆகாயத்தை யளாவவளர்ந்த நல்லமரகத ரத்தின மேடையினிடத்தி லிலங்கிய பெண்கள் அந்தமரகத காந்தியினாலேதங்கள்வடிவம்வேறுபட்டுபச்சைநிறமாகி இமயகிரிராஜன் பெற்ற பெண்களனேகர் இங்கே வந்திருக்கிறார்களென்று ஐயமுறும்படி அழகிய பெண்கள் உலாவுகின்றதைப்பாரும்ஐயனே யென்றான்.—எ-று.

(அசு)

முண்டகன் றனையொத்த நன்முநிவ வவ்வரியூர்
கொண்டபே ரெழில்காண் பதற்குன்னி யேகுதல்போல்
விண்டொடும் படிநிவர்ந்த பொன் மேடைமீ திவரும்
பண்டருங்கனி மொழிமடந்தையர் தமைப் பாராய்.

(எ-து.) பிரம்மதேவனையொத்தமுநிசிரேஷ்டரே மேலேயிருக்குந் தேவேந்திரப்பட்டணத்தின் பேரழகைப் பார்ப்பதற்கு எண்ணிப்போகின்றதுபோல ஆகாசத்தைத்தொடும்படிக் குயர்ந்திருந்த பொன்னுப்பரிகைமீதிலே நடந்துபோகிற இசைபோலுமிருதுவான வார்த்தையுள்ள பெண்களைப்பாரும் என்றான்.—எ-று.

(அஎ)

முறையமைத்த கோமேதக முன்றினிற் றரள
மறுவில்பந்தருட் டிருந்துபன் மாமணித் தெற்றிச்
செறிமனைக்கண் வாழ்பாக்கிய திருவுளங் களியா
யுறையுநீடெழிற் பீடமொத் தொளிருதல் பாராய்.

(எ-து.)கோமேதகமணிகளைவரிசையாக அமைத்திழைத்த முற்றத்தினடுவில் மாசில்லாத முத்துப்பந்தலிட்டு அதன்கீழ் திருந்தியநவரத்தினமிழைத்தவேதிகையானதுநெருங்கியமனைகளிடத்திலே வாழும்பாக்கியலட்சுமிமனதுசந்தோஷித்திருக்கும் அழகுள்ள பெரியசிங்காசனம்போற் பிரகாசிக்கிறதைப்பாரும் என்றான்.—எ-று.

(அஅ)

புனைசெழுந்தொடைப் பந்தலிற் றூண்டொறும் பொருந்துங்
கனகநல்லெழிற் பாவைதன் கவின்மிகு முகத்தை
வனசமென்று வருமளி யொழுங்கென வளங்கூ

(எ-து.) அழகியமாலைகளா லலங்கரித்தபந்தல்களில் தூண்கள்தோறும் அமைத்த பொற்பாவையினுடைய பேரழகுள்ள முகங்களை தாமரைப்பூவென்று மேலேபறந்துவரும்வண்டொழுங்குபோல வளப்பமிகுந்து இனிமையான அனேக நிலைத்தின தோரணங்கள் பிரகாசிக்கின்றதைப்பாரும், ஐயனே ! என்றான் இயமதர்மன்.—எ-று. (அகூ)

என்று நன்னமன் கூறலு மிருதையங் களியா
நன்று நின்னகர் மருகெழில் கண்டன நயந்தோம்
மன்றலிப்புற மதிலுடைய வாசல்க ணான்கு
மின்றுகாட்டுதி யெனமொழிந் தன்னியல் முநிவன்.

(எ-து.) நீதிவழுவாத இயமதர்மன்இவ்வண்ணமாகச்சொல்ல உன்னுடைய பட்டணத்தின் வீதிகளழகைக்கண்டு சந்தோஷப்பட்டோம், இனிபுறத்திலுள்ளமதில்பொருந்தியநான்குவாசலையு மின்றைக்கு நமக்குக்காட்டும் என்றுசொன்னார் பெருமையுள்ள சானந்தமுநிவர்.—எ-று. (கூ0)

முனியுரைத்த சொல்லஞ்செவி புகக்கர முகிழா
வனகவென்று நின்கருத்தென வமையுடைத் தருமன்
மனநலங்கவர் மேற்றிசைக் கோபுர வாசற்
றனிலழைத்துப்போ யவ்விடத் துளவளஞ் சாற்றும்.

(எ-து.) இப்படியாகச் சானந்தமுநிவர்சொன்ன வார்த்தையைத்தனது அழகிய காதினிற்கேட்ட மாத்திரத்திற் கையைக் குவித்து நிர்மலமானவரே! உமது சித்தமென்று, அடக்கமுள்ள இயமதர்மராஜன் கண்டோர் மனமகிழ்ச்சிகொள்ளும் மேற்குத் திசை கோபுரவாசலுக்குள்ளே அவரையழைத்துப்போய் அவ்விடத்திலுள்ள வளப்பங்களைச் சொல்லுவான்.—எ-று. (கூக)

அமுதவெள்ளமோ பாற்கட லெழுந்த தோவலது
விமலமாமதி நிலவின தொழுக்கமோ மிகுந்த
தமரவார்திரை சுரநதி தீர்த்தமோ தகுவெண்
கமலராசியோ வென்னவிவ் வுழியுறல் காண்டீ.

(எ-து.) அமிர்தம்பெருகி வெள்ளமானதோ! திருப்பாற்கடல் பொங்கியெழுந்ததோ! அல்லதுபரிசுத்தமானசந்திரப்பிரகாசத்தினொழுக்கங்களோ ! மிகுந்தசத்தமுள்ள அலைகளோடுங் கூடிய [illegible] மேன்மைபொருந்தியவெள்ளைத்தாமரை

யின் கூட்டமோ; என்று பலவிதமாக வெண்ணத்தக்கதாயிவ்விடத்திருக்கும் பதவியைப்பாரும் என்றான்.—எ-று. (கூஉ)

தருமவிஞ்சையோ ரயலவர்க் கிதம்புரி தகையோ
ரரியவர்த்தணர்க் கன்னமுஞ் சயனமு மளித்தோ
ருரியசீருப வாசமுற் றவர்மிடி யொழித்தோ
பரிவினோடற லளித்தவர் வாழ்வதிப் பதியே.

(எ-து.) தருமசிந்தையுள்ளபேர்கள், பிறருக்கிதம்பண்ணப்பட்டபேர்கள், அரிதான்பிராமணருக்குஅன்னமும்படுக்கசயனமுங் கொடுத்தபேர்கள், தங்களுக்குரிமையான சிறந்த வுபவாசமிருந்தவருடையதரித்திரத்தைநீக்கினபேர்கள் சந்தோஷத்துடனே தண்ணீர் வார்த்தபேர்கள், இவர்களெல்லாம் வந்துவாழப்பட்டது இந்தப்பதவி என்றான்.—எ-று. (கூங)

சினமிலாதவர் மோகமற் றவர்கொலை தீர்ந்தோர்
முனையில்மன்னவர் நோக்குற வாருயிர் முடிந்தோ
ரினையரெண்ணில்வை பவத்தொடு விமானமீ தேறி
வனிதைமாரொடு வந்திவர் வாழ்வதிவ் விடமே.

(எ-து.) கோபமில்லாதபேர்கள், மோகங்களற்றபேர்கள், கொலைசெய்வதை விட்டபேர்கள், உயுத்தமுனையிலேதன்னைரட்சித்தவரசன் பார்த்திருக்க, சண்டைபண்ணிச்சீவனையிட்டபேர்கள் இவர்களெல்லாம் பூமிலேயிருந்து இவ்விடம் வரும்போது எண்ணக்கூடாதவைபவத்துடனேவிமானமேறிக்கொண்டுதேவரம்பைகளுடனே இவ்விடத்திற்குவந்துவாழுமிடம் இதுதானென்றுசொன்னான் எமதர்மராஜன்.—எ-று. (கூச)

இந்துகாந்தநன் மாளிகை முன்றினி லிலங்க
முந்துவச்சிரம் வெள்ளிவெண் முத்தினா லமைத்த
சந்தவேதிகை மீதருந் தையலா ருடனே
நந்துமின்பமீ தூர்ந்திட நண்ணுதல் காண்டீ.

(எ-து.) சந்திரகாந்தத்தினாற்செய்த நல்ல மாளிகைமுற்றத்திலே பிரகாசிக்க நவரத்தினங்களிலுபர்ந்தவச்சிரங்களால்வெள்ளிகளால், வெள்ளைமுத்துக்களால்அலங்கரித்ததிண்ணையின்மீதிலே அரிதான தேவரம்பைகளுடனேமகிழ்ந்து இன்பங்களனுபவிப்பதைப் பார்த்தருளும் ஐயாவென்றான்.—எ-று. (கூரு)

அலகிலாவெழிற் சந்தன கந்திக ளமைந்தே

குலவுமேழிசைப் பாடுதல் கேட்டுளங் குளிரப்
பொலிவினோடுவீற் றிருந்திடல் காண்டிவண் புகழோய்.

(எ-து.) மிக்க சவுந்தரியமுள்ள சந்தனகாந்திகளாகிய பெண்கள் ஏழைமந்திருந்து பிரகாசிக்கிற நல்லயாழும் தங்கள் கண்டமுமொன்றுபட்டு தொனிக்கும்படிக் குலவப்பட்ட சத்தராகங்களையும் பாடுவதைக்கேட்டு மனங்குளிர்ந்து பொலிவுடனே யிவர்களெல்லாம் வீற்றிருப்பதைப்பாரும் ஐயா! வளப்பமுள்ள புகழைவாய்ந்தசானந்தமுநிவரேயென்றுசொன்னான், இயமதர்மராஜன்.—எ-று. (கூசு)

எனமொழிந்துயர் தென்றிசைப் புரந்திடு மிறைவன்
முநிவர்போற்றிடு மினியசா னந்தமாமுநியை
யுனலருந்தனி யுத்தர கோபுர வாசற்
றனிலழைத்துவந் துரைக்குமவ் வுழிவளந் தனையே.

(எ-து.) சிறந்ததென்றிசைக்கதிபனாகியஇயமதர்மராஜனான வன் முநியீஸ்வரர்களெல்லாந்துதிக்குமினிமையானசானந்தமுநிவரைமேற்கோபுரவாசலிலிருந்து நினைத்தற்கரிதான வொப்பற்ற வடகோபுரவாசலுக்குஅழைத்துவந்துஅவ்விடத்திலுள்ளவளப் பங்களைச் சொல்லுகிறான்.—எ-று. (கூஎ)

வேறு.

உன்னவரி தாகியவிவ் உத்தர திசைக்கண்
மன்னியது செம்மணி மயத்தது பொன்மேரு
தன்னையு நிகர்த்தது தழைத்த வடவைத்தீ
அன்னதுயர் கோபுரம தார்வமொடு பாராய்.

(எ-து.) நினைத்தற் கரிதாயிருந்த வடக்குதிசையில நிலைத்திருக்கும்உன்னதமானகோபுரமானது,ஒளியில்சிவந்தமாணிக்கமயம்போலும்உயர்வில்பொன்மேருபருவதம்போலும்,நிறத்தில் தழைத்த வடவாக்கினிபோலும் விளங்குவதைப்பாரும் ஐயனே என்றான்.—எ-று. (கூஅ)

எண்ணி லிளஞாயிறு திரண்டவொளி யென்ன
நண்ணியது காணிவ்வுழை நற்றுகிரி ழைத்த
வண்ணநிலை மேடைகளு மாமணியி னாலே
பண்ணிய மனைத்திரளு மன்பினொடு பாராய்.

(எ-து.) அனேகவாலசூரியர்கள் ஒருமிக்கக்கூடிப்பிரகாசிப்பதுபோல நல்லபவழங்களிழைத்தவண்ணமுள்ளமேனிலைமாட

மும் உப்பரிகை மேடைகளும் மாணிக்கத்தினாற்செய்த அனேக வீடுகளும் பொருந்தியிருப்பதை அன்புடனதைப்பாருங் ஐயா வென்றான்.—எ-று. (கூகூ)

அண்ணலையி றைஞ்சினவ ராசில் விரதங்கள்
பண்ணினவ ரீசனடி யாரடி பணிந்தோர்
புண்ணியநல் லந்தணரை யன்பொடு புரந்தோர்
தண்ணளி யொடுற்றனர் தவப்புனித பாராய்.

(எ-து.) பரமேஸ்வரனைவணங்கினபேர்கள், குற்றமில்லாத விரதங்களைச் செய்தபேர்கள், சிவனடியார் பாதத்தைப் பணிந்த பேர்கள், புண்ணியசொரூபராகிய பிராமணோத்தமரை தயவுட னேரட்சித்தபேர்கள், இவர்கள் எல்லாம் இனியசந்தோஷத்துட னேயிருப்பதை தவசீலரேபாரும் என்றான்.—எ-று. (கஅ)

சத்தியமி யம்பினவர் தாதையொடு தாயைப்
புத்தியின் வணங்கினவ ரிட்டிகள் புரிந்தோ
ருத்தமநல் லன்பருப காரிய ருயர்ந்த
சுத்தரித மேயுரைசெய் தூயரிவர் பாராய்.

(எ-து.) பொய்யுரையாதபேர்கள், தந்தை தாயை சுபுத்தி யால்வணங்கினபேர்கள், சிவாலயத்துக்குச்செங்கல்லைச்செய்துக் கொடுத்தபேர்கள், உத்தமமான நல்ல அன்புள்ளபேர்கள், சரு வத்திராளுக்கு முபகாரியானபேர்கள், மேலான ஆசாரமுள்ள பேர்கள், இங்கிதமேபேசப்பட்ட நல்லவர்கள் இவர்களைப்பாரும் என்றான். எ-று. (கஅக)

இங்கிவர்க டம்முருவை யவ்விடயி னிட்டுப்
பொங்கு துயரந்தனை யகற்றியொளி பொன்ரு
துங்கவடி வோடுயர் விமானமிசை துன்னி
மங்கையர்க ளேவல்செய வென்னருகு வந்தார்.

(எ-து.) இங்குள்ள இவர்கள்தங்களுடலைப்பூமியினிடத்தே வைத்துப் பொங்கிவருந்துன்பத்தைநீங்கிபிரகாசிக்குநல்லதேகி களாய் உயர்ந்தவிமானத்தின் மேலேறிக்கொண்டு தெய்வரம்பை கள் நெருங்கி பணிவிடை செய்யத்தக்கதா யென்னிடம்வந்தவர் கள்.—எ-று. (கஅஉ)

வந்தவிவர் தம்மையுண் மகிழ்ந்தினிது பாராய்
முந்துமணி குண்டல மணிக்கட கமத்தின்

சந்தவணி யாதிகள் சமைத்தினிமை தன்னு
லிந்தமட வாரையு மளித்தன னிசைந்தே.

(எ-து.) இப்படியாய்வந்த இவர்களைஉள்ளமகிழ்ந்துயினிமையுடனே நான்பார்த்து முதன்மையானரத்தினகுண்டலங்கள்ரத்தினகடகங்கள் வெண்மையுள்ள முத்தாபரணங்கள் முதலான வெல்லா மிவர்களுக்குக்கொடுத்து உபசாரத்துடனேஅந்தப்பெண்களையு மிசைந்துகொடுத்தேன் என்றான்.—எ-று. (கoங)

உளக்கினிய மங்கையரொ டுற்றுய ரரங்கின்
வளக்கொடி மடைந்தையர் நடஞ்செய மகிழ்ந்து
விளக்கமோ டிருந்தனர் விருப்பொடிவ் விடத்தே
குளக்கணிறை வர்க்குரிய கோதின்முநி பாராய்.

(எ-து.) மனதுக்கினிமையான பெண்களுடனேகூடிஉயர்ந்திருக்கப்பட்ட நடனசாலைகளிலே வளமுள்ள அல்லிக்கொடி போன்றபெண்கள்நடிக்கமகிழ்ந்துவிளக்கத்துடனேஇவ்விடத்திலாசையுடனிருந்தனர்கள், நெறிக்கண்ணைவாய்ந்தபரமசிவனுக்குரித்தான குற்றமற்றசானந்தமுநிவரே? இவர்களைப்பாரும்என்றான்.—எ-று. (கoச)

என்னவுரை செய்துநம னெண்டிசையு மெங்குந்
துன்னிய பெரும்புகழ் துளக்கமுநியைக்கொண்
டுன்னரு மளப்பரும் வளத்துட னுறுஞ்சீர்
மன்னிய குணக்குநெடு வாயினிடை வந்தான்.

(எ-து.) என்றிப்படிசொல்லி இயமதர்மனானவன் அஷ்டதிக்குகளெங்கும் பரவிய அளவற்ற கீர்த்தியினையுடையசானந்தமுநிவரை யழைத்துக்கொண்டு நினைத்தற்கரிதானமிக்கவளப்பங்களோடுஞ்சிறந்தசீழ்த்திசையிலுள்ளபெரியவாசலிலேவந்தடைந்தான்.—எ-று. (கoரு)

வேறு.

பலமணி துன்றி நிறைந்த படியுறு கோபுர மிதுபா
ரலகிற னித்தனி செய்த நவமணிமாளிகை யவைபார்
குலவிய பலபல சோதி குழுமி வயங்குறு மியல்பா
ரிலகியவறமுடையநல்லோரிதையமகிழ்ந்துரைசெயல்பார்.

(எ-து.) நாலுவிதரத்தினங்கள் நெருங்கிஇழைத்துபடியோடு பொருந்தியகோபுரம்இதைப்பாரும், அளவில்லாதநவரத்தினங்க

ளாலே தனித்தனியேசெய்த மாளிகை மண்டபங்களைப் பாரும், குலாவப்பட்ட பலபலபிரகாசங்கள் கூடிவிளங்குகிற பெருமையைப்பாரும், ஒளியுள்ள இவ்விடத்திலேதர்மமுடைய நல்லோர்கள் மனமகிழ்ந்திருக்கின்ற செயலைப்பாரும் என்றான்.—எ-று.

பொருள் விழைவின்றி யெவர்க்கும் புலனுடை விஞ்சையுரைத்
ரிருளறும் வஞ்சனை யென்ப தெவ்வரிடத்துமிலாதோர் [தோ
பரர்கரு மத்தை நிறைத்தோர் படிறொடு வயிர மிலாதோர்
வரமிகு மயன மிழைத்தோர் மருவின ரிவ்வுழி பாராய்.

(எ-து.) பொருள்மே லாசையில்லாமல்எவர்களுக்கும் புலமையுள்ள வித்தையைச்சொன்னபேர்கள், அஞ்ஞானமுள்ளவஞ்சனை பகைஞரிடத்து மில்லாதபேர்கள், அயலவர்காரியத்தைத் தன்காரியம்போலப் பார்த்துநிறைவேற்றினபேர்கள், பொய்மையும் வன்னெஞ்சு மில்லாதபேர்கள், சாந்திராயனவிரதன்செய்தபேர்கள், இவர்களெல்லாம்மருவியிருக்கும்இவ்விடத்தைப்பாரும்என்றான்.—எ-று. (கoஎ)

சிவகதை யாவன் கேட்டோர் தினகர னீரடி தொழுதோர்
நவமுடை யிட்டிசெய் வித்தோர்நம்பினவர்தமையளித்தோர்
உவமையி லொருவர் தமக்கா யொருதம துயிரை விடுத்தோ
ரிவர்பலர் மேவி யிருந்தா ரிவ்வுழி மாதவ பாராய்.

(எ-து.) சிவகதையைக் கேட்டபேர்கள், சூரியபகவானுடைய இரண்டுபாதங்களையுந் தொழுதபேர்கள், புதியயாகஞ்செய்வித்தபேர்கள், நம்பினபேரை ரக்ஷித்தபேர்கள், ஒத்தாரு மிக்காருமில்லாத பரமேஸ்வரனுக்காக தம்முயிரைவிட்டபேர்கள், இப்படிப்பட்டவர்களாகியபலர்வீற்றிருக்குமிவ்விடத்தை பெருமையுள்ள தவமுநியே பாரும் என்றான்.—எ-று. (கoஅ)

பிறர்மனை யாளை யுவந்து பெற்றவ ளென்ன நினைந்தோர்
உறுதி யுளத்தொரு தார விரத நிருத்திய வுறவோர்
அறமுளர் பிறந்துயர்காணார்பரர்பொருளாசையி லாதோர்
இறுமுயிர் மீட்டருள் செய்தோ ரிவ்வுழிவைகினர் பாராய்.

(எ-து.) ஒருவருடையபத்தினியைச்சந்தோஷித்துப்பெற்ற மாதாவைப்போலநினைத்தவர்உறுதியுள்ளமனதுடனேஒருமனையாளுடனேயிருந்து இதுவேவிரதமாகநிருத்தினபெரியவர், தர்ம

அயலார் பொருள்மே லாசைப்படாதபேர்கள், ஒருவரால் போ குஞ்சீவனைப் பிழைக்கச்செய்தபேர்கள், இவர்களெல்லா மிவ்வி டத்திலிருப்பதைப்பாரும் ஐயனே என்றான்.—எ-று. (கo௯)

இந்திய வழியி லுறாரை யினிமையுறா மிடி யோரை
அந்தணரைப் பெரியோரை வந்து புரந் தரு ளறிஞ
ரிந்தைவிடைச் சுரவடிவோ டூரில் பெருந் திரு மாறாச்
சந்த வணித் திரளோடு தங்கின ரிவ்வுழி பாராய்.

(எ-து.) இந்திரியவழிசெல்லாதபேர்கள், இனிமையில்லாத தரித்திரமுள்ளபேர்கள், நல்லபிராமணரை பெரியோர்களை வந் து இரட்சித்த அறிவுடையோர்களாகிய இவர்களெல்லாமிந்த விடத்திலே தேவவடிவமும் அழியாத மிக்கசெல்வமும் பெற்று மாறாதவழகிய ஆபரணங்களுடனே தங்கியிருக்கு மிவ்விடத் தைப்பாரும் என்றான்.—எ-று. (கக0)

வடிவி லியங்கண் முழங்க வாலிய சாமரை வீச
நெடிய வனக்குடை சூழ நிகழர மகளிர்க ளோடு
படியில் விமான மிவர்ந்து பரிவுறு மெனதிடை வந்து
கடிதிவண் வைகினர்வெல்லுங் காமனை வென்றவ பாராய்.

(எ-து.) எண்ணிலாவாத்தியங்கள்முழங்க, வெண்சாமரை வீச, நெடிதான அழகியகுடைகள்சூழ, ஒளிதங்கிய தெய்வரம் பைகளோடே யித்தருமவான்கள்பூமியிலேயிருந்துவிமானமேறி சந்தோஷிக்கு மென்னிடத்திலே வந்து சிக்கிறமாயிந்தப்பதவியி லே யிருந்தார்கள், யாரையும் வெல்லப்பட்டமன்மதனைவென்ற சானந்தமுநிவரே பாருமென்றான் இயமதர்மராஜன்.—எ-று.()

நீடிய பொற்கத வொக்கும் நீலம னைத்திரள் பாரா
யாடக சந்திர சாலையா சனமே டைகள் பாரா
யேடவிழ் பூவணை மஞ்ச மென்பன தூங்குதல் பாராய்
மாடுதொறுந் தொறு மைய மலர்வன முற்றன பாராய்.

(எ-து.) நெடிதான பொற்கதவிட்டிருக்கும் நீலரத்தினமி ழைத்த மனைக்கூட்டங்களைப்பாரும், பொன்னாற்செய்த சந்திர மண்டபங்கள்சாலைகள், ஆசனங்கள்மேடைகள், இதுகளைப்பா ரும், இதழ்விரிந்த புஷ்பசயனங்கள் தூங்குமஞ்ச மிருப்பதைப் பாரும் இடங்கள்தோறும் நந்தவனங்க ளிருப்பதைப்பாரும் என்றான்.—எ-று. (கக௨)

சந்தவ சந்தமு லாவும் சாளர மிலகுதல் பாராய்
மைந்துகொள் வச்சிர மாடமா ளிகையா னவை பாராய்
கந்திருவக் கொடி யன்னார் கான வியக்கு மின்னாரோ
டிந்த விடந்தோ ரியந்தா ரியாரையு மெம்மிறை பாராய்.

(எ-து.) சந்தனத்தென்றலுலாவிய சாளரவாசல்கள்பிரகாசிக்கின்றதைப்பாரும், அழகுள்ள வச்சிரமாடங்கள் மாளிகையானதுகளைப்பாரும், கொடிபோலொத்த கந்தருவப்பெண்கள் கானராகமுள்ள இயக்கப்பெண்களுடனே இந்தஇடங்கடோறுமிருந்த இவர்கள்யாவரையும் எங்களுக்கிறைவனாகிய சானந்தமுனிவரே! பாரும் என்றுஇப்படிஎல்லாஞ்சொல்லிக்காட்டினான் இயமதர்மராஜன்.—எ-று. (ககங)

இயமபுரிச்சருக்கம் முற்றிற்று.

ஆ பாயிரம் உட்பட சருக்கம் ச-க்கு

திருவிருத்தம்-ங00.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது

நரகவாதைச்சருக்கம்.

மிக்கவிவ் வாயில் மூன்றும் மேன்படு மறம் புரிந்தோர்
புக்குரை யிடமே யாகும் புகலருந் தென்பா லுற்ற
துக்கவிவ் வாயி றன்னைத் தோமிலுன் பொல்வா ரேறூர்
நக்கணுக் கன்பு செய்வோர் நாடவொண்ணுது கண் டாய்.

(எ-து.) இயமதர்மராஜன் சொல்லுகிருன், விசாலமுள்ள கிழக்கு மேற்கு வடக்கு இவ்வாசல்மூன்றிலும் மேலானதருமங்களைச் செய்தபேர்கள் இருக்கிறபதவியாகும், சொல்லுதற்கரிய துக்கமுள்ள தெற்குவாசலை ரிஷபத்தை ஏறிநடாத்தும்பரமசிவனுக்கு அன்புசெய்யப்பட்டசானந்தமுநிவரே! குற்றமில்லாதஉம்மைப்போலொத்தவர்கள் பார்க்கக்கருதுவதுங் கூடாதென்று பின்னுஞ்சொல்லுகிருன்.—எ-று. (க)

அன்னது கடின பாத காலைய மமல கேண்மோ
கன்னியர் பால ருற்ருர் கபிலையை வதைசெய் வித்தோர்
நன்னிலை யற்ருேர் நன்றி கொன்றவர் நணுகி யென்றுந்
துன்னியே புன்க ணெய்து மிடமது சொல்லொ ணுதால்.

(எ-து.) அந்ததெற்குவாயில்கொடியபாதகங்களுக்கு ஆலயமாயிருப்பதால்பரிசுத்தமுள்ள சானந்தமுநிவரே? கேளும், அதில் பெண்களையும், பிள்ளைகளையும், உறவினர்களையும் பசுக்களையும் கொலைசெய்தோர்களும், முறைதப்பிநடந்தவர்களும், செய்நன்றி மறந்தோர்களும், என்றுமிருந்து துன்பப்படுமிடமாகும், அதை நாவினாலும் சொல்லக்கூடாது.—எ-று. (உ)

என்பன வியமன் கூற வின்பமா மிடத்தைக் கண்டாந்
துன்பமா மிடமுங் காண்டல் வேண்டு மாற் றூயகால
நின்பரி வுடனே நந்தம் நினைவினை மறுத்தல் வேண்டாம்
தென்புடை வாய்தற் கேகல் செய்குதி யென்ரு னையன்.

(எ-து.) இப்படி இயமதர்மன் சொல்லக்கேட்டும் சானந்த முநிவர் ஒய்நன்மையுள்ள இயமதர்மனே? இதுவரையில் இன்ப மானஇடங்களைக்கண்டோம் இனிதுன்பமானஇடமுங்காணவே ணும், அப்படிவிரும்பும் நமதெண்ணத்தைத் தடுக்கவேண்டாம், நீர்சந்தோஷமாய்த்தானேதென்புறவாசலுக்குப் போகச்செய்யும் என்ருர் சானந்தமுநிவர்.—எ-று. (௩)

ஐயன துரையைக் கேட்டு அந்தக னுள நடுங்கித்
துய்யவென் பதிநீ யாருந் தொழுபவ னினக்கு மந்த
வெய்யவ னிரையங் காட்டில் விழுமமே துறுமோ பின்னை
யுய்யுமா றுளதோ வெற்கென்றஞ்சினேனுண்மை கண்டாய்.

(எ-து.) முநிவர் இப்படிசொன்னதைக்கேட்டு இயமன்மன நடுங்கிசுவாமிநீர்எனதுபரிசுத்தமானஇறைவனுகும், எவர்களுந் தொழத்தக்கவர் உமக்கு அந்தக்கொடியநரகத்தைக் காட்டினல் குற்றமேதேனும் விளையுமோ ! பின்புயான் பிழைக்கும்வகையு முளவோவென்றுஉண்மையாய்ப் பயந்தேன் என்ருன்.—எ-று.

என்மீதிற் குற்ற மில்லை நின்கருத் திசைந்த வாறே
நன்முநிச் செல்க வென்று நளின மென் கைகொடுத்து
வன்மைகொ டென்பால் வாய்த லருகுற வந்து மிக்க
தன்ம னன்பொடு நிறுத்த தவமுநி நின்ரு ரன்றே.

(எ-து.) என்மேற் குற்றமில்லைசுவாமிநற்குணமுள்ளசானந்த முநிவரே? உமதிஷ்டப்படியெழுந்தருளுமென்றுதாமரைபோன் றதன்கையைக்கொடுத்து வலுமைகொண்ட தென்புரவாசலுக் குச் சமீபமாக அழைத்துவந்து மேன்மையுள்ள இயமதர்மன் அன்புடனே சானந்தமுநிவரை நிறுத்த நின்ருர்.—எ-று. (௫)

யுகமுடி வினிலெழுந்த வுததியி னேதை போலத்
தகவிலா நரக வாதைப் படுமொலி சார்த லோடு
மிகவதி சயித்தகாலை யிணைக் கபாடந் திறப்பித்
திகலறு மறலிதா னெம் முநிய னினைக்க லுற்றான்

(எ-து.) அப்படி நிற்கிறபோது அவ்விடத்திலேயுகாந்தத்தில் பொங்கியெழுந்த சமுத்திரவோசைபோலே பாவிகளெல்லாம் நரகத்திலே வேதனைப்படுகிறதினாலே அழுஞ்சத்தங் காதிலே கேட்டவுடனே சானந்தமுநிவர் மனதிலே அதிசயங்கொண்ட போதுசாத்தியிருந்தக்கதவைத் திறவுகோல்கொண்டுதிறப்பித்து வலிவுள்ள இயமதர்மன் நமது சானந்தமுநிவருடனே சொல்லத் தொடங்கினான்.—எ-று. (௬)

ஆரிய யிந்த வாயிற் காண்பதற் கமைந்து நின்றாய்
கோரமாம் நரக வாசங் கொடியதென் னாணை தன்னால்
நேரில்கிங் கிரர்க ளின்று நெடியதண் டாதி கொண்டே
பூரியர் தமைத் தண்டிப்ப ரெனச்சொல்லும் போது மாதோ.

(எ-து.) குருமுகுர்த்தமாய்வந்த சானந்தமுநிவரே ?இந்தத் தெற்குவாசலைப் பார்க்கவேணுமென்று சம்மதித்துநின்றீர்!இது கோரமாகிய நரகவாசம் மிக்ககொடியதாகும்! இதிலே என்னிட ஆக்கினைப்படிக்குச் சமமில்லாதஇயமகிங்கிராள் பெரியதடிமுத லாகியதைக்கொண்டுநானாவிதமாகப்பாவிகளைத்தண்டிப்பார்கள் என்றுசொல்லி முநிவரையழைத்துக்கொண்டு நடக்கும்போது.

நம்மிறை வந்தா னென்று நாடரும் படர்க ளானோர்
செம்மையிற் சிலர்க டம்மைச் சிகைபிடித் தீர்த்து வாளால்
வெம்மைகொ டசை யறுப்பர் வீரொடு சிலரைத் தூக்கி
இம்மென வொடிந்து வீழ வெறிந்துநின் றூர்ப்பர் மன்னோ.

(எ-து.) நம்முடைய எஜமானர் வந்துவிட்டாரென்று சொ லற்கரிய இயமகிங்கிராள்சிலகொடியபாவிகளை குடிமியைப்பற்றி யிழுத்து வாளாலே வுடம்பிலுள்ள சதைகளையெல்லாமறுப்பார் கள், பெருமையுடனேசிலபேரை எலும்பொடிந்து அலறிவிழத் தூக்கியெறிந்துவிட்டுநின்றுகொண்டுஆர்ப்பரிப்பார்கள்—எ-று.

சிலருறு செவிக டோறுஞ் சொருகுவர் காய்ந்த வேலைச்
சிலருடல் சிதையக் கொத்தி யுப்பினைச் செலிப்பர் மார்பிற்
சிலர்தமைத் தூண்டி லிட்டுச் செடிலென வாட்டுவார் பின்
சிலர்தமைத் தாலுகொய்துசெப்புக வெனவொ றுப்பார்.

(எ-து.) சிலருடைய இரண்டுகாதுகள்தோறுங்காய்ந்தவே லாயுதத்தைச்சொருகுவார்கள்,சிலருடையவுடம்பைச்சிதையும்

டில்முள்ளைச்சொருகிச்செடில்போற்சுற்றியாட்டுவார்கள்பின்னை யுஞ்சிலருடையநாக்கையறுத்துப்பின்புபேசும்படிசொல்லியடிப் பார்கள்.—எ-று. (கூ)

சிற்சிலர் தீய வாயிற் செம்பினை யுருக்கி வார்ப்பார்
சிற்சிலர் வயிறு பீறிச் செழுங்குட ரழுக வீர்ப்பார்
சிற்சிலர் கண்ணை யம்பாற் சேதிப்பர் மார்பி லேறிச்
சிற்சிலர் நாசி யோட்டத் துடனறுத் துரிப்பர் சென்று.

(எ-து.) சிலபாவிகள்வாயிலேசெம்பையுருக்கிவிடுவார்கள், சிலபேர்வயிற்றைப்பீறிக் கொழுப்புக்குடலைப் பிடுங்குவார்கள், சிலருடையகண்களை யம்பினாலே தோண்டுவார்கள், சிலபேர்கள் மார்பிலே யேறிக்கொண்டு மூக்குகளை உதடுகளையறுத்துரிப்பார் கள்.—எ-று. (கo)

சென்னிகீழ்ப் படவே தூக்கிச் செண்டுகொண் டடிப்பர் தீய
வன்னியி லிடுவ ரம்பால் வாயிடத் தெய்வர் மார்பிற்
பன்னரு முளைக டாவிப் பரிப்பர்சுண் ணங் குழைத்து
மன்னிய பசிக்குத் தின்க வென்றுமா றுவர்சில் லோரை.

(எ-து.) சிலரை தலைகீழாகக்கட்டித்தூக்கி குறடாவைக் கொண்டடிப்பார்கள், சிலரை அக்கினியில் எறிவார்கள், சிலரை அம்பால் வாயிற்குத்துவார்கள், சிலரைமார்பிலேசொல்லவரிய முளைகளைக் கடாவிப் பிடுங்குவார்கள், சிலரை வொழியாதபசிக் குச் சுண்ணாம்பைத்தின்னுங்களென்று அடிப்பார்கள்.—எ-று.

சந்துக டோறு மாப்புத் தாக்குவர் பிடித்த ரத்தாற்
கந்தரந் தனை யறுப்பர் பதைத்திட வடி மடிக்குள்
வெந்தசுண் ணத்தைக் கட்டி கேணியில் விடுவ ரேன
முந்துறப் படுப்பர் சென்னி மூளைவீழ்த் துவர்சில் லோரை.

(எ-து.) சிலபாவிகளைச் சந்துகள்தோறும் முளைகளையடிப் பார்கள், சிலரைப்பிடித்துப் பதைக்கத்தக்கதாக அரத்தினாலே கழுத்தையறுப்பார்கள், சிலரைஅடிமடியில் வெந்தசுண்ணாம்பு கல்லைகட்டிக் கேணியில்போடுவார்கள், சிலரைப் பன்றிக்கு முன்னாகப் போடுவார்கள், சிலரைத்தலையையுடைத்து மூளை யைக்கொட்டுவார்கள்.—எ-று. (கஉ)

கொடிக ளாற்கட்டி நாய்முன் கூவிட விடுவ ரியானை
யடிகளிற் கட்டுவார் தேட் குழியிடை யழுத்து வார்வெம்
படவராக் கேணி தன்னிற் பதைத்திட நிறுத்து வார்பின்

(எ-து.) சிலபாவிகளை கொடியால்கட்டிநாய்குமுன்கதறும்படி விடுவார்கள், சிலரை யானைகாலிலேகட்டி யுருட்டுவார்கள், சிலரைத்தேளுள்ள குழியிலேபோட் டமுத்துவார்கள்,சிலரைப் பொல்லாத படத்தையுடைய பாம்புக்கேணியில் பதைபதைக்க நிறுத்துவார்கள்,பின்னையும்சிலரைகொடியவூன்சிதறமிலாராலே கூவக்கூவ மாறுவார்கள்.—எ-று. (கங)

புரண்டிட வுலக்கை கைகொண் டெறிகுவர் பூவாய் குந்தத்
துருண்டிடக் குத்துவார் காய்ந் துறுமயக் கழுவு தன்னிற்
சுருண்டிட வேற்றுவார் கூர் வாள் கொடு தூக்கிக் குத்தி
வெருண்டிடக் குருதி தூங்க விடுவர்கிங் கரர்சில் லோரை.

(எ-து.) சிலபாவிகளை உலக்கையை கையிலேயெடுத்துவெருண்டுவிழ எறிவார்கள், சிலரைக்கூரிய முளையுள்ளஈட்டிகளினாலேஉருண்டோடக்குத்துவார்கள்,சிலரைச்செவக்கக்காய்ந்திருக்கும் இருப்புக்கழுவினிடத்லே சுருண்டிட ஏற்றுவார்கள், சிலரைக் கூரியவாள்கொண்டு குத்தித்தூக்கிவெருண்டிடவுதிரமொழுகும்படிக்கு விடுவார்கள் கிங்கரார்.—எ-று. (கச)

அயர்ந்துபற் கெஞ்சக் காலை யங்கையை மிதித் தொடிப்பார்
குயங்கொடு செதுக்கு வார்கைக் குத்தினால் மருகி வீழ்ந்து
மயங்கையிற் பாரை தன்னை மார்பிடை யெடுத்து வைப்பார்
புயங்களி லாணிதாக்கிப் புரட்டுவார் படர்சில் லோரை.

(எ-து.) சிலர் அசந்துபோய்ப்பல்லைக்கெஞ்சக்கெஞ்சக்கால் கைகளை மிதித்தொடிப்பார்கள்,சிலரைக்கூர்வாள்கொண்டுசெதுக்குவார்கள்,சிலரைக்கைக்குத்தினால்மருகிவிழுந்துகிடக்கையில் பெரிய பாராங்கல்லை மார்பிலேயெடுத்துவைப்பார்கள்,சிலரைக் கீழேதள்ளி புசத்திலேஆணிகளைக்கிடாவிப்புரட்டுவார்கள்இயமபடாள்.—எ-று. (கரு)

அடியுதைகுத்து வெட்டா லடிபடல் சுடுதல் கீறல்
இடிபட லாதியால் மெய் வலியெடுத்திரங்கு வாரும்
பொடிமிசைப் புரளு வாருந் தவிப்பொடு புழுங்கு வாரும்
மடியுறு தந்தோ வென்று மயங்கிடு வாரு மாகி.

(எ-து.) இப்படிபாவிகள் இயமதூதர்களுடையகாலுதையினாலும், குத்தினாலும், வெட்டினாலும், அடிபடுதலாலும்,சுடுகிற

சரீரம் வலியெடுத்து அழுகின்றவர்களும், புழுதியிலேவிழுந்து புரளுகிறபேர்களும், தவிப்புடனே புழுங்குகிறபேர்களும், சாவு வராமல் ஐயோவென்று மயங்குகிறவர்களுமாகி.—எ-று. (கசு)

வல்வினைச் செய்தோ ரியாரும்வருந்தியிவ்வாறு சொல்வார்
செல்வத்தின் மதாந்த ராகித் தீமைகள் பலவுஞ் செய்தோம்
பல்வினை முழுதுங் கூடிப் படர்களாய் வந்திப் போது
கொல்வன கண்டோம் நல்லோர் கூறிய தருமங் கேளோம்.

(எ-து.) பாவிகளெல்லாரும் வருந்திஇப்படிக்குச்சொல்லுவார்கள், பூமியிலேநாம்வாழ்கின்றகாலத்திலேஅயிஸ்வரியத்தினாலே கெர்வமுள்ளவராகிப் பல தீமைகளைச்செய்தோம்! அந்தத் தீமைகள் முழுமையுமேகூடி இப்போது இயமபடாளாய்வந்து நம்மைக் கொல்லுவதைக்கண்டோம்! அப்போதுநல்லோர்கள் பெரியோர்களிப்படி தீமைசெய்யலாகாதென்று அவர்கள்சொல்லுகிற தருமத்தைக்கேட்டிலோமே.—எ-று. (கஎ)

வேறு.

அறம்புகுதாச் செவியினிடை யாயுதங்கள் புகப் பட்டோ
மந்தோ வந்தோ
சிறந்ததலங் களிற் செல்லா வடிகளினா னரகினிடைச்
செல்லா நின்றோம்
மறந்தரர்க்கு வணங்காத சிரத்தார்க்கிங் கரர் தாளை
வணங்க நின்றோ
முறுந்தவ ரென் றறியாதே கொடுமைபல செய்தனமியா
மொழி விலாதே.

(எ-து.)பெரியோர்சொன்னதருமவார்த்தைகள் நுழையாத நமது காதினிடத்திலே ஆயுதங்கள் சொருகப்பட்டோம்!ஐயையோ! சிறந்ததலங்களில்போகாதகால்களால்நரகத்தினிடத்திலே நடக்கப்பட்டுநின்றோம்! மறந்துஞ்சிவனைவணங்காததலையினால் இந்த இயமகிங்கரருடைய கால்களைவணங்கினோம்! இயமனாலிப்படி கேடுவருமென்று அழியாமல்பூமியிலேஅனேகங்கொடுமைகளை யொழிவில்லாமல் செய்தோம்.—எ-று. (கஅ)

மதமொடு மாச்சரிய மகன்றிலே மன்பர் தமை
வணங்கிலே மின்
நுதலினிடை வெண்பொடிசற் றணிந்திலே மரன் சரிதை

சிதவில்குர வன்கருணை யடைந்திலேஞ் சிவாலயத்திற்
சென்றி லேமின்
னிதையநடுங் கும்படிக்கின் றொழியாத வாதைபட
விருந்தோ மியாமே.

(எ-து.) நாமெல்லாம் காமம், குரோதம், உலோபம், மதம், மாற்சரியம், இடும்பை அகங்காரம்நீங்கியிருந்தோமே! சிவனடியார்களை வணங்கோமே! நெற்றியில் விபூதியணியோமே! சிவகதை சிவபுராணங்களைப் படித்திலோமே! நித்தியராகிய குருசுவாமியினுடைய கடாட்சத்தை யடையோமே சிவாலயத்திலே போகோமே! அப்படியிருந்தநாம்இப்போதுமன நடுங்கும்படிக்குத் தொலையாதவாதைப்படுகிறோமே என்றுபாவிகள் துக்கப்படும் வேளையில்.—எ-று. (கக)

மனைவே கும்போது கிணறது கெல்லல் போலுமியல்
வதுவைப் போதி
லினிதான வழுதுணையின் பயிரிடுதல் போலுமுய
ரிரக்க மீண்டு
மனமீதி லெழுந் தென்னை மறந்திறந்தோ மெனிலாவி
வருமோ பின்னைக்
கனசார மருந்தாமல் மணக்குமோ வென மறவர்
கழறுங் காலே.

(எ-து.) வீடுவேகின்றபோது அதையவிக்கக்கிணறுவெட்டுவதுபோலும், பெருமையானகல்லியாணஞ் செய்யும்போது கறிவேண்டி கத்திரிநாத்து விடுவதுபோலும், நீங்கள்வாதைபடுமிவ்விடத்தில் மிகுதியானமனவிரக்கம் தோன்றியாவது என்ன?மறந்து செத்தோமானால் பிறகுவுயிர்வருமோ! அதிகமுங்காரசாரங்கொள்ளாமல்வாய்மணக்குமோவென்றிப்படி இயமபடாக்கள் பாவிகளுடனே பிரதியுத்தரம் சொல்லும்வேளையில்.—எ-று.()

உலகபா வகனான சானந்த முநி கருணை
யுற்று நோக்கிப்
புலனுடைய தருமநின கிங்கரரால் வருந்தி யுளம்
புழுங்கு வோர்செய்
பலகோடி வினைமுழுதும் பகருதியென் றலுங் கமல
பாணி கூப்பி
யலகிலரு ளுடையமல கேட்டியென வியன் மறலி

(எ-து.) உலகபாலகனாயிருக்கப்பட்ட சானந்தமுனிவர் தய வுண்டாகிப்பார்த்து புலமையுள்ள ஓகோ ! இயமதர்மனே? உன் னுடைய கிங்கரர்களாலேவருத்தப்பட்டுமனதுகலங்குமிவர்கள் செய்த பலபாவங்களையெல்லாம்சொல்லுமென்றுகேழ்க்க,நமன் கையைக்குவித்துக் கும்பிட்டு நிர்மலமான சுவாமியே ? கேளு மென்றுசொல்லுகிறான்.—எ-று. (உக)

இவன்சிவனைப் பூசனைசெய் விரதமுடைப் புனிதர் தமை
யிகழ்தல் செய்தான்
இவன்கனவி லேனுமுய ரிறவாத பரம் பரனை
யிறைஞ்சி டாதான்
இவன்பரம னயனமணி திரு நீறு தரியாதா
னெந்த நாளும்
இவன்பரமர்க் கணிந்தமலர் கொடுத்திடில்வந் துவந்து கர
மேற்றிடா தான்.

(எ-து.)இவன்சிவனைப்பூசைபண்ணப்பட்டவிரதமுள்ளபெ ரியோர்களைத்தூஷித்தவன், இவன்சொப்பனத்திலேயும்சிவனைக் கும்பிடாதவன், இவன் எந்தநாளும்விபூதி ருத்திராக்ஷந்தரியாத வன்,இவன்பரமசிவத்திற்கணிந்தபுஷ்பத்தைக்கொடுத்தால் அன் புடன்வந்து கையேந்திவாங்காதவன்.—எ-று. (உஉ)

புலிதுறத்தி வந்திடினுஞ் சிவாலை யத்திற் புகுதாத
புலைய னின்னோன்
வலிய ருடன் கோளுரைத்து நல்லோரைக் கெடுத்த பர
வாதி யின்னோன்
கலகமனை யாளுரைகேட் டுடன்பிறந்தோ ரைக் கெடுத்த
காமி யின்னோன்
சிலருதவுங் கையிடையேற் றனியாய வழக் குரைத்த
தீய னின்னோன்.

(எ-து.) புலியானது ஆக்கிரமித்துத் துறத்திக்கொண்டுவந் தாலுஞ் சிவாலயத்துக்குள்ளே நுழையாதகொடியபாவியிவன், வலியுடையோர்களிடத்திலே கோள்சொல்லிநல்லவர்களைக்கெடு த்தபரவாதியிவன், கலகஞ்செய்யும்பெண்சாதிபேச்சைக்கேட்டு சகோதரத்தைக்கெடுத்த காமியிவன், சிலர்கொடுக்கிறகையடை

தன்மனைவிக் கேவல்செயத் தாயைவிடுத் தவனிவன் காண்
டயவில் லாமல்
வன்மனைவி யுரைகேட்டுப் பெண்கொலைசெய் தவனிவன் காண்
மதத்தி னோடு
மென்மறையோர்க் குரைத்தபடி செய்யாத களனிவன் காண்
விளையும் பூமி
இன்னலுறு வர்க்களித்து மீளவாங் கின னிவன் கா
ணின்ன லற்றோய்.

(எ-து.) தன் பெண்சாதிக்குப் பணிவிடைசெய்யத் தாயை விட்டவனிவன், பெண்சாதிவார்த்தையைக்கேட்டுத்தயவில்லாமல் பெண்ணைக்கொலைசெய்தவனிவன், மதத்தினாலே பிராமணருக்குச்சொன்னதானங்கொடாதவனிவன், நன்றாய்விளையும் பூமியை வறியவனுக்குக்கொடுத்துப் பின்னும்வாங்கிக்கொண்டவனிவன், பாரும்குற்றமற்றசானந்தமுநிவரேஎன்றானியமதர்மன்.--எ-று.

கற்புடைய மங்கையரை மானபங்கஞ் செய்த கொடுங்
கடிய னின்னோன்
நற்பசுவை யுஞ்சிறிய கன்றினையும் பிரித்து விட்ட
நரகி யின்னோன்
பற்பலபொய்க் கரியுரைத்தோன் சுவாமிக்குத் தீவினைசெய்
பதக னின்னோன்
பொற்புடைய மனைசுட்டோன்மருந்திட்டோன்பொன்றிரு
புலைய னின்னோன். [டும்

(எ-து.) கற்புடையபெண்களை மானபங்கஞ்செய்தமகாபாதகனிவன், பசுவையுமிளங்கன்றினையும் பிரித்துவோட்டுவிட்டவனிவன், அனேகம் பொய்ச்சாக்ஷிசொன்னவனிவன், சுவாமிக்கே தீவினைபண்ணினபாதகனிவன், நல்லவீடுகளைச் சுட்டவனிவன், மருந்திட்டவனிவன், பொன்திருடினபொல்லாதவன் இவன்என்றான்.—எ-று. (உரு)

மத்தனிவன் குருவை மறந் தவனிவன்றன் றந்தை யுயிர்
மாய்ந்தா லன்னைச்
சித்தமய றவிர்த்தியெனு தனலிடையிட் டவனி வன்மைச்
செழுங்கண் ணோரைக்
குத்திவதைத்தவனிவன்மற்றிவன்மதுவையுண்டவன்கோக்
கொலைகள் செய்த
பித்தனிவன்முறைகடந்தோனிவன்கண்டாய்ப் பரமனருள்

(எ-து.) மதங்கொண்ட கெர்வியிவன், சற்குருவைமறந்தவனிவன், தன் தந்தையிறந்துபோனால்தாயைப்பார்த்து மனோதுக்கத்தை விட்டுவிடென்று தேறுதல்சொல்லாமல் நெருப்பிலிட்டு தகனம் பண்ணினவனிவன், மையிட்டு மதத்தகண்களையுடைய பெண்களைக் குத்திக்கொன்றவனிவன், கள்குடித்தவன் இவன் பசுவைக்கொன்றபயித்தியக்காரனிவன்முறைமைதப்பினவனிவன், பாரும் ஐயா பரமேஸ்வரன்ருளைப்பெற்றமேலானவரேஎன்ருன்.—எ-று. (உசு)

வரவிஞ்சை தனைச்சோரத் தாற்கற்றோ னிவ னுண்ட
மனைக் கிரண்டு
புரிவஞ்ச னிவன்பெரிதுங் கொடும்புத்தி யுரைத் தொழுகும்
புன்மை யோர்க்குங்
கரவென்றும் புரிபவர்க்குக் கொடுத்த மதியிவன் வெங்
கபட மன்றி
விரவுஞ்சன் மதியறியாக் கொடிய னிவன் காணினிய
வேதங் கற்றோய்.

(எ-து.) வித்தைவரக்கள்ளத்தனமாகக்காணிக்கைகொடாமற்கற்றவனிவன், உண்டமனைக்கிரண்டகம்பண்ணின வஞ்சகனிவன், என்னுளும், பாபவழியிற்செல்கின்ற அற்பர்களுக்கும்திருடுகின்றவர்களுக்கு மிடங்கொடுத்து உபகாரம்பண்ணின அறிவுகெட்டவனிவன், மனதிலே பொல்லாத கபடமேயல்லாமல்கல்லபுத்தியென்றதையறியாதபாதகனிவன், பாரும்வேதங் களைக்கற்றறிந்தமுநிவரே என்ருன்.—எ-று. (உஎ)

தீர்க்கமுடை வயிரியிவ னியாவரையுந் தரும நெறி
செல வொட்டாத
மூர்க்கனிவ னொருதுணிக்காய் மறையவர்கொன் றவ னிவ
முத லிலாம [னோர்
லூர்க்கணுறு பொழில் சிதைத்தோ னிவன்மனித னிருத
னுலவா துண்ணும் [னிவ
நீர்க்குளம்பூ வனமழித்த பாவியிவன் காண் கருணை
நிறைந்த மேலோய்.

(எ-து.) ஒருகாலத்திலும் மனமிளகாத வயிரமுள்ளவனிவன், யாவரையுந் தருமத்தின்வழியிலே போகவொட்டாமல்பண்ணுகிறமுஷ்கரனிவன், ஒருதுணி நிமித்தியமாய்ப் பிராமணனைக்

யழித்தவனிவன், மனிதராக்ஷசனிவன், வற்ருதுண்ணுந்தண்ணீர்க் குளங்களையும்நந்தனவனங்களையுமழித்தபாவியிவன், பாருமையா கிருபை நிறைந்த சானந்தமுநிவரேயென்ருன்.—எ-று. (உஅ)

என்றியமன் முநிதன்னை யழைத்தேகு மளவில் வினை
யியற்றி னேரைக்
குன்றனைய கிங்கரர்செய் கடுந்துயரை யொரு நாவாற்
கூற வற்றே
துன்றுகொடும் பாவிகடா மறலிவரல் கண் டிரங்கித்
தொகுபற் காட்டி
நின்றழுது தொழுது பணிந் தெழுந்து கரம் விரித்தேங்கி
நிகழ்த்து கின்ருர்.

(எ-து.) இப்படிப் பாவிகளைக் காட்டிச்சொல்லிக்கொண்டு இயமதர்மராஜன்சானந்தமுநிவரை யழைத்துக்கொண்டு நடக்கி றசமையத்தில் அந்தப்பாவிகளை மலைபோலொத்த இயமபடாள் செய்கிற கொடிதானவாதைகளை யொருநாவற் சொல்லிமுடியு மோ! அந்தவேளையில் அனேகபொல்லாத பாபங்களைப்பண்ணி னமாபாவிகள் எல்லாரும்இயமதர்மன்வருவதைநோக்கிஇரங்கி பற்களைக்காட்டி கெஞ்சிக்கொண்டுநின்றுஅழுது துதித்துதென் டஞ்செய்து எழுந்து கையைவிரித்துக்கொண்டு ஏங்கிசொல்லு கின்ருர்கள்.—எ-று. (உ௯)

இந்தவருத் தம்பலவு மொழியாது படப் படுமோ
வெங்க ளுக்கு
முந்துமுயி ருங்கழியா வென்செய்கோ மியாங்கள் புரி
முடிவிற் றீமை
பந்தவிருள் விடிகுவதென் றரசறியா வமஞ்சி யெனப்
பழுதா காமல்
வந்தனை கண்டா யெமக்கோர் கதிவேறின் றினி யெமது
வருத்தந் தீராய்.

(எ-து.) அனேகவிதமாய்எங்களைத்தொலையாமல் வருத்து கின்ற இத்துன்பத்தால் சீவனும் போகவில்லையே! என்னசெய் வோம்! நாங்கள் பண்ணின பாதகமாகியவிருள்என்றைக்குவிடி யும் அரசரறியாத அமஞ்சியைப்போலே பழுதுபடாமல் வந்து பார்த்தீர்கள் எங்களுக்கு உம்மையல்லாமல் வேறேயொரு கதி யில்லை, இனியெங்களுடைய வருத்தத்தைத் தீரும்ஐயனே யென் ருர்கள்.—எ-று. (௩o)

பெரியோர்கள் வரிலிருந்த வினையால்வெங் கழு நுனியில்
பெரிதிருந் தோம்
பரமாதர் முலையிடத்தே நகரேகை வைத்த கொடும்
பாவந்தன் னால்
விரைவாக நகத்தினிடை யிருப்பூசி யேற்றி யிட
மெலிந்தோ மையா
பரிவோடு தழுவியகை யறுப்புண்டோம் முகந்த முகம்
புடைப்புண்டோ மால்.

(எ-து.) நல்லோர்கள் பெரியோர்கள்வந்தால் எழுந்திராம லிருந்த பாதகத்துக்கு கழுவிநுனியிலே வெகுநாளுட்கார்ந்திருந் தோம், பரஸ்திரீகளுடைய முலையினிடத்திலே நகக்குறிவைத்த பாதகத்துக்கு அந்தவிரல்நகத்திலே இருப்பூசியேற்றப்பட்டுவாடி னோம் ஐயனே சந்தோஷத்துடனே பெண்களைக் கட்டித்தழு வின கைகளறுபட்டு வருந்தினோம், பின்னும்பெண்களைமுகந்த முகங்களிலடிபட்டோம்—எ-று. (௩௧)

பாடுறுபா ராண்டுநரர் தமை வருத்துந் தீவினையாற்
பாரி வேட்டை
யாடெனவே குத்துண்டோ முயிர் பதைக்கக் கரமாதி
யறுப்புண் டோமால்
வீடருளு மரற்கணிந்த தொடை வாங்கி முகவாத
வினையா லீண்டு
கேடுபட நாசியறுப் பட்டன மியாங் கண்டனைநீ
கேடிலா தோய்.

(எ-து.) பெருமையுள்ள பூமியை யரசுசெய்து ஜனங்களை வருத்தப்படுத்தினபாவத்திற்கு பாரிவேட்டையிலே குத்துப்படு கிற ஆட்டுக்கிடாய்போலே கிங்கரர்களாலே குத்துப்பட்டோம், உயிர்துடிக்கும்படிகைமுதலிய வுறுப்புகளறுபட்டோம், மோட் சந்தரும் சிவனுக்குத்தரித்தமாலையைவாங்கியன்புடனேமுகந்து கொள்ளாத பாபத்திற்கு மூக்குகளறுபட்டோம், இதுகளையெல் லாம் நீர்பாரும் நித்தியனே என்றார்கள்.—எ-று. (௩௨)

அரனந்த வனத்திற்பூ முடித்த சிரத் தாப்புநெடி
தழுந்தப் பட்டோம்
பரமன்ற னாலயத்திற் றொடு கழலோ டேகியவெம்
பாதங்க ளின்று

விரவுங்கூ றியபாசத் தறுபட்டோஞ் சிவா லயத்தின்
மெல்லி யார்பால்
மருவுந்தி வினைக்குறியின் முள்ளேற்றப் பட்டன மால்
வானோர் கோவே.

(எ-து.) சிவனுடைய நந்தனவனத்திற் புஷ்பித்த பூக்களைக் கொய்து முடித்ததலையிலே முளையடிக்கப்பட்டோம், சிவன்கோயிலிலே தொடுத்த செருப்புடனேசென்ற கால்கள் இன்று கோடாலிகொண்டு தறிக்கப்பட்டோம், சிவாலயத்திலே பெண்களைச் சேர்ந்த பாவத்திற்கு ஆண்குறியில் முள்ளேற்றப்பட்டோம்,தேவர்க்கதிபனே என்றார்கள்.—எ-று. (௩௩)

ஓடினவர் தமைநெடிய பரை-விட்டுத் தொழு தவரை
யுதிரத் தங்கங்
கூடியவர் தமைவறிது புற்கடித்தோர் தமை வீரங்
குலைந்து பாதஞ்
சூடினவர் தமைபொருவெங்களத்தினிடைகொன்றவினைத்
தொகையி னானே
வீடரிய வாதைபல பட்டனமப் பாடு தனை
விளம்ப லாமோ.

(எ-து.) சண்டைமுகத்திலே ஆற்றாது வோடின பேர்களையும்,ஆயுதங்களைக்கைவிட்டுகும்பிட்டபேர்களையும், உதிரத்திலே விழுந்துகிடக்கிற பேர்களையும், புல்லைக்கவ்வினபேர்களையும்,சேவகத்திற்குலைந்து காலைப்பிடித்து தலையிலே வைத்துக்கொண்ட பேர்களையும், யுத்தகளத்திலே இவர்களையெல்லா மிரக்கமில்லாமல்கொன்ற பாவங்களுக்கு விதிதற்கரிய பலபலவாதைகள் பட்டோம் அப்பாடுகளையுஞ் சொல்லப்படுமோ ! வென்றார்கள். ()

நெறிமுறைதப் பினசென்மம் போயினகா ணெமைப் புரக்க
நீதிகண் டாய்
தறுகணமை யினிவிடுதி பொறுக்க முடியா தைய
தயவு செய்வாய்
குறுகிமிகத் தொழுதுபணிந் தாலொறுக்கத் தகுமோ வெங்
கோவே யென்று
முறையிடுவோர் தமைநோக்கி யியமபடாள் பெருங் கோப
முகிர்ந்து சொல்வார்.

(எ-து.) இப்படி நாங்கள் செய்தபாபங்களுக்குத்தக்கவாதை பட்டபடியினாலே நீதிமுறைமைதப்பிநடந்தபாவஜென்மம்போச்சுது, எங்களை ரட்சிப்பது உமதுகடமைகோபத்தைவிட்டுவிடும் இனிவாதைபொருக்க முடியாது ஐயனேசற்றேதயவுபண்ணவேணும் நெருங்கிவந்து காலிலே கும்பிட்டு விழுந்தால்கோபிப்பது தருமமோ! எங்களரசே! யென்றிப்படி முறையிடுகிறபாவிகளைப் பார்த்து இயமதூதர்க ளதிககோபத்துடன் சொல்லுகிறார்கள்.

நீவிரினும் படும்பாடு பின்கிடந்த திழுக் குடையீர்
நிகழ்த்த லெல்லாம்
மேவுசிரஞ் சிதைக்குங்காற் காதுக்கு மன் றாடும்
விரகு போலும்
போவெனவே பிடித்துந்தி லேகாந்த மூரைத்து மெனப்
புகறல் போலு
மாவியுட லுக்குவருங் கேடறியா துயர் தரும
மகன்ற நீரே.

(எ-து.) நீங்களின்னம் படும்பாடுபின்னாலே கிடக்கிறது, பாவிகளே? நீங்களிப்போது சொல்லுகிற தெல்லாம் தலையைவெட்டும்போது காதுக்குமன்றாடுதல்போலும், போவென்று பிடரியைப்பிடித்துத் தள்ளும்போது யேகாந்தம் பேசுகிறோமென்று சொல்லுவதுபோலு மிருக்கின்றது, உங்கள் சீவனுக்குமுடலுக்கும்வருங்கேட்டையறியாமல் தருமந்தப்பி நடந்தவர்களேயென்றார்கள்.—எ-று. (௩௬)

இனிநாளைப் பயணமெனு மிடத்தின்றே விரைப் பெடுத்த
வியல்பு போலும்
தனியாறு காதமென விருந்துதொடு கழல் விலக்குந்
தன்மை போலும்
இனிநீர்சொல் குவதெங்க ளிறைகேழ்க்கில் வருத்த மெமக்
குறுமிப் போது
வனமீது கனல்புகுதிற் சந்தனமும் வெந்து விழு
மாறு போல.

(எ-து.) ஊருக்குநாளைப்பயணமென்றபோது இன்றைக்கே இரைப்பெடுத்தல்போலேயும், ஆறுகாதவழியென்றபோது காலிலிருக்கும் செருப்பைக் கழற்றுகிறதுபோலேயும், நீங்கள் பட்ட

வதை யெங்கள்எஜமானர்இயமதர்மராஜன்கேட்டால்காட்டிலே தீப்பட்ட சந்தனமரமும் வெந்துவிழுதல்போல்இப்போதுஎங்களுக்கு ஆக்கினைவரும் என்றார்கள்.—எ-று. (௩௭)

நும்மிடத்தி லெம்முள்ளத் திரக்கமோ சிறுது மிலை
நுவலுங் காலை
வெம்மைசெயு மிவ்வாதை தனக்கேனின் றுளைந்தீர் பின்
விளைவ தோரீ
ரிம்மகிவா னுள்ளளவு மிருக்குநர குங்க டமக்
கிடமே யன்றோ
வம்மறிதா னழுதுருகில் வலைக்காரன் விடுவ னோ
வறிவி லாதீர்.

(எ-து.) உங்களிடத்தில் எங்கள்மனதினிடத்தேசற்றானது மிரக்கமில்லை சொல்லுமிடத்தில் கொடுமைசெய்யும் இந்த வாதனைக்குத்தானே நின்றுகளைக்கிறீர்கள்! பின்னாலேவருகிறது உணரமாட்டீர்கள்!இந்தப்பூமியாகாயமுள்ளளவு மிருக்கிறநரகமெல்லா முங்களுக்கிடமல்லவோ! வலைக்குளகப்பட்ட மான் அழுவதினாலேவலைக்காரன் விடுவானோ. அறிவில்லாதபாவிகளே என்றார்கள்.—எ-று. (௩௮)

என்றுநமன் படருரைத்த சொற்செவியி லால மென
வெய்த லோடு
மன்றிடையின் றுடப்போய் வில்லங்கம் வந்த தென
வருந்தி யுள்ளந்
துன்றியசீ ரக்கினியின் முழுகியற மற்றவர்க
ளேங்குங் காலை
வென்றியுடை புலனை யெலாம் வென்றமுநி மறலி யொடு
விளம்ப லானார்.

(எ-து.) இந்தப்படி இயமபடாள் சொன்னசொல் ஆலகால விஷம்போல காதிலேபட்டமாத்திரத்தில் சபையில் மன்றுடப்போய் வில்லங்கம்வந்துதென்று மனதுநொந்து நெருங்கியதுக்கமாகிய நெருப்பிலேமுழுகிப்பாவிகள்நடுங்கும்வேளையில், வெற்றியுள்ள புலன்களையெல்லாஞ்செயித்தசானந்தமுநிவர் இயமதர்மருடனே சொல்லத்தலைப்பட்டார்—எ-று. (௩௯)

தருமவிவ ணறமில்லோர் தங்களை நீ வாதிக்குந்
தண்டந் தன்னை
அரிபிரமர் விலக்கவொணா திவர்வாதை யகற்ற வெம

பிரிவுபட வடித்தெய்து கொய்துவறுத் தரைத் தரைத்து
பிளந்து தாக்கி
விரவினுரித் தெரிந்துகிழித் துதைத்தழித்து விடினு முயிர்
விடாத தென்னோ.

(எ-து.) ஏ ! இயமதர்மனே ? இவடத்திலே தருமமில்லாத பாவிகளை நீவாதித்துபண்ணுந்தண்டனைகளை அரிபிர்மாக்களாலேயும் விலக்கப்படாது ! இவர்கள்வாதையை நம்முடையபரமேஸ்வரனே விலக்கவல்லவன்; அதுநிற்க இந்தப்பாவிகளையெல்லாம் சரீரம் பிளந்துபோக அடித்தும், அம்பினாலெய்தும்,கொய்தும், வறுத்து அம்மியில் வைத்தரைத்தரைத்தும்,இரண்டாகப்பிளந்தும், ஆணிகிடாவியும்,சருமமுரித்தெரிந்தும், ஆக்கைபோகஇரண்டாய்க்கிழித்தும், உரைத்தும், இப்படியழித்து விட்டாலும் உயிர்போகாமலிருப்பதென்னோ! வென்றார் முநிவர்.—எ-று. ()

பொருவில் பொருந்துன்பமுறமரித்தவுடலழற்கொளுந்தப்
பொடியாய்த் தன்றோ
விரவுதிற லுடையோய்நம் மிதையத்து ளதிசயமே
விளைத்த தம்மா
உரைசெயவிவ் வுடல்வந்த செயலேதிங் கொன் றொழியா
துரைத்தி யென்னப்
பரவுபெருந் தண்டத்தான் வாய் புதைத்து முநிவ னொடு
பகர லுற்றான்.

(எ-து.) ஒப்பற்றவெகுதுன்பமுற்றிறந்த வுடம்பைஅக்கினியிலே கொளுத்தச் சாம்பலாகப்போயிற்றல்லவோ, இங்கேயிந்த உடம்புவந்தசெயல் நம்முடைய இருதயத்திலே அதிசயத்தையுண்டாக்குகிறதுஇதுவென்றுதப்பாமல் சொல்லென்றுகேழ்க்க இயமதர்மராஜன் வாய்பொத்திக்கொண்டுசானந்தமுநிவருடனே சொல்லுகிறான்.—எ-று. (சக)

வரியரவு தோலுரித்துச் செல்வதுபோ லிறந்து விடு
மனித ரியாரும்
பிரிவரிய யாதனு சரீரமெடுத் தென் றூதர்
பிடிக்க வீண்டு
வருவரவர் வீவதிலர் வீய்ந்தாலுஞ் சஞ் சீவி
வாய வுந்து

பரிவுறவே யெழுப்புமிவ ணறமில்லோர் பெரு வாதைப் படுவர் பின்னும்.

(எ-து.)வரிபொருந்தியபாம்பு சட்டைகழிற்றிவைத்துபோகிறதுபோலே பூமியிலே செத்தமனுஷரெல்லாரும்பூதஞசரீரமாகியதூலத்தைவிட்டு(சத்தபரிசரூபரசகந்தம்மனம்புத்தியாங்காரமென்னு மிந்தப்புரியஷ்டக ரூபந்தானே பிரிதற்கரிய) யாதனுசரீரமாகவெடுப்பித்துஎன்னுடையதூதர்கள்பிடித்துக்கொண்டுவரஇங்கேவருவார்கள்,மரிக்கிறதில்லை,மரித்தாலும்சஞ்சீவிவாயுவந்து பிரவேசித்துஎழுப்பிவிடும்,இவடத்திலேபாவிகள்பின்னேயும் வெகுவாதைப்படுவார்கள்.—எ-று. (சஉ)

அரன்புனித வாலயத்தைப் பிடுங்கினவ னிவ னரனுக்
களித்தல் செய்யி
லிருந்தசிவ முத்திரையை மாற்றிமறு முத்திரை யிட்
டவனி வன்காண்
பொருந்துசிவா லயத்தினுறு போகத்தை மாற்றிய வெம்
புலையனின் னேன்
சுரந்தசிவா லயப்பசுவின் பால்கறந்து குடித்த கொடுந்
துஷ்டனின்னேன்.

(எ-து.) பின்னும்நமன்சொல்லுகிறான்,நல்ல சிவாலயத்தைப்பிடிங்கினவனிவன்,சிவனுக்குவிட்டவயலிலேகல்வெட்டியிருந்தசிவமுத்திரையைமாற்றிமறு முத்திரையிட்டவனிவன், சிவாலயத்திற்குப்பொருந்திநடக்கும் போகத்தைத் தவிர்த்த நீச்சனிவன்,சிவாலயப்பசுவிற் சுரந்தபாலைக்கறந்துகுடித்ததுஷ்டனிவன்.

சிவனணியு மணிகளையும் பொருள்களையுங் கவர்ந்த கொடுந்
தீய னின்னேன்
சிவனடியார் மடங்களுக்கு வருபயனை மாற்றி விடு
மவல னின்னேன்
பவமகற்றுந் தெய்வவுரு வத்தையெடுத் தழித்த பெரும்
பாவி யின்னேன்.
நவமுறுபுல் லருந்தாம லிடபத்தைக் கால் பிணித்த
நரகி யின்னேன்.

(எ-து.) சிவனுக்குத்தரிக்கிற ஆபரணங்களையும், சிவதிரவியங்களையும் அபகரித்துக்கொண்டபொல்லாதபாதகனிவன், சிவனடியார் மடங்களுக்கு வருகிறபிரயோசனத்தைத் தடுத்துக்கெ

டுத்துவிட்ட அவலமானவனிவன், பாவத்தைக்கெடுக்கும்தெய்வ வுருவத்தை யெடுத்தழித்தபெரும்பாவியிவன், புல்மேயாமல்ரிஷ பத்தின்காலைக்கட்டின நரகனிவன்.—எ-று. (சச)

சங்கரன்ற னடியரொடுமாறிட்டோ னிவன் றூயர்
தமையு ஞானப்
பொங்குமதி யோர்தமையுங் கொன்றவனு மிவன் விரதம்
பொருந்தி னோரைத்
தங்குதவ விருத்தர்தமை யடித்தவனு மிவன் பூமி
தனைத்தீ யன்பால்
அங்கணளித் துலகத்தை யழித்தவனு மிவ னெவர்க்கு
மமுதம் போன்றோய்.

(எ-து.) சிவனடியார்களுடனே யெதிரிட்டு வாதுபண்ணி னவனிவன், தாயர்களையும் ஞானமுள்ளவிவேகிகளையும்கொன்ற வனிவன், விரதமுள்ளபேர்களையும், தவமுடையவிருத்தசங்கியா சிகளையும்அடித்தவனிவன், இராச்சியபாரத்தைப்பாவிகளிடத்தி லேகொடுத்து உலகத்தையழித்தவனிவன், எவர்க்குமமுதம்போ லொத்த சானந்தமுநிவரே என்றான்.—எ-று. (சரு)

அயலவர்சொற் கேட்டுரிய தன்மனைவி தனைக் கொன்ற
வவல னின்னோன்
கயமையுறு மரசன்பா லமைச்சாகி யிருந்த கொடுங்
கடிய னின்னோன்
மயலொடுசெய் யாதகொடுந் தீமைகளே செய் திறந்த
வலிய னின்னோ
னுயர்குருவை யுதாசினஞ்செய் தவனின்னோ னிணையில் த
துரவோய் காண்டீ. [வத்

(எ-து.) அயலார்வார்த்தையைக்கேட்டுத் தனக்குரியபெண் சாதியைக்கொன்ற அவலமானவனிவன், ஈனகுணமுள்ளராஜாவி னிடத்திலேமந்திரியாகியிருந்தபொல்லாதகுரியிவன், ஆசையுட னே பண்ணுததீமைகளையே பண்ணியிறந்தபொல்லாதமுரடனி வன், மேலானகுருவைஉதாசினம்பேசினவனிவன், இணையில்லா தஞானமுள்ள சானந்தமுநிவரே பாருமென்றான்.—எ-று. ()

கோளென்ப தெவருக்குங் குலக்கேடு குணக் கேடு
கொடுக்குங் கோளே

மூளுங்கோ பந்தனக்கு மூல முயர் கோபத்தால்
முடிவி லாத
நீளுந்தீ வினை பெருகுந் தீவினையே நிரையத்து
நிறுத்துங் கண்டாய
வேளங்க மெரிசெய்த பரமனையே தொழு துருகும்
விரதம் பூண்டோய்.

(எ-து.)கோளானது, எவர்களுக்கும்குலநாசமும்குணநாச மும்பண்ணும்,மூண்டுவரப்பட்டகோபத்திற்குக்கோளேமூலமா யிருக்கும், கோபத்தினாலே ஒழியாத வெகுதீவினைகள் வளரும், இந்தத்தீவினைகளே அவனை நரகத்திலேயழுத்தும் ஐயா மன்மத னங்கத்தையெரித்த பரமசிவனையே தொழுதுருகப்பட்ட தவ முள்ள சானந்தமுநிவரே என்றான் இயமதர்மராஜன்.—எ-று.()

வேறு.

கோபமே பாவ வேது கோபமே பயனை நீக்குங்
கோபமே துன்பங் காட்டும் கோபமே யருளை போட்டுங்
கோபமே யீன வீடு கோபமே நரகிற் றள்ளும்
கோபமே யென்றன் முன்னர் கொடுவருங்குணக்குன் றன்னாய்.

(எ-து.) கோபமேபாவத்துக்குஏதுவாயிருக்கும், கோபமே பலத்தைக் கெடுக்கும், கோபமே துன்பங்களைக் கொண்டுவந்து விடும், கோபமே திருவருளைநீக்கிவைக்கும்,கோபமேயீனத்துக் கெல்லாம்வீடாயிருக்கும்,கோபமேநரகத்திலேதள்ளும், கோபந் தானே யென்முன்னே கொண்டுவரும்,ஐயா? குணபர்வதம்போ லொத்த முநிவரே என்றான்.—எ-று. (சஅ)

அருளரிச் சந்திரன் முன் னைவர் தீய ரான
மருளரைத் துறந்து நல்ல மதிஞரைப் புரந்து நின்றே
யிருளறு துறக்கத் தெய்தி யிருந்தன னிவர்க டமை
பொருளெனச் செய் திருந்தார் புன்னர கத்தில் வீழ.

(எ-து.) தயவுடைய அரிச்சந்திரன்முதலானஅரசர்களெல் லாம் பாவிகளாகிய துஷ்டரை நிக்கிரகம்பண்ணி நல்லவிவேக முள்ளபுண்ணியாத்மாக்களைப்பரிபாலித்துராச்சியபாரஞ்செய்து இருளற்று ஜோதிமயமாயுள்ள சொர்க்கத்தில்போயிருந்தார்கள், இங்கேயிருக்கிறஇவர்களெல்லாம்பாதகமேபொருளாகவெண்ணி

பேருல காண் டிறந்த பின்னரே நரகமென்ப
தாரியர் சொன்னு ரின்னோ ரமையாவெவ் வினைகள் செய்த
பூரிய ரிவர்க்கு வீடு பொருந்தாதென் றியமன் கூறச்
சீரிய முநிவன் கேட்டுச் சிரித்ததி சயித்துச் சொல்வான்.

(எ-து.) பெரிய உலகத்தையாண்டு இறந்தபிறகேநரகமுண்டென்று ஆசாரியர்கள்சொல்லக்கேட்டு ஆராய்ச்சிசெய்துநன்னிலையினிற்காமல் மனம்பொருந்தாத பொல்லாதபாபங்களைப்பண்ணின இந்த நீசர்களுக்குமோக்ஷம் பொருந்தாதென்று நமன் சொல்ல, சிறப்புடைய சானந்த முநிவர்கேட்டு நகைத்து அதிசயித்துச் சொல்லுகிறார்.—எ-று. (௫0)

வாம்பரி யென்ப துள்ள மட்டும்வை யாளி யுண்டோ
தீம்பரா மிவர்க ளுக்குத் தீயவிவ் வாதை யென்று
போம்பக ரரிய முத்தி பொருந்துவ தென்று செய்ய
வாம்பலம் பகைஞன் பெற்றோ யறைகுதி யறிய வென்றான்.

(எ-து.) தாவப்பட்டகுதிரையுள்ளமட்டும்வையாளியுண்டாயிருப்பதுபோலத் தீயராகிய இப்பாவிகளுக்கு உக்கிரமான இந்த வேதனையென்றைக்குப் போகும்? சொல்லுதற்கரிய முத்திமோக்ஷமென்றைக்குக்கிடைக்கும்? சிவந்த ஆம்பலுக்குப்பகைவனாகியசூரியன்புத்திரனேசொல்லும் நானறியவேண்டுமென்றார். ()

ஐயனெங் கோமான் சொன்ன வருண்மொழிசெவியி னேற்றுக்
கையினை மலர்கு வித்துக் கலைபிரி யாதொ டுக்கி
மெய்யனே கருணைக் குன்றே விமலமா தவனே கேளென்
றெய்யென விருள்சித் தோங்கு முத்தமன் பெற்றான் கூறும்.

(எ-து.) ஐயனாகிய எமது கர்த்தன்சொன்ன கிருபையுள்ள சொல்லைக்கேட்டு, கைகுவித்துகும்பிட்டுவஸ்திரங்கள்பறக்காமலொடுக்கிக்கொண்டு மெய்யுள்ளவனே? கருணைமலையே? பாவமில்லாத மகாதவத்தையுடையசானந்தமுநிவரே?கேளுமென்று பளீரென்றிருட்டுகளை நீக்கி ஓங்கியசூரியன்பெற்றநமன்சொல்லலுற்றான்.—எ-று. (௫௨)

வேறு.

விடந்தனி முதல்வன் களத்தைநீங் கிடினும்
விநாயகன் வதுவைசெய் திடினு
மடைந்த வேழ்கிழமை யன்றியோர் கிழமை

மிடம்படு மவனி சுமந்திடா தனந்த
னேகினுங் கடலெலாஞ் சுவறி
மிடைந்தபே ருலகங் கெடினுமிங் கிவர்க்கு
மேற்கதி யில்லையென் றனனால்.

(எ-து.) ஆலகாலவிஷமானது ஒப்பற்றபரமேஸ்வரன்கண்டத்தைவிட்டு நீங்கினாலும், விநாயகமூர்த்திதிருக்கல்லியாணஞ் செய்துகொண்டாலும், உண்டான ஏழுகிழமையல்லாமல்பின்னுமோர் கிழமைவந்தாலும், பர்வதங்களானதுகரைந்துபோனாலும் விரிவானபூமியைச் சுமந்திடாமலாதிசேஷன் போய்விட்டாலும் சமுத்திரங்களெல்லாம் வற்றிநெருங்கியபெரியலோகங்களழிந்து போனாலும் இங்கேயிருக்கிற இந்தப்பாவிகளுக்கு இதற்குமேற்பட்ட கதியில்லையென்றான்.—எ-று. (ருங)

என்றுகூற் றுரைத்த வாசகங் கேளா
யெம்பிரான் சிறுநகை கொண்டு
மன்றுளான் மனுவிங் கிருக்கமற் றிவர்தம்
வல்வினை தீர்ப்பதோ ரரிதோ
நின்றபல் கோடி பாதக வரைக்கு
நெடுஞ் சதகோடிய தன்றோ
வொன்றுநல் லறிவின் றிவண்கண்மற் றிதனை
யுரைக்கொணா தெனவுளத் தெண்ணி.

(எ-து.) இந்தப்படிஇயமதர்மராஜன் சொன்னதைக்கேட்டளவிலே சானந்தமுநிவர் குறுநகைகொண்டுசெபாநாயகருடைய பஞ்சாக்ஷரம்நம்மிடத்திலிருக்கப்பின்னையிவர்கள் வல்வினைத்தீர்க்கிறது ஒரு அருமையோ! பொருந்திநிற்கும்பலகோடிபாதகமலைகளுக்கு நெடிதான வச்சிராயுதமல்லவோ இந்த பஞ்சாக்ஷரம்! இதனை யிவ்விடத்திலே பொருந்திய நல்லறிவில்லை, ஆனபடியினாலே இங்கே சொல்லப்படாதென்று திருவுளத்தி லெண்ணிக்கொண்டு சொல்லுகிறார்.—எ-று. (ருச)

கூறறவெம் மிறைவன் றிருமுடியிடத்தோர்க்
குளிர்மல ரணிந்தவ னெளிதி
னூற்றலாற் கோடி குலத்தைவுத் தரிப்ப
னமலவெண் ணீறணிந் தவன்றன்
மேற்றொட ராது பவமென மறைநூல்

லேற்றவிச் செயல்சற் றில்லையோ யுரையா
யினியநூல் மொழிகள்பொய் யலவே.

(எ-து.) இயமதர்மனே ? நம்முடைய பரமேஸ்வரன்றிரு முடியிலேயொருமலர் தரித்தவனந்தப்பலத்தில்தனது தலைமுறையிலுள்ள கோடிவங்கிஷத்தாரையும் சொர்க்கலோகத்தி லேற்றி வுற்றரிப்பன் நிர்மலமான திருவெண்ணீறு தரித்தவன்மேலே பாவந்தொடராதென்று வேதநூல்சொல்லக்கேட்டோம்,இந்தப் பாதகரிடத்திலேஇப்படிப்பட்டசெயல்கள்சற்றுகிலுமில்லையோ சொல்லும்இனிமையான வேதவாக்கியங்கள் பொய்யல்லவே யென்றார் சானந்தமுநிவர்.—எ-று. (ருரு)

அரிக்குநான் முகனுக் கெய்தொணு வமலர்க்
கணிந்திட வெங்கணுங் கிளரு
மெருக்கினோர் மலரும் முள்ளியின் மலரு
மெழுந்தபச் சறுகுமான் டிலையோ
தரிக்கநீ றிலையோ விவர் தமக் கன்று
தரிக்கிலித் துயரமேன்வருமென்
றுரைத்தசா னந்த முநிவனை நோக்கி
யொடுங்கிநின் றியம்புவ னடுவன்.

(எ-து.) விஷ்ணுவுக்கும் பிரமனுக்கும் காணக்கிடையாத பரமேஸ்வரனுக்குத்தரிக்க எவ்விடங்களிலு முண்டாகப்பட்ட ஒருஎருக்கமலர்,முள்ளிக்கத்திரிமலர்,பச்சையறுகுவேணுமென்றால் அவ்விடத்திலில்லையோ ! தரிக்கிறதற்கு நீறில்லையோ,இவர்களன்றைக்குதரித்தால் இந்ததுயரமேனிவர்களுக்குவருமென்று இப்படிசொல்லும் சானந்தமுநிவரைப்பார்த்து ஒடுங்கி நின்றுக் கொண்டு சொல்லுகிறார் இயமதர்மராஜன்.—எ-று. (ருசு)

நரகவாதைச்சருக்கம்முற்றிற்று.

ஆ பாயிரம் உட்பட சருக்கம்ரு-க்கு

திருவிருத்தம்-ருருசு.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

ஆறுவது

சிவமகிமைச்சருக்கம்.

மறைமொழி யதனைப் பொய்யெனப் படுமோ
மதித்தொரு விலைமக டனக்கு
நறுமல ரெடுத்து வருகையில் விழுந்த
நன்மலர் தனைச்சிவ னுக்கென்
றறிவிலா துரைத்த வேதியன் கதியி
னடைந்திட வில்லையோ வையக்
குறைவிலித் தகைய கதைகள்பற் பலயான்
கூறிடின் முடியுமோ முடியா.

(எ-து.) வேதவாக்கியத்தைப் பொய்யென்று சொல்லப்படுமோ! ஒரு தேவதாசிக்கு மணமுள்ள மலரெடுத்துவருகையில் கீழேவிழுந்த பூவைச் சிவனுக்கேயாகுமென்று அறிவில்லாமற் சொன்ன பிராமணன் கதிபெறவில்லையோ! ஐயா? சானந்தமுனிவரே? இப்படிப்பட்டகதைகள் சொல்லவேணுமென்றால்சொல்லிமுடியுமோ முடியாதென்றுனியமதர்மன்.—எ-று. (க)

திரையுடைக் கடல்சூழ் புவிமகட் கணியாய்ச்
சிறந்தகாம் பீலிமா நகரில்
வரகுணன் றரும வாரிதி புரையில்
வாய்மையன் றவநெறி விலகாப்
பெருமையன் புனித னறுதொழின் மறவாப்

விரகின னெச்ச தத்தனென் றொருவன்
மேதினி புகழவாழ்ந் தனனால்.

(எ-து.) சமுத்திரஞ்சூழ்ந்தபூமாதேவிக்கு ஆபரணம்போல சிறந்த காம்பிலிமாநகரத்திலே எச்சதத்தனென்றொரு பிராமணனானவன் சிறந்தகுணமும், அறத்திற் கடல்போலும், குற்றமற்ற மெய்வார்த்தையும், தவநெறிதவறாதபெருமையும், பரிசுத்தமும், சட்கருமங்களையும் மறவாமல்செய்து, சிவனையேதுதிக்குநியமமுமுள்ளவனாய் பூமண்டலம் புகழும்படிக்கு வாழ்ந்தான்.—எ-று.

கண்ணுதற் கினியா னன்னவ னிடத்தே
கரும்பினிற் பிறந்தபூ வெனவும்
புண்ணிய சலத்திற் பேனமுற் பவித்த
தெனவுநீள் பொருதிரை சுருட்டுந்
தண்ணிரை யமுத வேலையிற் றோன்றுந்
தனிவிட மெனவுநன் கிலியாய்
உண்ணிரை கொடுமை பலபல வுளனா
யுதித்தனன் குணநிதி யென்போன்.

(எ-து.) சிவனுக்கன்பனானஅந்தஎச்சதத்தனிடத்தே கரும்பினிற்பிறந்த பூப்போலும், புண்ணியதீர்த்தத்திலே பாச்சியுண்டானதுபோலும், திருப்பாற்கடலிலே உண்டான கொடிய ஆலகாலவிஷம்போலும்பலபலகொடுமைகள்நிறைந்தகுணநிதியென்றொரு பிள்ளைபிறந்தான்.—எ-று. (௩)

நித்திய கருமம் விதிமுறை புரியான்
நெறிமுறை யொன்றையு மறியான்
உத்தம மறைகள் படித்திடா னறிஞ
ருற்றுழிச் சென்றிடா னினிய
சத்திய முறையான் றன்னையொப் பவர்க
டம்மிடத் தனுதின மணுகி
மித்திய வுடம்பை மெய்யெனக் கருதி
விரகிலி யாயொழு கினனால்.

(எ-து.) அந்தகுணநிதியென்பவன் நித்தியகருமமானசந்தியாவந்தனம், காயத்திரிமுறைப்படி செய்யான்; நீதிமுறைமைகளொன்றையுமறியான்; உத்தமமானவேதங்களைப்படியான்; பெரி

னைப்போலொத்த துஷ்டர், மூர்க்கர், காமிகளுமானஇவர்களிடத்திலே சினேகித்து பொய்யுடம்பைச் சதமாகவெண்ணி நியமம் நிஷ்டையில்லாதவனாய் திரிந்தான்.—எ-று. (௪)

அன்னையைத் தனது மொழிவசப் படுத்தி
யகத்திடைப் பொருளெலாங் கொடுபோய்த்
தன்னையொப் பவர்க்கு முலைவிலைப் பகருந்
தத்தைமென் மொழிமடந் தையர்க்கு
முன்னருங் கவரு டுதல்சிறி தேனு
மொழிந்திடாப் புல்லியர் தமக்கு
மன்னிரைக் கொடிய மனமுடைப் பதக
னளித்தளித் தேதமே புரிந்தான்.

(எ-து.) தாயாரைதன்வசப்படுத்திக்கொண்டுவீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் கொண்டுபோய்த் தன்னைப்போலொத்த பேர்களுக்கும், கிள்ளைபோலுமினிய மொழியையுடைய விலைமாதர்களுக்கும், சற்றேனுமொழிவில்லாது சூதாடும் அற்பர்களுக்கும் அந்தப்பொல்லாதகுணநிதியென்பவன்கொடுத்துக் கொடுத்துப் பாதகமே செய்து வந்தான்.—எ-று. (௫)

புல்லியல் புதல்வன் செய்வினைப் பெற்றேன்
புலப்பட வறிந்திவன் மகனே
கொல்லவே வந்த தெவ்வென வுளத்திற்
குறித்தவன் மனைவியை நோக்கி
மெல்லியாய் கொடிய மகன்றனக் கொடுநல்
வீட்டினைக் கெடுத்தனை யணிகள்
சொல்லரு நிதியந் தூசுபோ யினவிற்
றாய்மையு மகன்றது நின்னால்.

(எ-து.) இப்படிஹீனமுள்ள நடத்தையையுடைய பிள்ளையைதகப்பனானவன்புலப்படவறிந்துஇவன்பிள்ளையோ!நம்மைக் கொல்லவந்த சத்துருவோ! என்று மனதிலெண்ணி, எச்சதத்தன் தன்பெண்சாதியைப்பார்த்து பெண்ணே? பாவியான மகனைக்கொண்டு நல்ல வீட்டைக்கெடுத்தாய்! நகைகள், அரிதான பணம், வஸ்திரமுதலியனவும் இல்லறசுற்றமும் போயிற்று உன்னால்.—எ-று. (௬)

என்னிடை யிருந்திப் படிசெய்வ தழகோ

வன்னடை யரக்கி நன்னெறி தவரு
மைந்தனை மனைவியை நோக்கிற்
புன்னர கணுகு மிச்செய லறிந்தாற்
புதரெனை யிகழுவ நிவண்விட்
டன்னையு மகனு மேகுமி னெனவு
மன்னைதாய் மனையினி லடைந்தாள்.

(எ-து.)என்னிடத்தே யிருந்துகொண்டு இப்படிசெய்வது னக்கழகோ ! பாவி ! நீயும் பெண்ணோ ! பொல்லாத அரக்கியல் லவோ! நல்லநெறிதப்பினபிள்ளையையும்பெண்சாதியையும் கண் டால் நரகம்வருமே! இந்த நடத்தையைப்பெரியோர்களறிந்தால் என்னையிகழ்வார்கள்ஆனபடியினால்இந்தவீட்டைவிட்டுத்தாயும் பிள்ளையும் போங்களென்று பிராமணன்சொல்லத் தாயானவள் தான்பிறந்த வீடுபோய்ச்சேர்ந்தாள்.—எ-று. (எ)

இவன்குண நிதியோ துர்க்குணநிதியின்
றியாவரு மிகழ்தலா லேங்கிச்
சவந்தனி நடந்த தெனவுயர் நகரந்
தனையகன் றிருகண் ணீரொழுக
உவந்தசுற் றமுமே பதரெனவொழித்தா
ரியானுமோர் விஞ்சையு மறியே
னவமதா யிருந்தேன் காசுமொன் றிலையென்
றூகுலத் தொடுமிக நடந்தான்.

(எ-து.) அதற்குமேல்இவன்குணநிதியோ!அல்லதுர்க்குண நிதியென்று எல்லாருமிகழ்ந்து விட்டபடியினாலே அவன் ஏங்கி ஒரு சவமானது தனியேநடந்ததுபோலே அந்தவுயர்ந்தகாம்பீலி மாநகரத்தைவிட்டுநீங்கி இரண்டுகண்ணிலுந் தண்ணீரொழுகும் படி யழுதுகொண்டு உற்றார், உறவின்முறையார் பதரென்றென் னைத் தள்ளிவிட்டார்கள். ஒருவித்தையுமறியாது அவலமாயிருந் தேன் கையிலொரு காசாகிலுமில்லையேயென்றிப்படிவிசாரத்து டன் நடந்தான்.—எ-று. (அ)

மிதித்திடு பணையும் பிடித்திடு பணையும்
விடுத்தவ னாகினே னந்தோ
கொதித்தெழு பசிக்கோ தனமது கிடைக்கக்

பதிக்குளே யழகாமொரு பதிக் கருகே
பதந்தடு மாறமெல் லெனப்போய்
இதழ்படத் தழைத்த தொருதரு நிழலி
லிருந்தன னிவைபல நினைந்தே.

(எ-து.) மிதித்தகொம்பும் விட்டுப்பிடித்தகொம்பும்விட்ட வனாகினேனே! ஐயோ! கொதித்தெழுந்தபசிக்கு சோறுஎந்தவி தத்திலே கிடைக்குமென்று மனதுகலங்கி அதிவருத்தமாய் செழிப்புள்ள ஒருகிராமத்தினருகே கால் தடுமாறினவனாய் மெல்லெனப்போய் ஒரு மரத்தினிழலிலேயிருந்துஇப்படிபலவிதமாக நினைக்கிறான்.—எ-று. (கூ)

பொற்கலத் திருத்தி யனையிடு சாலிப்
புழுக்கலும் பருப்புநன் னெய்யும்
நற்கறி வகையும் மப்பள முதலாய்
நறியசிற் றுண்டியுந் தயிரும்
சற்கரை கலந்த பாலுமுக் கனியும்
தனித்தனிக் கருதிவா யசைகொண்
டெற்கினி வருமோ விதிசெய லிதுவென்
றெண்ணியாங் கிருந்திடு மளவில்.

(எ-து.) பொற்கிண்ணியைவைத்து தன் தாயானவள் பரிமாறுகிற சாதமும், பருப்பும்,புத்துருக்குநெய்யும்,நல்லகறிவகைகளும் அப்பளமுதலான பலகாரமும்,தயிரும், சருக்கரைகலந்த பாலும், மாம்பழம், பெலாப்பழம்,வாழைப்பழம்,தனித்தனியே சாப்பிட்டதைநினைத்துவாயூரி எனக்கினியகப்படுமோவென்றும் பிரமன்லபி இப்படியோவென்று எண்ணிக்கொண்டு அவ்விடத்திலே யிருக்குமளவில்.—எ-று. (கo)

வேறு.

தந்தை யெள்ளப் படுமத் தனையனை
வந்து தொட்டதன் புன்மையை மாற்றவே
முந்து மாதவர் மூழ்குதற் கேகல்போல்
சந்த வேலை யடைந்தனன் பானுவே.

(எ-து.) தகப்பனாலிகழ்ந்துவிட்ட இந்தப் பிள்ளையைசூரியனானவன் தன் கிரணத்தினால்வந்து தொட்டு அவன் பாவங்களை யொழிக்கவேண்டிச்சூரியன்ஸ்தானத்துக்குப்போகிறது போலே மேற்கமுக்கிரக்கிலே போயடைந்தான்.—எ-று. (கக)

துன்று கின்ற துயிலெனுந் தெவ்வினை
வென்று கண்கள் விழுத்திருந் தோருழைக்
கன்று தாவுங் கரனருள் பெற்றுவாழ்
அன்று நல்ல சிவநிசி யானதால்.

(எ-து.) நெருங்கிவருத்தும்நித்திரையென்னுஞ்சத்துருவை வென்று கண்விழித்திருந்து ஒரு மான்கன்றைக்கரத்திற்றாங்கிய பரமசிவனருளைப் பெற்றுவாழும் நல்ல சிவராத்திரியானது அன்றைக்குவந்தது.—எ-று. (கஉ)

ஓங் கருக்க னளிக்கு மொளியெலாம்
வாங்கி மேற்கொடு வன்னி செழும்புகை
யாங்கு லாவநின் றாலென வந்திதா
னீங்கி யல்லொடு மேவி யெழுந்ததே.

(எ-து.) ஓங்கிய சூரியனது ஒளியெல்லாம் மேற்கொண்டு நெருப்பானது புகையுலாவமேற்றிசையிலேநின்றதுபோலேஅந்திச் செம்மானந்தோன்றியது நீங்கிஇருளுண்டாகியது.—எ-று.

நம்பனைத் தொழு வார்தமை நாடவே
அம்பரத் திரு மங்கைதன் னங்கமேற்
பம்பு கண்கள் படைத்துநின் றென்னநீ
டும்பர் தன்னி லுடுக்கண் மலிந்தவே.

(எ-து.) சிவராத்திரியிலே பரமசிவனைத் தரிசனம்பண்ணுகிறபேர்களைப் பார்க்கவேண்டி ஆகாசவாணிதன்னுடம்பின்மேற் கண்கள் படைத்துநின்றதுபோல ஆகாயத்திலே நக்ஷத்திரமுண்டாகியது.—எ-று. (கச)

எண்ட ருஞ்சிவ ராத்திரி யென்றுபேர்
கொண்ட சாமிதன் கோலமு டிக்கணி
அண்டர் சாற்று மணிமல ரென்னவிண்
மண்டு தாரகை வானின் மலிந்தவே.

(எ-து.) சிவராத்திரியென்கிற சுவாமியினுடைய முடியினிடத்திலே தேவர்கள்சாத்திய புஷ்பங்கள்போல நக்ஷத்திரக்கூட்டங்களாகாசத்திலே மலிந்துதோன்றியது.—எ-று. (கரு)

திங்க ளெல்லைச் சிவனிசி வேளையி
லுங்கு நீங்குத லோரறி வன்றெனு
வங்கி பல்லுருக் கொண்டுநின் றாடல்போ
லெங்குநல் லொளிப் பேரிலவிண்ணி

(எ-து.) சந்திரனுஞ் சூரியனும் சிவராத்திரிவேளையிலேயிங் கேயில்லாமல் நீங்கிப்போனது புத்தியில்லாதகாரியமென்று அக் கினியானது பலரூபங்கொண்டு நின்றுகொண் டாடுகிறதுபோல வெங்கும் தீபங்கள் விளங்கியது.—எ-று. (கசு)

வாவி யென்னு மடந்தை சிவநிசித்
தேவை நோக்கித் தொழுதருள் செய்கையோற்
காவி யெங்கு மலர்ந்தன காவொடு
மேவு கஞ்சங் குவிந்தன மென்மையால்.

(எ-து.) பூந்தடாகமென்னும் பெண்ணானவள், சிவராத்திரி யாகியதெய்வததைக் கண்ணாரத்தரிசித்துக் கையாரக்கும்பிட்ட துபோலத்தடாகத்திலிருக்கப்பட்ட ஆம்பல்பூக்களெல்லாம் மலர் ந்தன, தாமரைப்புஷ்பங்களெல்லாம்குவிந்தன.—எ-று. (கஎ)

இன்ன தன்மைச் சிவநிசி யெய்தலு
மன்ன பாவி யரும்பசி நோயினால்
தன் னுடம்பு தளர்ந்துப தந்தனை
யுன்னியேகடி தூர்புகுந்தானரோ.

(எ-து.) இப்படிப்பட்ட தன்மையுள்ள சிவராத்திரிவரவும் அந்தப்பாவியானகுணநிதி பசியுபாதையினாலேதன்னுடம்பு தள் ளாடி அன்னத்தின்பேரில் நினைப்புண்டாகியந்தகிராமத்திற்குள் ளேபுகுந்தான்.—எ-று. (கஅ)

ஐய னான வமலனுக் கற்பிதஞ்
செய்ய வேண்டுமென் றெண்ணிச் செழும்பதம்
பெய்த பொற்கலங் கொண்டுபி றங்குமோர்
தெய்வ வேதியன் கோவிலிற் சென்றனன்.

(எ-து.)ஐயனாகியபரமசிவனுக்குநிவேதனம்பண்ணவேண்டி ஓதனம் அமைத்த பொற்பாத்திரத்தையெடுத்துக்கொண்டு ஒரு தெய்வப்பிராமணன் கோவிலுக்குள்ளேபோனான்.—எ-று.(கசு)

நட்பு றுவரு நன்மணத் தாலதைப்
புட்ப மஞ்சரிச் சோறெனப் புந்திகொண்
டுட் புகுந்து கவர்ந்திட வுன்னியே
பெட் பினோடு பெயர்ந்தங் கிருந்தனன்.

(எ-து.) நட்புடனேவரப்பட்டஅந்தத்தளிகைச்சாதத்தின் நல்லமணத்தினாலே அதுபுஷ்பமஞ்சரிச்சோறென்றுநினைவுகொ ண்டு கூடவே சிவாலயத்துக்குள்ளேபுகுந்து அந்தச்சாதத்தைத்

திருடித்தின்னவேண்டுமெனும்ஆசையுடனேகோவிலுக்குள்ளே புகுந்திருந்தான்.—எ-று. (உ0)

ஈச னன்முடிக் கெண்ணெய்நன் னீர்கனி
யாசி லையமு தாதிநின் றாடினர்
வாச மென்மல ராதிய ணங்கொடு
நேச மோடரு ச்சித்தனர் நீர்மையால்.

(எ-து.) அப்படியிருக்க, அங்குள்ளபேர்கள் பரமசிவனுடையதிருமுடிக்குநல்லெண்ணெய், சுத்தஜலம், இளநீர், எலுமிச்சம், பழச்சாறும், பால், பழம், தேன், சருக்கரை, நெய்யாகியபஞ்சாமிர்தமுதலானஅபிஷேகங்களைச்செய்துவாசனையுள்ளபிருதுவான புஷ்பங்கள், வில்வங்களைக்கொண்டு பயபத்தியுடனேஅர்ச்சனைபண்ணினர்கள்.—எ-று. (உக)

அற்றமின்னுய ராகம நூல்விதி
கற்ற தூயர் கமழ்நறுந் தூபமும்
பெற்ற சோதியுந் தீபமும் பேரொலி
யுற்ற கண்டை யொடுபணி மாறினர்.

(எ-து.) பின்னும் உயர்ந்த ஆகமசாஸ்திரவிதியையோர்ந்த சைவவேதியர்கள் பரமசிவனுக்குபரிமளதூபமும்கர்ப்பூர தீபங்களும் கண்டனதத்துடன் உபசரித்தார்கள்.—எ-று. (உஉ)

என்னை யாளுடை யீசனுக் கெண்ணரும்
அன்ன மாதிய வற்பிதஞ் செய்தனர்
துன்னு மன்பர் துதித்து வணங்கினர்
முன்னர் பஞ்ச வியங்கள் முழங்கவே.

(எ-து.) என்னையாண்டருளிய பரமசிவனுக்கு அன்னமுதலானதை நிவேதனஞ் செய்தனர்கள், அன்பர்கள், பத்தியுடனே சிவனைத்தோத்திரஞ்செய்து வணங்கினர்கள், சங்கிதிக்குமுன்னே பஞ்சவாத்தியமும் முழங்கினர்கள்.—எ-று. (உங)

மெல்ல வாலவட் டம்பணி வீசினர்
எல்லு லாவு கவரி யிரட்டினர்
நல்ல தர்ப்பணம் நாட்டியே காட்டினர்
தொல்லை சீர்முடித் தூயவன் முன்னரே.

(எ-து.) பின்னும் கங்கையைத்தரித்த சடையையுடைய பரமசிவனுக்குமுன்னேஆலவட்டம்பணிமாறினர்கள், வெண்சாமரைவீசினர்கள், நல்லகண்ணாடி காட்டினர்கள்.—எ-று. (உச)

இறந் திடாத விறையவன் கோயிலைச்
சிறந்த நல்வலஞ் செய்குன ரோசிலர்
நிறைந்த வீசனை நெஞ்சிடை வைத்தவ
ருறைந்த பாவனை செய்குன ரோசிலர்.

(எ-து.) பிறப்பிறப்பில்லாத பரமேஸ்வரனுடைய கோவிலைச் சிலபேர்கள்வலமாகப்பிரதக்ஷணம்வருவார்கள்,சிலர்பரமேஸ்வரனை மனதினிடமாகவைத்து தியானம் பண்ணுவார்கள். ()

போத நல்கு புராதன சங்கர
நாத கீத நடேச பரம்பர
சீத நீர்முடிச் சின்மய நான்மறை
யோது நம்பவென் றோதின ரோசிலர்.

(எ-து.) ஞானந்தரப்பட்ட புராதனா!சங்கரா! நடேசாபரம்பரனே! கங்காதரனே!சின்மயரூபனே! சதுர்வேதமுந்துதிக்கும் சிவனே! என்றுசொல்லிச் சிலபேர்கள் துதித்தார்கள்.—எ-று.

தேசு பெற்றருள் சித்துரு வாகுநம்
மீச னாலயத் தங்கங் கிருந்துவெம்
பாச நீக்கு மவன்கதை பற்பலப்
பேசினர் சிலர் பெட்படைந் தார்சிலர்.

(எ-து.) பிரகாசமுள்ள ஞானசொரூபனான நமதுபரமேஸ்வரன் கோவிலுக்குள்ளே அங்கங்கே யிருந்துகொண்டு சிலபேர்கள் சிவபுராணங்களைப் படித்தார்கள், அதைக்கேட்டு சிலபேர் ஆநந்தமடைந்தார்கள்.—எ-று. (உஎ)

நீற்றி னுண்கதை நின்மலன் கண்மணிப்
பேற்றின் மாக்கதை பேசரு மீசன்றன்
தேற்ற மாகிய மந்திரத் தினைகதை
யூற்ற மோடு புகன்றன ரோசிலர்.

(எ-து.) பின்னையும்விபூதிமான்மியம், உருத்திராக்ஷமான்மியம் உச்சரித்தவர் பாவத்தை நீக்குமெனத்தெளிவாக விளங்கிய பஞ்சாக்ஷர மான்மியமுமாகிய இவைகளைச்சிலபேர் உற்சாகத்துடனே அந்த ஆலயத்திற்படித்துச்சொன்னார்கள்.—எ-று.(உஅ)

பாடினர் சிலர் பாணியைக் கூப்பிநின்
றாடினர் சில ரன்பிற் பரவசங்
கூடினர் சிலர் கூறரு ளீசனை
[illegible]

(எ-து.) சிலபேர் பாடினார்கள், சிலபேர் சிரசின்மேல் கையைக்குவித்துக்கொண்டு நின்றார்கள், சிலபேர் அன்பிற் பரவசராயிருந்தார்கள் சிலபேர்கருணையுள்ளபரமசிவனைதரிசித்தார்கள், சிலபேரிதுவே நல்ல தென்றார்கள்.—எ-று. (உஅ)

ஜாம மூன்றினு மின்னன செய்துபின்
றோமில் கோயிலுட் டுன்னி நெருங்கினோர்
தாம யர்ந்து துயின்றனர் சாலவக்
காமி யன்னது கண்டெழுந் தானரோ.

(எ-து.)இந்தப்படியாகமூன்றுசாமம்வரையில்தோத்திரமுதலியனவும்நடந்தேறினபின்புசிவாலயத்துக் குள்ளேவந்துநெருங்கியிருந்த ஜனங்கள் அயர்ந்து கண்ணுறங்கினார்கள், அச்சமயம் அந்தக்கொடும்பாவிஅந்தஅன்னத்தைக்கவரும்சமயமிது வெனக்கண்டு எழுந்திருந்தான்.—எ-று. (ஙo)

வேறு.

எந்தைகருப்பமனையிடத்தி னேகிச்சிறிதேகதவுதிறந்
தந்தத்தளிகைகாணுமவிபவருமோர்தீபத்தை
முந்தவிரலாற்றூண்டிநறு மூரற்றளிகைதனைக்கண்டு
பந்தவினைகளகன்றிடுவோன் பற்றியெடுத்துவருங்காலை.

(எ-து.) பரமசிவனெழுந்தருளிய கர்ப்பகிரகத்திலேபோய் சற்றே கதவைத்திறந்து உள்ளேபுகுந்துபார்க்க, அந்தத்தளிகையைக் காணுதபடியினாலே அப்போது சுடர்மழுங்கி வரப்பட்ட தீபத்தைத் தன் விரலினாலேதூண்டி வெளிச்சமுண்டானதின் பிறகு தளிகையைக்கண்டுபந்தபாசமென்னும்வினைநீங்கப்போகிறவனதைதொட்டெடுத்துக்கொண்டுவருகின்றவேளையில்.எ-று.

உறங்குமவரை மிதித்துமிதித் தோடுங்கால்கள் தடுமாறிச்
சிறந்தகோயிற்றனைநீங்கிச் செல்லு மவனையெழுந்தெவரு
மறங்கொள்கரவன்போகின்றான்பிடிமின்பிடிமின்வதைமினென
வறைந்துதுறத்துங்காலொருவ னம்பரலெய்யவிழுந்தனனால்.

(எ-து.)அப்படிதளிகையையெடுத்துக்கொண்டுவோடிவருகையில், பயத்தினால் கால்கள் தடுமாறி நித்திரைசெய்யு மவர்களை மிதித்து மிதித்துக்கொண்டு கோவிலைவிட்டுநீங்கிப்போகிறவனை எல்லாரும் எழுந்து அதோதிருடன்போகிறான் பிடியுங்கள்பிடியுங்கள்கொல்லுங்கள்என்றுசொல்லித்துறத்திவருகிறவேளையில் [illegible]

விழுந்துகுருதிபொங்கவுயிர் விடுத்தபதகன்றனைச்சினத்தீக்
கொடுந்துபடரென்றூதர்மறங் கொண்டுபிடித்துவருங்காலை
யெழுந்துவந்துசிவதூத ரென்றூதுவர்கைவிடுவித்தாங்
கொழிந்தபவத்தீயவனுக்கீ தொல்லாதென்றுகொடுசென்றார்.

(எ-து.) கீழேவிழுந்து இரத்தம்வழிந்தோடச் சீவன்விட்ட அந்தப்பார்ப்பானைக்கோபாக்கினிமூண்ட எனது தூதர்கள்வர்ம ங்கொண்டு அவனைப்பிடித்துவருகிறவேளையில், கைலாசத்திலிரு ந்துசிவதூதர்கள்வந்து என்றூதர்கையிலே யகப்பட்டவனை அங் கேவிடுவித்துஇவனுக்குஇந்தஇயமவாதனை தகாதென்றுகைலாய த்திற்குக் கொண்டுபோனார்கள்.—எ-று. (ஙங)

சென்றகணங்கள்பின்போகிச் செறிந்தவென்றூதுவர்தாழ்ந்து
நின்றுகேண்மின்பெரியோர்கா ணிமலமுடைத்தாமக்கமணி [ன்
யொன்றுமணிந்தோனலனுதலி னொளிவெண்ணீறிட்டோனல்ல
மன்றுளாடிமுடியினொரு மலர்பேர்கேட்டவனல்லன்.

(எ-து.) அவனைக்கொண்டுபோகப்பட்ட சிவதூதர்கள் பின்எ ன்றூதர்கள்தொடர்ந்துபோய்கும்பிட்டுஓகோ,பெரியோர்களே? சற்றேநின்றுகேளுங்கள்,இந்தப்பார்ப்பான் நிர்மலமானஉருத்தி ராக்ஷமணியொன்றேனும் பூண்டவனல்லன், நெற்றியிலே விபூதி தரித்தவனல்லன் பரமசிவத்தின் சிரசிலே சாத்தப்பட்ட பூவி லொருபூவின்பேராயினுங் கேட்டவனல்லன்.—எ-று. (ஙச)

துட்டன்கொடியன்துராசாரி தூர்த்தனிவனைநீவிரெமைக்
கிட்டிக்கவர்ந்துகொடுசெலுங் கேண்மையென்னவிதுதகுமோ
மட்டில்யாமோசிவதூதர் நமக்கிங்கெதிரார்மறிக்கவெனத்
திட்டிக்காணவந்திநெறி செல்லாநின்றீரறிவுள்ளீர்.

(எ-து.) இந்தப்பார்ப்பானனவன் மஹாதுஷ்டன், பொல் லாததுராசாரமுள்ளவன் தூர்த்தநடத்தையுள்ளவன், இவனைநீ ங்கள்எங்கள்கிட்டவந்து விடுவித்துக்கொண்டுபோகிறது என்ன ஞாயம்!நாமோ சிவதூதர்கள்,நமக்கெதிராய்யார்மறிப்பார்களெ ன்றுஅநியாயமாய்கண்காண அறிவுள்ளநீங்களிப்படிஅநியாயவழி யில்செல்லுவது தகுமோவென்றுபின்னையுஞ்சொல்லுகிறார்கள்.

வேலைபரந்துகரைகடக்கில் வேந்தராணோர்கொடுமைசெயிற்
சீலமுடையோர்பவம்புரியிற் சென்றுநின்றுதடுப்பவரார்
ஆலமனையவிவன்றனைநீ ரழைத்தங்கேகவழக்கேதென்
றேலவிடுமென்றூதர்தமை நோக்கித்கணங்களுரைசெய்வார்.

(எ-து.) சமுத்திரம்பெருகிக்கரைகடந்தாலும், இராஜாக்கள்கொடுமைசெய்தாலும்,ஒழுக்கமுள்ளோர்கள் பாவஞ்செய்தாலும்எதிர்நின்றுதடுக்கிறவர்களார்! விஷம்போலப்பொல்லாத பாதகனை இவனை நீங்கள் கைலாயத்துக்கு அழைத்துப்போக ஞாயமேதென்றுஓலமிடுகிறனென்றூதர்களைப்பார்த்துச்சிவதூதர்கள் சொல்லுகிறார்கள்.—எ-று. (ஙகூ)

விரும்பும்பரமனிசிதன்னி லாரவன்னங்கிடையாமல்
இருந்ததேநன்னெறியாயிற் றெழுந்துதிருடநினைத்தேனும்
பொருந்துதுயிலைமறுத்தனன்மெய்ப் பூசைபண்ணுதவனேனுந்
திருந்துபூசைபணக்கண்டான் றீமையுளனோவிவனம்மா.

(எ-து.) மேலோர்களால் விரும்பப்பட்ட சிவராத்திரித்தினத்தில் இவன்பொசிக்க அன்னங்கிடையாமலிருந்ததே நல்லவுபாசனையாயிற்று, அன்னத்தைத்திருடநினைத்தாயினும்,சிவராத்திரியில்நித்திரைவிட்டவனாயினன்;சிவனைப் பூசைபண்ணுதவனானும்சிவனுக்குப் பூசைவரிசைப்படிபண்ணுகிறதைக்கண்டானாபடியினாலே, இவன் பாவமுள்ளவனோஎன்று சொல்லிப்பின்னையுஞ்சொல்லுகிறார்கள் சிவதூதர்கள்.—எ-று. (ஙஎ)

அன்றியிறைமுன்னத்தளிகை காணக்கருதியானுங்
குன்றியிருந்தசுடர்தூண்டிக் கொடுத்தான்விதிமுற்றியதேனு
மின்றிசிவசன்னிதிமுன்ன ரிறந்தானிதினுந்தவமுண்டோ
நின்றியாங்கடோழத்தக்க நீர்மையுடையனிவனுமால்.

(எ-து.) இதுவல்லாமலுஞ்சிவனுக்குமுன்னாகஅன்னந்தெரியநினைத்தாகிலும் சுடர்மழுங்கியிருந்தவிளக்கைவிரலினாலே தூண்டினான், விதிமுடிந்துபோனாலும் சிவராத்திரியாகிய இன்றைக்கு சிவசன்னிதிக்குமுன்னே யிறந்தான், இதுகளைவிடவேறேதவமுண்டோ!சிவதூதர்களாகப்பட்ட நாங்களும் நின்று சேவிக்கப்பட்ட குணத்தையுள்ளவனிவனென்று பின்னுஞ் சொல்லுகிறார்கள்.—எ-று. (ஙஅ)

எந்தைக்கினியானிவன்றானை யிறைஞ்சினுங்கள்வினைதீர்ந்து
வந்தவழியேபோமினெனக் கூறிக்கனகமணிமானத்
தந்தமறையோன்றனையேற்றி யனந்தமானசிறப்பினொடு
மேந்துபவமில்சிவ தூதர் [illegible]

(எ-து.)பரமசிவனுக்குஇனிமையானவனிவன்! இயமதூதர்களே? இவனுடைய பாதத்தைவணங்கிஉங்கள்வினைதீர்ந்துவந்ததடமே போங்களென்று சிவதூதர்கள் சொல்லிப்பொன்னாலும் இரத்தினமணியாலும்செய்தவிமானத்திலே அந்தப்பிராமணனையேற்றிவைத்துக்கொண்டுஅனேகசிறப்புடனேசிவதூதர்கள் பரமேஸ்வரனிடத்திலே அந்தப் பிராமணனைக்கொண்டுபோய்விட்டார்கள்.—எ-று. (கசு)

இன்னுமுயரித்தகையகதை யெந்தைகேட்டியாவருக்கு
மன்னைநிகரோர்சிவபத்தன் கயிறற்றுறுமோரக்கமணி
தன்னைமுடிந்துகலைவண்ணான் கரத்திலளிப்பச்சலத்துறையின்
முன்னியேகிக்கலைதலையின் முடிந்தமணியையவிழ்த்தனனால்.

(எ-து.) இப்படி இயமதர்மராஜன் சானந்தமுநிவருக்கு இந்த கதையைச்சொல்லிப் பின்னையும்சொல்லுகிறான்.ஐயனே? கேளும் என்று எல்லாருக்குந்தாயையொத்தவொரு சிவபத்தன் கயிறற்றுத் தனியேயிருக்கும் ஒரு உருத்திராக்ஷமணிமுடிந்து இருந்தசீலையை வண்ணான்கையில் வெளுக்கக்கொடுத்தான், அதை அவன்வாங்கிப்பொய்ச்சலத்துறையிலே அந்தச்சீலையைவிரித்துப்பார்க்கையில் சீலையின் முந்தானையிலேமுடியிருக்கக்கண்டு அதை யவிழ்த்தான்.—எ-று. (சஂ)

அத்தன்மணியைக்கண்டனவே யறியகலையைமடித்ததன்மேல்
வைத்துநிகரிற்சிவபத்தன் துகிலும்வெளுத்தவ்வாசனத்தின்
சுத்தமணிதன்னையுமுடிந்து சென்னிமீதுசுற்றியொளிர்
முத்தமெனவேவெளுத்தகலை முற்றுஞ்சுமைகட்டியபின்னர்.

(எ-து.) உருத்திராக்ஷமணியைக் கண்டளவிலே சீலையை மடித்து அதன்மேலே யந்தஉருத்திராக்ஷமணியைவைத்துஅந்த சிவபத்தனது சீலையையும்வெளுத்து அந்தமுந்தானையிற்றானே அந்த மணியைமுடிந்து தன்றலையிலே அந்தச்சீலையை சுற்றிக்கொண்டுமுத்துப்போல்வெளுத்தமற்றசீலைகளையெல்லாஞ்சுமையாய்க்கட்டியபிறகு.—எ-று. (சஙு)

இனியமனைகைகொடுத்துமனை யேகென்றொருகூர்பரசுகொடு
தனிலேமுனிந்தமரமொன்றைத் தறிக்கும்போதுகாலதனில்
முனைகொள்பரசுவிழுந்திடவு மிறந்தானுயிரைத்தூதர்வெளவப்

(எ-து.) அந்த சீலைசுமையைப்பெண்சாதிகையிலேகொடுத்து நீ வீட்டுக்குப்போவென்று அனுப்பிவிட்டு, ஒரு கூரியகோடாலி யெடுத்துக்கொண்டு தானாய்க் காய்ந்துபோன வொரு மரத்தை வெட்டுகிறபோது அந்த வண்ணான்காலிலேஅந்தக்கோடாலிதவ றிப்படவு மிறந்துபோனான், அவனை இயமதூதர்கள் பாசத்தாற் கட்டிப்பிடித்தார்கள், அப்போ தவன்றலையில்உருத்திராக்ஷமுடி ந்த சீலையிருந்த புண்ணியத்தினாலே.—எ-று. (சஉ)

மெய்யரானசிவதூதர் விரைந்துவந்தென்றூதர்தமை
கையினாலேபுடைத்தவனைக் கவர்ந்துவிமானந்தனிலேற்றி
பொய்யிலாதபரமவறஞ் செய்தோர்க்கன்றிப்புகவொண்ணாத்
துய்யகைலைக்கிரிமீது தொலைவில்சிறப்போடிருத்தினரால்.

(எ-து.)மெய்மையுள்ளசிவதூதர்கள்சீக்கிரமாய்வந்து என் னுடையதூதர்களைக்கையினாலேயடித்து அந்த வண்ணானைமீட்டு க்கொண்டு விமானத்திலேற்றிப்பொய்யில்லாதமேலானதருமஞ் செய்தவர்களுக்கே யல்லாமல், மற்றபேர்கள் போகப்படாத கைலாசகிரிமேலே வொழிவில்லாத சிறப்புடனேவைத்தார்கள்.

அண்ணலின்னங்கேள்கதையொன் றறிவில்லாதவொருசதுர்த்தன்
வண்ணமதனம்புடற்றுதலால் மையல்பொருதோர்பார்ப்பினியை
நண்ணவேண்டிச்செலுமெல்லை நாகங்கடித்ததுகண்டு
மெண்ணமின்றியவள்மீது விழுந்து சாதுமெனச்செலுங்கால்.

(எ-து.) அண்ணலாகிய சானந்தமுநிவரே ? இன்னமொரு கதைகேளுமென்று இயமதருமன் சொல்லுகிறான்;அறிவில்லாத ஒரு சூத்திரனானவன்,மன்மதபாணத்தினாலேபொருக்கமாட்டா மல் ஒருபார்ப்பினியை யனுபவிக்கவேண்டிபோகிறபோது,வழி யில் ஒரு நாகங்கடிக்க அதைக்கண்டுமெண்ணமில்லாமல்அவள் மேல்விழுந்து சாவோமென்று போகிறவேளையில்.—எ-று. ()

ஆடைத்தலையின்முடித்திருந்த நீற்றைநுதலினகலத்தி
னீடத்தரித்துவழிபார்க்கு நேயமுடையமெல்லியல்பா
லோடிக்கடித்ததரவெனையென் றோதியிருகவணைத்தளவி
லாடற்பணியின்விடந்தலைமட் டேறமரித்தானவனம்மா.

(எ-து.) தன்முன்றானையிலே முடிந்திருந்த விபூதியைநெற் றியிலு மார்பிலும்நிறையப்பூசிக்கொண்டு இவன்வருவானென்று

கிற்சென்று என்னைப்பாம்பு கடித்ததென்றுசொல்லி அந்தசூத்தி
ரன் அவளைக்கெட்டியா யணைத்தவளவிலேபாம்பின்விஷம்தலை
மட்டுமேறிச் சூத்திரன் இறந்தான்.—எ-று. (சரு)

கடுநோவிழியமடவாளுங் காமவிடஞ்சென்னியிலேறி
யுடனேமரித்தாளவள்தனத்தி லுரத்திற்சாற்றுந்திருநீறு
படலாலிவர்கள்நீறுதரித் தவரென்றணுகப்பயந்தவராய்
விடமேயளையதூதுவர்வந் தென்முன்னின்றுவிளம்பினரால்.

(எ-து.) விஷம்போலொத்தகண்களையுடையபார்ப்பினியும் விஷங்கலந்த காமந் தலைமண்டைஏறி அவளுமுடனேசெத்தாள் அவள் ஸ்தன்னியத்திலேயும்மார்பிலேயும்பூசினவிபூதிபட்டிருந் தபடியினாலே இவர்களிருவரும்நீறுபூசினபேர்களென்று பிடிக்க வந்ததூதர்கள் கிட்டப்போகப்பயந்து என்முன்னேவந்துநின்று கொண்டு சொன்னார்கள்.—எ-று. (சசு)

விளம்புமெனதுதூதர்தமை விரைந்துநோக்கிப்பாவிகாள்
களங்கமில்லாத்திருநீறு யாவர்நுதலிற்கண்டாலுந்
துளங்குமக்கமணிதரித்தோ ரியாவரேனுந்தூரத்தே [ன்.
வளங்கொளவரைக்கரங்கூப்பி வணங்கிப்போகீரெனவறைந்தே

(எ-து.) அப்படிசொல்லியஎனதுதூதர்களைவிரைந்துப்பா ர்த்து அடாபாவிகளே? களங்கமில்லாததிருநீறுயார்நெற்றியிலே பூசியிருக்கக்கண்டாலும், உருத்திராக்ஷமணிதரித்த யாவராலு ம்தூரத்தே நீங்கள் நின்றுகொண்டு அவர்களைக்கைகுவித்துகும் பிட்டுவணங்கிப்போங்கள் என்று என்னுடைய தூதர்களுக்குப் புத்திசொன்னேன்.—எ-று. (சஎ)

அறையுமமையத்திருவரையு மமலன்றூதர்கைலைதனில்
குறைவிலாதசிறப்பினொடு கொடுபோய்வைத்தாரவ்விடத்தின்
மறவனொருவனோதிமமொன்றியைந்துசென்றவான்கதையொ
றிறைவபுனிதமுநிநாத கேட்டியடியேனியம்புகேன். [ன்

(எ-து.) இப்படி நான்சொல்லுகிற சமையத்திலே அந்தப் பார்ப்பினியையும் சூத்திரனையும் சிவதூதர்கள் கைலாயத்திலே சிறப்புடனே கொண்டுபோய் வைத்தார்கள்; அந்தக்கைலாயத்தி னிடத்திலே ஒரு வேடனும் ஒரு அன்னப்பட்சியும் இசைந்து போய்ச்சேர்ந்த கதையொன்று சானந்தமுனிவரே? கேளும் அடி யேன்சொல்லுகிறேனென்றுபின்னையுமியமதர்மராஜன்சொல்லு கிறான்.—எ-று. (சஅ)

வனத்திலுறும்வேட்டுவனொருவன் வலியவிடையிற்கச்சிறுக்கி
முனைக்கையம் புசிறுதூணி முதுகிற்றூக்கியிருகரத்தாற் [ச்
குனித்தசிலையொன்றேந்திவலி கொண்டதொடுதோல்பதத்திட்டு
சினத்தவிலங்குதனைத்தேடி வேட்டைக்காட்டிற்சென்றனனால்.

(எ-து.) வனத்திலே யிருக்கப்பட்ட ஒருவேடனானவன்இ
டையிலே கச்சையிறுக்கிஅம்புருத்தூணிமுதுகிற்றூக்கிஇரண்டு
கையாலும் வளைத்து நாணியேற்றின வில்லொன்றுகையிலேந்தி
வலியசெருப்புங் காலிலேமாட்டியுக்கிரமானமிருகங்களைத்தேடி
க்கொண்டுவேட்டையாடக்காட்டிலேசென்றான்.—எ-று. (சசு)

செறிந்தவனத்தினெவ்விடத்துந் தேடிவிலங்கைக்காணாது
மறிந்தவுளத்தனாகியொரு மான்கன்றேனும்புதறன்னி
லுறங்குஞ்சிறியமுயலேனுங் கண்டேனில்லையுறும்போதி
லறைந்தவாய்ச்சொல்யாதோமற் றறியேனென்றுமறியேனால்.

(எ-து.) நெருங்கிய வனமெங்குந்தேடி மிருகங்களைக்காணா
மல்மனோதுக்கமுள்ளவனாகி, ஒரு மான்குட்டியாகிலுஞ்செடியி
லேவுறங்குகிற சிறியமுசலாகிலுங்கண்டேனில்லையே! நான்வரு
கிறவேளையிலேசொன்ன சகுனமெப்படிப்பட்டதோ! பின்னே
யொன்றுமறியேன்! அறியேனென்றுவேடன்வியசனப்பட்டான்.

நெறியில்வலியான்வழிவிட்டு நின்றதாந்தைகளைக்கூடிற்
றுறுசீர்க்கருடன்றனைக்கண்டேன் காடையிடமாயோடியது
மறையோரிருவரெதிர்வந்தார் வாரந்தானுநல்லதென்றார்
கறையிறசகுனமெலாநன்றே கண்டசகுனம்பொய்யாமோ.

(எ-து.) வருகிறவழியிலே வலியான்குருவி வழிவிட்டது,
ஆந்தைகளைக்கூடியது, கருடன்தரிசனமுண்டாச்சுது, காடையி
டமாயோடியது, இரட்டைபிராமணர்கள்எதிர்வந்தார்கள், அவர்
களின்றுநல்லதினமென்றார்கள், இப்படிகுற்றமில்லாதசகுனமெ
ல்லாம் நன்மையாயிருந்ததே! இதுவெல்லாம்பொய்யாகுமா! எ
ன்றான்.—எ-று. (ருக)

அலகில்கொலைசெய்தான்விற்றா லன்றிச்சோறுகிடையாதிங்
கிலகுபொழுதுமாயிறறே யெடுத்தமிருகங்கண்டலதென்
குலநன்னாரிவரவொட்டாள் குருவியேனுமெய்திலனியான்
சலனமகல்வதெவ்வாறென் றெண்ணியிருந்து தளர்காலை.

(எ-து.) அளவில்லாத கொலைகள்பண்ணி மாம்சம்விற்றா
லொழியச் சோறுகிடையாதே! இங்கே

சுமந்துக்கொண்டுவருகிற மிருகங்கண்டாலொழிய நற்குலத்தவளாகியஎன்பெண்சாதிவீட்டுக்குவரவொட்டாளே! குருவியானாலும் அம்பினாலெய்ய வில்லையே! நான்சஞ்சலநீங்குவதெவ்வாறோ! என்று இப்படியெல்லாமெண்ணி வேடனானவனிருந்து மனந்தளருகிறவேளையில்.—எ-று. (ருஉ)

வானினிடையேதன்குடம்பைக் கெய்தவேண்டிவாயலகா
லானகமலப்பூவொன்று கவ்விவருமோரன்னத்தைக்
கானவேடனெய்தனனாலெய்தவளவேகண்பட்டுத்
தானமதனிலுயிரயர்ந்து தாளுந்தளர்ந்துவிழுந்ததால்.

(எ-து.) ஆகாசத்திலே தன்னிடகூட்டுக்குப் போகவேண்டிவாயாகிய மூக்கினாலொருதாமரைப்பூவைக்கவ்விக்கொண்டுபறந்துவருகிறஒரு அன்னபபட்சியைஇந்தக்கானவேடன் அம்பினாற் போட்டான், போட்டளவிலே அம்பு தானத்திலேபட்டுசிவன்றளர்ந்து தாளும்விலவிலத்து அந்தஅன்னம்விழுந்து.—எ-று. ()

அன்னமெடுத்துக்கொடுவந்த கமலப்பூவுமதனிடத்தே
மன்னுமொருநீர்த்திவலையுமவ் வனத்தார்சிவலிங்கப்பெருமான்
சென்னிமிசையேவீழ்ந்தனமா தேவனதுகண்டுளமகிழ்ந்து
முன்னிநெடியசிலைவேடன் முன்னர்விடைமேல்வந்தனனால்

(எ-து.) அன்னப்பட்சிவாயினாற் கவ்விக்கொண்டுவந்ததாமரைப்பூவும்,அந்தத் தாமரைப் பூவினிடததிலேபொருந்தியிருந்த ஒருதுளிதண்ணீரும் தவறிப்போய் அந்தவனத்திலேகோவிலெல்லாமழிந்துபோ யிருக்கப்பட்ட சிவலிங்கத்தின் முடிமேல்விழுந்தது ; அதனை மகாதேவரானபரமசிவன்கண்டுமனமகிழ்ந்துவேடனுக்கு முன்பதாக இரிஷபவாகனத்தின்மேல் வந்து காக்ஷி கொடுத்தார்.—எ-று. (ருச)

வந்துநின்றுபுனிதருநம் மணியாலயமுமுயர்மதிலு
முந்துசிகரகோபுரமு முனமண்டபமுஞ்சிதைந்துபோய்
இந்தவெளியில்வெயில்காய விருந்தோம்பன்னீருகமாக
வுந்துமன்பர்நமைப்பூசை செய்தாரில்லையுண்மையால்.

(எ-து.) அப்படி காக்ஷிகொடுத்த பரமசிவன்வந்து அடாவேடனே? நாமிருக்கிற நம்மிடகோயிலும், உயர்ந்தமதிலும்,

இந்த வெறுவெளியிலே வெயிலடிக்கப்பன்னிரண்டுயுகமா யிருந்தோம், இந்நாள்வரைக்கும் அன்புடனேநம்மைப்பூசைபண்ணினபேரில்லை.—எ-று. (ருரு)

உன்னால்நமக்கோர்நறும்போது மொருநீர்த்துளியுங்கிடைத்ததுகாண், மின்னார்கணையோயுனைமகிழ்ந்தோம்விருப்பமானதெத்தனையு, முன்னாவினிதுகேளெனவே முதல்வனறிவுகொடுத்தளவி, லென்னாயகனேயெனவேட னெழுந்துநடித்துவணங்கினனால்.

(எ-து.) அடாவேடா? நமக்கொருபூவும் ஒரு நீர்த்துளியும் உன்னாற்கிடைத்தது, பிரகாசமுள்ளவில்லையுடையவனே? நாம் சந்தோஷப்பட்டோம்! உனக்குவிருப்பமானவரம் எவ்விளவுண்டோ அவ்வளவும் நினைத்துக்கேளென்று பரமசிவ னறிவைக் கொடுத்தார், அப்போது வேடனானவன் எழுந்துதுள்ளித்தீர்க்கதெண்டம்பண்ணி.—எ-று. (ருசு)

அங்கம்புளகித்தானந்த மடைந்துசிரமேற்கரங்கூப்பிப்
பங்கமலத்தின்றடைநீங்கிப் பாய்ந்துகுதித்துக்கூத்தாடி
உங்குநிலத்திற்பணிந்துபணிந் தெழுந்துகண்ணாலுறநோக்கி
யெங்கள்பிரானையெதிர் நின்றுதுதித்தல்செய்தானிணையில்லான்.

(எ-து.) அந்தவேடன் சரீரம்பூரித்துஆனந்தமடைந்துதலைமேல் கையைக்குவித்துஆணவமலத்தின் மறைவுநீங்கிப்பாய்ந்துகுதித்து கூத்தாடி அங்கே நிலத்தில் தெண்டனாகப்பணிந்துபணிந்து தன் கண்ணாற்பொருந்தப் பரமசிவனைப்பார்த்து எதிராக நின்றுகொண்டு தோத்திரஞ்செய்தான் இணையில்லாதஅந்தவேடன்.—எ-று. (ருஎ)

வேறு.

வெறிமேவுகடுக்கையணி வேணிமகுடந்தனையும்
பிறியாதமலமகற்றும் பெற்றிகொணின்பதத்தினையும்
நெறியோடுபடைப்பவனும் நிலையாகப்புரப்பவனு
மறியார்களெனினெந்தா யறிபவர்மற்றியாவரே.

(எ-து.) வாசனைபொருந்தியகொன்றைமாலையணிந்தஉமது சடாமகுடத்தையும் சீவனைவிட்டுப் பிரியாத மலங்களையகற்றப்பட்ட குணமுடைய உமது பாதத்தையும், நெறியுடனே யுலகத்தைப்படைக்கப்பட்டபிரமதேவனும், நிலையாகவுலகத்தைஇரட்சிக்கப்பட்ட நாராயணமூர்த்தியும், அறியமாட்டார்க ளென்றால் எந்தையாகிய பரமசிவனே! உம்மையறிகின்றபேர்கள் பின்னை யாரென்றான் [illegible] (ருஅ)

செம்மைநலஞ்சிறிதின்றி சிறுபுலிபோற்கொலைசெய்துண்
டம்மையறியாதுழலு மெளியேனுக்கருள்செய்தாய்
இம்மைதனிற்செய்தநல மியாதுமிலையிலையென்தா
யும்மையிடை செய்தவ மியாதோமற்றுணரேனே.

(எ-து.) செம்மையானநன்னடக்கைச்சிறிதேனுமில்லாமல் சிறியபுலிபோல் சீவனைக்கொலைசெய்துதின்று இனிவருங்காரியந் தெரியாமலுழலுகிறஎழைக்குக்கிருபைசெய்தீர். யானோஇப்பிறப் பிற்செய்த நன்மையேதுமில்லை பூர்வஜென்மத்திற்பண்ணினதவ மென்னமோ வறியேன் ஐயனே.—எ-று. (ருகூ)

அரிதேடவயன்றேட அமரர் முநிவர்தேட
விரிவாயமறைதேடக் கிடையாதவிமலாநீ
பொருமூரிவிடையேறிப் பரிவோடுந்தமியேன்றன்
னிருபார்வைமுன்னின்று பென்னதவஞ்செய்தேனோ.

(எ-து.) சுவாமி! உம்மைபிரமன் விஷ்ணுமுதலிய தேவர் களும், முநிவர்களும், விஸ்காரமானவேதங்களும், தேடிக்கிடை யாத பரமேஸ்வரனே! நீரிப்போயுச்தசன்னுகப் பலமுடையவிட பத்தின்மேலேறிக்கொண்டுசந்தோஷத்துடனே அடியேனிரண்டு கண்களுங்காணத் தரிசனந்தந்து நின்றீர், நானென்னதவஞ்செய் தேனோ அறியேனென்றான்.—எ-று. (சுo)

வாரிதியைமந்தரத்தில் வாசுகியாற்கடைந்திடுநாள்
கோரமொடுசகமலற கொதித்துவரும்விடந்தன்னைச்
சேரமிசைந்தருளியரி திசைமுகனிந்திரன்முதலோ
ராருயிரையளித்தனைநின் னருட்பெருமைக்களவுண்டோ.

(எ-து.) பின்னும் சமுத்திரத்தைமந்தரகிரியென்னும்மத்தி ல் வாசுகியென்னுந் தாம்பைப்பூட்டிக்கடைந்த நாளையில், உக்கி ரத்துடனே உலகமலறகொதித்துப்பிறந்த விஷமுழுமையுமுண் டருளி விஷ்ணு பிரமாவும்தேவேந்திரன்முதலியோருடையசீவ னையெல்லா மிரட்சித்த உமது அருட்பெருமைக்கு அளவுண் டோ.—எ-று. (சுக)

கதிர்ச்சடையுமிளம்பிறையுங் கண்மூன்றுமணிமிடறு
முதித்தவிளம்பொற்சோதி யுமிழ்வடிவுங்கரநான்கும்
புதுக்கமலநிகர்பதமும் புனிதவிழியானோக்கி [ஞே.
மதித்துநினைத்தொழுங்கையான் மற்றொன்றைத்தொழுவே

(எ-து.) சுவாமி! உமது பிரகாசமுள்ளசடையும், அதில் த

கண்டமும், உதையமான சூரியனைப்போலப்பிரகாசிக்கின்றவடிவமும், நான்குபுசமும், புதிய தாமரைமலரை யொத்தபாதமும் என்னிட புனிதமானகண்ணுற்கண்டுஉம்மைநினைத்துத்தொழுத வென்னுடைய கையினாலே மற்றொருதெய்வத்தையுந்தொழுவேனோ வென்றான்.—எ-று. (சுஉ)

விலங்கினொடுங்குருகிற்கும் விரிந்தசுடுகாடான
மலங்கொள்வயிறுடைப்புலையன் வரங்கோடற்குரியேனோ
விலங்கவுனைப்பூசித்த தெனினமதற்கேயினிய
நலங்கொள்வரமருளென்றா னல்வினையின்றலைநின்றான்.

(எ-து.) இந்தப்படி பரமசிவனைப்புகழ்ந்துசுவாமி! மிருகசாதிகளுக்கும் பறவைகளுக்கும் பெரிய சுடலையாகியவயிறும் மும்மலங்களும் நிறைந்த புலையனான நான் உம்மிடத்தில் வரங்கேழ்க்கத்தக்கவனோ! உம்மை விளங்கப் பூசைபண்ணினது அந்த அன்னப்பட்சி ஆகையா லதற்கேயினிமையான நல்வரத்தைக்கொடுத்தருள வேண்டுமென்றான் தருமத்தின் முடியில் நின்ற அந்த வேடன்.—எ-று. (சுங)

என்றுரைசெயவ்வேட னிறந்தவதற்குளமகிழ்ந்து
பொன்றுமனந்தனக்குயிரும் பேறறிவும்புகுத்துயிரை
நன்றுநீயனமேயோர் துளிநீரும்நளினமுங்கொண்
டின்றுபூசனைசெய்தா யெம்மைவரங்கேளென்றார்.

(எ-து.) வேடன் இவ்விதமாகச்சொல்லி வேண்டிக்கொண்டதற்குத் திருவுளமகிழ்ந்து இறந்துபோன அன்னப்பட்சிக்குசீவனும் பேறறிவுங்கொடுத்து பரமேஸ்வரரானவர் நல்லதுஓ அன்னப்பட்சியே? நீயொருதுளிஜலமும் ஒருதாமரைப் பூவுங்கொண்டு இன்றைக்கு நம்மைப் பூசைபண்ணின படியினால்உனக்கு வேண்டியவரத்தைக்கேள் என்றார்.—எ-று. (சுச)

அய்யவுனைப் பூசிக்கக் கொடுவந்தேனலனிந்தச்
செய்யமலர்ப்பார்ப்புக்காய் கொடுவந்தேன்சிலைவேடன்
எய்யுமதனாலுனது மேல்விழுந்ததெனக்கேதுக்கு
உய்யவரமவனுக்கே யருள்கின்றதொளிரன்னம்.

(எ-து.) ஐயனே? இந்த செந்தாமரைப்பூ உம்மைப் பூசிக்க வல்ல, எனது குஞ்சுக்கு வேண்டு மென்று கொண்டு வந்தேன், [illegible]

தாமரைப்பூ உமது பேரில் விழுந்த படியினால் எனக்கேதுக்கு வரம், அந்த வேடனுக்கே வேண்டியவரம் கொடுத்தருளவேண்டுமென்று அந்தப் பிரகாசமுள்ள அன்னம் சொல்ல.—எ-று. ()

அன்னமினிதுரைத்தவுரை யகமகிழ்ந்தவ்வேடனுக்கு
நன்னிலையோதிமத்துக்குஞ் சுரர்தமக்குநாடரியத்
தன்னிகரில்பரமபதங் கொடுத்தருளித்தனிக்கருணை
மன்னுகடலாகியநம் மாதேவன்மறைதனனால்.

(எ-து.) இப்படி அந்தப் பட்சி இனிமையாகச்சொன்னவார்த்தைக்கு சுவாமி மனமகிழ்ந்து அந்த வேடனுக்கும் நல்லநிலைமையுள்ள அந்த அன்னப்பட்சிக்கும் தேவர்களுக்கும் நாடுதற்கருமையான வொப்பற்ற மேலான பதவியைக்கொடுத்தருளிஒத்தாரு மிக்காருமில்லாதகிருபாசமுத்திரமாகிய நம்மிடமகாதேவர் மறைந்தருளினார்.—எ-று. (சுசு)

இத்தகையசெயலிலொரு செயலேனுமிவர்செய்தால்
உத்தமவிவ்வாதையுறு ரென்னவுரைத்துயர்முநியைப்
பத்தியொடுகூற்றுவனப் பாலழைத்துப்போமளவில்
அத்தலையினிகழ்ந்தபரி சறிந்தவாறுரைசெய்வாம்.

(எ-து.) இப்படிக் கொத்த செய்கை யேதாகிலும் இப்பாவிகள் செய்திருந்தால், உத்தமராகிய சானந்த முநிவரே! இந்தவாதைப்படார்கள் என்று இயமதர்மராஜன் சொல்லி உயர்ந்த அம்முநிவரைபத்தியுடனேஅப்பாலழைத்துக்கொண்டுபோமளவில் அவடத்தில் நடந்தவிதஞ் சொல்லுகிறோம்.—எ-று. (சுஎ)

சோரமடவார்தம்மை நமன்றூதர் தனங்களிலே
கூரியமுள்ளேற்றிடுவர் கொழுங்கனலிற்புரட்டிடுவர்
பாரவசிதலைமீது கடாவுவர்மேற்பணிசெறிப்ப
ராரவழற்கம்பத்தை மருவுகவென்றடிப்பரால்.

(எ-து.) விபசாரஞ்செய்த சிலபெண்களை இயமதூதர்கள் தனபாரத்தலே கூர்மையுள்ள இருப்புமுள்ளை யேற்றுவார்கள், சிலபெண்களைக் கனிந்த நெருப்பிலேபோட்டுப் புரட்டுவார்கள், சிலபெண்களிட தலைமேற் பாரமான இருப்புவசியைக் கடாவுவார்கள், சிலபெண்கள்மேற் பாம்புகளைப் பூட்டுவார்கள், சிவக்கக்காய்ந்த இருப்புக்கம்பத்தை நிறுத்தி அலைக் கட்டித் தருவும்படி சொல்லிச் சிலபெண்களையடிப்பார்கள்.—எ-று. (சுஅ)

அயர்ந்துவிழுந்தார்ப்படைகொண் டங்கத்தைக்கொய்திடுவர்
பயந்தல்றவலறவர் பல்லையொடித்திடுவர்கரக்
குயங்கொடுவெட்டுவர்குதியைக் குதியினலுறத்திடிப்ப
ருயர்ந்தவடுப்பிடைவைத்துப் புகைப்பரவரொழியாமல்.

(எ-து.) சிலபெண்கள் உபத்திரம் பொறுக்காம லயர்ந்து விழுந்தால் அவர்களை ஆயுதங்கொண்டு உடம்பின்தசைகளை யறுப்பார்கள், பயந்து அலற அலறக் குறட்டினலேசிலபெண்களிடப் பல்லைப்பிடுங்கி உடைப்பார்கள், சிலபெண்களிடகையை கூர்வாள்கொண்டு வெட்டுவார்கள்,சிலபெண்களுடையகுதிக்காலைத் தங்கள்குதியினலே பலமாயிடிப்பார்கள், பெரியஅடுப்பினிடத்தேயிருக்கிற இருப்புத்தாளியிற் சிலபெண்களை வொழியாமல்வைத்துப் புகைப்பார்கள்.—எ-று. (சுகூ)

கண்ணிணையைமரக்கோலால்கிண்டிடுவர்கைங்கத்திற்
புண்ணுதிரமொழுகவிருப் பூசிகளைப்புதைப்பரால்
வண்ணநெடுங்குறடுகொடு பல்நாவைவாங்கிடுவ
ரெண்ணமறமார்பைவகிர்ந் திரலையேபிடுங்குவரால்.

(எ-து.) சிலபெண்களிட இரண்டு கண்ணையும்குச்சியாற்குத்திக்கிளருவார்கள், சிலபெண்களுடைய கைகங்களிலே யுதிரமொழுக இருப்பூசிகளை யேற்றுவார்கள், சில பெண்களுடையபல்லையும் நாக்கையும் குறடுகொண்டு வாங்குவார்கள்;சிலபெண்களிடமார்பை பிளந்து ஈரலைப் பிடுங்குவார்கள்.—எ-று. (எ0)

காதினெடுமூக்குமுலை களைந்துவிருச்சிகவணைமே
லாதரவிற்றூங்குமினென் றறைகுலர்கீழுதட்டையுரித்
தோதுகவென்றெருப்பர்கொடிறுடைப்பர்தலைகளை பிளப்
ஊதியுருக்கியசெம்பையொழுகிடுவரகித்திடையே. [பர்

(எ-து.) சிலபெண்களைக் காதுடனே மூக்குமுலைகளையறுத்து தேள்மெத்தைமேல் ஆசையாகத் தூங்குங்களென்று அடிப்பார்கள், சிலபெண்களைக்கீழுதட்டை யுரித்துப்போட்டுப்பேசுங்களென்றடிப்பார்கள், சிலபெண்களைத் தாடைகளை யுடைப்பார்கள், சிலபெண்களைத்தலையையுடைப்பார்கள்,சிலபெண்களுடையதேகத்தில் ஊதியுருக்கின செம்பை வூத்துவார்கள்.—எ-று. ()

அகத்திடையேகொடுதூண்டில்பதித்தெடுத்துச்சுற்றிடுவர்
சிகைக்கமுவிற்தூய்ந்கசலா கைக்கூமணு [illegible]கெறிக்கிடுவா

மிகப்பெரியமுசலத்தால் விழுந்தலறநருக்கிடுவர்
புகப்படைகளேற்றிடுவர் பொதித்திடுவர்கிருத்திடுவர்.

(எ-து.) சிலபெண்களிட சரீரத்தில் தூண்டிலிட்டுஉயர்ந்தசுழமரத்தில் தூக்கிச் சுற்றுவார்கள், அச்சரீரத்திலேயே நெருப்பிற்காய்ந்தஇருப்புலங்கைகளைவெகுவாய்ச்சொருகுவார்கள், சிலபெண்களின் உடம்பில் விழுந்தலறும்படி வுலக்கையினால் இடிப்பார்கள்,சிலபெண்களின் நவத்துவாரங்களில் புகுதஆயுதத்தையேற்றுவார்கள்,பொதிப்பார்கள்,கிழிப்பார்கள் இயமதூதர்கள்.—எ-று. (எஉ)

நிறையற்றமடமாரை நெடியநமன்றூதரினுங்
குறைவற்றபலவாதை செயக்கண்டுகூற்றுவனே
மறைகற்றமுநிநோக்கி வனிதையர்க்கித்தனைவாதை
பொறையற்றுச்செயலாமோ விவர்செய்வினைபுகலென்றான்.

(எ-து.) நெறியில்லாத பெண்களை கொடிய இயமதூதர்களிப்படியாக அனேகவாதைகள்பண்ணக்கண்டுஇயமதருமராசாவைச் சானந்தமுநிவர் பார்த்துப்பெண்பிள்ளைகளுக்கித்தனையுபத்திரவம் பொறுமையில்லாமல் பண்ணலாமோ !இவர்கள் பண்ணினபாவத்தைச்சொல்லவேண்டுமென்றுகேட்டார்சானந்தமுநிவர்.—எ-று. (எங)

பரபுருஷன்றனக்குமனைப் பொருள்கொடுத்தபாவியிவள்
ஒருதிருட்டன்பின்னேகிச் சுகங்கண்டவுடம்பியிவள்
வரனிடத்தேசுரதநலம் வஞ்சித்துமற்றொருவன்
விரவுசுகங்கண்டிருந்த வீணியிவள்காணையா.

(எ-து.) இவளன்னியபுருஷனுக்குத்தன்வீட்டிலுள்ளபொருளைக்கொடுத்தபாவி, இவள்ஒரு திருட்டுப்புருஷன்பின்சென்றுபோய் சுகத்தையனுபவித்தவுடம்புள்ளவன்,இவள்தன்பத்தாவினிடசுகத்தை வஞ்சித்து வேறொருவனோடு மனம்பிரியாயனுபவித்துக்கொண்டிருந்த வீணி,இவர்களைபபாறும் ஐயனே!யென்றான்.—எ-று. (எச)

மற்றொருவனெழில்கண்டு மணந்திடவேண்டினவளிவள்
பற்றுமடுப்பெரியாதே விரல்நெரித்தபாவியிவள்
செற்றமில்சோறிடுகென்ற தலைவனைமோதினவளிவள்

(எ-து.) இவள்வேறொருவன் அழகைக்கண்டு அவனைச்சேர வேண்டுமென்று ஆசைப்பட்டவள், சமையல்செய்யு மடுப்புஎரி யாதேபோனால் அடுப்பைப்பார்த்து விரலைநெறித்தபாவியிவள், சாந்தமாய் சோறுபோடென்றுகேட்ட தன் புருஷனை மோதி யடித்தவளிவள், குற்றமில்லாத தன் மாமியாரைப் பிடித்தடித்த பொல்லாதபாவியிவள் என்றான்.—எ-று. (எரு)

ஓரகத்திதனைவைது காதறுத்தவுலுத்தியிவள்
சீரியமாமனையெதிர்த்து செருத்தகொடுங்கலதியிவள்
நேரிலாக்கொழுந்தன்வரி லெதிர்நின்றநீலியிவள்
ஈரமுடைக்கணவன்வரி லுளங்கலங்கநடப்பளிவள்.

(எ-து.) இவள் தன்வோரகத்தியைவைதுகாதறுத்தஉலுத் தி,இவள் சிறப்புடையநல்லமாமனாரையெதிர்த்து சண்டைபண் ணினபொல்லாதகலகக்காரி,இவள்ஒப்பில்லாததன் கொழுந்தன் வந்தால் நாணமின்றி எதிரேநின்றநீலி, இவளிதக்கமுடையதன் புருஷன்மனதுகலங்க அலங்கோலமாக நடந்துகொண்டவள் என்றான்.—எ-று. (எசு)

இறைவனொடுகொழுந்தனெனைப் பிடித்தானென்றில்லாத
குறிபலகாட்டினவளிவள் கொங்கையிடத்தியாவரையு
முறைபுவரக்கலந்தபெரு மூடியிவள்பசித்தேனென்
றருமனைக்கண்வந்தவரை யொறுத்தவள்மற்றிவள்கண்டாய்.

(எ-து.) இவள் தன்புருஷனுடனே கொழுந்தன் என்னைக் கையைப்பிடித்தானென்று பொம்சொல்லி யில்லாதஅடையாள ங்காட்டினவள், இவள் முறைமைதப்பி யாவரையுஞ்சேர்ந்தமிக் கமூடத்தன்மையானவள், இவள் பசிக்கிறதென்று தன்வீட்டிற் குவந்த வர்களை யடித்துவைதவள் இவர்களைப்பாருமென்றான்.

மலிமனைவாய்ப்பிக்ஷையென வந்தவர்க்குப்பிட்சையிடாக்
கலதியிவள்பெரியோரைக் காணாதமறத்தியிவள்
தலைவனுடனொருத்திபே சிடக்கண்டுதானவளை
விலகரியநிந்தனைகள் பலசொன்னவெளிறியிவள்.

(எ-து.) செல்வத்துடனே வாழ்கின்றவிடென்றுபிட்சைக் காக வந்தபேர்களுக்கு பிட்சைபோடாத சண்டாளியிவள்,பெரி யோர்களைத் தரிசனம்பண்ணாத பாவியிவள்,தன் புருஷனுடனே யொருத்திபேசியிருக்கக்கண்டஅவளைத்தான் வேறுந்தூராகப்ப

ஆரையும்போய்த்தான்கலத்த லாருமறியாபடிக்
கூருடையகாவலருக் குடம்பயிற்றகயிற்றியிவ
ளோரிடத்தில்வதுவையெனி லுயர்பணிகள்வாங்கியணிந்
தேரொடுசென்றியாவரையும்புணர்ந்திருந்தவிளிக்கியிவள்.

(எ-து.) இவள் எவர்களிடத்திலும்போய்த்தானேசேருகிறதையொருத்தருமறியாதபடிக்குஇருக்கவேணுமென்று ஊர்காவலாளிகளைச்சேர்ந்து அனுகூலம் பண்ணிக்கொண்ட ஈனமுள்ளவள், இவள் ஒரு இடத்தில் கலியாணமாகிறதாலல் எறவலாக ஆபரணங்களை வாங்கிப்போட்டுக்கொண்டுஅழகாகஅங்கேயாவரையுஞ்சேர்ந்துகொண்டுதிரிந்தஇழுக்குடைய ளென்று சொன்னான்.—எ-று. (எகூ)

அன்னைமனைக்கேபலகா லோடியகையாளியிவ
ளுன்னியயலார்மனைக் கணுற்றிருந்தபதிதியிவள்
தன்னுளமேதடுமாற மதுகுடித்தசளக்கியிவள்.
தன்னெறியோசிறிதுமிலா நரகிவள்விரகிபிவள்.

(எ-து.) இவள் தன்தாய் வீட்டிற்கேயென்னேரமும்ஓடிக்கொண்டிருக்கும் துர்ச்சனமுடையவள்,இவள் என்னேரமும் அசலார் வீட்டினிடத்தில் நிலையாகவிருக்கிற கெட்டகுணமுள்ளவள், இவள் தன்மனதுதடுமாறும்படிகள்ளைக்குடித்தகெர்வி, இவளுக்கு நல்ல நடத்தை சறறேனுமில்லாதநரகி, இவள் பொய்சூதுபிரட்டு முள்ளவள் என்றான்.—எ-று. (அ0)

இக்கொடியோர்செய்தவினை யின்னுமுளநன்மறையோய்
துக்கமிவர்க்கிவ்வளவோ தொலையாததீவினைஞர்
புக்குடையவிருபத்தெண் கோடியெனும்புலைநிரையந்
தொக்கனமற்றவற்றின்னும் பெயர்சிறிதுசொலக்கேட்டீ.

(எ-து.) நல்லவேதோத்தமரே?இந்தப்பாவிகள்செய்தபாவங்களின்னமுமுண்டு அதற்குத்தக்கதுக்கமிவவளவுதானோ!இந்தத் தொலையாத பாவிகள் எல்லா விழுந்துகிடக்க இருபத்தெட்டு கோடிநரகங்களிருக்கின்றன, பின்னையந்தநரகத்தினிடபேர்களில்சிலதுசொல்லுகிறேன்கேளுமென்று சொல்லுகிறான்.—எ-று.

உருகியவங்கக்குடிஞை யரத்தின்வீடியோர்சதலம்
பெருகுமகுகாலயமே பிறம்கிவற்றினரவனமே

பொருதயிலபாத்திரமே புழுங்குசிலாவருடமொடு
விரவியசிவாலகுண்டம் வியாக்கிரமத்திரமன்றி.

(எ-து.) உருகியிருக்கப்பட்ட வங்கக்குடிஞை யென்றும், அரத்தின் வீடென்றும், சதலமென்றும், மசகாயமென்றும், கிவற்றிநரவண மென்றும், தயிலபாத்திர மென்றும், சிலாவருஷ மென்றும், சுவாலகுண்டமென்றும், வியாக்கிரமமுகமென்றும் இவைகளல்லாமலும்.—எ-று. (அஉ)

தத்தகும்பம்நெடுங்கூட சரமலியுட்டீர்ப்பர்கம்
வைத்தகும்பிபாகமற வுறவமெல்வரையே
பொய்த்தடறுமலோசங்கு மொழிகாலசூத்திரமே
யுய்த்தமந்தகூவமுத லுலவாதநிரையத்தில்.

(எ-து.) தத்தகும்ப மென்றும், கூடசரமென்றும்,முட்டீர்ப்பாகமென்றும், கும்பிபாகமென்றும்,மறவுறவமென்றும், மெல்வரையென்றும், மலோசங்கமென்றும்,கால சூஸ்திர மென்றும்,மந்த கூவமென்றும்இதுமுதலாகச்சொல்லப்பட்ட நரகங்களிலே.—எ-று. (அங)

கலைவளருமதியுமொளிர் கதிரவனுமுளகாறும்
நிலையொழியாதிருப்பவர்க ளிவர்களெனநிகழ்த்தினனால்
குலவுமுயிர்கொலைசெய்துங் கோடாததருமனென
விலகுபெயர்பெற்றுமகிழ்ந் திருந்தருளிந்தனிக்கூற்றன்.

(எ-து.) கலைவளருகின்றசந்திரனும், பிரகாசமுள்ள சூரியனும்,உள்ளவரைக்கும் இப்படிப்பட்ட நரகங்களில்விழுந்தொழியாமற் கிடப்பார்களிவர்கள்,என்றுசொன்னான்குலாவப்பட்ட சீவன்களை யெல்லாங்கொலைசெய்தும் கோணாததருமவானென்றும்பேர்பெற்று மகிழ்ந்தருளிய வொப்பற்ற கூற்றுவனானஇயமதர்மராஜன்.—எ-று. (அச)

கூற்றுரைத்தமொழிகேளாக் குறைவில்முகியருள்கூர்ந்து
சாற்றருமிப்பாவிகளைத் தணைநிகரில்சிவமனுவா
லேற்றமுடைச்சிவபுரியி லேற்றியிடாதேகுவனேற்
றேற்றமுடைச்சிவபத்தர் சரிப்பரெனச்சிந்தித்தார்.

(எ-து.) இப்படி இயமதர்மராஜன் சொன்னவார்த்தைகளைக்கேட்டு குறைவில்லாத சானந்தமுநிவர் அருளுண்டாகிச்சொல்

எல்லாப்பதவிகளினுயர்ந்த சிலலோகத்தில் ஏற்றிடாமற் போவோமாகில் தெளிவுடைய சிவபத்தர்கள் நம்மை நகைப்பார்களென்று நினைத்தார்.—எ-று. (அரு)

முதிரிருபத்தெண்கோடி நரகருயிர்முத்தராய்
நிதியமணிமானத்தி னிடையேறிநிகரில்லாக்
கதியினிடபுகவருடி யென்றினியகவினிலகு
மிதையகமலப்பொகுட்டி னிருஞ்சிவனைத்தியானித்து.

(எ-து.) அதிககொடுமையுள்ளஇருபத்தெட்டுகோடிநரகத்திலுள்ளவர்களெல்லாம்சீவன்முத்தராய் கனகரத்தினவிமானத்திலேறிக்கொண்டு வொப்பில்லாத சிவகதியினிடத்திற் போய்ச் சேர்ந்திருக்கத்தயவுபண்ணவேண்டுமென்றுசிவனை இருதையகமலத்தில்தியானம்பண்ணிச் சொல்லுகிறார்சானந்தமுநிவர்.எ-று.

பொருவில்கொடுந்தினைஞர் செவிகடொறும்புகுந்தேற
வரியதெனும்பிரணவமுன் னுகியபஞ்சாக்கிரத்தை
யுரிமையொடுசானந்த முநிமுழங்கவுரைத்தனனால்
கருதிமுநிவரயாருங் கடல்போலமுழக்கினரால்.

(எ-து.) ஒப்பற்றஅந்தமகாபாவிகளுடையகாதுகள்தோறும்போய்கேழ்க்கத்தக்கதாய்மந்திரங்களினுயர்வாகியபிரணவமுதலாகிய பஞ்சாக்ஷரத்தை யுரிமையுடன் சானந்தமுநிவ ரோசை பிறக்கவுரத்துச்சொன்னார், அதையறிந்து கூடநின்ற முநிவர்களெல்லாஞ் சமுத்திரகோஷடம்போல அந்தப்பஞ்சாக்ஷரத்தை முழங்கச்சொன்னார்கள்.—எ-று. (அஎ)

நவிலரியசடாக்கரமா மந்திரம்போய்நரகிடத்தோர்
செவியிலணுவாமுன்னந் தீவினைபோய்நிர்மலராய்த்
தவலருநீரக்கமணி சிவலிங்கந்தரித்தவராய்
கவினுறுபேரொளியுளராய் கடிதுகரையேறினரால்.

(எ-து.) சொல்லுதற்கரிய பஞ்சாக்கரமெனு மகாமந்திரம் போய் நரகத்திற் கிடக்கிறபேர்கள் காதிற் கேழ்க்கிறதற்கு முன்னமே அவர்கள் பண்ணின பாவமெல்லாம் போய்நிர்மலாளாய் விபூதிருத்திராட்சம் சிவலிங்கந்தரித்து அழகியபேரொளியுள்ளவர்களாகிச் சீக்கிரமாகநரகத்தைவிட்டுகரையேறினார்கள்.எ-று.

அஞ்சலித்துநடந்தெதிர்வந் கைந்தெழுத்தைசெபித்துநறுங்

நெஞ்சிவப்பினொடுசால நிறைந்தவவர்தமைநோக்கி
பஞ்சுறுநற்பதத்துமைகோன் பத்தியுளமுநிகூறும்.

(எ-து.) இயமவாதனையிலகப்பட்டிருந்தஅத்தனைபேர்களும்அஞ்சலியஸ்தராக எதிராகநடந்துவந்து பஞ்சாக்ஷரத்தை செபித்து வாசனையுள்ள தாமரைபோன்றசானந்தமுநிவருடையபாபத்திற் பாவம் நீங்கினபேர்கள் மனதில் சந்தோக்ஷமடைந்து தெண்டம்பண்ண, அவர்களைப்பார்த்து செம்பஞ்சுபதித்த இன்பத்தைத்தரும் பாதத்தையுடையஉமையவள்புருஷனான பரமசிவனுடைய பக்தியிற்சிறந்தசானந்தமுநிவர்சொல்லுகிறார்.-எ-று.

வேறு.

வருசத கோடியான பாதக வரைகளைத் தான்
ஒருசத கோடியாகி யொழிப்பது குனிக் கொணாத
கருவெனு மாழிக் கென்றுங் கருதரி தூகி யங்கிப்
புரைவது மாது பங்கன் புனிதமந் திரமே யன்றோ.

(எ-து.) வரப்பட்டநூறுகோடிபாதகமலைகளைஒருவச்சிராயுதமாகி அழிக்கவல்லதும்,அளக்கவொண்ணாதபிறவியென்னுஞ் சமுத்திரத்தை அழிக்கும் வடவாக்கினியையும்போன்ற பெண்ணொருபாதியான பரமேஸ்வரனுடைய புனிதபஞ்சாக்ஷரமந்திரமல்லவோ ! என்றார்.—எ-று. (கூ0)

மாற்றருந் தீ வினைக்கு மாபரி கார மென்றே
யாற்றுதற் கரிய சாந்தி ராயண மாதி செய்து
போற்றிய வுடம்பை வாட்டிவருந்துவர் புவியி லென்றும்
ஏற்றுவா கனன்ற னமத் தியல்பினை யறியார் தாமே.

(எ-து.) மாற்றுதற்கரிய தீவினைகளுக்கு மகாபரிகாரமென்றுசொல்லி, பண்ணுதற்கரிய சாந்திராயணவிரதமுதலானதுகளைச்செய்துதான்வளர்த்த சரீரத்தைவாட்டிப் பூமியில் என்றைக்கும்வருத்தப்படுபவர்கள்ரிஷபவாகனனாகிய பரமேஸ்வரனுடையசிவநாமத்தின்பெருமையை யறியாதபேர்கள்.—எ-று. (கூக)

பரசிவ மந்தி ரத்தைப் பகர்ந்திடார் மகஞ்செய் தாலும்
தரைநதி களிற்றோய்ந் தாலுஞ் சருகினை யருந்தி னாலும்
மூரனொடு தேச கால பாத்திர முணர்ந்து பூமி
அருந்தி [illegible]

(எ-து.) பரமசிவனிடபஞ்சாக்ஷரமந்திரத்தைச் செபிக்காத பேர்கள், யாகங்களைப்பண்ணினாலும்பூலோகத்திலுள்ள தீர்த்தங்களில்முழுங்கினாலும்;சருகுபக்ஷணைபண்ணித் தவமிருந்தாலும், அறிவுடனே தேசகாலபாத்திரமறிந்து பூதானம் சொன்னதான முதலியவைகளை கொடுத்தாலும் அதுகள் கொடுக்கப்பட்ட பலனென்றுமில்லை என்றார்.—எ-று. (கூஉ)

கந்தரங் கறுத்தமுக்கட்கடவுள்மந் திரமே மிக்க
பந்தமில் வீடுநல்கு மென மறைப் பகரக் கேட்டுப்
புந்தியோர் சிறிது மின்றிப் புகுந்துமற் றொருதெய் வத்தின்
மந்திர முரைப்போர் தாமே மக்களுட் பதடி யாவார்.

(எ-து.) கண்டங்கறுத்து மூன்றுகண்ணுள்ள பரமேஸ்வரனதுமந்திரமே, பாசமில்லாத மேலானமோக்ஷத்தைக்கொடுக்குமென்று வேதஞ்சொல்லக் கேட்டும் புத்திசற்றாகிலு மில்லாமற் போய் மற்றொருதெய்வத்தினுடைய மந்திரத்தைச் செபிக்கிறபேர்களே மனிதருக்குள்பதரானவர்களென்றுசொன்னார்.எ-று.

உற்றநம் மனுவின் பாலியா முறைகுவ மருள் மிகுந்து
மற்றுழி யுரையோ மென்று மணிக்கள னுரைத்த லாலே
அற்றமில் சரண ரியாருந்தன்னையேபொருளாய்க் கொண்டார்
பற்றிய பாச மூலம் பரிப்பது மதுவே யன்றோ.

(எ-து.) பொருந்திய நம்முடையபஞ்சாக்ஷரமான மந்திரத்தினிடத்தில்நாம்அருள்மிகுந்திருப்போம்,மற்றவிடத்தில் இரோமென்று நீலகண்டபரமேஸ்வரன் சொல்லியிருக்கிறபடியினால் பொய்யில்லாதசிவனடியார் எவர்களும் அந்தபஞ்சாக்ஷரத்தையேபொருளாய்க்கொண்டார்கள், பின்னையும் அந்தப்பஞ்சாக்ஷரமானதுவே சீவனைப்பற்றிய பாசவேர்களைப் பரித்தெரிவதல்லவோவென்று சொன்னார்.—எ-று. (கூச)

ஆரமு துண்ட போதே நரைதிரை யகலுமா போற்
றேரின னெழுந்த போதே செரியிரு ணீங்குமா போல்
வாரிவல் விடத்தை யுண்டோன் மந்திர முரைத்த போதே
வேரொடு பிறவி தீர்ந்து விளங்குதல் திண்ண மாமே.

(எ-து.) பொருந்திய தேவாமிர்தத்தைச்சாப்பிட்டபோதே [illegible] போலவும், சூரியனைதயமான

போதே செறிந்தவிருணீங்குவதுபோலவும், சமுத்திரத்திற்பிறந்தவலி வுள்ள ஆலகாலவிஷத்தையுண்டபரமேஸ்வரன் மந்திரத்தைச்செபித்தபோதே வேருடனேபிறவிகளெல்லாந்தீர்ந்துவிளங்குவது சத்தியமென்றார் சானந்தமுநிவர்.—எ-று. (கூரு)

நும்பெரு வாதை நீத்து நுவலரு மின்பந் தந்த
தெம்பிரான் மனுவே யன்றோ வினிமதிப் பிரிய னீவீர்
வம்பவீழ் கைலைக் கேகி மகிழ்ந்துவீற் றிருமி னென்றுங்
கும்பரு மிறைஞ்சு மைய னுரைத்தன னுரைத்தலோடும்.

(எ-து.)உங்களுடைபெரிதானஇயமவாதனைகளையெல்லாம் நீக்கிச் சொல்லுதற்கரிய சுகத்தைக்கொடுத்ததுநம்மிடபரமேஸ்வரருடையபஞ்சாக்ஷரமந்திரமல்லவோ! ஆகையால், இனிமேல் மதிக்கவரிய நீங்களெல்லாரும்வாசனைவீசுகிற கைலாசத்துக்குப் போய் சந்தோஷமாக வீற்றிருங்களென்று முன்நரகத்தில் உபத்திரவப்பட்ட பேர்களைப்பார்த்து தேவர்களும் வணங்கப்பட்ட சானந்தமுநிவர் சொன்னமாத்திரத்தில்.—எ-று. (கூசு)

சிவமகிமைச்சருக்கம்முற்றிற்று.

ஆ பாயிரம் உட்பட சருக்கம் சு-க்கு

திருவிருத்தம்-சருஉ.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

கைலாச்சருக்கம்.

அரகணி கைய ரோடு ரிலாதநற் கணங்கள் சூழப்
பொருவில்சீ ரோடு மெண்ணிற் பொன்மலை வருவ தெய்ப்ப
மருவளர் பலவிமானம் வருதலு மவற்றின் மீதே
பரசிவ சங்கரா வென் றேறினர் பரிந்தெல் லோரும்.

(எ-து.) இப்படி சானந்தமுநிவர், அந்த இயமலோகவாசிகளுக்குப் பஞ்சாக்ஷரமும் அதின் மகத்துவமும் உபதேசித்து, நீங்களெல்லாரும் கைலாயத்துக்குப்போங்களென்றுவிடைகொடுக்கவும், அப்போது உருத்திரகணிகைகளுடனே அளவிலாத கணநாதர்கள்சூழ ஒப்பற்ற சிறப்புடன்பொன்மலைகள்வருகிறது போல் அனேக விமானங்கள் வரவும், அதுகளில் சந்தோஷத்துடனே யாவருஞ் சிவசங்கராவென்று சொல்லிக்கொண்டேறினார்கள்.—எ-று. (க)

துந்துமி பல முழங்கத் தூயபூ மாரி சிந்த
வந்தகன் மூக்கின் மீது விரனீட்டி யதி சயிப்ப
வந்தியம னூரி னுள்ளே வதிந்தவ ரியாருங் கூடிச்
சுந்தர மணி விமானத் தேறினர் தொகையி லாதோர்.

(எ-து.) அனேக தேவதுந்திமிமுழங்கவும், சுத்தமானபுஷ்பமாரி பொழியுவும், இயமதர்மராஜன் மூக்கின்பேரில்விரலைவைத்துக்கொண்டு அதிசயிக்கவும்! பூமியிலிருந்துவந்து இயமபுரியில் இருந்தபேர்களெல்லாரும்கூடி அழகுபொருந்திய இரத்தின விமானத்திலேறினார்கள் கணக்கில்லாதபேர்கள்.—எ-று. (உ)

ஏறிய பின்னர் மாரு விருங்கயி லாய வெற்பி
னூறுமன் பொடுசென் றெங்க ளுமாபதி தாள் வணங்கிக்
கூறருங் கருணை பெற்று குழுமிநின் றமரர் போற்ற
வீறிலா வின்பந் துய்த்தாங் கிருந்தன ரொழிவி லாது.

(எ-து.) விமானங்களிலேறினபின்பு ஒருகாலத்திலும்மாறு படா பெருமையுள்ள கைலாசகிரியில் மிகவுமுதிர்ந்தபக்தியுடன் விமானங்களி லேறிப்போய் நமது பார்வதிசமேதரான பரம சிவனைவணங்கி அவருடைய சொல்லுதற்கரிய கிருபாகடாட்சம் பெற்றுகூடிநின்று தேவர்கள் துதிக்க கெடுதலில்லாத சுகத்தை யனுபவித்துக்கொண்டு கைலாசத்திற்றானே வொழிவில்லாமல் அவர்கள் எல்லாருமிருந்தார்கள்.—எ-று. (௩)

ஆங்கவர் போய பின்றை யந்தக நில்லென் றன்பு
தேங்கு சானந்த னென்னுஞ் சிவமுநி முநிவ ரோடு
தாங்குதன் புஷ்ப கத்தின் சார்தருங் கைலை நோக்கி
யோங்குவிண் ணெறிகட் சென்று னும்பர் கைகூப்பி நிற்ப.

(எ-து.) அவ்விடத்திலிருந்தவர்களெல்லாம் போனபிறகு, சானந்தமுநிவரானவர் இயமதர்மராஜனைப்பார்த்து நில்லும்என் றுசொல்லி முநிவர்களுடனே தம்மிட புஷ்பகவிமானத்திலேறி எய்தற்கரிய கைலாயத்தைநோக்கி ஆகாசமார்க்கத்தில் தேவர்க ளெல்லாங் கைகுவித்துநிற்கநடந்தார்.—எ-று. (௪)

சென்றிடு மளவி லாண்டு தேசுடைக் கயிலை யென்னுங்
குன்றுடை முடிகண் டெங்கள் கோமுநி கரங் குவித்து
மூன்றிகழ் வுட னிருந்த முநிவரை யுவந்து நோக்கி
நின்றவக் கயிலை யின்சீர் சிற்சில நிகழ்த்த லுற்றான்.

(எ-து.) இப்படி போகுங்கால் எதிரில் பிரகாசமுடையகை லையின் கொடுமுடியைக்கண்டு கைகுவித்துநின்று கும்பிட்டுதம் முன்னாகவிருந்த முநிவர்களைச் சந்தோஷமாய்ப்பார்த்து அந்த கைலாசகிரியினுடைய சிறப்புகளிற் சிலதைசொல்லத்தலைப்பட் டார் சானந்தமுநிவர்.—எ-று. (௫)

வேறு.

கேடிலா னுறு முயர்வரைச் சாரலிற் கிளர்ந்து
நீடு சந்தனத் தண்பொழில் நெடுநில மடந்தை
சூடு நித்தில முடிமுதல் சூழவோர் பசும்பட்
டாடை சுற்றிய தன்மையி லிலங்குதல் பாரீர்

(எ-து.) பிறப்பிறப்பில்லாத பரமேஸ்வர னிருக்கப்பட்ட வெள்ளியங்கிரியின் பக்கத்தில் சூழ்ந்திருக்கும் சந்தனத்தோப் புகளானது, பூமாதேவிதரித்த முத்துக்கிரீடத்தினைச்சூழவொரு பச்சைப்பட்டு வஸ்திரஞ் சுற்றினதுபோல இருக்கின்றதைப்பா ருங்கள் என்றார்.—எ-று. (சு)

ஆதிமா லையன் வரையெனை நண்புகொண் டருளென்
றேத்தி யேமவெற் பணுகிநின் றிரந்திடு மியல்போல்
வாய்த்த சாரலிற் பசுங்கிளி மிழற்றுற வயங்கிப்
பூத்த கோங்கினின் றெதிருறப் பொதிவது பாரீர்.

(எ-து.) ஆத்திமாலையைதரித்தபரமசிவனிருக்கப்பட்ட வெள் ளியங்கிரியே என்னைத்தோழனாகக்கொண்டருளென்றுபுகழ்ந்து பொன்மலையானது நின்றுகொண்டு கேழ்க்கிறதுபோல், கை லாசகிரிப்பக்கத்திற் கிளிப்பிள்ளைகளிருந்து சத்திக்கக் கோங்கு மரங்கள் பூத்துநிற்கிறதைப்பாருங்கள் என்றார்.—எ-று. (எ)

கழைகொள் சாரலிற் கிடந்தபன் மரகதக் கதிரை
யுழைகள் புல்லென நாவளைத் துழல்வது பாரீ
ரெழிலியைக் கடவா ரணமென்று பாய்ந்தி கலிச்
செழுமுடக் குளை நாணொடு செலுமியல் பாரீர்.

(எ-து.) மூங்கில்கள் முளைத்திருக்கும் சாரலிற் கிடக்கிற மரகதமணியினது பிரகாசத்தை மான்கள் புல்லென்றெண்ணி நாவைநீட்டிவளைத்து மேய்ந்து பார்த்துழலுவதைப்பாருங்கள், மேகங்கள் தவழுகிறதை யானை யென்றெண்ணிச் சிங்கமானது பாய்ந்து அகப்படாதபடியினால் நாணிப்போகிறதைப்பாருங்கள் என்றார்.—எ-று. (அ)

முழைகளிற் புகுவளி யொலிமுழ வொலியாகச்
செழுமயிற் கணம் நடித்திடுஞ் செயலினைப் பாரீர்
வழுவிலார் வரக் கண்டுளங் குழைத்து கண்வழிநீ
ரொழுகல் போற்சுனை யருவிக ளொழுகுதல் பாரீர்.

(எ-து.) வெள்ளியங்கிரியினிட முழைகளிலே நுழையும் வாயுவின் சத்தமே மத்தளத்தொனியாகமயில்கூட்டம் நடனம் பண்ணுகிறதைப்பாருங்கள், குற்றமற்ற பெரியோர்கள் வருகிற தைக்கண்டு நெஞ்சுருகிக் கண்ணீ ரொழுகிறதுபோலச் சுனையி னின்று அருவிவருகிறதைப் பாருங்கள்.—எ-று. (சூ)

நீடிரு றனைச் சிதைத்த நன்னெடுங் கடக்கரிதா
னூடழுந் திட னரியதே னொழுகுதல் பாரீர்
சேறுங் கழை மிசைமயி லசைகுதல் சிறப்பி
னேடுறுங் கழைக் கோதையை யொத்தது பாரீர்

(எ-து.) அந்தக்கிரியிலுள்ள தேன்கூட்டை யழித்தயானைகள் அத்தேனிலேபேழ்கத்தக்கதாகவொழுகுகிறதைப்பாருங்கள் மூங்கிலின்பேரில்மயிலிருந்தசைகிறதுகம்பத்திலிருந்துநடிக்கும் பெண்கள்போல விருக்கின்றதுபாருங்கள்என்றார்.—எ-று. (௧௦)

வெள்ளியங் கிரிப் பேரொளிமிசைபரந் தெழுதல்
கொள்ளை வானதி வந்திரை முடிதனிற் கொளுமோர்
பிள்ளை வெண்மதி தனைக்கணு னோக்கிய பினைத்தன்
றெள்ளி தாமிடத் தேகல்போற் றிகழ்வது பாரீர்.

(எ-து.) வெள்ளிமலையின் பிரகாசம் ஆகாசத்திற் பரவியெழுந்திருப்பது, ஆகாயகங்கைவந்து பரமேஸ்வரன் சடையின் மூன்றும்பிறையைக் கண்ணாற் பார்த்துப் பிறகு தன்னிடத்துக் குப்போகிறதுபோல விருக்கின்றதைப்பாருங்களென்றார்.எ-று.

செம்பொ னாயக னம்புயன் றேடுதற் கரிய
சம்பு வாழ்கிரிப் பேரொளி யெங்கணுந் தயங்க
வும்பர் போற்றுமப் பெருங்கிரி யுடைப்புகழ் வெள் ளம்
பம்பு கின்றது போன்றதிங் கதுகளைப் பாரீர்.

(எ-து.) இலட்சுமிசமேதரான விஷ்ணுவும், தாமரைவாசனான பிரமதேவனும், தேடுதற்கரியபரமேஸ்வரன் வாழப்பட்ட வெள்ளியங்கிரியினுடைய பிரகாச மெவ்விடங்களிலும் வீசுவது தேவர்கள்துதிக்குமக்கயிலாசகிரியின்கீர்த்தியாகியவெள்ளம்எங்கும்பரவினதுபோல இருந்தது.—எ-று. (௧௨)

என்றுரைத்து நன் முநிவரோ டேகியக் கயிலைக்
குன்றின்மேற் புகுந் தெம்பிரான் கோயின்முன்ன ணுகிப்
பொன்றயங்கு புஷ்பகத்தி னின்றிறங்கி யுட் புகுந்தான்
கொன்றை வேணியன் வார்கழல் வணங்கவே குறித்து.

(எ-து.) இப்படி சானந்தமுநிவர்கைலாசகிரியினது சிறப்புகளைச்சொல்லி முநிவர்களுடனேபோய் அந்தக்கைலாசகிரியின் கொடுமுடியிற்புகுந்து பரமேஸ்வரன்கோயிலுக்கு முன்பாகப்

போய் பிரகாசமான புஷ்பகவிமானத்தில் நின்றிறங்கிகோயிலுக் குள்ளேபுகுந்து கொன்றைமாலைதரித்த சடையினையுடைய பர மேஸ்வரன் பாதத்தை தண்டன்பண்ணநினைத்து.—எ-று. (கரு)

புலவர் விஞ்சையர் சாரணர் சித்தர் கிம்புருடர்
கலைகொள் சந்திர ராதவர் முநிவரர் கருடர்
இலகு ருத்திரர் மாயவ ரம்புய ரியக்கர்
அலகிலார் மிடைந்துரு மரனவை யிடை யடைந்தார்.

(எ-து.) தேவர்கள், வித்தியாதரர், சாரணர், சித்தர்கள், கிம்புருடர், கலைநிறைந்தசந்திரர்;சூரியர், முநிவர்கள், கருடர்கள், மேன்மையடைந்த உருத்திரர், நாராயணர்கள், பிரமதேவர்கள், இயக்கர்முதலியஎண்ணிறந்தபேர்கள், நெருங்கியிருக்கிறபரமேஸ் வரன் சபையிலேயடைந்தார் சானந்தமுநிவர்.—எ-று. (கச)

அடைந்து நம்பிரான் திருவடி யஞ்சலி புரிந்து
மிடைந்தபேறருள் பொங்கிமேல் வழிந்தன விழிநீ
ரிடங்கொள் மார்பிடை யொழுகநின் றெழுந்தெழுந் திறை
உடம்பு முள்ளமு முருகுநற் பலதுதி யுரைக்கும். [ஞ்சி

(எ-து.) அந்த சபையிலடைந்து நமதுகர்த்தாவானபரமே ஸ்வரன்திருவடியைத் தண்டன்பண்ணிமனதுக்குள்நிறைந்தபே றருளானதுபொங்கிய மேலேவழிந்ததுபோலஆனந்தக்கண்ணீர் மார்பினிடத்திலொழுக நின்று எழுந்தெழுந்து தோத்திரஞ்செய் துஉடம்பு முள்ளமுமுருகப் பலமுறைத்துதிக்கின்றார்.—எ-று.

பால லோசன விமல கங்காதர பரம
வால போசன சங்கர சுந்தர வனந்த
சூல பாணிய காரண வாரண துறங்க
சீல மாதவ ருளத்துரை சின்மய சரணம்.

(எ-து.) நெற்றிக்கண்ணனே! அமலனே! கங்கையைத்தரித் தவனே! யாவர்க்கு மேலானவனே! ஆலகாலவிஷத்தையுண்டவ னே! சங்கரனே! சௌந்தரியமுள்ளவனே! ஆதியந்த மில்லாத வனே! சூலந்தரித்தவனே! காரணமானவனே! வேதக்குதிரை யேறினவனே! சற்குணமுள்ள மகத்துக்களுள்ளத்தில்வசிக்கும் ஞானசுரூபனே! சரணம்.—எ-று. (கசு)

மறை புகன்றவாய்ச் சிறுவன துயிர்கொள வந்த
[illegible] சரணம்

தெறுக டங்கலுழ் புகர்முகப் பணைநிகர் செழுங்கை
கறைய டிக்கரி யுரித்தருள் கண்ணுதல் சரணம்.

(எ-து.)வேதங்களோதும்வாயுள்ளமார்க்கண்டனென்னும் பிள்ளையினுயிரை வாங்கவந்த கொடிய இயமனைஉதைத்ததற்பரனே! சரணம், அழகுபொருந்தியமதங்களொழுகப்பட்டவடுதங்கியமுகமும், பனையையொத்த துதிக்கையையும், உரல்போன்ற அடியுமுள்ளயானையையுரித்தருளும்கண்ணுதலே! சரணம் என்றார்.—எ-று. (கஎ)

புண்ணி யத்தனி விடையிவர் புதனே சரணம்
கண்ண னம்புயன் றேடருங் கடவுளே சரணம்
திண்ண னெச்சிலுக் குகந்தருள் செல்வனே சரணம்
தண்ணிறைந்த நீறணிந்த செஞ் சடையனே சரணம்.

(எ-து.) தருமதேவதையைத்தானேரிஷபமாயேறிநடத்தப்பட்ட பரிசுத்தனே! சரணம், நாராயணனும்பிரமனும் தேடுதற்கரிய கர்த்தாவானவனே! சரணம், கண்ணப்பனென்னும் வேடனெச்சிலுக்குமகிழ்ந்தசெல்வனே! சரணம் குளிர்ந்தகங்கையைச் சிவந்த சடாபாரத்திலுடையவனே! சரணம்.—எ-று. (கஅ)

இனனுடன் றினமிருத்தல் போல்மதி கலை யிருந்த
வனனெடுஞ் சடை முடியுடை வள்ளலே சரணம்
நனிசிறந்த மால் விடைதனை நடத்திவந் தடியார்
முனமெழுந் தரு ளண்ணலே முதல்வனே சரணம்.

(எ-து.) சூரியனுடனே நிதஞ்சந்திரனிருப்பதுபோல, மூன்றும்பிறையோடு அழகுபொருந்தியநெடியசடாமகுடமுள்ளவள்ளலே! சரணம், மிகச்சிறந்து உயர்ந்த ரிஷபத்தின்மீது அடியார் முன்பாக வெழுந்தருளும்பெருமையுள்ளவனே! முதல்மையானவனே! சரணம்.—எ-று. (கஙு)

வனமுடிப் பிறை யல்லது மார்பினும் பிறையுண்
டெனவ ராகவெண் கோடணி யிறைவனே சரணம்
கனலொளிச் சுடர் மூன்றையுள் கண்களாய்ப் படைத்த
உனலருஞ் சுடரே யருளு ததியே சரணம்.

(எ-து.) அழகுபொருந்திய முடியினிடத்திலிருக்கிற மூன்றும்பிறையையல்லாமல்மார்பிலேயும்பிறையுண்டென்று சொல்

பிரகாசத்தையுடைய சூரியன், சந்திரன், அக்கினி, இம்மூன்றை யுங்கண்ணுகப்படைத்தநினைக்கவரிய ஜோதியே! கிருபாசமுத்திரமே! உனக்குச் சரணமென்றார்சானந்தமுநிவர்.—எ-று. (௨0)

வேறு.

என்றுதுதி செய்தமுநி தனைநோக்கி நின் செயலுக்
கின்ப முற்றும்
உன்றனது பேருலகஞ் சானந்த கணேச னென
வுரைக்க நந்தம்
முன்றிகழ்வுற் றுரைகுதியாலெனவமலன்மொழிந்தனனம்
முரையை யெந்தாய்
நன்றிகுதென் றொழியாத வானந்தத் துட னிருந்தா
னவையி லாதான்.

(எ-து.) இப்படி தோத்திரம்பண்ணின சானந்தமுநியைப் பார்த்து உனதரியசெய்கைக்கு சந்தோஷங்கொண்டோம்! இனி உலகமெல்லாம் உன்னே சானந்தகணேசனென்றுசொல்ல நம்முன்னுக விளங்கியிருமென்றுபரமேஸ்வரன்அனுக்கிரகம்பண்ணினுர் அதைகேட்டகுற்றமற்றஎமதையனுகியசானந்தமுநிவர்ஒழியாத பேரானந்தத்துடனே அக்கைலாசத்தில் சுவாமியருகில் இருந்தார்.—எ-று. (௨௧)

பெருங்கருணைக் கடலனைய சானந்த கணேச னெனும்
பெரியோன் மிக்க
வருங்கயிலைக் கேகியபின் னுருயிரின் கால விதி
யறியுங் கூற்றன்
றிருந்தமுடி தலையசைக்கி யுயிர்ப் பெறிந்து முகத்தினெடு
சிந்தை சேர்ந்து
பொருந்தியதன் னமைச்ச னெனுங் காலனுடனிவ்வாறு
புகல லுற்றான்.

(எ-து.) கிருபைக்கடலாகிய சானந்தகணேசரென்னும்பெரியவர்கைலாசகிரிக்குவந்ததின்பிறகு சீவாத்துமாக்களுடையகாலங்களையும் விதிகளையுமறியப்பட்டஇயமதர்மராஜன்தன்கிரீடத்தையசைத்துபெருமூச்செறிந்துமுகமும்மனதுஞ் சோர்ந்துதனதுமந்திரியான காலனுடனே இவ்வாருகச்சொல்லத் தொடங்கினன்.—எ-று. (௨௨)

ஒரு முநிவன் வந்துநம தாயமொடு காவலையு
மொருங்கு நீக்கி
விரியு நிரை யத்துள்ளார் புரத்துள்ளா ரனைவரையும்
விரவி னோடு
பொரு வரிய கைலைவரைக் கேற்றிமகிழ் வொடுதானும்
போயி னனன்
முரு கிதழிச் சடையோன்ற னருள்வரமு மிவ்வளவாய்
முடிந்த தேயோ.

(எ-து.) ஒருமுநிவரானவர் வந்து நமக்குரிய அதிகாரமுழு மையுமொழித்து,வித்தாரமானநரகங்களிலும்பட்டணங்களிலு முள்ளபேர்களனைவரையும், அதிசீக்கிரமாகவொப்பற்றகைலைய ங்கிரிக்குப்போக்கித்தானும்மகிட்சியுடனேபோய்விட்டார்! ஆன படியினல்,தேனொழுகியகொன்றைமாலையைத்தரித்த சடையை யுடையபரமேஸ்வரன் கொடுத்தவரமுமிந்த மட்டில் முடிந்ததே யென்றான் இயமதர்மன்.—எ-று. (உங)

வேறு.

மங்கல மிழந் ததோர் மங்கை யாக்கமுந்
தங்கிய புனலறு தக்க வாவியு
மங்கிளர் விழியிலா முகமு மானதே
பொங்குநம் மூர்க்குடிப் போன பின்னரே.

(எ-து.) மங்கிலியமிழந்த ஒரு பெண்ணினுடைய நிலைமை யும் தண்ணீர்வற்றிப்போன தடாகமும்அழகைத்தருங்கண்ணில் லாதமுகமும்!எப்படியோ நமதுதரும்குடிகள்போனபிறகு அப் படியாச்சுதேயென்றான் இயமதர்மராஜன்.—எ-று. (உச)

தருமனென் றுலகெலாஞ் சாற்றப் பட்டதுந்
திருநகர் தனக்குமோர் வறுமை யெய்தலாற்
பெருகிய திருவுளே மென்று பெட்பினல்
மருவிய வாழ்வினை மதிப்ப தென்னரே.

(எ-து.) இயமதருமனென்றுஉலகமெல்லாஞ்சொல்லப்பட் டபேரும்அழிந்துஅழகிய நமதுபட்டணத்துக்கும்தரித்திரம்வந் தபடியினல் பெருஞ்செல்வமுள்ள நாமென்று பொருளாசை பொருந்திவாழ்ந்து மதிக்கப்படுவதினல் பலனென்னவென்றான் இயமதர்மன்.—எ-று. (உரு)

சாலவிவ் விடநிகழ் தன்மை யாவையு

பாலலோ சனனொடு பகரப் போதுமாற்
கோலநம் மூர்தியைக் கொணர்தி யென்றனன்.

(எ-து.) இவ்விடத்தில் நடந்தவெல்லாவற்றையும்விஷ்ணுவும் பிரமனும் வேதமும்அறியப்படாதநெற்றிக்கண்ணுள்ள பரமேஸ்வருடனே அறிக்கைப் பண்ணப்போரோம், அழகுள்ள நமதுவாகனத்தைக் கொண்டுவாவென்றான்.—எ-று. (உசு)

நடைபெரு நீலமா ஞகமீ தொரு
படியிவர் புயலினற் பான்மைத் தாமென
விடலருஞ் சினமிகு மேதிமீ மிசை
யடல்புனை தென்றிசைக் கரச னேறினன்.

(எ-து.) நடையுள்ளநீலகிரியின்மேற்படிந்துஒரு மேகமண்டலம்நடத்துவதுபோல்நீக்தற்கரியகோபமிகுந்த எருமைக்கடாவாகனத்தின் பேரில் இயமதருமராஜன் ஏறிநடத்தினன். எ-று.

படையுறு கையுடைப் படர்க ளாயினோர்
புடைகளி லன்பொடு பெயர்ந்து சூழ்வர
வடைதரு துன்பமோ டமல மாகிய
விடையவன் கைலையை மேவினு னரோ.

(எ-து.) ஆயுதபாணிகளாகிய இயமபடாக்கள் பக்கத்தில் அன்புடனே சூழ்ந்துவர,பொருந்தியதுன்பத்தோடுநிர்மலமான இரிஷபவாகனனதுகைலையங்கிரிக்குப்போயினன்.—எ-று. ()

மேயபின் னெம்பிரான் மிக்க கோயிலின்
வாயிலி னிறுத்தியே வாகனந் தனை
யோய்வரு மிந்திய புலனொ டுக்கியே
தாயிலா னவையிடை சார்ந்திறைஞ் சினன்.

(எ-து.) கைலையங்கிரிவாசனான வெமதுகர்த்தன் வீற்றிராநின்ற கோயிலின் வாசலினருகில் தன்வாகனத்தை நிறுத்திப் போட்டு,ஓய்வில்லாமல் இந்திரியவழிசெல்லாதுஐம்புலன்களையுமொடுக்கி தாயிலாத பரமேஸ்வரன் சபையினிடத்தில்போய் தண்டம்பண்ணினன்.—எ-று. (உகூ)

துதிபல சொல்லியே தூயநம் பசு
பதியரு சந்நிதி தன்னிற் பாசமுங்
கதிருடைச் சூலமுங் கதையும் வைத்துநின்
றெதிர்தொழு தந்தக னியம்பு வானரோ.

(எ-து.) பல தோத்திரங்களுஞ்சொல்லி நம்பரமேஸ்வரன் சந்நிதிமுன்பாகபாசமும், பிரகாசமுள்ளசூலமும், காலதண்டாயுதமும்வைத்து,சுவாமிக்கெதிராகநின்றுகொண்டுவணக்கமாகச் சொல்லுகிறான்.—எ-று. (௩o)

உன்னுடை யருளெலா மொருங்கு பெற்றுனை
யுன்னுசா னந்தமா முனிவந் தென்வயி
னென்னர சுரிமையை யொழித்திங் கெய்தினார்
அன்னது நானுனக் கரைதல் வேண்டுமோ.

(எ-து.) சுவாமி! தேவரீருடையவருளெல்லாமொருமிக்கப் பெற்று தமது பாதத்தையே சிந்தித்திருக்கும் சானந்தமகாமுனிவர்வந்து என்னிடத்திலிருந்த அதிகார உரிமையையொழித்து இங்கேவந்துவிட்டார்! அதனைநான்தேவரீருக்குச்சொல்லவேண்டுமோ! என்றான்.—எ-று. (௩௧)

எனதிடை யளித்தவிவ் விறைமை தன்னைநீ
ருனதுளக் கேற்றவர்க் களித்தி யொப்பிலாய்
நினதரு ளேவலை நின்று செய்குவ
னினியவ ணேகல னென்று கூறினான்.

(எ-து.) அடியேனிடத்திற்கொடுத்த இந்த எமதருமபட்டத்தைத் தேவரீர்திருவுளத்திற்கேற்ற பேர்களுக்குக் கட்டளை பண்ணவேண்டும் ஒப்பில்லாதசுவாமி! அடியேன்தேவரீர்இட்ட ஏவற்றொழில்களை இங்குசெய்துவருகிறேன்,இனி அவ்விடத்திற்குப்போகேனென்று சொன்னான்.—எ-று. (௩௨)

கூறிய வியமனை நோக்கிக் கோதிலாய்
பேறரு ளெம்முடை யடியர் பெற்றியை
யூறுற முன்னுனக் குணர்த்தினே மெனுந்
தேறலைத் தேறலைச் சிந்தை தன்னினீ.

(எ-து.) இப்படிசொன்ன இயமதருமராஜனைப்பார்த்துஓ கோசுற்றமில்லாஇயமதர்மனே? அருள்பெற்றஎமதுஅடியார்கள் மகிமையை முன்னாலே உனக்குநாம்சொல்லியிருந்தும்உன்மனதில் உணரவில்லை என்றார் பரமேஸ்வரர்.—எ-று. (௩௩)

நன்னெறி யடியரு நாமும் வேறல
மென்னநின் றுணர்பவ ரெம்மை யெய்துவார்
நன்னெறி யடியரும் நாமும் வேறுமற்

(எ-து.) நல்ல நெறியையுள்ள நமது அடியாரும் நாமும் வேறல்லவென் றறிந்தவர்கள் நம்மைவந்தடைவார்கள், நமதடியாரையும் நம்மையும் பேதமாக வெண்ணுவோர்கள், நரகத்திலடைவார்கள் என்றார்.—எ-று. (நச)

தீதிலெம் மடியவர் சிந்தை வாழுமேன்
மேதினி யெங்கணும் விரவி வாழுமால்
தீதிலெம் மடியவர் சிந்தை வாடுமேன்
மேதினி யெங்கணும் விரவி வாடுமால்.

(எ-து.) குற்றமற்ற நமது அடியாருடைய சிந்தைமகிழ்ந்ததேயுண்டானால், பூலோகமெங்கும்மகிழ்ச்சியடைந்துவாழும், குற்றமற்ற நம்மடியார்களுடையசிந்தைவாடுமேயானால் பூலோகமெங்கும்வாடி இளைக்குமென்றார்.—எ-று. (நரு)

மாசொடு கூடிய மனத்த ராயினுந்
தேசொடு கூடிய செய்ய ராயினும்
பூசனை செய்தெதைப் போற்றினோர் தமை
நேசமோடியாமென நின்றுகாண்டியால்.

(எ-து.) அசுத்தம் பொருந்தியமனதுள்ளோரானாலும், பரிசுத்தமனதையுடையஞானவான்களானாலும், பூசைபண்ணி நம்மை துதிக்கப்பட்டபேர்களைப் பக்தியுடனே நாமென்று நின்று தெரிசனம் பண்ணென்றார்.—எ-று. (நசு)

உன்றனக் கரசிய லொழிந்திடா மலே
நின்றிட மனத்திடை நினைத்தி யேற்பிறி
தொன்றிலை யெம்பத முன்னி னோரைநா
மென்றுநீ கோடிமற் றெண்ணம் வேறற.

(எ-து.) இயமதர்மனே? உன்னிட அரசியல்புவிலகிப்போகாமல் நிற்கவேணுமென்று மனதிலே நினைத்தாயாகில், அதற்கு வேறொன்றில்லை, நமது திருவடியை யிடைவிடாதுநினைக்கு மடியார்களை நாமாகவெண்ணிக்கொள் மனதிலேஐயமில்லாமல்என்றார்.—எ-று. (நஎ)

தரைபுகழ் பத்திர தத்தைபெற் றருள்
ஒருகண னுதனெம் மிடத்தி லுற்றனன்
பொருவரு நினதுமா புரத்திற் கின்னமும்
[illegible] மகிழ்தல் செய்கலை.

(எ-து.) பூலோகம்புகழப்பட்டபத்திரதத்தையம்மைபெற்றவொப்பற்ற சானந்தகணேசன் நம்மண்டையிலிருந்துவிட்டான்,இனிஉனதுஇயமபுரத்துக்குவருவானென்று மனதிலேஎண்ணவேண்டாமென்றார்.—எ-று. (௩அ)

நின்பதி யெங்கணு நிறைந்து நல்லர்வந்
தின்பமுற் றிடுவரின் னேரமே செலாய்
வன்புரை நரகினும் வந்து வீழ்ந்துளந்
துன்பமுற் றிடுவர்க டொக்க தீயவர்.

(எ-து.)உன்பட்டணமெங்கும் நிறைந்துநல்லவர்கள், இப்பொழுதே வந்துஇன்பம்பெறுவார்கள், கொடிய நரகத்திலேயும் வந்து விழுந்து மனது துன்பப்படுவார்கள்அனேகம் பாவிகள் என்றார் பரமேஸ்வரர்.—எ-று. (௩௯)

திருந்துநின் னரசியல்சிதறிடா வகை
பொருந்துநிற் களித்தனம் போகிநின் னகர்க்
கருந்திரற் பாசமு மடல்வெஞ் சூலமு
மிருங்கதை தன்னையு மெடுத்துக் கொண்டியால்.

(எ-து.)திருத்தமான உன் அரசின்தன்மைசிதறாதபடியிருக்கவுனக்குக்கொடுத்தோம்போவாய், உன் பட்டணத்துக்குரிய பலமுள்ள பாசமும். வெற்றிபொருந்திய வெய்யசூலாயுதமும், பெருமையுள்ள தண்டாயுதமும் எடுத்துக்கொள்ளென்றார் பரமேஸ்வரர்.—எ-று. (௪௦)

என்றருள் செய்தன னெம்பிரா னவன்
பொன்றிகழ் திருவடி பணிந்து போற்றியே
நின்றுன தேவலி னிற்பனி யானெனத்
தென்றிசைக் காவலன் செப்பி மீண்டனன்

(எ-து.) இப்படியாகபரமேஸ்வரனருளிச்செய்தபின்பிறகு பொன்போலப் பிரகாசிக்கப்பட்டசுவாமி திருவடியிலேபணிந்து துதித்து தேவரீர்சொன்ன ஏவற்படிக்கு நிற்கிறேன்அடியேனென்றுதெட்சணதிசைக்குக் காவலான இயமதர்மன் சொல்லிக்கொண்டு திரும்பினான்.—எ-று. (௪௧)

மீண்டுதன் வாகனத் தேறி வெம்பட
ரீண்டுமுன் பின்[illegible]த்தி வந்திட

மாண்டவங் கத்துயிர் வந்ததொத் தெழில்
பூண்டதன் னகரிடைப் பொருந்தி நோக்கினன்.

(எ-து.) இயமதர்மராஜனானவன் மீண்டுந்தன் வாகனமான மயிடத்தின்மே லேறிக்கொண்டு பொல்லாத இயமபடாக்கள் முன்னும் பின்னுங்கூடிச் சேவித்துவர இறந்த உடம்பில் சீவன்வந்ததுபோல் அழகுபெற்ற தன்பட்டணத்தில் வந்துபார்த்தான்.—எ-று. (சஉ)

ஐயுடை முடங்குளை அரிசுமந் திடும்
துய்யபே ராசனத் திருந்து தோமிலான்
செய்யதன் னரசியல் செலுத்தி வாழ்ந்தனன்
வையக மெங்கணும் மதித்து போற்றவே.

(எ-து.) அழகுள்ள பிடரிமயிரோடுங்கூடிய சிங்கஞ்சுமந்த சுத்தமான சிங்காசனத்தில் இருந்துகொண்டு குற்றமில்லாத இயமதர்மராஜனானவன் செம்மையான தன்னிட அதிகாரஞ் செலுத்திகொண்டு பூலோகத்திலெங்கும் மதித்து போற்றும்படி வாழ்ந்தான்.—எ-று. (சஙு)

நற்றவர் பரவுசானந்தன் மாக்கதை
கற்றவர் கேட்டவர் கருத்தின் புற்றவர்
புற்றிய பவந்தனை நீக்கிப் பண்பொடு
செற்றமி லின்பலீ டுறுவர் திண்ணமே.

(எ-து.) நல்ல தவமுடைய பேர்கள் பரவப்பட்ட சானந்த கணேசருடைய இந்த மகாகதையைகற்றபேர்களும்கேட்டபேர்களும், மனதில் சந்தோஷித்தபேர்களும், தங்களைப் பிடித்த பாவத்தொடர்ச்சி நீங்கி பண்புடனேஅழிவில்லாத இன்பமுள்ள மோட்சமடைவார்கள் இது சத்தியம்.—எ-று. (சச)

நிருமல முடையவெண் ணீறு வாழ்கவே
வருமருள் கண்டிகை மாலை வாழ்கவே
ஒருதிற லஞ்செழுத் தோங்கி வாழ்கவே
அரனருள் பெற்ற வேரன்பர் வாழ்கவே.

(எ-து.) நிர்மலமான விபூதிவாழ்க, இஷ்ட காமியங்களைக் கொடுக்கப்பட்ட உருத்திராக்ஷமாலிகைவாழ்க, ஒப்பற்ற சாபானுக்கிரகமுள்ள பஞ்சாக்ஷரமோங்கிவாழ்க,பரமேஸ்வரனருளைப் பெற்ற அடியார்கள்வாழ்க.— (சரு)

வேறு.

மதிசூடி யருள் மிகுந்த சானந்தகணேசன் வர
லாற்றை யெல்லாம்
பதிமேவு பவழப் பாடிப் புலவன் நற் றமிழாற்
பாடல் செய்தான்
சதுர்வேத தாத்பரிய சங்கரக பாடல்புரி
சங்க மேசன்
றுதிமேவு வீரய்ய தேசிகரங் கதற்கு முரை
செய்தா ரன்றே.

(எ-து.) சந்திரனைத்தரித்தபரமேஸ்வரருடைய யருள்மிகப் பெற்ற சானந்தகணேசருடையசரித்திரங்களையெல்லாம்பவளப் பாடிப்பதியில் எழுந்தருளியிருந்த புலவரான பெரியவர் தமிழில் செய்யுளாகச் செய்தனர். அதை சதுர்வேததாத்பரிய சங்கிரக மென்னுஞ்சாஸ்திரப்பாடல்சொன்னவீரய்யரென்னும்பேர்கொண்ட சங்கமதேசிகன் உரைபடுத்தினர்.—எ-று. (சசு)

கைலைச்சருக்கம் முற்றிற்று.

ஆ பாயிரம் உட்பட சருக்கம் எ-க்கு
திருவிருத்தம்-சசுஅ.

திருச்சிற்றம்பலம்.

44

வேலுமயிலுந்துணை.

திருஉருமாமலை சுப்பிரமணிய சுவாமிமேல் இயற்றிய

கீர்த்தனம்.

இஃது

மதுரை பாதவித்வான் ஸ்ரீ கந்தசைமுத்துப்பிள்ளை அவர்கள்

சிஷியர்களில் ஒருவராகிய

திருநெல்வேலி வாசி, பகவந்தனை

சி. பிச்சாண்டி அண்ணாவியால்

இயற்றி

திருநெல்வேலிக் கஸ்பா ஸ்ரீமத் புராணிகர்

சோமசுந்தாம்பிள்ளை அவர்களாலும்

திருநெல்வேலிக் கஸ்பா

செட்டில்மெண்டு ஆபீஸ் ஹெட் ரைட்டர் ஸ்ரீமத்

சோ. காந்திமதிநாதபிள்ளை அவர்களாலும்

பரிசோதித்து

பக்தசிரோமணிகளின்

பொருளுதவியால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

1915ஆ. ஜனவரி 20உ.

உ

வேலுமயிலுந்துணை.

திருஉருமாமலை
சுப்பிரமணிய சுவாமிமேல் இயற்றிய
கீர்த்தனம்.

இஃது

மதுரை பரதவித்வான் ஸ்ரீ கங்கைமுத்துப்பிள்ளை அவர்கள்

சிஷியர்களில் ஒருவராகிய

திருநெல்வேலி வாசி, பசுவந்தனை

சி. பிச்சாண்டி அண்ணாவியால்

இயற்றி

திருநெல்வேலிக் கஸ்பா ஸ்ரீமத் புராணிகர்

சோமசுந்தரம்பிள்ளை அவர்களாலும்

திருநெல்வேலிக் கஸ்பா

செட்டில்மெண்டு ஆபீஸ் ஹெட்ரைட்டர் ஸ்ரீமத்

சோ. காந்திமதிநாதபிள்ளை அவர்களாலும்

பரிசோதித்து

பக்தசிரோமணிகளின்

பொருளுதவியால்

சென்னபட்டணம்

சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

1915ஆ ஜனவரிமீ 20உ.

சாத்துகவிகள்.

ஸ்ரீமத் புராணிகர்

சோமசுந்தரம்பிள்ளையவர்கள்

திரை யெலாம் பொன்சொரியும் பொருநையிடைத்
திருவுருமாமலையிற் செந்தா
மரை மலரிற் றிருமார்பன் முதலானோர்க்
கருள்புரிந்து வைகுஞ்செவ்வேட்
குரையி னிசைப் பதம்பாடி யவன்பாத
மலர்சூடி யுவப்புற்றானால்
தரை புகழு நெல்வேலி தழைக்கவளர்
பிச்சாண்டிப் புலவன் றானே.

செட்டில்மெண்டாபீசு ஹெட்ரைட்டர் ஸ்ரீமத்

சோ. காந்திமதிநாதபிள்ளையவர்கள்.

சீரார் உருமலைவாழ் செவ்வேள் துணைப்பதத்தை
ஏரார்கீ தப்பதத்தா லேத்தினான்—நேரே
இசைப்புலவர் மெச்சும் எழிலார்பிச் சாண்டி
நிசப் புகழே யெய்த நிலைத்து.

காப்பு.

திங்களு நதியுஞ் சூடுஞ் சிவனரு ளாலே வந்த
செங்கதிர் வேலன் மீது செந்தமிழ்ப் பதங்கள் பாடப்
பங்கயப் பதத்தா ளாதி பரைகாந்தி மதியாள் பெற்ற
ஐங்கரன் சீர்பாதங்க ளருள்செயுங் காப்ப தாமே.

கணபதிஸ்தோத்திரம்.

இராகம் - நாட்டை. தாளம் - ரூபகம்.

பல்லவி.

சித்திவினயகனே சர்வ
சிவதாரகனே சர்வ (சித்தி)

அனுபல்லவி.

முத்தர்கள்முதல் சித்தர்போற்றிய
கர்த்தனேபரி சுத்தனுகிய. (சித்தி)

சரணம்.

1-வது. சகலாகம காரணனே
சசிவர்ணநிராமய னே
மகவாரணமாமுக னே
மிருகமூஷிக வாகனனே
சுந்தரவுருமலை வேலனைச்
சந்ததந்துதித்திடும்பாலனைச்
சிந்தைவைத்திரங்கிநல்லறிவினைத்
தந்துகாத்திடுவாயுன்மைந்தனை. (சித்தி)

2-வது. இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ஆதி.

பல்லவி.

அருள்தாவேணு மையாஉனைத்துதிக்க (அருள்)

அனுபல்லவி.

உருமலைஅமர்ந்திடும் உம்பர்கோன்மருகா (அருள்)

சரணம்.

1. சந்ததமும்உனை நம்பிடும்நாயேனை
இந்தவேளைவந் துவந்துஆதரித்து (அருள்)

2. பாரினில்உன்னையே பரமென்றுநம்பின
காரியந்தெரிந்துநீ கைவிடலாமோ (அருள்)

3. கனவினில்வந்துஎன் மனமகிழ்ந்ததுபோல்
தினமுமெனக்குநீ கனநிதிதந்து (அருள்)

4. உந்தனுமங்களை உவந்துதுதித்தபேர்க்கு
இந்தக்கெதியோமன மிரங்கலையோஎனக்கு. (அருள்)

3-வது. இராகம் - சாவேரி. தாளம் - ஆதி.

பல்லவி.

குடியிருக்கவெனக்கு மனையதுதந்துஎன்
குறைகளைத்தீர்த்திடுவாய் குமரகுருபரனே (குடி)

அனுபல்லவி.

படிமிசையுனையன்றிப் பகர்ந்தெவரிடத்தும்என்
கொடுமையையுரைப்பதிற் குணமோகுமரேசனே (குடி)

சரணம்.

1. பறவைகள்மிருகங்கள் பாரிலுள்ளசென்மங்கட்கும்
பதிவாயிடமறிந்து பகுந்துகொடுத்த நீ யேன்
திரமாயெனக்கோரிடம் திட்டமாய்க் கொடுக்காமல்
திகைப்புடனேயிருந்தால் திக்குவேறுண்டோ குகா (குடி)

2. மாதாவளர்ந்திடும் மனையுஞ்சதமில்லாமல்
மகிழ்ந்துவளர்த்தபிதா மனையுஞ்சொந்தமில்லாமல்
ஆதாரம் நீ யென்று அடுத்தேன் உன்னிருபதம்
அடிக்கடிகண்டுநான் அகமகிழ்வதற்கான (குடி)

3. இகத்தில் உன்னைக்கண்டு தெரிசிப்பதற்கான
இல்லிடம்பெறுவதே இன்பமென்பார்மேலோர்
அகத்தினில் அனுதினம் அமர்ந்திடும் அறுமுகா
ஆனந்தத்தாண்டவம் ஆடும்பரமன் பாலா. (குடி)

4-வது. இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ஆதி.

பல்லவி.

கருணைசெய்யலாகாதா கதிர்வடிவேலனே (கருணை)

அனுபல்லவி.

கெருவித்தலையும் இந்தச் சிறுவனையாதரித்து (கருணை)

சரணம்.

1. பிறப்பிறப்பெனுமாயப் பெருங்கடலில் மூழ்கிமேற்
பெறப்படுவகையின்ன தென்றறியாப்பேதைமேல் (கருணை)

2. பெண்ணாசையெனுமொரு பெருஞ்சுழல்தனிற்சிக்கி
யெண்ணுதளண்ணுமிந்த ஏழைநான்கடைத்தேற (கருணை)

3. மாயவாழ்வதைநம்பி மதிகெட்டலையுமிந்தப்
பேயனுன்திருவடி பிடித்தானந்தமாய்ப்பாட (கருணை)

4. மாயரோகமதனால் மயங்கிவருந்தும் இந்தச்
சேயன்படும்பாட்டைத் திருக்கடைக்கண்ணாற்பார்த்து (கரு)

5. அருமறைபோற்றுமிந்தத் திருவருமாமலையில்
கருணாநிதிபோல்வந்துன் கழலிணைதந்தெனக்கு. (கருணை)

5-வது. இராகம் - நாட்டைக்குறிஞ்சி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

சந்தத மும் மற வேனே சண்முகனே (சந்த)

அனுபல்லவி.

சுந்தரமிகும் உருமலைவாழ்
சுப்பிரமணியா உன்தெரிசனம் (சந்த)

சரணம்.

1. அறுமுகமும்பன் னிருகையுமுந்தன்
திருமுகந்தனில் வருங்கருணையும்
அருகினிற்பெண்கள் இருவரிருக்கும்
திரு அழகும் என் னிருதயந்தன்னில் (சந்த)

2. காலனிருகையாற் சூலபாசங்கொண்டு
தாலமதிலினிச் சாலஞ்செய்துமேலும்
சூலபாசத்தினால் மாளச்செய்தபோதும்
காலகாலன்பெற்ற வேலாஉன்னிருபதம் (சந்த)

3. பெற்றபிள்ளைகளைத் தாய்மறந்தாலும்
பிரமன்விதித்திடல் தனைமறந்தாலும்
உற்றஉடல்தனை உயிர்மறந்தாலும்
உருமலைவாழுங் குகாவுன்தெரிசனம். (சந்த)

6-வது. இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ஆதி.

பல்லவி.

வடிவேலாயுதக்கையா வா (வடி)

அனுபல்லவி.

நடமிடுமயில் மீதிலே (வடி)

சரணம்.

1. வள்ளிமேலாசைகொண்டு வேங்கை
மாமரமாகிநின்று கள்ளத்தனமாய்ச்சேர்ந்த (வடி)

2. சூரசங்காரஞ்செய்து சூரர்
கோமான்சேயைமணந்து பரமானந்தமாய்மகிழ்ந்த (வடி)

3. பாசவிருளகற்றி யெந்தன்
பந்தவினையகற்றி விசுவாசமாயெந்தன்முன்னே (வடி)

4. மாங்கனிக்காகவே மாமயில்
மீதேறிச்சென்றுவந்த காங்கேயாவினைதீர்ப்பாய் (வடி)

5. இந்தக்ஷணத்திலென்மேல் மன
மிரங்கியேவாராவிடில் நானுந்தனைவிடுவேனோ. (வடி)

7-வது. இராகம் - சாவேரி. ஆதி - தாளம்.

பல்லவி.

பந்தநோய்தீர்த்தருள்வாய் எவருமிகழ்ந்த (பந்த)

அனுபல்லவி.

சுந்தரமிகுமுரு மாமலைவளர்குகா
முந்தைவினைப்பயனால் தொந்தரவுசெய்யுமென் (பந்த)

சரணம்.

1. உனக்கும்எனக்குமெப்போதும் உண்டோசொல்மிகவாது
உலகோர்ஞானபண்டித னெனச்சொல்லுவதேது
தினைப்புனவள்ளிதெய்வ யானையுடன்மயில்மீது
தீக்ஷண்யமாகவந்து தரிசனம்நீதந்திப்போது (பந்த)

2. விளக்கைப்பிடித்துகொண்டு கிணற்றில்விழுவாருண்டோ
வேண்டும்பொருள்கள்வைத்துப் பசித்திருப்பாருண்டோ
களத்தில்வந்துமிதம் பேசிமகிழ்வாருண்டோ
கதிர்வடிவேலவனே கருத்தினில்வஞ்சமுண்டோ ()

3. வேதனெனக்கிப்படி விதித்தவிதியானாலும்
மேருவைச்சேர்ந்தகாகம் பொன்னிறமேயானாலும் [ம்
பூதலமதிலிந்தப் பழமொழிபொய்யாய்ப்போனாலு
புகல்வேறுண்டோசொல் முருகாஇனியாகிலும். (பந்த)

8-வது. இராகம் - எதுகுலகாம்போதி. தாளம் - ஆதி.

பல்லவி.

எத்தனைவிதஞ்சொல்லியுஞ் சித்தமிரங்காமற்சும்மா
இருக்கின்றவகையேதை யாமுருகையா
ஏழைமேல்என்னவா தையா

அனுபல்லவி.

முத்தர்புகழும்உரு மாமலைவாழ்கின்ற
கர்த்தனேயுந்தன்பணிக் காளாக்குவாயென்றுநான் (எத்)

சரணம்.

1. வள்ளிதெய்வானையுடன் மகிழ்ந்திருந்ததினாலோ
மாதவத்தோருன்னை வணங்கிநின்றதினாலோ
புள்ளிமயிலேறிப் பொருந்திநின்றதினாலோ
புனிதமானகாம்பீரப் பொருநையொலியினாலோ (எத்)

2. இன்பந்தருமாதர்கள் தம்புருமீட்டியே
இசையேழுடனேபாட இன்பமாய்க்கேட்டதாலோ
பண்புடன்பெண்கள்வந்து பரதநாட்டியமாடிப்
பாடுந்திருப்புகழைப் பக்தமாய்க்கேட்டதாலோ (எத்)

3. இந்திராதிதேவர்வந்து
எந்தையேசங்காரஞ்செய்து
அந்தத்தருணம்சென்று
சந்தோஷமாகவந்த
இடுக்கண்செய்யுஞ்சூரனை
எங்களைரக்ஷியுமென
அனைவோரையும்வென்று
சரவணபவனேநான் (எத்)

9-வது. இராகம் - காம்போதி. தாளம் - சாபு.

பல்லவி.

இந்தவேளையில் வந்துகாஜியாபன் னிருகையா
எந்தன்கவலையை த்தீர்த்துஆ ளய்யா (இந்த)

அனுபல்லவி.

சொந்தஅடிமைமேல் இந்தவர்மமேன்
எந்தையேயென க்காருந்துணையில்லை (இந்த)

சரணம்.

1. ஆழிசூழ்உல கெல்லாம்அலைந்தாலும்
அவரவர்கள்மனம் போலநடந்தாலும்
ஆழிமத்தியில் அமர்ந்தோன்மருகனே
அஞ்சுமனதைஅ றிந்துசொல்வாரில்லை (இந்த)

2. அன்னைதந்தையர் பெண்டிர்பிள்ளைகட்
ககமகிழ்ந்திடஎந் நாளும்உழைத்தாலும்
என்னைப்பாதுகா த்துரெக்ஷிப்பதற்
குன்னையல்லாலிங் கொருவரில்லைஅய்யா (இந்த)

3. திருவுரு மா மலையில் அமர்ந்திடும்
தெய்வயானைவள்ளி மகிழும்லோலனே
ஒருவர்துணையின்றி யிருக்கும்சிறியேன்முன்
உவந்துன்னிருபதக் காட்சிதந்துநீ. (இந்த)

10-வது. இராகம் - சுருட்டி. தாளம் - ஆதி.

பல்லவி.

வெறியெனும்பேய்பிடி த்தலையாமலேதினம்
வேலனைத்துதிமன மேதினமேவேலனைத்துதிமனமே ()

அனுபல்லவி.

அருமறைபுகல்கின்ற திருஉருமலையில்வாழ்
அறுமுகவேலனே அனுதினம்துக்காமற்காம (வெறி

சரணம்.

1. பெருந்தன்மையென்றவொரு குணமதைமறந்து
பெண்களேபெரிதென்று பேசியேபுகழ்ந்து
வாமுறையெனும்ஒரு வாம்பினைக்கடந்து
மதியாதார்வீட்டில் அடிக்கடிநுழைந்துகாம (வெறி)

2. கஷ்டப்பட்டுத்தேடிய பொருள்தனைக்கொடுத்துக்
காதலியேநீயே தெய்வமென்றடுத்து
இட்டவேலைகளெல்லாம் செய்வேனென்றெடுத்து
இலவுகாத்தகிளிபோல் மதிதனைக்கெடுத்துக்காம (வெறி)

3. பெரியோர்தனைக்கண்டு பணிவதைப்போக்கிப்
பெற்றோர்கள்மனத்தினில் வருத்தமுண்டாக்கிப்
பொறிபுலன்கெட்டுநல் அறிவினைநீக்கிப்
புழுதிதனிற்புரளும் கழுதைதனக்கீடாக்கிக்காம (வெறி)

11-வது இராகம் - அடாணா - தாளம்.

பல்லவி.

உருமாமலைவாழ் வடிவேலனைப் போலிந்த
உலகினிற்றெய்வம் கிடைக்குமோதிரு (உரு)

அனுபல்லவி.

திருமால்மரு காவென்றொருதரம்
சிந்தித்திடமாமயில்மிசை சந்தித்தருள்புரியுந்திரு (உரு)

சரணம்.

1. கந்தமலர்கொண்ட டியவர்போற்றிடும்
காந்திமதி பா லன்வளர்
கானகத்தினில் மா னீன்றிடும்வள்ளியைக்
கலந்தணைந் த லோலன்
பந்தவினைஅறுத் திடும்வடிவேலன்
பக்தர்கட்கின்பமே தந்திடுஞ்சீலன்

பததாமரைமறவாதவர்க்
கிதமேதருமுருகன்திரு. (உரு)

2. வஞ்சகஞ்செய்திடும் சூரர்கிளையற
மாய்த்தரணசூ ரன் ஒரு
மந்திரமறியாப் பிரமனைச்சிறையில்
வைத்தகுணதீ ரன்
தஞ்சமென்றோர்களைக் காக்கும்தயாபரன்
சற்சனர்கட்குமி கவுபகாரன்

தகதெய்யென நடமாடிடுஞ்
சிகிமீதினில் வருவான்திரு (உரு)

3. பக்தரகத்தினில் அன்பாய்விளையாடும்
பாலகுக நா தன் அவன்
பாதமலர்தனைக் கண்டுதுதிப்போர்க்குப்
பாக்கியந்தருநீ தன்
முத்திக்குவித்தெனச் சொல்லுநற்போதன்
முனிவனுக் குப தேசஞ்செய்யும்நாதன்

உறுமாமலைதொறும் ஆடல்செய்
கருணாநிதிமுகில்சூழ்திரு (உரு)

12-வது இராகம் - முகாரி. தாளம் - சாபு.

பல்லவி.

கந்தநா தனைநினை மனமே உருமலைவாழ்

அனுபல்லவி.

மந்திர வடிவேலன் வள்ளிதெய் வானைலோலன்
வாலைஅம் பிகைஅருள் பாலன்குண சீலனுருமலைவாழ் (கந்)

சரணம்.

1. சுந்தரி யாள்குமரன் சூரசங் காரதீரன்
இந்திர னிடர்தீர்த்த வீரன் சுகு மாரன்உருமலைவாழ் (கந்)

2. பக்தர்கட் கருள்நேசன் பரகதி தரும்ஈசன்
முக்தித ரும்இன்ப வாசன்விசு வாசன்உ ருமலைவாழ் (கந்)
3. சங்கீத கானப்பிரியன் சற்சனர் அகப்பிரியன்
இங்கிதகோலாகல ப்பிரியன்ஜெகப் பிரியன்உ ருமலைவாழ் (கந்)

4. கந்தன் கடம்பன்குகன் கார்த்திகே யன்முருகன்
சுந்தர அறுமுகன் வேலன் கா ங்கேயன்உ ருமலைவாழ் (கந்)

13-வது இராகம் - கமாசு. தாளம் - ரூபகம்.

பல்லவி.

கந்தனேநான் உந்தன்பதத்தைச்
சந்ததமும் மறவாதருள்செய் (கந்த)

அனுபல்லவி.

சுந்தரமிகும் உருமலைதன்னிற்
சூரைவதைத் திடும்வடிவேலா (கந்த)

சரணம்.

1. சச்சிதானந் தத்தின்சொரூபம்
தன்னையறி யாதவரிடம்
மெச்சுமெந்தன் சித்தமதை
வேறறக்களைந் தாதரித்து (கந்த)

2. மாயவாழ்வு தன்னைநம்பி
மகிழ்ந்துஇதம் பேசுவோரிடம்
தாயகமாய் எண்ணும்மனதின்
சஞ்சலம்தீர்த் தருள்செய்து (கந்த)

3. தன்னையறியாத் தன்மையுடையார்
தன்னிடத்திற் சாரும்மனதைச்
சின்னபின்ன மாகச்செய்து
சிறியேன்கடைத் தேறும்வண்ணம் (கந்த)

14-வது இராகம் - சங்கராபரணம். தாளம் - ஆதி.

பல்லவி.

சண்முகாசிறியேனைத் தடுத்தாட்கொள்ளலாகாதா

அனுபல்லவி.

மன்மதனைப்பெற்ற மால்விடையோன்பாலாஉன்
நன்மலர்ப்பதத்தை நாடிப்பாடித்துதிக்க (சண்)

சரணம்.

1. ஆருந்துணையில்லாமல் அலைந்திடும்பேயனை
பாருள்ளோர்நகைத்திடாப் பக்திதனக்காளாக்கி
வேறுசிந்தனைவந்து வேதனைசெய்திடாமல்
வேண்டினேன்வேண்டினேன் வேளையிதுவேதானே (சண்)

2. இந்நிலந்தன்னில்இந்த ஏழையைக்கண்பார்க்க
உன்னையல்லால்வேறே ஒருவர்துணையுமுண்டோ
கன்னிவள்ளிதெய்வானை கணவாவுன்னிருபதம்
எண்ணினேன்எண்ணினேன் இதுவேதருணந்தானே (ச)

3. பருவத்திற்பயிர்செய்தாற் பயன்பெறலாமதுபோல்
திருவுருமாமலைக்குட் சிறந்தவடிவேலா
கருமவினைப்பயனாற் கட்டுண்டலையுமென்னைக்
காத்தருள் காத்தருள் கருணைசெய்திந்தவேளை (ச)

15-வது இராகம் - கமாசு. தாளம் - ரூபகம்

பல்லவி.

உன்னையல்லால் வேறேயென க்குற்றவரு ண்டோபன்னிருகையனே (உன்)

அனுபல்லவி.

இன்னம்என்ன தின்மேல்வாதா
இதுநியாயமாஇதுவாகுமா இதுதர்மமா உபகாரமா (உன்)

சரணம்.

1. பெற்றபிள்ளைகள் செய்தகுற்றத்தைப்
பொறுப்பதுதாய் கடமையல்லவோ
சற்றும் அறிவில் லாதவனானாலும்
சதுர்மாமுகன்முடிதூள்படச் சிதையச்செய்தகுகனேயினி (உ)

2. கொடும்பிணிகளைத் தீர்க்கலாகாதா
கொடியோன்நான்பட்ட பாடுகள்போதாதா
கடைக்கண்ணால்நோக்கி ஞலிப்பிணிபோகாதா
கந்தாமிகத்தந்தாகவி ருந்தாலுலகந்தானதில் (உன்னை)

3. திருஉருமா மலையில்வாசா
செகந்தனில்துதி பெறும்பிரகாசா
மருமலர்க்குழல் வள்ளிநேசா
வந்தாள்அருள்தந்தாள்பதம் தந்தாள்கெதிதந்தாள்புகழ் (உன்)

16-வது இராகம் - காபி. தாளம் - ஆதி.

கண்ணிகள்.

1. சந்திரசேகரன்பெற்ற சரவணபவன் தன்னைச்
சிந்தையில்துதிசெய் தால்மனமே
ஜென்மம்ஈடேறிடு மே மனமே

2. காந்திமதியாள்பெற்ற கருணாநிதியின்பாதம்
தாழ்ந்துதுதித்தோமா ஞல்மனமே
சகலமும்சித்தியா மேமனமே

3. மானிடச்சென்மம்பெற்றும் வடிவேலனைத்தொழாமல்
வீணிலேநாட்கழி த்தால்மனமே
விதியைநொந்தாவு தென்ன மனமே

எ. சூரசங்காரஞ்செய்த சுப்பிரமண்யனைத்தினம்
நேரதாய்த்துதிசெய் தால்மனமே
நிதிபலபெற்றுவாழ் வாய்மனமே

5. வள்ளி அழகைக்கண்டு மயக்கமிகவேகொண்டு
உள்ளமகிழ்ந்த வனேமனமே
உறுதியாய்த்தான்துதி ப்பாய்மனமே

6. ஆண்டிகட்கன்பானவன் அவருடன்ஆடும்அன்பன்
வேண்டும்வரம்கொடு ப்பான்மனமே
மேதினியிலுள்ளோர்க் கெல்லாம்மனமே

7. உள்ளத்தினுள்ளேநின்று ஒளிபோற்பிரகாசிக்கும்
வள்ளிதெய்வானைபங் கன் மனமே
மலர்ப்பதம்பூசிப்பாயே மனமே

17-வது இராகம் - காபி. தாளம் - ஆதி.

கண்ணிகள்.

1. நெல்லைநகர்வாழும்எங்கள் காந்திமதிபாலன்
நீலமயிலேறிவிளே யாடுமதிலோலன்
எல்லையிலா ஆனந்தமாய் நின்றவடிவேலன்
என்றுவருவான் அவனை க்கண்டுபணிவேனே

2. கானகத்தில்வாழும்குற க்கன்னிதனைக்கண்டு
காதல்மிகுந்தேகிழமாம் ஆண்டிஉருக்கொண்டு
தேனுந்தினைமாவும்மிக வாங்கிவாங்கியுண்டு
சேர்ந்தவனைப்போவருவான் தாழ்ந்துபணிவேனே

3. தேவர்கள்சிறைவிடுக்கச் சேனாபதியாகி
சிவசரவணப்பொய்கையில் வந்துதையமாகி
மாவறுத்துச்சூரர்கிளை மாய்த்திடவேலேவி
வாதுசெய்தோன்பதமெ ப்போதுபணிவேனே.

4. வேதனைச்சிறையில்வைத்த வேலனெனும்வீரன்
வேங்கைமரமாகிநின்ற வேடர்புகழ்மாரன்
ஆதிபராசத்திபெற்ற அறுமுகக்குமாரன்
அன்புடனைப்போவருவான் இன்பம்பெறுவேனே

5. அன்பருடன்கூடிவிளே யாடிடும் வேந்தன்
ஆடுமயில்மீதினில் மர்ந்தகுணசாந்தன்
இன்பந்தரும் வள்ளிதெய்வ யானைமகிழ்காந்தன்
ஏகாந்தங்கண்டுநான்சு கானந்தமாவேனே

6. முத்திதரும்தாம்பிரவர்ணி மத்தியிலமர்ந்த
முத்தர்புகழ்ந்திடும் உரு மாமலையில்வந்த
சத்திவடிவேலனெனும் சாந்தகுணகந்த
சாமியிருபாதமலர் நானெப்போபணிவேனோ

18-வது இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ஆதி.

பல்லவி.

துதிப்பதெப்போதுநெஞ் சேவேலன்பதத்தை (துதி)

அனுபல்லவி.

பதிதனிற்பிறந்துநாமதிகெட்டேயிருந்தால்
பக்தர்புகழும் உருமாமலைக்குகனை (துதி)

சரணம்.

1. பாவையராசையே பெரிதென்றெண்ணியவர்
பணிவிடைகளேமிகநன்றெனக்கருதி
ஈவதிரக்கமிலாக் கொடுமைதனைச்செய்தே
இகத்தினில்வாழ்நாளை யிப்படிக்கழித்தால் (துதி)

பொருள்தேடுவதற்காக ஆயிரம்பொய்சொல்லிப்
பிழைப்பதே அனுதினம்வேலையாய்த்திரிந்து
தருணம்பார்த்துக்கொலையாகிலுஞ்செய்து
தனம்பறிப்பதுவே நினைவதாயிருந்தால் (துதி)

3. மாடகூடங்கள் மேடைகளாகிய
மண்மனைமீதினில் ஆசைகள்கொண்டு
தேடத்தேட இன்னம்வெறுப்புகள் இல்லாமல்
தினமும்அலைவதேநினைவதாய் இருந்தால் (துதி)

4. அன்னைவயிற்றினிற்பிறந்தநாட்கொண்டு
அற்பவாழ்விலே அகமகிழ்கொண்டு
தன்னைத்தானேபெரிதெனக்கர்வம்கொண்டு
சாதனைசெய்திடும்பேய்தனைவிண்டு (துதி)

19-வது இராகம் - நாதநாமக்கிரியை. தாளம் - ரூபகம்.

பல்லவி.

உருமாமலை வேலனைத்தினம்
உவந்துதுதிக்க வேணும் நெஞ்சமே (உரு)

அனுபல்லவி.

கருமப்பிணியை நீக்கி நங்கள்
கலிகள்தீர்ந்திட அருள்செய்வான்திரு (உரு)

சரணம்.

1. அன்னைவயிற்றிற் பிறந்தோம் - இந்த
அகிலமதனில் திரிந்தோம் - சும்மா
தன்னைச்சதமென்று இருந்தோம் - மேலாம்
சற்சனர்கூட்டத்தை மறந்தோம் - திரு (உரு)

2. பக்தியென்பதை இழந்தோம் - பொல்லாப்
பாவையர்மோகத்தில் விழுந்தோம் - நல்ல
புத்திதனை அறக் களைந்தோம் - கொடும்
பொய்சொல்லும்பேழையாய் வளர்ந்தோம் - திரு (உரு)

3. பாதகனெனப்பேர் படைத்தோம் - எவரும்
பார்த்துநகைக்கநோ யடுத்தோம் - ஒரு
ஏதுவும்இல்லாமல் துடைத்தோம் - தேகம்
எய்த்து இளைத்துமே சடைத்தோம் - திரு (உரு)

20-வது இராகம் - பியாகடை. தாளம் - சாபு.

பல்லவி.

ஆடுமயில்மீதில் அமர்ந்தபன் னிருகையா
அடியேனைக் கண்பா ரையா வேல்முருகையா (ஆடு)

அனுபல்லவி.

தேடுதற் கரிதான திருஉரு மாமலையில்
தினமும்அ றுமுகன்முன் தித்தளாங்குதத் தோம்தத்தோமென (ஆடு)

1 - வது சொற்கட்டு ஜதி.

1. தக்கிட்ட, கிட்டதரி தாதத்தோ மென ஆடும்
2. திக்கிட்ட, கிட்டதரி தாதத்தோ மென ஆடும்
3. தொங்கிட்ட, கிட்டதரி தாதத்தோ மென ஆடும்
4. நங்கிட்ட, கிட்டதரி தாதத்தோ மென ஆடும்

2 - வது சொற்கட்டு ஜதி.

1. தரிகு திரிகுகு திரிகு தரிகுகு
   தக்கிட்ட, தக்கிட்டதி த்தா தத்தோமென ஆடும்
2. திரிகு தரிகுகு தரிகு திரிகுகு
   திக்கிட்ட திக்கிட்டதி த்தா தத்தோ மென ஆடும்
3. தொங்குடு தொணகுடு தொனகு தொனகுடு
   தொங்குடு தொங்குடுதி த்தா தத்தோ மெனஆடும்
4. நங்குடு நனகுடு நனகு நனகுடு
   நங்குடு நங்குடுதி த்தா தத்தோ மெனஆடும்

3-வது சொற்கட்டு ஜதி.

1. தகுந்தகுகுதரி தரிகுஜெம்தரி தாகஜெம்தரி தரிதகிடதக
   தகுந்தகக தரிததக ஜெணுததக திமிதத்தோ மெனஆடும்
2. திமிததிமிதக திமிதகிட்டதக தீணுதத்திமி தித்தணந்தரி
   திகிடதக திமிததிமி ஜகததிமி தாதத்தோ மெனஆடும்
3. தொம்தகிடதக தொந்தணம்தரி தோகுஜெகதரி தோகுணகதக
   தொம்கிடதக தொங்கிடதிமி தொங்கிட்டகிட்டதரி தாதத்தோ மென
   [ஆடும்
4. ணம்தகுகுந்தரி ணகதஜெகதக ணகுஜெம்தரி ணகதகிடதக
   ணகதஜெக ணகததக ணகததரி தாதத்தோ மெனஆடும்

1

4-வது திரிகால சொற்கட்டு ஜதி.

தத்தினம்தகதரிகிடதக தாதகதிமி தாதகஜெணு தாதரிகிடதக
தகதின்னம்தகதரிகிடதக தாதகதிமி தாதகஜெணு தாதரிகிடதக

தாதின்னம்தகதரிகிடதக தகதின்னம்தகதரிகிடதக
தணுகுகிணுகுதரேகுத ஜேகுதாததிங்கிணத்தோம்
தணுகுகிணுகுதரேகுத ஜேகுதாததிங்கிணத்தோம்
தணுகுகிணுகுதரேகுத ஜேகுதாததிங்கிணத்தோம்
என ஆடும்

2

தீங்குணுங்குதத்திதகதிமி தாதிமி தாதிருகிடு தாதிருகிடுதரிகிடதக
திருகிடுதணுங்குதத்திதகதிமி தாதிமி தாதிருகிடு தாதிருகிடுதரிகிடதக
தீங்குணுங்குதத்திதகதிமி திருகுடுதணுங்குதத்திதகதிமி
திமிகிடதா, திமிதணதா திமிதிருகிடுதாததிங்கிணதோம்
திமிகிடதா, திமிதணதா திமிதிருகிடுதாததிங்கிணதோம்
திமிகிடதா, திமிதணதா திமிதிருகிடுதாததிங்கிணதோம்
என ஆடும்

3

தொம்கிடதகி தொம்தொம்கிடதகி தாதொனகிட தாதொனகிடதெய்
தொம்தொம்கிடதக
தொனகிடதகி தொனகிட கிடதகி தெய்தொனகிட தாதொனகிடதெய்
தொனகிடகிடதக
தொம்கிடதகி தொம்தொம்கிடதகி தொனகிடதகி தொனகிடகிடதகி
தொம்கிடதா தொனகிடதா தோகுடுதா ததிங்கிணத்தோம்
தொம்கிடதா தொனகிடதா தோகுடுதா ததிங்கிணத்தோம்
தொம்கிடதா தொனகிடதா தோகுடுதா ததிங்கிணத்தோம் என ஆடும்

4

னங்கிடதகினன்னங்கிடதகி தானங்குடு தானம்தரி தாணகணம் ஜெகணம்
தரி
னனகிடதகினனகிடகிடதகி தாணங்குடு தாணம்தரி தாணகணம் ஜெகணம்
னங்கிடதகினன்னங்கிடதகி னனகிடதகினனகிடகிடதகி தரி
னங்கிடதானனகிடதா ணம்தரிதா ததிங்கிணத்தோம்
னங்கிடதானனகிடதா ணம்தரிதா ததிங்கிணத்தோம்
னங்கிடதானனகிடதா ணம்தரிதா ததிங்கிணத்தோம் என ஆடும்

5-வது ஜாதிபேதச் சொற்கட்டு.

1-வது சதுரசிர ஜாதி.

தகதிமி தகஜெணு தகதரிகிட தகதாததிங்கிணத்தோ மென ஆடும்

2-வது திசிர ஜாதி.

தணதஜெணுத திமிதகிடத ஜெகததா ததிங்கிணத்தோ மென ஆடும்

3-வது மிசிர ஜாதி.

தரிதணகதக ணகததிமிதக தாததிங்கிணத்தோ மென ஆடும்

4-வது கண்ட ஜாதி.

தகதகிடதக ஜெணுததகதிமி தாததிங்கிணத்தோ மென ஆடும்

5-வது சங்கீர்ண ஜாதி.

தகஜெணுதகத கிடதகதிமித கதரிததத்தளாங்கு தாததிங்கிணதோ மென ஆடும்

ஆடும்ம யில்மீதில் அமர்ந்தப ன்னிருகையா
அடியேனைக் கண்பா ரையா வேல்முருகையா

சரணம்.

1. அற்புத மாகிய ஆதவன் தன்னையும்
அழகுள்ள சோமனை யும் வெகு
சொற்பமெ னவிழுங்கிச் சுறுக்காக உமிழ்ந்திடும்
சுந்தரன் அணியும்பைப்பணியும ருண்டுசோர்ந்திட (ஆடும்)

2. ராகவன் தம்பிலெக்ஷ் மணன் மீதினில்
ராவணன் மைந்தன்எய் த ஜெய
நாகபா சந்தன்னை யேகச்செய் தகெருடன்
நயந்துப யந்துமிக த்தியங்கிம யங்கச்செய்து (ஆடும்)

3. பாற்கடல் மத்தியிற் பத்மனு பன்றனக்குப்
படம்விரி த்தாதர வாய்த் தினம்
காக்கும்அ னந்தன்சிரம் ஆயிரமும் உதிர்ந்திடக்
கால்களால் அடித்துக்க ம்பீரத்து டன்நின்று (ஆடும்)

21-வது இராகம் - மோகனம். தாளம் - ரூபகம்

பல்லவி.

உறைமருந்தொன்று இருக்குது திரு
உருமாமலைக்குள் ளேமனதில் (உறை)

அனுபல்லவி.

திரைகடல்சூழ் உல கெலாம்அலைந்தாலும்
செப்பும் ஞானபண்டி தனுகிமன தில் (உறை)

சரணம்.

1. ஆசாபாசமதைப் போக்கும்மருந்து
அன்பர்பழவினை நீக்கும் மருந்து
ஈசர்க்குபதேசம் தாக்கும் மருந்து
ஏழைகளைக்கண் பார்க்கும்மருந்து மனதில் (உறை)

2. வேணுவனேஸ்வரன் பெற்றமருந்து
வீதியிலே உலா வற்றமருந்து
சேனபதியெனப் பேர்பெற்றமருந்து
சிந்திப்போர்க்குக்காட்சி யுற்றமருந்து மனதில் (உறை)

3. மாதவரகத்தில் ஆடும் மருந்து
வள்ளி தெய்வயானை தேடும் மருந்து
மேதினியோர்க்கருள் நாடும் மருந்து
வேலாலே சூரனைச் சாடும் மருந்துமனதில் (உறை)

4. தாரகா சூரனைக் கொன்ற மருந்து
தாம்பிரவர்ணிதனில் நின்ற மருந்து
ஆரும் அற்றூர்க்கா கின்ற மருந்து
அதிசூரபத்மனை வென்ற மருந்து மனதில் (உறை)

5. ஆடும்மயில்மீ தமர்ந்த மருந்து
ஆதிபிரணவத்தை உணர்ந்த மருந்து
பாடும் ஆண்டிக்குள் அலர்ந்த மருந்து
பாலகுகனென வளர்ந்த மருந்து மனதில் (உறை)

22-வது கந்தநாமாவளி. தாளம் -.சர்வலகு.

1. திருமால்மருகா அருள்தா கந்தா
தேவர்கள் இடுக்கண்தீர்த்தருள் கந்தா
தருமான்மகளைத்தழுவிய கந்தா
சாமிமலையில்வாழ்வடிவேற் கந்தா

2. ருத்ரேந்திராதிகள்புகழ்ந்திடும் கந்தா
உலகோர்ஞானபண்டிதனெனும் கந்தா
பக்திசெய்யடியவர்க்கருள்புரி கந்தா
பழனியங்கிரிவளர்வடிவேற் கந்தா

3. உமையவள்மனமகிழ்ந்தருளிய கந்தா
உனைத்தினம்துதித்திட அருள்புரி கந்தா
அமரினிற்சூரரைவதைத்திடுங் கந்தா
அருள்திருமலைவாழ்வடிவேற் கந்தா

4. ருத்ரகணிகைநடமிடமகிழ் கந்தா
உபதேசம்குறுமுனிக்கோதிய கந்தா
சித்திக்கணேசனுக்கிளையோனே கந்தா
செந்திமானகர் வடிவேற் கந்தா

5. மாமயில்மீதினில் உவந்திடும் கந்தா
மாமரம் அறுபட வேல்விட்ட கந்தா
காமதகனன்பெற்றருளிய கந்தா
கழுகுமாமலைவடிவேற் கந்தா

6. மலைபொடிபடவேல்விடுத்திட்ட கந்தா
மறையவனைச்சிறைவைத்திட்ட கந்தா
வலையர்குறக்குலமருகனே கந்தா
வள்ளிமலையில்வாழ்வடிவேற் கந்தா

7. ஐந்துமுகன்பெற்றருளிய கந்தா
ஆறுமுகவடிவேலனே கந்தா
உந்தன்பதமறவாதருள் கந்தா
உருமாமலைவாழ்வடிவேற் கந்தா

8. வானோர்கோமான்வணங்கிடும் கந்தா
வள்ளிதெய்வானைமகிழ்ந்திடுங் கந்தா
சேனாபதியாய்ச்செயித்திடுங் கந்தா
செம்பொன்மாமலைவடிவேற் கந்தா

9. சன்மார்க்கமதில்வைத்திடுங் கந்தா
சந்ததம் உன்பதம் ஈந்தருள் கந்தா
பண்புடன் அடியவர்க்கருள்செயுங் கந்தா
பராசர்மலை*வாழ்வடிவேற் கந்தா

---

* பராசர்மலை - திருப்பரங்குன்றம்.

23-வது இராகம் - பியாகடை. தாளம் - சாபு. நிந்தாஸ்துதி.

பல்லவி.

ஏதுஎந் தன்மேலிந்த வாதுசெய் வதாகாது
இதுதான்மு றையோவே லா (ஏது)

அனுபல்லவி.

சாதுக்கள் வசித்திடும் உருமலைக் குகைக்குள்ளே
தங்கி ஒ ளித்திருந்த சங்கதியை நான்சொன்னேனே (ஏது)

சரணம்.

1. தகப்பனுக் கடங்காத பிள்ளேதா னென்றனைத்
தண்ணீரில் எறிந்தா ரே உனக்குப்
புகல்ஒரு வரில்லாமல் மிதந்துவ ரக்கண்டு
பெண்கள்மு லைப்பால்கொடு த்ததைநான் சொன்னேனே (ஏது)

2. சின்ன மதலையாய்ப்போய்த் தாரகா சூரனைச்
செயித்ததைச் சொன்னே னே சூரபத்மன்
முன்னதா கவேசென்று யுத்தங்கள் செய்துமேல்
மூவிரு நாட்களில் வேல்விடுத்த தைச்சொன்னேனே (ஏது)

3. இந்தச்சூ ரத்தனத்தைச் செய்தம கிழ்ச்சியாலே
ஈனசாதிப் பெண்ணேமண ந்தாய் நீசெய்த
விந்தைத னைக்கண்டு உலகோர்ந கைத்திட
வெட்கங்கெட்டா றுமுக த்தோடுவந்த தைச்சொன்னேனே (ஏது)

ஸ்ரீ காந்திமதி அம்பாள்மீது ஸ்துதி.

24-வது இராகம் - பைரவி. தாளம் - ரூபகம்.

பல்லவி.

காந்திமதியை த்துதிசெய்மனமே
கர்மபிணிகள் அகன்றுபோகுமே (காந்தி)

அனுபல்லவி.

பிராந்திகொண்டிந்தப் பிரபஞ்சமாய்கையிலே
ஆழ்ந்துபோகாமல் அனுதினமும் நீ (காந்தி)

சரணம்.

1. தந்தைதாய்முதலோர் இருந்தாலும்எந்தன்
சஞ்சலம்தீர்க்கவும் கூடுமோ
அந்திமதியணி வேணுவனேஸ்வரன்
ஆசையுடன்வலப் பாகத்தில்வைத்திடும் (காந்தி)

25-வது இராகம் - பூர்வகல்யாணி. தாளம் - சர்வலகு.

பல்லவி.

இந்தவேளைவந்துன்கிருபை
தந்தெனக்கருள்செய்வாய் (இந்த)

அனுபல்லவி.

கந்தமலர்கொண்டடியார்
விந்தைவிந்தையாய்ப்பூசிக்கும்
காந்திமதித்தாயே சேயைக்
கைவிடலாகுமோநீயே (இந்த)

சரணம்.

உன்னையல்லால்வேறேயெனக் குற்றதுணையாருமுண்டோ
உள்ளதுசொன்னேன் இனிமேற் கள்ளம் என்னிடத்திலுண்டோ
அண்ணல்தானநாதன்பாகம் அமர்ந்தபராபரியே
ஆருங்கெதியில்லாமல் அலையும்சிறியேன்தாயே (இந்த)

தாம்பிரசபை நடனசபாபதிமேற் பாடிய கீர்த்தனை.

26-வது இராகம்-சுருட்டி. தாளம்-சாபு.

பல்லவி.

நடனமி டும்பதத்தைக் கண்டுதெ ரிசிப்போர்க்கு
நமபய மணுகாதே தத்தோம்த த்தோமென (நட)

கீர்த்தனம்.

அனுபல்லவி.

மடவார்ப ணிசெய்நெல்லைத் தாம்ரச பைதன்னில்
மங்கைகா ந்திமதித்தாய் அங்கம கிழ்ந்திட. (நட)

சரணம்.

1. மாதவ த்தோர்கள்வ ணங்கித்து தித்திட
மத்தள தாளம் த த்தோமென் றொலித்திட
பாதங்க ளைமறை யோர்கள்ப ழிச்சிடப்
பாடும் அடியவர்கள் பார்த்தானந் தித்திட (நட)

2. அன்பர்கள் கூடி ஆ னந்தக்கூ த்தாட
அடியார்கள் சேர்ந்தே ஏ ழிசையுடன் பாட
இன்பந்த ரும்திரு வாதிரை நாட்கூட
இகத்தில்யா வர்களும்கண் களித்துக்கொ ண்டாட (நட)

3. ஆசாபா சமெனும் பேய்தனை யோட்டி
அரகர சங்கர எனுமிசை நாட்டி
ஈசாஎ ன்சிர மதனிற் கைகூட்டி
எங்கும்பிர மானந்தம் எய்திடக் காட்டி (நட)

கீர்த்தனம்முற்றிற்று.

உ

கணபதிதுணை.

கடம்பர்கோயில் உலா.

இது

மஹாமஹோபாத்யாய - தாக்ஷிணாத்யகலாநிதி

Dr. உ.வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப்பிரசுரம் — ரு ௩.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

விலை அணா 6.

உ

கணபதிதுணை.

கடம்பர்கோயில் உலா.

இது

மஹாமஹோபாத்யாய - தாக்ஷிணாத்யகலாநிதி

Dr. உ.வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்துத்

தாம் நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப்பிரசுரம் — ௫௧.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,

மதுரை.

1932.

விலை அணா 6.

கணபதி துணை.

முகவுரை.

திருநாவுக்கரசுநாயனார் தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரியந்தமி ழோடிசை யானவன்
கூரியகுணத் தார்குறி நின்றவன்
காரிகையுடை யான்கடம் பந்துறைச்
சீரியல்பத்தர் சென்றடை மின்களே.

தேவாரவைப்பு.

"காவிரிசூழ் கடம்பந்துறை யுறைவார் காப்புக்களே."

"கடைமுடிகானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே."

"மயிலாடுதுறை கடம்பந்துறை யாவடுதுறை
மற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே"—திருநா.

"பாங்கு ரெங்கள் பிரானுறையுங் கடம்பந்துறை"—சுந்தர.

காடவர்கோன் திருவேண்பா.

அழகு திகிகாம்பை யாங்கதுவிட் டாவி
ஒழுகும் பொழுதறிய வொண்ணா—கழுகு
கழித்துண் டலையாமுன் காவிரியின் றென்பாற்
குழித்தண் டலையானைக் கூறு.

திருச்சிற்றம்பலம்.

உலாவென்னும் தமிழ்ப்பிரபந்தம் பாட்டுடைத்தலைவனது பவனியைச்சிறப்பித்துப் பாடப்படுதலால் இப்பெயர்பெற்றது; உலா-பவனி. தலைவன் வீதியிற் பவனிவருகையில் அவ்வீதியின்கணுள்ள பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாகிய ஏழுபருவமகளிரும் அவனைக்கண்டு காதல்கூர்ந்ததாகக் கலிவெண்பாவாற் பாடப்படுவது இது. இதன்கண் பாட்டுடைத்தலைவனது பலவகைப்பெருமைகள், ஏழுபருவமகளிர்களின் இயல்பு, அவர்களடைந்த மெய்ப்பாட்டுவகைகள் முதலியன காணப்படும்.

தத்தம் புலமைத்திறத்திற்கேற்பக் கருத்துக்களைத் தொடர்புபெற அமைத்து விரித்துத் தாம் வழிபடுதெய்வங்கள்மீதும், தம் ஆசிரியர் மீதும், தம்மை ஆதரித்த உபகாரிகள்மீதும் பலபுலவர்கள் உலாக்களைப் பாடியிருக்கின்றனர்.

சேரமான்பெருமாணாயனாரால் இயற்றப்பட்ட ஆதியுலாவும், தத்துவராயரால் இயற்றப்பெற்ற ஞானவிநோதன்உலாவும், கவிச்சக்கரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற மூவருலாவும் ஆகிய பழைய நூல்கள் முறையே இம்மூன்று வகைக்கும் உதாரணங்களாக உள்ளவை.

தலங்களிலுள்ள மூர்த்திகளைத் தலைவராகக்கொண்டு பாடப்பட்ட தமிழ்ப்பிரபந்தங்கள் பிற்காலத்து மலிந்தன. அவ்வகையில் உலாக்களும் இயற்றப்பட்டன. "நன்னெடு வீதியின், மதகளிறார்தன் முதனிலை யாகும்" (பன்னிருபாட்டியல், சூ. 216) என்ற சூத்திரத்தோடு இயையப் பாட்டுடைத்தலைவர்களாகிய அரசர்கள் களிற்றின்மீது பவனிவந்தனரென மூவருலாவிற் காணப்படுகின்றது. ஆதியுலாவிற் சிவபெருமான் இடபவாகனத்தின்மீது எழுந்தருளியதாகச் சொல்லப்பட்டுள்ளது. தலசம்பந்தமாகப் பிற்காலத்து இயற்றப்பெற்ற உலாக்களில் அவ்வத்தலத்திலுள்ள நாயகர் (ஸோமாஸ்கந்தர்) திருத்தேரில் எழுந்தருளியதாக அமைக்கப்பட்டுள்ளது. சோக்கநாதருலாவில்மட்டும் தேர் முதலிய ஏழுவாகனங்களிற் சொக்கநாதர் ஏழுநாள் உலாப்போந்ததாகக் காணப்படுகின்றது.

*தலசம்பந்தமான உலாக்கள் அவ்வத்தலத்துக்குரிய கணிகையர்களால், தொன்றுதொட்டுப் பாடப்பெற்றுவந்தன. உலாக்களிற்கூறப்படும்†ஏழுபருவமகளிரும் பொதுமகளிராதலின் இப்பிரபந்தம் அவர்களோடு தொடர்புடையதாயிற்று.

மகளிர்க்குரிய ஏழுபருவங்களின் இயல்புகள் ஒவ்வோருலாவிலும் வருணிக்கப்படுமேனும் ஒவ்வொன்றும் தனித்தனியான சிறப்புக்களோடு விளங்கும். பெருங்கதையில் நீராட்டரவம் என்னும் பகுதியில் இவ்வேழுபருவ மகளிருடைய இயல்புகள் கூறப்பட்டுள்ளன. நிற்க.

---

*இப்பொழுது இந்த வழக்கம் பலதலங்களில் அருகிவிட்டது.

†சோக்கநாதருலா, முகவுரையைப் பார்க்க.

தலவரலாறு.

கடம்பர்கோயிலுலாவென்பது சோழநாட்டிற் காவிரியின் தென் கரையிலுள்ளதும் தேவாரம் முதலியவற்றைப் பெற்றதுமாகிய கடம்பர் கோயிலென்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தலைவ ராகக்கொண்டு பாடப்பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் இன்னு ரென்பது தெரியவில்லை. ஆனாலும் திருத்தேரை, "திருவா வடுதுறையி, லெம்பிரா னன்ப ரிதயமோ" (கண்ணி, 84) என்பதனால் அவர் திருவா வடுதுறையாதீனத்து அடியவராகிய ஒரு பெரியவரென்று கருதப் படுகிறார்.

இத்தலத்துமூர்த்தி கடம்பவனநாதர், சுந்தரேசர், ஸௌந்தரரென வழங்கப்பெறுவர்.

அம்பிகையின் திருநாமம் முற்றாமுலையம்மையென்பது (29, 57, 74, 179); இது வடமொழியில் பாலகுசாம்பிகை என வழங்கும்.

தலவிருட்சம்:கடம்பமரம், 13, 25, 41.

தீர்த்தம்: காவிரியாறு; 16, 34, 46, 58, 361. பிரமதீர்த்தமென்ற ஒருதீர்த்தமும் உண்டு; கோவையாரில், "தண்கடம் பைத்தடம் போற் கடுங் கானகந் தண்ணெனவே" (220) என்று சொல்லப்படும் கடம்பைத் தடம் இதுவாக இருத்தல்கூடுமென்று தோற்றுகிறது.

இத்தலம் கடம்பை, கடம்பந்துறை, கடம்பவனம், தட்சிணகாசி, குழித்தண்டலையெனவும் வழங்கும். பிரமதேவர் வழிபட்டுத் திருக் கோயில் முதலியன அமைத்துத் திருத்தேர்விழாவும் நடத்தினமையாற் பிரமபுரமென்றும் (19), சோமகாசுரனிடத்திலிருந்து திருமால் வேதங் களை மீட்டற்குக்காரணமாகிய திருவருளைப்பெற்ற இடமாதலிற் சதுர் வேதபுரியென்றும் (33–6), முருகவேள் பூசித்துப் பேறுபெற்றமையிற் கந்தபுரமென்றும் (37) இது பெயர்பெறும். இத்தலத்திற் சத்தகன்னி யர் பூசித்து, தம்மைப்பற்றி வருத்திய பிரமகத்தியினின்றும் நீங்கினர் (21–6); வேதசன்மாவென்னும் ஓர்தணர் தவம்புரிந்து மதுரையில் நிகழ்ந்த திருமணக்கோலத்தை இங்கே தரிசித்தனர் (27–31); அகத்திய முனிவர் பூசித்துப் பேறுபெற்றனர்; 32.

இத்தலத்துத் திருக்கோயிலில், பிரமதேவர், சித்தமாதர்கள், அகத்தியமுனிவர் முதலியவர்களுடைய திருவுருவங்கள் தனித்தனியே உள்ளன. *இப்பொழுது கடம்பர்கோயிலைச்சார்ந்ததும், குழித்தலை என வழங்குவதுமாகிய ஊரின்கண் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியின் திருநாமம் ஸ்ரீசுந்தரேசுவரரென்பது. அம்பிகையின் திருநாமம் ஸ்ரீமீனுட்சியென்பது. இவற்றை நோக்கும்பொழுது கடம்பர்கோயிலிற் சிவபெருமான் திருமணக்கோலம் காட்டியதன் அறிகுறியாக இவ்வாலயம் பண்டைக்காலத்தில் அமைக்கப்பெற்றதென்று கருதப்படுகின்றது.

இத்தலத்திற்குத் திருநாவுக்கரசுநாயனார் அருளிய தேவாரப் பதிகம்ஒன்றும், ஐயடிகள்காடவர்கோன் நாயனார் அருளிய திருவேண்பா ஒன்றும், ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழும் உண்டு.

120-ஆம் கண்ணியால் காளத்தியென்பவரால் இயற்றப்பெற்ற அந்தாதி ஒன்று உண்டென்று தெரிகின்றது. மதுரைத் திருப்பணிமாலையால், பாகையென்னும் ஊரிலிருந்த காளத்தியப்பமுதலியாரென்பவர் ஒருவர் மதுரையிற் சில திருப்பணிகள்செய்தாரென்று புலப்படுகின்றது. அவர் இவ்வந்தாதி செய்தவராகக் கருதப்படுகிறார்.

இவையன்றி வடமொழியில் ஒருபுராணம் உண்டு. திருவாரூர் ஸ்ரீ முத்துஸாமிதீக்ஷிதரென்னும் சங்கீதவித்வானால் கேதாரகௌளராகத்தில் இயற்றப்பெற்ற மிகச்செவ்விதாகிய, "நீலகண்டம் பஜே" என்னும் வடமொழிக்கீர்த்தனம் ஒன்றும் இத்தலத்திற்கு உண்டு.

"சேர்தொண்டை மண்டலத்தோர் செய்தபெரும் புண்ணியமோ, ஈதென்னும் பொற்றடந்தேர்" (85) என்னுங் கண்ணியால் இத்தலத்தில் அக்காலத்தில் இருந்த சிவபக்திச்செல்வர்களாகிய தொண்டைமண்டல வேளாளர்களால் திருத்தேர் இயற்றப்பெற்றதென்பதும், 86-7-ஆம் கண்ணிகளால் பாகையென்னும் ஊரிலிருந்த சரவணையென்னும் ஒரு செல்வர் இத்தலத்துச் சிவபெருமானுக்குத் திருவாபரணங்கள் செய்து சாத்தினரென்பதும் தெரியவருகின்றன.

---

*இச்செய்தியையும் வேறுசிலவற்றையும் எனக்குத்தெரிவித்தவர், குளித்தலை போர்டுஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் ப்ரம்மஸ்ரீ அநுஞ்சலசாஸ்திரிகள்.

பாகையென்பது தொண்டைநாட்டில் திருக்கூவமென்னுந்தலத்துக்கு அருகிலுள்ள பாகசாலையென்னும் ஊர். அவ்வூரினராகிய சரவணமுதலியாரென்பவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200-வருடங்களுக்குமுன்பு திரிசிராப்பள்ளி நவாபினிடம் மந்திரியாக இருந்தவர். அவர் இத்தலத்தில் இருந்த திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தில் மடபதியாக இருந்தவர்பால் நேசம் உடையவராக இருந்தார். அவ்விருவர்களும் சேர்ந்து கடம்பந்துறைக்கோயிலைப் புதுப்பித்துத் திருத்தேர், திருவாபரணம் முதலியவை செய்துவைத்திருக்கிறார்கள். மதுரைக் கோயிலிலும், அக்காலத்திலிருந்த மாணிக்கவாசக தம்பிரானென்பவர் மூலமாக இவர் சில கட்டளைகளை நடத்திவந்தார். கலியப்தம். 4790-இல் பல ஜமீன்தார்கள் இவரது சிவபக்திமுதலியவற்றை உணர்ந்து இவருக்குப் பலகிராமங்களைச் செப்புச்சாஸனம் மூலமாக ஆளித்திருக்கிறார்கள். இவருடைய உருவம் கடம்பந்துறைக்கோயில் தூணில் அமைக்கப்பட்டுள்ளது. கலி. 4890-இல் இவரது பௌத்திராகிய சரவணமுதலியாரென்பவர்காலத்தும் சில நிலங்கள் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றனவென்று தெரியவருகின்றது.

நூலாராய்ச்சி.

ஏழுபருவமாதர்களுடைய இயல்புகளும் விளையாட்டுக்களும் மாறுவழுவாமல் இந்நூலிற் கூறப்படுகின்றன.

பேதை.

ஆசிரியர் பேதையை வருணிக்கையில் மன்மதன் விற்குணத்தைக் கண்டறியா மெல்லரும்பு, தான்உரைக்கும் சொற்குணத்தை ஓராச் சுகப்பிள்ளை யென்று உருவகம் செய்கின்றார். இத்தலத்தொடர்பமைய, "பொற்கை, உழையார் கடம்பலர்மட் டுண்டறியா வண்டு" (144-5) என்கின்றார். "கம்ப ருறையுங் கடவுளிளஞ் சூதத்தின், கொம்பி லுறையாக் குயிற்பிள்ளை" (ஏகாம்பரநாதருலா), "என்னுனைக் கன்று ரிமயத் தாரா தரத்து, மன்னுத சஞ்சீ வனக்கன்று" (திருவானைக்காவுலா) "மைதிகழு நீலகண்டன் வாழ்கின்ற புட்பவன, மெய்திவிளை யாடா விளஞ்சுரும்பு" (திருப்பூவணநாதருலா) எனப் பிறரும் இங்ஙனமே கூறுதல் காண்க. பின்னும் இவர், "நீணிலத்து மன்னுங் கலைபொருந்தா மான்கன்று", "நீர் பின்னஞ் செயவறியாப் பிள்ளையன்னம்" எனச் சிலேடைநயம்பட

உருவகம்செய்கின்றார். அவளுடைய முடிக்கப்படாத கூந்தலுக்கு எழுவாய்ப்பயனிலையின்றி முடிக்கப்படாமலிருக்கும் புன்கவிஞருடைய செய்யுளை உவமிக்கின்றார். அவளுடைய இனிய மழலைமொழிக்கு உவமையாகத் தொண்டர்கள் பக்திபரவசர்களாகி இறைவன்முன் நாத் தழுதழுத்துக்கூறும் துதியைச் சொல்லுதல் அறிந்து மகிழ்தற் குரியது. அவள் பாவையொடுபயிலல் சிற்றிலியற்றிச் சிறுசோறட்டு விளையாடல் முதலிய பேதைப்பருவத்திற்குரிய செயல்களை மரபுவழுவா மல் அமைக்கின்றார். சிறுசோற்றை, "அரனார்க் கிட்டமுறும், அன்ப ருலகத் தருந்தா தருந்திடிற், றின்பமென" அவளுண்டாளென்பதனால், அன்பர்களுடைய இயல்பைப் புலப்படுத்துகின்றார். அவள் கடம்பவன நாதரைக்கண்டு இவர் யாரென்று செவிலியரைக்கேட்ப அவர்கள் விடை கூறும்பகுதியில் அவள்பருவத்துக்கேற்ப, "அண்டங்களைச் சிற்றிலாகச் சமைத்து விளையாடும் பாலன்" என்னும் பொருள்தோன்றக்கூறிப்பின் பலமுறை பாலனென்னும் பெயர் தொனிக்குமாறு இறைவனுடைய தன்மைகளை அவர்கள் எடுத்துச் சொல்லுவதாக அமைத்திருக்கின்றார்.

பெதும்பை.

பெதும்பை, அன்பு அரும்பினும் அது முற்றாப்பருவத்தினள். இப்பருவம் புனைவதற்கரியதென்பதை, "பேசு முலாவிற் பெதும்பைபுலி" என்னும் செய்யுட்பகுதியால் அறியலாம். இப்பருவத்தினளை, "பேதை குணம் பாதிமங்கைப் பெண்குணத்திற் பாதிகலந், தோது பருவ முறு பெதும்பை" (172) எனத் தகுதிபெற இவ்வாசிரியர் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. இங்ஙனம் வேறு யாரும் கூறியதாகத் தெரிய வில்லை. காதலென்னும் வித்து முளைத்து நெஞ்சைக் கொழு கொம்பாகக்கொண்டு வளருந் தன்மையினளென அவளியல்பைப் புலப் படுத்துகின்றார். அவளது முடிக்கப்பட்டகூந்தலுக்குத் தவங்கள் பல செய்தும் முடிவுபெறாமல் ஈசனருளெய்துங்காலத்திலே நிறை வேறி முடியுஞ்செயலை உவமையாக்குகின்றார். அவள் நீலம், முத்து, பச்சை, மாணிக்கம், கோமேதகம், வைரம், பவளமென்னும் ஏழுவகை மணிகளாலாகிய ஏழு கழங்குகளை எடுத்து ஆடத்தொடங்கியதாக ஒரு செய்தியை அமைக்கின்றார். இப்பகுதியில் அவ்வேழு கழங்கிற்கும் சிவபெருமானோடு தொடர்புடைய பொருள்களையே உவமைகூறுகின்றார்.

பெதும்பைப்பருவப்பெண்கள் ஏழுகற்களையேனும் ஏழுகழற்சிக்காய்களையேனும் ஒருவகைப் பாட்டுப்பாடி ஆடுதல் தமிழ்நாட்டுவழக்கு. அப்பாட்டில் ஒன்றுமுதல் ஏழு எண்வரையுள்ள பொருள்கள் முறையே கூறப்படும். இம்முறையைப் பின்பற்றி இங்கே ஆசிரியர் ஒன்றுமுதல் ஏழு வரையிலுள்ள எண்கள் அமையத் தலப்பெயரையேனும் தலங்களின் செய்திகளையேனும் எடுத்துக்காட்டுகின்றார். அவ்வகையில் ஒன்றுக்கு ஏகாம்பரமும், இரண்டுக்கு இருவர்தேடும் மலையும், மூன்றுக்குத் திரிசிராப்பள்ளியும், நான்குக்கு நான்மாடக்கூடலும், ஐந்துக்குப் பஞ்சநதியும், ஆறுக்கு ஆறுபெண்கள் அட்டமாசித்திபெற்ற பட்டமங்கையும், ஏழுக்கு ஏழுலகத்தலங்களும் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு ஏழுகழங்குகளுக்குரிய பாடற்பொருளாகத் தலச்செய்திகள் அமைக்கப்பெற்றிருத்தலைத் திருவானைக்காவுலா, ஏகாம்பரநாதருலா, திருக்காளத்திநாதருலா, இரத்தினகிரி (வாட்போக்கி) யுலா, திருவேங்கடவுலா என்பவற்றிற் காணலாம்.

பெதும்பை, கடம்பவனநாதரைத் தரிசித்ததை, "மாலளந்து காணுமலையை யிருவிழிக்கோ லாலளந்தாள்" என்கின்றார். அவள் நிலையைக் கண்ட தாய்மார், "தன்னை யறியும் தருணம்வந்த தாற்றலைவன், றன்னை மனக்குறிப்பிற் றானறிந்தாள்" என்று கூறுகின்றனர். இதன்கண், பெதும்பை மங்கைப்பருவத்தன்மைவாய்ந்தனளென்பது குறிப்பிக்கப்படுகின்றது; "நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்டோற்று, நின்றறிவு தோற்று நிறைதோற்று-நன்றாகக், கைவண்டும் கண்வண்டு மோடக் கலையோட, நெய்விண்ட பூங்குழலா ணின்றொழிந்தாள்" (பெதும்பை) என ஆதியுலாவும், "மல்கு முவகைக் கலுழி வரவரப், பில்கு.....கொங்கைப் புதுவரவும் தோளும் குறைநிரம்ப, மங்கைப் பருவத்தே வாங்கினாள்" (பெதும்பை) என இராசராசசோழனுலாவும், "உருவமிகப் பாரித் தொளிபடைத்து மற்றைப், பருவ மெனப்புளகம் பாரித்-தொருவாத, போழகு நந்தம் பெருமாட்டிக் கெய்தியது" எனச் சோக்கநாதருலாவும் கூறுகின்றன. பெதும்பையின் நிலைகண்ட செவிலியர் இறைவனைநோக்கி, "மேற்பசப்புக், காட்டுமான் காட்டியிசைக் கானமறி யாத வெங்கள், வீட்டுமான் கைக்கொளவோ வீதிவந்தீர்" என்று கூறும் சொற்களில் சிலேடையும், மானைக்காட்டி மானைப்பிடிப்பதென்னும் வழக்கமும் அமைந்துள்ளன.

மங்கை.

மங்கைப்பருவத்தினளை, "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்றாற்போலவே, "பேதை யரும்பிப் பெதும்பை யந்தப் போதாகி, மாது மலர்ந்த வனப்பினாள்" என்கின்றார். இக்கருத்து மூற்பருவத்துநிலைமையையும் இப்பருவநிலைமையையும் புலப்படுத்துகின்றது. 'நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் மந்திரிமார்கள் சூழ நகிலாகிய மகுடத்தைச் சூட்டிப் பெண்கள் மன்மதனுக்குரிய மந்திரங்களையுரைக்க மனமாகிய சிங்காதனத்திலேற்றிச் சிவபெருமானுடைய புகழாகிய அபிஷேகத்தைச் செய்து மூர்த்திகரமுண்டாக்கி மோகமாகிய அரசனுக்குப் பட்டந்தரித்தாள்' என்பதில் அவளது காதல் மூற்றிய தன்மையை விளக்குகின்றார். அவள் சிவபெருமான்புகழைப் பாடி அம்மானையாடினாளென்பதை, "அம்மானை யாடிவந்த வம்மானைப் பாடியே, யம்மானை யாடு மளவிலே" என்று சொற்பின்வருநிலைபணிபடச்சொல்லுகின்றார். திருவானைக்காவுலாவில் அரிவைப்பருவத்தில் அம்மானை கூறப்படுகின்றது. திருக்காளத்திநாதருலாவில் மங்கைப்பருவத்தில், "தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த வம்மானை, அன்னைதனை யீன்ற மலை யம்மானை—முன்னைநாட், கொங்கையொரு மூன்றுடைய கொம்பை யருளம்மானை, யங்கையிலே வீற்றிருக்கு மம்மானைக்—கங்கையெனும், அம்மானைப் பெற்றசடை யம்மானைப் பாடியவ, ளம்மானை யாடு மளவிலே" என வருவதும், இரத்தினகிரியுலாவில் மங்கைப்பருவத்திலும் திருப்பூவணநாதருலாவில் மங்கைப்பருவத்திலும் அம்மானைகூறப்படும் பகுதிகளும் இதனோடு ஒப்புமை உடையன.

மடந்தை.

மடந்தைப்பருவத்திற் பின்னுள்ளசெய்தி கூறப்படுகின்றது; மடந்தைப்பருவப்பெண் தன் பாங்கி ஒருத்தியை விளித்து, "ஓர் ஓவியனை அழைத்துவந்து கடம்பவனநாதர்திருவுருவத்தை எழுதும்படி கூறுவாயாக" என்றாள். அதற்குப் பாங்கி, "அப்பெருமானை யாரெழுதவல்லார்? அவரது திருமுடியை எழுதினாலும் அதிலே கங்கையை எவ்வாறு அமைத்தல்கூடும்? திருநெற்றியை வரைந்தாலும் அதிலுள்ள அக்கினிக்கண்ணை எங்ஙனம் எழுதுவான்? மற்ற இரண்டு கண்களைத் தீட்டினாலும் அவற்றில் அருட்பார்வையை எப்படிப்

பொருத்தமுடியும்? திருச்செவியில் தோடுகளை எழுதினாலும் அத்தோட்டு வடிவமாகவுள்ள கம்பளாசுவதார்களென்னும் இசைவல்லார்களின் பாடலைப் புலப்படுத்தமுடியுமோ? திருக்கழுத்தை எழுதினாலும் அது வேதத்தை முழங்கும்படி செய்ய முடியுமோ? திருக்காங்களை எழுதினாலும் அவை உன்னைத் தழுவிக்கொள்ளும்படி செய்வானோ? திருவடிகளை எழுதினாலும் கால்மாறியாடலைக் காட்டமுடியுமோ? அவனை அறிஞர்களே அறிவார்கள். இப்படிய னிவ்வுருவ னிவ்வண்ணத்தன் — ஒப்புடையன், ஆமென் றெழுதவல்லா ரியாரே" என்று விடை கூறினாள்.

ஓவியத்திற் கடவுளின் திருவுருவை எழுதுவித்துக் கண்டு மகிழும் விருப்பம் மடந்தைக்கு இருந்தமையை இவ்வாசிரியர் கூறுதலைப் போலவே சிலசில வேறுபாடுகளுடன் வெவ்வேறுபருவப்பெண்கள் அங்ஙனம் விரும்புவதைச் சில உலாக்கள் கூறுகின்றன. ஏகாம்பரநாத ருலாவில் அரிவைப்பருவத்தினள் ஒரு சித்திரசாலையிற்சென்று காஞ்சித் தலசம்பந்தமான வரலாறுகளைப் புலப்படுத்தும் ஓவியங்களைக்கண்டு மகிழ்ந்தாளென்றும், திருப்பூவணநாதருலாவில் தெரிவைப்பருவத்தினள் ஓர் ஓவியனை அழைத்துத் திருப்பூவணநாதர் திருவிளையாட்டு முதலிய வற்றை எழுதுமாறுசெய்து கண்டு களித்தாளென்றும், சங்கரலிங்க உலாவில் பேரிளம்பெண்பருவத்தினள் சித்திரசாலையிற்சென்று அங்கே எழுதியிருந்த சங்காலிங்கத்தின் திருவிளையாடல்களின் உருவத்தைப் பிறருக்குக்காட்டினளென்றும், தஞ்சைப் பெருவுடையா ருலாவிற் பெதும்பைப்பருவத்தினள் ஓவியன் ஒருவனைக் கண்டு சோமாஸ்கந்தமூர்த்தியின்திருவுருவத்தைத் தீட்டித்தரச்செய்து கண்டா ளென்றும் கூறப்பட்ட செய்திகளால் இவ்வழக்கத்தை அறியலாம்.

அரிவை.

அரிவையின் வருணனையில் சிலேடையொடுகூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. அவளுடைய கண் மானை மருட்டி வண்டைச் சிறைப்படுத்தி மீனைப் பயமுறுத்தி வனசத்தைப் பங்கமுறச்செய்து குவளையை வனத்தில் ஏற்றி வாரிதியை அதோகதியாகப் பண்ணி விஷத்திற்கு நித்யகண்டமேவும் நிலைகொடுத்து வேல்முனையைச் சத்தியிலையெனவும் கத்தியை உறையிடக்காணுதெனவும் கொல்லச் செய்து கொலைக்குணத்தில் தன்னைகொக்க யமன் திருமனென்னும்

பெயரால் வழங்கச்செய்ததென்று புனையும் பகுதியில் அவ்வப்பொருள்களின் இயற்கைத்தன்மையையும் தொழிலையும் பெயரையும் வேறு பொருள்படும்படி தோற்றச்செய்து அமைத்துள்ளார். அவள்குழல், "சூரியன்வந்தாலும் நீர் என்றுவந்தீர்? என்று அஞ்சாமற் கேட்கும் இருளைப்போன்றது" என்று சொல்வதில் நகைச்சுவை காணப்படுகின்றது.

அவள் ஒரு விறலியை அழைத்துத் தேவர்களுக்குள்ளே வீரம் கருணை அழகு என்னும் மூன்றினாலும் மிக்கவர் யார் என்று கேட்ப' அவ்விறலி காமதகனம், திரிபுரசங்காரம், தக்கயாகசங்காரம், பிரமன் தலையைக்கொய்தது, அந்தகாசுர சங்காரம், காலசங்காரம் முதலிய வீரச் செயல்களைச் சொல்லிச் சிவபெருமானது வீரத்தையும்; யானை, வண்டு, சிலந்தி, பாம்பு, கரிக்குருவி, பன்றிக்குட்டிகள், எறும்பு முதலிய விலங்கினங்கட்கும் திருவருள்செய்ததைச் சொல்லி அவரது பெருங்கருணையையும்; முனிவர்களும் பெண்மையை அவாவிய பேரழகையுடைய திருமாலே பெண்ணாகி அவாவும் அழகுடையவரென்று சொல்லி அவரது அழகையும் புலப்படுத்தி, "வீரப் பெருக்கழகனமென் கருணைச் சீரழகன், ஆரத் திருமேனி யாரழகன்" (309) ஆகிய அவரே யாவற்றிலும் மிக்கவரென்று வீணைவாசித்தல் முகமாகக்கூறினாளென்ற ஒருசெய்தி காணப்படுகின்றது. இவ்வாறு பாட்டுடைத்தலைவருடைய ஏற்றத்தைப் புலப்படுத்தும்வழக்கு வேறு சில உலாக்களிலும் உண்டு. ஏகாம்பரநாதருலாவில் பேரிளம்பெண் அந்தணரொருவரைநோக்கி, "சிவபெருமான்நிலைக்கும் ஏனைத்தேவர்நிலைக்கும் வாசி கூறுக" எனக் கேட்க, அவர் சிவபெருமான்பெருமையைப் புலப்படுத்தியதாக அமைத்த செய்தியும்; திருக்காளத்திநாதருலாவில் அரிவை விறலியொருத்தியை அழைத்துப் பெண்களை ஆட்கொண்ட அழகுடைய நாயகர்களுக்குள்ளே சிறந்தவர் யாரென்றுகேட்ப அவள் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு குற்றம் கூறிச் சிவபெருமானே சிறந்தவரென நிறுவுவதாக உள்ள செய்தியும்; இரத்தினகிரியுலாவில் மடந்தை பாண்டியர்களைப்பார்த்து, 'விண்ணுக்கு மண்ணுக்கும் வேறு முலைதுக்கும், கண்ணுக் கினிபவராங் காவலரை எண்ணித்தான், சொல்லுவீர்" என்ன அவர்கள் சிவபெருமானே அத்தகையவரெனக் காரணங்காட்டிப் புலப்படுத்தியதாகக் கூறப்படும் செய்தியும் இவ்வகையைச் சார்ந்தனவே.

தேரிவை.

தெரிவைப்பருவத்தில் குறத்தியின்செய்தி ஒன்று சொல்லப்படுகிறது. அது வருமாறு:

தெரிவை மணிமேடையில் வீற்றிருக்கையில் குறிசொல்லும் குறத்தி ஒருத்தி அங்கே வந்தாள். அவளைக்கண்ட தெரிவை, "என் மனக் குறிப்பையறிந்து சொல்வாயாக" என்றாள். அவள், "ஒரு வருடம் சொல்வாயாக" என்றாள். "பதினோராவது வருடம்" என்றாள் தெரிவை. அவ்வருடம் 'ஈசுவர' ஆதலின், "ஈசுவரன்பால் உனக்கு விருப்பம் இருக்கின்றது" என்றாள். பின் ஒருமாதத்தைச்சொல் என்று அவள் கூற, தெரிவை, "நான்காவதுமாதம்" என்றாள். அம்மாதம் ஆடியாதலின், "மன்றாடிமீதில் விருப்பம் உனக்கு இருக்கிறது" என்றாள். பின்னும் குறத்தி ஒருவாரத்தைக் கேட்க இரண்டாவது வாரமென்றாள். அது சோமவாரமாதலின், "நீ சோமசேகரனை விரும்புகின்றாய்" என்றாள் குறத்தி. அவர் வருவாரோ எனத் தெரிவைகேட்ப, "வந்து அவர் அருள் செய்வார்" என்று குறத்தி கூறிப் பரிசுபெற்றுச் சென்றாளென்பது.

இவ்வாறு குறத்திபாற் குறிகேட்கும்வழக்கம், உலாநூல்களுள் சங்கரசோழனுலாவில் பெரும்பைப்பருவத்தில், "தூற்று, விசும்பின் மழைகடுப்ப மெய்க்குறஞ்சொன் னாட்குப், பசும்பொன் மழைபொழியப் பார்த்தும்" எனச் சுருக்கமாகவும், தஞ்சைப்பெருவுடையாருலாவில் மடந்தைப்பருவத்தில் குறத்தி தலைவியின் கைரேகையைப்பார்த்துக் குறிசொன்னாள் என்னும்பகுதியில் விரிவாகவும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண்.

பேரிளம்பெண்வருணனையில் அவள்குழலைப் பிராயத்திற்கேற்ப, "இருட்டறையுட் பல்கணியி லெய்துநிலாக் கூடும், இருட்டனைநே ரூடு நரை யெய்தும்—திருக்குழல்" என்பார். பூணணிதலையும் மையிடுதலையும் அவள் நீத்தவளென்பார். இவ்வாறே பிற உலாக்களிலும் காணப்படுகின்றது.

அவள் ஒரு பூங்காவை அடைந்து அங்கே உள்ள ஒவ்வொரு மரத்தையும் கண்டு அவ்வம் மரம் தலவிருட்சமாக உள்ள தலத்தை நினைந்து பரவினளென்கின்றனர். இம்முறை, திருவானைக்கா உலாவில் பேரிளம்பெண்பருவத்திலும், சோக்கநாதருலாவில் அரிவைப் பருவத்திலும் காணப்படுகின்றது.

பேரிளம்பெண் இறைவரது சேவையையேசெய்துகொண்டிருப்பவளென்பது பல உலாக்களிற் கூறப்படும். இவர், "பான்சேவை யன்றிப், புதுமை விழிக்குப் பொருந்தாள்" என்பதில் அக்கருத்தைச் சிலேடையில் நன்கு அமைத்துக்காட்டுகின்றார்.

பிறதலங்கள்.

இந்நூலில் பலதலங்களைப்பற்றியசெய்திகள் இடையிடையே கூறப்படுகின்றன.

கடம்பவனநாதர் எழுந்தருளுகையில் இன்ன இன்ன தலத்தையுடையவர் வந்தாரென்று திருச்சின்னம் முழங்கின எனக் கூறப்படும் பகுதியில் பலதலங்களின் பெயர்கள் வேறுதொனிப்பொருள் தோற்றுகின்ற அடைமொழிகளோடு ஆளப்படுகின்றன. இதனை, 'அங்கயற் கண்ணிசார் கூடலான், ஆட்டைவிடாப் புலியூரான், சண்மதத்து மேலான தந்திவனத்தான், மண்பரவு புற்றிடத்தான், ஆவணத்து முற்றும்விலையா மென்றவன், பூவணத்து வாசப் பொருள், துன்பக் கடல் கடத்துந் தோணிபுரத்தான், இன்பவெள்ளத்து ஐயாற்றிறை, தேவி மருங்கமரும் காஞ்சிபுரன், துதிக்கைபெற்ற வாரணவாசியான், பைக்குளடங்காத மாணிக்கமலையான், ஆனந்தத்தேனை அன்பர்க் கூட்டிவைக்கும் ஈங்கோய் மலையெம் பிரான்' என்பவற்றா லறியலாகும். இப்பகுதியிற் சொல்லப்பட்டதலங்கள் முறையே மதுரை, தில்லை, திருவானைக்கா, திருவாரூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பூவணம், சீகாழி, திருவையாறு, காஞ்சிபுரம், காசி, இரத்தினகிரி, திருவீங்கோய்மலை என்பன (112–9). பெரும்பை கழங்காடுகையிற் பாடுவதாக அமைத்துள்ள தலங்கள் திருவேகம்பம், திருவண்ணாமலை, திரிசிராப்பள்ளி, மதுரை, திருவையாறு, பட்டமங்கை என்பன. பின்னும் விறலியொருத்தி இறைவர்க்குணையைப் புலப்படுத்தற்காக அவரை வழிபட்டு அருள் பெற்ற விலங்கு முதலியவற்றைக்கூறும்வாயிலாகச் சிலதலங்கள் குறிப்பிக்கப்படுகின்றன. அவை, திருக்காளத்தி, திருவானைக்கா, ஸ்ரீசைலம், திருவண்டுறை, திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம், திருநாகைக்காரோணம், திருப்பாம்புரம், திருப்பாம்பணி, திருக்கேதீச்சுரம், திருவாலவாய், திருக்குற்றாலம், திருவெறும்பீச்சுரம் (303—5) முதலியன.

பேரிளம்பெண், பூங்காவை அடைந்து ஒவ்வொரு மரத்தையுங் கண்டு அவ்வம்மரத்தைத் தமக்குரிய விருட்சமாகப்பெற்ற தலங்களை நினைந்து வழிபட்டதாகக் கூறும்பகுதியில் வந்துள்ளவை: திருப்பைஞ்ஞீலி, திருக்குற்றாலம், திருநெல்வேலி, திருமூல்லைவாயில், திருவேகம்பம், திருவாட்போக்கி, திருவீங்கோய்மலை, திருவாலீசம் (அயிலூர்) என்பன. அவள் இன்பத்தைப் பயிரின் விளைவாக உருவகம்செய்யும் பகுதியில், "காட்சிக்கதிர்தோன்ற, ஏமமுற நெல்வேலி யீசரே" எனத் திருநெல்வேலி அதற்கு இயையுற எடுத்தாளப்படுகின்றது.

கடம்பவிருட்சம், திருமணக்கோலக்காட்சி, சுந்தரரென்னும் திருநாமமென்பவற்றால், இத்தலம் மதுரையோடு ஒப்புமையுடையதாதலின், அத்தலச் செய்திகள் பல இதன்கண் எடுத்தாளப்படுகின்றன; "செல்லாருஞ் சோலைத் திருவால வாயதனில், விலலாரு மிந்திரவி மானத்துட்—கல்லானை, சித்தாரு ளாற்கரும்பு தின்னுமங்காட் டென்னணணி, முத்தவடம் போலுமிள மூரலாள்" (150–51) என்பதில் திருவாலவாயென்னும் திருநாமமும் இந்திரவிமானமும் கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடலும், "மையேந்து சோலை மதுரை நகர்க்கவுரி, கையேந்து பாலன்" (167) என்பதில் விருத்தகுமார பாலரான திருவிளையாடலும், "மீனக் கொடியன் விரைவிற் பயந்ததால்" (238) என்பதில் தடாதகைப் பிராட்டி திருவவதாரமும், "தாண்மாறி ஆட்டுவிக்கப் பாண்டியனு ரல்லவே" (260) என்பதில் கான்மாறியாடிய திருவிளையாடலும், "மூன்னு ளிசைவாது சாய்ந்திடவே, எம்பிரான் கூட விறைவனரு ளாற்செயித்த, கும்பமுலை மாமயிலே" (292–3) என்பதில் இசைவாதுவென்ற திருவிளையாடலும், "வல்லமையில் லாதகய வாய்தமக்கும்—வெல்லமரில், அன்னை யிழந்த வடலேனக் குட்டிகட்கும் ..... அன்புதவி" (303–5) என்பதில் கரிக்குருவிக்கு உபதேசம்செய்த திருவிளையாடலும், பனறிக் குட்டிக்குப் பால்கொடுத்த திருவிளையாடலும் குறிக்கப்படுகின்றன.

கடம்பவனநாதருக்குரிய தசாங்கங்கள் 360-ஆங் கண்ணி முதலியவற்றில் மடக்கணி அமையச் சொல்லப்படுகின்றன. அவை வருமாறு:—(1) மலை: கயிலைமலை, (2) ஆறு: காவிரி, (3) நாடு: சோழநாடு, (4) நகர்: கடம்பர்கோயில், (5) மாலை: கொன்றை, (6) குதிரை: வேதம், (7) யானை: அயிராவணம், (8) கொடி: இடபம், (9) மூரசு: ஓங்காரம், (10) ஆணை: சந்திரன் முதலியவற்றை நிலைபெயராது ஒழுகச்செய்யும் ஆணை.

சிவபெருமான்பெருமை.

இன்னும் சிவபெருமானது பெருமைகளைப் பலவாற்றானும் எடுத்துப்பாராட்டுவார். 'சக்தியாகவும் சிவமாகவும் அருள்புரியும் தன்மையான்' (1) என்பர். மணமாகவும் மலராகவும் உள்ளவன் (3) என்று இவர் கூறுதல், "வாச மலரெலா மானாய் நீயே" என்னும் திருவாக்கையும், "உள்ளத்தி லுள்ளன் புடையார் கருத்தறியும், வள்ளல்" என்பது "மனத்து ணின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் றன்னை" என்பதையும் நினைப்பிக்கின்றன. "பட்டிமையில் லாருளத்தின் பாக்கியமே" (268) என்பதில் வஞ்சகமில்லாருடைய உள்ளத்தில் வீற்றிருக்குந் தன்மையைப் புலப்படுத்துகின்றார். "மெய்படியான், திங்கட் சுதையெனவே செய்யுமொரு மூப்பாலுஞ், சங்கத்தி னூட்டுந் தமிழ்ப்பாலன்" (167–8) என்பதனாலும், "தெள்ளுதமிழ்ச் சொல்லே, பொருளே" (380–81) என்பதனாலும் இறைவருக்குத் தமிழோடுள்ள தொடர்பைக்கூறுகின்றார்.

பொருளணிகள்.

கடம்பவனநாதர் திருவுலாப்போது தற்குமுன் திருவாடை முதலியன அணிந்துகொள்வதாகக்கூறியுள்ளபகுதியில் (59-68) சிலேடையொடு கூடிய தற்குறிப்பேற்ற அணி அமைந்துள்ளது. திலகம் தீட்டியதை, தேவியோடுசேர்ந்திருக்கச்செய்யும் மன்மதனைக் கோபித்த அக்கினியிருக்கும் வீட்டின் கதவைப் பூட்டி ஒரு முத்திரையிட்டதுபோல இருந்ததென்கின்றார். திருக்குடைநிழற்றல் முதலியவற்றைச்சொல்லும் பகுதியிலும் (77–82) அவ்வணி அமைந்துள்ளது. மங்கையர்கள் சாமரை இரட்டியது சிவபிரான் திருமுடியிலுள்ள கங்கை கிரீடத்தால் மறைக்கப்பட்டமையால் அதிற்சென்று விளையாட எண்ணிய அன்னங்கள் அதனைக்காணுமற் சுழல்வதுபோன்றிருந்தது என்கின்றார். சூரியோதயத்தைச் சொல்லுகையிலும், அரிவையின்வருணனையிலும் (274–85) அவ்வணியினமைதி காணப்படுகின்றது.

137, 147, 203, 346-7-ஆம் கண்ணிகளில் சிலேடையணி அமைந்துள்ளது. 237-9-ஆம் கண்ணிகளில் கடம்பவனநாதருக்கும் அம்பிகைக்கும் மங்கைக்கும் சிலேடையும், 337–9-ஆங் கண்ணிகளில் மன்மதனுக்கும் வேடனுக்கும் சிலேடையும் காணப்படுகின்றன. சொற்பொருட்பின்வருநிலை (73), சொற்பின்வருநிலை (125, 166–70, 225),

நிரனிறை (296–8, 318–21), என்னும் அணிகளும் இடையிடையே உள்ளன.

44–5-ஆங் கண்ணிகளில் இரதம் முதலிய நாற்படைகளின் பெயர்களும், 46-ஆம் கண்ணிமுதலியவற்றில் அரசன், மந்திரி, தளகர்த்தன், ஸ்தானபதி, ராயசத்தன், அதிகாரி, காரணிகன், கற்பித்தோன், மகாஜனன், பிரவர்த்தகன் என்னும் உத்தியோகப்பெயர்களும், 112-ஆம் கண்ணி முதலியவற்றில் வேறுசிலபெயர்களும், 205 ஆம் கண்ணியில் காட்டுமான் என்பதும் தொனியில் அமைந்துள்ளன.

பலவகையான படக்கணிகளும் (38, 40–42, 126–7, 141, 235, 247, 258, 269-71, 360-67), திரிபும் (காப்பு, 13, 32, 41, 43, 256), சந்தமும் (195–7, 226–7), இன்றியமையாத இடங்களில் வகையுளியும் (34–5, 106,146), இந்நூலிற் காணப்படும்.

சொல்லாட்சி.

மந்திரி (46), விக்ரமன், ப்ரபை, சக்ரம் (196), அனுக்ரகம் (197), மந்த்ரம் (217), சித்ரமணி (291) என வருவனபோன்ற ஸம்யுக்தாக்ஷரங்களமைந்த வடசொற்களையும்; தீனப்ரவர்த்தகன் (49-50), அங்குரார்ப்பணம் (52), சொர்க்க மத்ய பாதலம் (101,) பாதாதிகேசபரியந்தம் (129), சீதள சோம திவாகர லோசன, வேத சொரூப விநோத புராதன, மாருத பாவக மாதவ சாயக, மேரு சராசன வீர சரோருக பாதன் (226-8), வீரப்ரதாபுவிசயம் (322) என வருவனபோன்ற வடசொற்றொடர்களையும்; வத்திரம், வர்ச்சித்து (59), தெக்கணம் (12), பிரமவத்தி (24), கெங்காதரன் (62), நாதிக்க (162) முதலிய வடசொற்றிரிபுகளையும் ஆளுகின்றார்.

வச்சு (35), ஆச்சுது (206), தணிச்சு (283) என்பனபோன்ற மரூஉமொழிகள் உரிய இடங்களில் அமைந்துள்ளன. இவர் எடுத்தாண்ட சில அரும்பதங்கள்: திண்டு (88), கும்பு தெம்பு, (141), பாணினி (விறலி) (295), சரி (346), தெரியலர் (பகைவர்) (282), உச்சிதம் (323); பொருந்த என்னும் பொருளில் ஏல என்பதனையும் (104, 177), ஒருங்கே என்னும் பொருளில் ஒருமிக்க என்பதனையும் (106, 191), நன்கமைத்தலென்னும் பொருளில் பாணித்தலென்பதனையும் (118, 252), யானையென்னும் பொருளில் ஓர்கையென்பதையும் (364 இவர் வழங்குகின்றார்.

ஆசிரியர் இயல்பு.

இத்தகைய அரியநூலை இயற்றிய இவ்வாசிரியர் சிவபக்திச் செல்வமும், சிவபெருமானது கருணையை வியந்துபாராட்டும் தன்மையும், சிவனடியார் பக்தியும், சிவதலங்களில் அன்பும், பலநூலாராய்ச்சியும், ஆசிரியபக்தியும் உடையவரென்று தெரியவருகின்றது.

இவ்வுலாவின் ஈற்றிற் காணப்படும், 'விருப்பிருக்கும்' என்னும் செய்யுளால் அக்காலத்து அடியார்கள்செய்யும் திருப்பணிகளுக்குச் சிலர் இடையூறு செய்துவந்தார்களென்றும் அதுகண்டு இவர் மிகவருந்தினரென்றும் தோற்றுகின்றது.

இந்நூல் எட்டுப்பிரதி ஒன்று ஏறக்குறைய 50-வருடங்களுக்கு முன்பு திருவாவடுதுறை ஆதீனத்துப் புத்தகசாலையிற் கிடைத்தது; அதனைப் பிரதிசெய்துகொண்டேன். அதுமுதல் இன்றுவரை தேடியும் வேறுபிரதி கிடைக்கவில்லை. ஸ்ரீகடம்பவனேசருடைய திருவருள் கூட்டுவித்ததனால் இப்பொழுது குறிப்புரையுடன் வெளியிடலாயிற்று.

கடம்பர்கோயில் சம்பந்தமான அரிய சில செய்திகளை அவ்வூர் ஆயுர்வேதவைத்தியர் மகா-ா-ா-ஸ்ரீ எஸ். குருசாமிமுதலியாரவர்கள் அன்புடன் விசாரித்து விளங்கச்செய்தார்கள்.

இதனைப் பதிப்பிக்குங்காலத்து உடனிருந்து பலவகையான உதவிபுரிந்துவந்த உபகாரிகளின் அன்புடைமை மறக்கற்பாலதன்று.

பல வருஷங்களாகத் தேடிச் சேகரித்துப் பரிசோதித்து வைத்திருந்தும் பலவிதமான காரணங்களால் வெளிப்படுத்தாமலிருக்கும் இதைப்போன்ற பிரபந்தங்கள் பல உண்டு. தனித்தனியே வெளிப்படுத்தினால் காலம் நீட்டிக்குமென்றும் வேறு காரணங்களைக்கருதியும் சிலகாலமாக மாதப்பத்திரிகைகள்மூலம் அவை வெளியிடப்பெற்று வருகின்றன. அவ்விதம் செந்தமிழ்ப்பத்திரிகையில் இக்காலத்து வெளிவரும் நூல்களில் இது மூன்றுவதாகும்.

சென்னை,
4—11—1933.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

கடம்பர்கோயில் உலா.

சித்திவிநாயகர் காப்பு.

வெண்பா.

பொன்மருவு தென்கடம்பைப் பூரணவி லாசருலா
நன்மதுர மாக நவிற்றவே—என்மனத்து
வஞ்சத் திருப்பதஞ்செய் மைந்து றுசித் திக்களிற்றின்
கஞ்சத் திருப்பதமே காப்பு.

அவையடக்கம்.

நன்னிலஞ்சே ருக்கிடினு நன்குமகிழ் வார்முனியார்
செந்நெல்விளை வெய்தஞ் சிறப்புடையோர்—இந்நிலத்தில்
என்சொலிக ழார்புலவோ ரீசனுலா வென்றுகொள்வார்
புன்சொலெனுர் கொள்வார் பொருள்.

நூல்.

கலிவெண்பா.

இறைவன் பெருமை.

1 சீர்கொண்ட சத்தி சிவமா யருள் புரியும்
பார்கொண்ட சோதிப் பசுபதியாய்—ஏர்கொண்ட

2 அண்டமா யண்டத்தி னப்பாலா யிப்பாலாய்ப்
பிண்டமாய்ப் பல்லுயிரின் பேதமாய்ப்—பண்டை

குறிப்புரை.

காப்பு: பொன்—திருமகள். வஞ்சத்து இருப்பு அதம் செய்; அதம்—அழிவு. மைந்து—வலி.

அவையடக்கம்: விளைவைப் பின் எய்தும். சிறப்புடையோர் மகிழ்வா ரெனக் கூட்டுக.

3 அருவா யுருவா யருவுருவ மொன்றாய்
மருவாய் மலரின் வடிவாய்ப்—பெருவாழ்வாய்

4 எல்லா வுயிர்களுக்கு மின்பம் புணர்த்திவைக்கும்
வல்லான் கருணை மகாதேவன்—தொல்லைமுது

தல விசேடம்.

5 வானோர் துதிக்க மறைமுழங்க வானோரும்
ஏனோரும் வந்து பணிந் தேத்தெடுப்பத்—தேனாரும்

6 வெள்ளி வரையின்மிசை வீற்றிருப்பப் பூங்கமலத்
துள்ளிருப் போனண் புடன்பணிந்து—வள்ளலே

7 அன்பருன்னாற் பெற்ற வழியாப் பெரும்பதவிக்
கென்பதவி சொல்லி னிணையாமோ—மின்பருதி

8 ஒக்குமோ வென்றாற் றுணர்ந்தே னருவருத்து
மிக்க சிருட்டி விரத்தியுற்றேன்—இக்கணமே

9 முத்திப் பதத்தின் முறையுரைக்க வேண்டுமென
அத்த னகைத்தங் கருள்செய்வான்—பித்தொழிந்து

10 வந்தனையே முன்னாண் மறந்தனையே யஞ்சலினிச்
சிந்தனையென் கேளாய் திசைமுகனே—பந்தமற்றோர்

11 இம்மை மறுமையென்ப தெல்லா மறிந்தறிவால்
தம்மையறிந் தெம்மையன்றே தாமறிவார்—செம்மைமனப்

---

3. அரு—அரூபம். அருவுருவம்—ரூபாரூபம். மருவாய்—மணமாகி, மலரின் வடிவாய்: "வாச மலரெலா மானாய் நீயே" திருநா. தே.

6. வெள்ளிவரையின்மிசை—கைலைமலையின்மேல். பூங்கமலத்துள் இருப்போன்—பிரமன்; எழுவாய்.

7. மின் பருதி—மின்னலானது சூரியனை.

8. சிருட்டி விரத்தி—படைத்தற்றொழிலில் வெறுப்பை.

9. எனை—என்று பிரமன் கேட்ப. அத்தன்—சிவபெருமான். பித்து—மயக்கத்தை.

கமலத்துள்ளிருப்போன் (6) என (9)

10. இனி அஞ்சல். சிந்தனை—கவலை.

12 பக்குவத்த னல்லையினும் பாரிடத்தின் மேலான
தெக்கண காசியெனுஞ் சீர்பொருந்தும்—மிக்க

13 கடம்பவன மொன்றுளது கண்டாலு முள்ள
மடம்பவநந் தக்கதியும் வாய்க்கும்—இடம்பெரிதாம்

14 அத்தலத்தி னீசென் றரியதவஞ் செய்தக்காற்
கைத்தலத்தி னெல்லிக் கனியெனவே—முத்தி

15 நெறியு நெறிக்கு நிலையான நந்தம்
குறியு மறிவாய் குறித்தங்—குறுதியென

16 வேதன் பணிந்தெழுந்து மேவுபொன்னி நீராடி
மாதவங்கள் செய்து மகமியற்றி—நாதன்

17 அருள்பெற் றணிநகரு மாலயமுஞ் செய்து
மருளகற்று சித்திரையின் மன்னும்—திருவிழாக்

18 கண்டழியாப் பேறுபெற்ற காரணத்தி னாற்கொண்ட
தண்டலை யென்னுந் தனிப்பெயரும்—கொண்ட

19 பிரமபுர மென்னும் பெயரும் படைத்துப்
பரவு கடம்பைப் பதியான்—சுரரை

20 ஒடுக்கும் புகைக்க ணொருவா ளரக்கன்
இடுக்கண் பொறாம லெதிர்த்தே—கடுத்துப்

---

12. அல்லை—அல்லாயாதலால்; இன்னும் அல்லை.

13. உள்ளம்மடம்—மனத்திலுள்ள அறியாமை; உள்ள: பெயரெச்சமுமாம். பவம்—பிறப்பு. நந்த—கெட. கதி—முத்தி.

15. குறி—திருவுருவம்; ஸ்வரூபம். என—என்று கைலையிற் சிவபெருமான் கட்டளையிட.

17. சித்திரையில்—சித்திரைமாதத்தில்; 51—ஆம் கண்ணியைப் பார்க்க.

18. கண்டு—செய்து. தண்டலை: இது குழித்தண்டலையெனவும் வழங்கும்; "குழித்தண் டலையானைக் கூறு" என்பர் ஐயடிகள்காடவர்கோன்நாயனார்.

19. கடம்பையென்பது கடம்பர் கோவில், கடம்பந்துறை, கடம்பவன மென்பவற்றுள் ஒன்றன் மரூஉ; 120, 363, 383; கடம்பு—தலவிருட்சம்.

20. அரக்கன் இடுக்கண்—அரக்கன்செய்ததுன்பத்தை. கடுத்து—கோபித்து.

21 பொருமயிடற் காய்ந்தாடன் போர்க்குத் துணையாய்
வருதிறலி னோங்குசத்த மாதர்—பெருவலியாற்

22 சாடிப் பொரலுஞ் சலித்து மருண்டுபயந்
தோடிச் செலும்போ தொருவஞ்சம்—நாடியே

23 ஆதித் தனைப்பார்த் தருந்தவஞ்செய் மாமுனிபாற்
பேதித் தவண்மறைந்த பெற்றிதனைச்—சோதித்

24 திடாதே யவனிவனென் றெண்ணி முனியை
அடாது செயப்பிரம வத்தி—விடாது

25 தொடரப்பல் கோடிதலஞ் சூழ்ந்துந் தவிரா
திடர்தொலைக்கு நீபவனத் தென்றாய்—உடனிருக்கும்

26 தன்னை யருச்சிக்கத் தான்மகிழ்ந்து நின்றிடுமேழ்
அன்னையர் பாவ மகற்றினேன்—முன்னைவினை

27 மாசகலும் வேதசன்மா மாமறையோன் செய்தவமும்
பூசனையுங் கண்டவன்முன் போந்தருளிக்—கேசவனை

28 ஒப்பாய் நமதன் புடைமையினால் வேண்டுவதென்
செப்பா யெனவுரைக்கத் தென்மதுரை—மெய்ப்பதியில்

---

21. மயிடற் காய்ந்தான்—மகிஷாஸுரமர்த்தனி; துர்க்கை. சத்தமாதர்—எழுகன்னிகைகள்.

22. சாடி—அடித்து, வஞ்சம்—மாயச்செயலை.

23. அவன்—புகைக்கண்ணரக்கன்.

23-4. சோதித்திடாதே—ஆராயாமல். அவன் இவனென்று—அந்த அரக்கன் இந்த முனிவனென்று. அடாதுசெய—கொல்ல; இது மங்கல வழக்கு. பிரம அத்தி—பிரமஹத்தி.

25. தொடர—எழுகன்னியரைத் தொடர. என் தாயென்றது அம்பிகையை.

26. தன்னையென்றது சிவபெருமானை.

27. வேதசன்மாவென்னும் பெயரையுடைய பெரிய அந்தணன்.

27-8. அன்புடைமையினால் கேசவனை ஒப்பாய்; சிவதத்துவ விவேகம் 9-ஆம் செய்யுளைப் பார்க்க.

29 தோன்று மலயத் துவசன்மக ளாய்க்கயற்கண்
மூன்றுமுலை யுற்றவண்முற் றுமுலையாய்—ஏன்றிடப்பின்

30 எந்தை மணஞ்செய் தியன்றதிருக் கல்யாண
சுந்தரனுந் தன்மையிங்குத் தோற்றிடென — அந்தப்

31 படியே தரிசனமும் பாலித்தாட் கொண்டோன்
அடியார்க் கெளியவ னாதி—முடியாச்

32 சுகத்தியன் மாமுனிவோர் சூழ்ந்து பரவும்
அகத்தியன் பூசனைசெ யையன்—சகத்தசுரச்

33 சோமகன் வேதத் துரகதத்தைப் பாதலத்தில்
ஏமமுறக் கொண்டொளித்தங் கெய்திடலும்—தாமோ

34 தரன்வணங்கி நின்று தவம்புரியச் சைவாத்
திரங்கொடுக்க வாங்கித் திருக்கா—விரியிலவன்

35 மச்சவுரு வாயுததி யார்க்கத்திற் சென்றவன்றஞ்
சச்செகுத்து மீண்டுதிருச் சந்நிதியில்—வச்சு

36 வணங்கமறை வாயிருந்த மாமறைவாய் தோறும்
இணங்குசதுர் வேதபுரி யீசன்—குணங்கடந்தோன்

---

29. கயற்கண்ணையும் மூன்றுமுலையையும் உற்றவள்; அங்கயற்கணம்மை. முற்றுமுலை: இத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

30. எந்தையென்பது முன்னிலையின்கண் வந்தது. என—என்று வேதசன்மா வேண்டிக்கொள்ள.

31. எளியவன் ஆதி.

31-2. முடியாச்சுகத்த—பேரின்பத்தில்.

32-3. அசுரச் சோமகன்—சோமகாசுரன். துரகதம்—குதிரை. அங்கு—அப்பாதலத்தில்,

33-4. தாமோதரன்—திருமால். சைவாத்திரம்—பாசுபதாத்திரம். அவன்—திருமால்.

35. மச்ச உருவாய்—மீனவடிவமாகி. உததி—கடல். துஞ்ச—இறக்க. வச்சு—வேதங்களை வைத்து.

36. மறைவாயிருந்த—கண்ணுக்குப்புலப்படாமல் இருந்த.

37 கந்தவேண் முந்தக் கடிமலரா லர்ச்சித்துப்
புந்திமகிழ் கந்த புராதன்—பந்தமுற

38 வல்லார்க்கு முந்துறுற வல்லார்க்கு மில்லார்க்கும்
எல்லார்க்குந் தாயா யினிதளிப்போன்—தொல்லைப்

39 பலிக்குமுனந் தாருவனப் பாவையர்முன் சென்றோன்
எலிக்கு மரசளிக்கு மெந்தை—புலித்தோல்

40 உடையா னெனையா ளுடையான்சொல் பூதப்
படையான் கணிச்சிப் படையான்—விடையேறு

41 வானனத்தன் வானனத்தன் வந்துதுதிக் குஞ்சாம
கானனத்த னீள்கதம்ப கானனத்தன்—மீனவிழிப்

42 பாணிகொண்ட சென்னிப் பசுபதிபஞ் சானனத்தன்
பாணிகொண்ட சென்னிப் பரமேட்டி—நாணிகொண்ட

---

37. பந்தம் உற–பாசம் உறுதலினாலே.

38. வல்லார்க்கும்–வல்லமை இல்லாதவர்களுக்கும். துறவல்லார்க்கும்–துறத்தலில் வன்மையை உடையவர்க்கும்; துற : முதனிலைத்தொழிற்பெயர். வல்லார் : 'வல்லார்திறைகொள்வர், வல்லார்திறைகொடுப்பர்' (இ. கோ. உரை, உதாரணம்.) இல்லார்க்கும்–வறுமையையுடையவர்கட்கும்.

39. பலிக்குச் சென்றோன். எலிக்கும் : உம்மை இழிவுசிறப்பு. அரசு–அரசாட்சியை. இக்கண்ணியிற்குறிப்பிட்டது மகாபலி சக்கரவர்த்தியின் வரலாறு; "வெண்ணெ யுண்ண வெண்ணுபு வந்து, நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த, தாவுபுல் லெலிக்கு மூவுல காள, நொய்தினி லளித்த கைவளம் போற்றி" கோயிலன்மணிமாலை, 40.

39–40. தோல் உடை–தோல்ஆடை. படை–சேனை, ஆயுதம்.

40–41. விடையேறுவான். அனத்தன்–பிரமனும். வான நத்தன்–பெருமை பொருந்திய சங்கையுடைய திருமாலும். சாமகானன் அத்தன்.

41-2. மீனவிழிப்பாணி–கங்கை; பாணி–நீர். சென்னியைப் பாணியிற் கொண்ட பரமேட்டி; சென்னி–பிரமகபாலம்; பாணி–கை.

43 மாகனக வில்லியிம வானுதவும் வல்லியிடப்
பாகனக வில்லிற் பதிகொண்டோன்—யோகனகன்
44 நாவி லிரதனொரு நால்வேதத் தந்தியான்
தூவெண் சரீரத் துரகத்தான்—மூவுருவன்
45 அம்பலத்து ணின்றுநட மாடும் பதாதியான்
நம்பலரைப் பார்த்து நகைசெய்தோன்—செம்பொனதிச்
46 சுத்தக் கடம்பந் துறையரசன் றெய்வதமாய்
வைத்தசத்த கோடி மகாமந்திரி—அத்துவிதன்
47 தற்பரன் பூத தளகர்த்தன் றூணியிற்
பற்பலவாந் தானு பதியினன்—பொற்புற்
48 றொருமூவ ராயசத்த னேங்குகுலத் தோரைக்
கருமத் தடக்குமதி காரி—பெருகுதிறற்
49 கானு காணிகன் பாடலிலே கற்பித்தோன்
மானசச் சீர்மை மகாசனன்—தீனபிர

---

43. கனகவில்லி–மேருமலையை வில்லாக உடையார். வல்லி–பார்வதி. இடம் பாகன். நக இல்லில்–மலையாகிய வீட்டில்; அக இல்லிலென்றுகொண்டு அன்பர்களது இதயமாகிய வீட்டி லெனலும் பொருந்தும். யோகு அனகன்; யோகு–யோகம்.

44. நாவில் இரதன்–நாக்கிற் சுவையாயிருப்பான். வேதத்து அந்தியான்–வேதத்தால் முடிவுசெய்யப்படாதவன். சரீரத்து உரகத்தான்; உரகம்–பாம்பு.

45. பதாதியான்–பதத்தையுடைய முதல்வன். நம்பலரை–பகைவரை. பொன்நதி–காவிரியாறு.

44–5. இவற்றில் இரதமுதலிய நால்வகைப் படையுடையானென்னும் பெயர்கள் தோன்றுகின்றன.

46. மந்திரி–மந்திரத்தையுடையவன்.

47. பூததளகர்த்தன்–பூதப்படைக்குத்தலைவன்.

48. மூவர்ஆய – மும்மூர்த்திகளாகிய. சத்தன் – உண்மைப்பொருளாக உள்ளவன். கருமத்து–தத்தம் தொழில்களில்.

49. கால் நுகர் அணிகன்–காற்றை உண்ணும் பாம்பாகிய ஆபரணத்தையுடையவன்; அணிகம்–ஆபரணம்; அணி திரிந்து அணிகமாயிற்றென்பர்; (சீவக. 2811, ந.) பாடலில்–இசைக்கு. ஏகல் பித்தோன்–தூதாகப்போதலையுடைய பித்தன்; "பாதஞ் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பாற், றூதன்று சென்றதென் னூர்த் தியாகர்" (திருவாரூர்க்கோவை.) மானசம்–மானஸம். மனத்திலுள்ள தூய்மையாகியசிறப்பே தனக்குப் பெரிய ஆசனமாகஉடையவன்.

50 வர்த்தகன் பண்ணை வகுத்துரைக்கும் பங்காளி
அத்த னமல னமரேசன்—கர்த்தன்முனந்

திருவிழா.

51 தோடலருங் கஞ்சன் றொகுத்துப் பணிதிருநாள்
மேடமதிச் சித்திரையின் மேவுதலும்—நாடியே

52 பூணவங்கு ரார்ப்பணமும் பொற்பமைத்துக் காப்பணிந்து
காணுந் துசாரோ கணஞ்செய்து—நாணிறைய

53 ஒன்றிரண்டு மூன்றோ டொருநாலைந் தாறேழும்
சென்றிடப்பி னெட்டாந் திருநாளில்—அன்றுதய

54 காலத் திருவிழாக் கண்டுவந்து வந்தருளி
மாலைவிழா வீதியுலா வந்ததற்பின்—ஞாலமெலாம்

55 போற்றுமணி மண்டபத்திற் பொன்னனையா ராடல்கண்டு
வீற்றிருந்து பொற்கோயின் மேவியே—தோற்றருவின்

56 மன்மதனைக் கையெடுத்து மண்டலத்தோர் கொண்டாட
மென்மலர்ப்பூம் பள்ளியணை மீதணைந்து—தொன்மையகி

57 லாண்டமு மீன்றமுற்றி லாமுலையென் னம்மையொடு
காண்டகுசோ திக்கடவுள் கண்மலர்ந்து—நீண்டசடைக்

திருமஞ்சனம்கொண்டருளுதல்.

58 கங்கைக்கு மேலாகக் காவிரிமேன் மேன்மேலமை
தங்கத் திருமஞ் சனமாடி—மங்குலொத்த

49–50. தீன பிரவர்த்தகன்-ஏழைகளை நடத்துபவன். பண்ணை-இசையை. பங்கென்றது உமையை. ஆளி–ஆள்பவன்.

46–50. இப்பகுதியில், அரசன், மந்திரி, தளகர்த்தன், தானுபதி (ஸ்தானுபதி), ராயசத்தன், கருமாதிகாரி, காணிகன், கற்பித்தோன் (ஆசிரியன்), மகாசனன், பிரவர்த்தகன், வர்த்தகன் என்னும் பெயர்கள் தோன்றுகின்றன.

51. கஞ்சன்–பிரமன்; கஞ்சம்–தாமரை. மேடமதி–சித்திரைமாதம், திருநாள் மேவுதலும்,

52. காப்பு–ரக்ஷை. துசாரோகணம்–கொடியேற்றம்.

54. உவந்து வந்தருளி.

55. பொன்னனையார்–உருத்திரகணிகையர்.

58. கங்கைக்குமேலாக என்றது சிவபெருமான் திருமுடியிற் கங்கை இருத்தலை நினைந்து. மங்குல்–மேகம்.

அலங்காரம்.

59 சுத்தக் கறுப்பென்றுஞ் சொன்னீலப் புள்ளியென்றும்
வத்திரங்கொள் வத்திரங்கள் வர்ச்சித்து—மெய்த்ததிக்காம்

60 எட்டாடை மின்னு ரிடைப்பட்ட வென்றொருவிப்
பட்டாடை பீதாம் பரஞ்சாத்தி—இட்டமுடன்

61 ஆதியந்த மில்லா வடிக டிருமுடிமேற்
சோதி மணிமகுடஞ் சூட்டியே—பூதித்

62 திரிபுண் டரமணிந்து சேணு ரிமய
கிரியுதவுங் கன்னிதனைக் கெங்கா—தானுடனே

63 கூட்டிவைக்கு மாரனைமுன் கோபித்த வக்கினிதன்
வீட்டின் கதவடைத்து மேலிறுகப்—பூட்டி

64 ஒருமுத் திரிபொறித்த தொக்கவே மிக்க
திருநெற்றி யிற்றிலதந் தீட்டிப்—பெருகுதவத்

65 தின்னிசை வீணை யிருவோ ரிசைந்தாடப்
பொன்னூசல் போற்குழைகள் பூட்டியே—மின்னுமணி

---

59. சுத்தக்கறுப்பு-முழுக்கறுப்பு; என்றது யானைத்தோலை; கிருஷ்ணசினமுமாம். நீலப்புள்ளி யென்றது புலித்தோலை. வத்திரம்-முகம், ஆடை. இரண்டும் தலையோடு கூடியிருத்தலால் 'வத்திரங்கொள் வத்திரம்' என்றார். வர்ச்சித்து-நீக்கி; "பொல்லா வினைவர்ச்சி யென்றார்ச்சி யேனொரு பூவெடுத்தே" (பழனி இரட்டைமணிமாலை, 20.) மெய்த்த-மெய்யாகிய. திக்கு ஆம்-திசைகளாகிய.

60. மின்னுர் இடைப்பட்ட-தாருகாவனத்து மகளிர்களிடையிலேபட்டன; என்றது அவர்களும் திகம்பராக ஆனமையைப் புலப்படுத்துகின்றது; "திகம்பரா நுந்தமைச் சேர்ந்தடைந்த யாமும், திகம்பரோ யாகிச் சிறந்தோம்" திருவிடை. உலா.

59–60. எட்டுத் திக்காம் ஆடை—எட்டுத் திசையாகிய ஆடை.

61. அடிகள்—சிவபெருமானுடைய. பூதி—திருநீறு.

64. முத்திரிபொறித்தது—முத்திரையிட்டதை.

65. இருவோர்—கம்பளர், அசுவதாரர்; தும்புரு நாரத ரென்பாரு முளர்; "தோடுவார் காதன்றே தோன்றுத் துணையையர், பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே" (திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம், 16.); "காதி லிரண்டுபேர் கண்டோ ரிரண்டுபேர், ஏதிலராய்க் காணு ரிரண்டுபேர்—பேதைமுலை, உண்ணு ரிரண்டுபே ரோங்குபுலி யூரருக்குப், பெண்ணுன பேரிரண்டு பேர்" (தில்லைக்கலம்பகம், 8), "காதி லிருவரிசை காத்திருந்து கேட்பனபோற், கோதி லாவக் குழைசாத்தி" தேவையுலா, 69.

66 மாமாலை முத்து வடமாலை பொன்மாலை
பூமாலை மாலைப் புயத்தணிந்து—தோமறுசீர்

67 இத்தலத்து மான்மியங்க ளெத்தலத்து மின்றெனத்தன்
கைத்தலத்தி னாலுரைக்குங் காட்சியென—வைத்த

68 வாத வபயமு மான்மழுவுங் கொண்ட
கரதலங்கள் சேர்கங் கணமும்—இரவியெனத்

69 தோளணிகண் மார்பந் துளங்குபவீ தம்பதக்கம்
வாளணிகண் முற்றும் வனைந்தருளி—நீளணிகொள்

70 பட்டிகையுஞ் சேர்த்தருண பாதார விந்தமிசைக்
கட்டிசையுஞ் செம்பொற் கழல்புனைந்து—சிட்டர்

71 செவியி னமுதாச் சிலம்புஞ் சிலம்பும்
கவினத் தரித்துக் கனிவாய்ப்—புவிபுகழும்

மகாபூசை.

72 அவ்வியமி னெஞ்சத்தி னாதிசைவ ராகமத்தால்
திவ்வியமா பூசை செயமகிழ்ந்து—கவ்வை

திருவீதிக்கு எழந்தருளல்.

73 மறைமுழங்க வந்துதொழு வார்முழங்க மூவர்
முறைமுழங்கச் சங்க முழங்கக்—குறைவிலந்து

74 துந்துபிகல் லென்று தொனிப்பவகி லாண்டமெல்லாம்
தந்தமுற்றி லாமுலைச மேதனா—எந்தை

75 உலகமெலாங் கண்டுதொழு துய்யவே செம்பொன்
இலகு மணித்திருத்தண் டேறித்—திலகநுதல்

---

66. மாலை புயத்திற்கு அடை.

69. உபவீதம்—பூணூல்.

70. பட்டிகை—அரைப்பட்டிகை; இதனை அரியாயோகமென்பர் இளங்கோவடிகள்; சிலப். 14:170. அருணம்—சிவப்பு. கட்டு இசையும்—கட்டுதல் பொருந்தும்.

71. சிலம்பும் சிலம்பும்—ஒலிக்கின்ற சிலம்புகளையும்.

72. கவ்வை—முழக்கம்.

73. மூவர்முறை—தேவாரம்; "மூவர்பாடல்" 109.

76 மின்னார்க ளாட விடையின் கொடியிலங்கப்
பொன்னுல வட்டமண்டம் போர்த்தாட—முன்னெடுநாட்

77 போரவி னுட்கிடந்த பிள்ளைமதி வாடுமென
ஈர மதிநெஞ் சிரங்கியே—ஆர முதம்

78 போதத் திரட்டிப் புகட்டுவபோல் வெள்ளியங்காற்
கோதிலா முத்தின் குடைநிழற்ற—ஆதியிலே

79 ஒன்றாய் விரிவா யொடுக்கமாய்ப் பின்விரிவாய்
நின்று னிலைமையிது நீர்காணும்—என்றுசொல்லித்

80 தேவருக்கும் யாவருக்குஞ் செப்புவபோற் பஞ்சவண்ணப்
பாவாடை மீது பணிமாற—ஓவாது

81 பைத்த மணியும் பனிமதியு முள்ளடங்க
வைத்த கிரீட மறைத்ததனால்—மொய்த்தனங்கள்

82 கங்கை புகும்வழி காணா சுழல்வனபோல்
மங்கையர்கள் வெண்சா மரையிரட்டத்—துங்க

83 மணிக்கோ புரநிரையின் வாயில் பலசென்
றணிக்கோல வீதி யணைந்து—கணிப்பரிய

திருத்தேரில் எழுந்தருளல்.

84 செம்பொற் கிரியோ திருவா வடுதுறையில்
எம்பிரா னன்ப ரிதயமோ—கம்பைநதி

---

76. அண்டம்-ஆகாயத்தை.

80. பஞ்சவண்ணப்பாவாடை-ஒரு விருது; "பஞ்சவண் ணத்துப் படாகை துடங்க" (பெருங்கதை); "பகற்பந்தம் பஞ்சவன்னப் பாவாடை யென்னும், விகற்பந்தஞ் சின்னமென்ன மேவும்" சிவந்தெழுந்தபல்லவாரயனுலா.

81. பைத்த-விரிந்த. அன்னங்கள் மொய்த்து.

82. கங்கை புகும்வழி காணா-திருமுடியிலுள்ள கங்கையினிடத்தே செல்லுதற்குரிய வழியைக் காணாதனவாகி. இரட்ட—மாறி அசைப்ப.

81—2. வெண்சாமரைக்கு அன்னங்கள் உவமை.

84. திருவாவடுதுறையில் எம்பிரான் அன்பர்-திருவாவடுதுறையாதீன மடத்திலுள்ள அடியார். சிவபெருமான் எழுந்தருளியிருத்தற்குரிய இடமாக இருத்தல்பற்றி 'அன்பர் இதயம்' உவமை கூறப்பட்டது.

85 சேர்தோண்டை மண்டலத்தோர் செய்தபெரும் புண்ணியமோ
ஈதென்னும் பொற்றடந்தே ரேறியே—நீதிநிறை

86 பாகைச் சரவணைதன் பாக்கியமேன் மேல்வளர
ஓகையுடன் சிந்தை யுவந்தமைத்த—நாகரிகச்

87 சோதி நவமணியின் கந்தாப்பொன் னுபாணச்
சாதிகள்க பாய்த்தகட்டிற் றூமிலங்கக்—கோதில்லாத்

88 திண்டொழுகு பஞ்சணையுஞ் சீர்பொருந்த வெத்திசையும்
கொண்ட பதாகை குடைவிளங்க—மண்டலத்திற்

89 பல்லா யிரகோடி பானு வுதித்ததென
வில்லார்சிங் காதனத்தில் வீற்றிருப்ப—மல்லாரும்

உடன்வருவோர்.

90 தந்தி முகக்கடவுள் சண்முகத்து வேற்கடவுள்
நந்திமுதற் பூதகண நாதருமை—ஐந்துருவ

91 மிக்கசிவன் போற்கடவுள் வேறிலையுண் டென்பவர்க்குத்
தக்கன் மறுதலையே சாட்சியெனும்—உக்கிரனும்

92 பால நயனப் பதினோ ருருத்திரரும்
மாலதிருஞ் சூல வயிரவரும்—மேலிசைத்த

93 கற்றுணையா வுற்ற கடல்கடந்து கற்பனையிற்
சொற்றுணையி னுலமணர் சூழ்கடந்து—நற்றுணையாய்ச்

---

87. கபாய்-கவசம்; "களிறுதவுக பாய்மிசைப் போர்த்தவள்" (மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ், தாப்புப். 10); "கம்பக் கரடக் களிற்றின் கபாயணிந்த, அம்பொற் புயத்தார்" சிதம்பரச்செய்யுட்கோவை, 25.

88. பதாகை-பெருங்கொடி.

89. வில்-ஒளி.

90. ஐயைந்துருவம்-இருபத்தைந்து மூர்த்தம்.

91. மறுதலை-ஆட்டுத்தலையாகிய வேறு தலை. உக்கிரன்-வீரபத்திரக் கடவுள்.

92. பாலநயனம்-நெற்றிக்கண்ணையுடைய. அதிரும்-நடுங்கும்.

93. கல்துணையா-கல்லைத் துணையாகக்கொண்டு. சொற்றுணையினால்-சொற்றுணை வேதியன்' என்னும் பதிகத்தால். சூழ்-சூழ்ச்சி.

94 சாரத் திருப்பதிகஞ் சாத்தி மலர்க்கையுழ
வாரப் பணிவிடைகொள் வாக்கிறையும்—பேரறிவால்

95 தேறுஞ் சமயஞ் சிலசமய மொன்றெனவே
கூறும் பரசமய கோளரியும்—வீறொருத்தி

96 வாது நடத்தின் மகிழ்வோனை யாரூரில்
தூது நடத்திவைத்த சுந்தரரும்—மேதகுபேர்

97 ஆனந்த வெள்ளமகத் தாறாக மாறாமல்
ஊனந் தவிர்நயனத் தூற்றெடுக்கத்—தேனுந்து

98 பாவைதிருச் சிற்றம் பலமுடையார் கையெழுத்தாம்
கோவை யுரைத்தெமையாட் கொண்டவரும்—ஓவறுசீர்த்

99 தாதை யடியைத் தடிந்தரனைப் பூசித்துத்
தீதகற்றுந் தண்டித் திருத்தேவும்—மாதவனும்

100 கார்கொண்ட மேனிக் கடவுளுமம் போருகனும்
சீர்கொண்ட விந்த்ராதி தேவருடன்—ஏர்கொண்ட

101 பான்மதியுஞ் சொர்க்கமத்ய பாதலத்து மேற்றுவிளக்
கான வொருபனிரண் டாதவரும்—வானகஞ்சூழ்

---

94. வாக்கிறை—திருநாவுக்கரசுநாயனார்.

95. பரசமயகோளரி—திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வீறு — வீறுகின்ற. ஒருத்தி—பத்திரகாளியின்.

96. நடத்தின் மகிழ்வோனென்றது இறைவன் திருவாலங்காட்டில் ஊர்த்துவதாண்டவம் செய்த செய்தியைக் குறிக்கின்றது.

97. நயனத்தூற்றெடுக்க: "அழுதடியடைந்தவன்பன்" (திருவிளை. கடவுள்.) என்பர் பரஞ்சோதியார். "பேரானந்தமுற்றவர்க்கே கண்ணீர்கம் பலையுண்டாகும்" (தாயுமானவர்பாடல்) என்பது இவ்கே கருதற்குரியது. ஊற்றெடுப்ப: "கண்கள், தொடுமணற்கேணியிற் சுரந்துநீர் பாய" நால்வர்நான். 4.

98. ஆட்கொண்டவர்—திருவாதவூரடிகள். அவர் கோவையுரைத்தது, "காதலித்து, நானூறு காரிகையை நல்கினேன் வாசகமும்" (திருவாதவூரரு, 73—4) என்பதனாலும், "கோவுக்குக், கோவைசொன்னா னூண்டுநெஞ்சேகுற்றால வென்றுமாப், பாவைசொன்னா லுஞ்சொலுமே பாட்டு" (திருக்குற்றாலச் சிலேடை. அவை.) என்பதனாலும் விளங்கும்.

100. ஏர்—எழுச்சி; அழகுமாம்.

102 பூதலத்திற் பேறுபெற்ற புண்ணியரு மெண்ணரிய
பாதலத்து மேலான பன்னகரும்—போதநிறை

103 மோனந் தவாத முனிவோரு மெய்ஞ்ஞான
ஆனந்த சித்த ரனைவோரும்—வானந்தம்

104 ஏலப் புவன மிருநூற் றிருபத்து
நாலிற் கடவுளரு நண்ணியே—கோலமணித்

105 தேர்திகழ்வி மானஞ் சிவிகைமுதற் றங்கடங்கள்
ஊர்தி களிலு முவந்தேறப்—பேரொலிசேர்

வாத்தியங்கள்.

106 தக்கை யுடுக்கை தடாரிதவில் பேரியொரு
மிக்க முழங்க விருதார்ப்ப—மிக்கதொனி

107 மத்தளங்கைத் தாளவொலி மாரி முழக்கொலிபோல்
தத்தளங்கென் றேபரதஞ் சாதிப்ப—எத்திசையும்

108 தும்புரு வீணை சுரமண்டலம் பாடற்
றம்புரு நாதந் தனியிசைப்ப—உம்பரெல்லாம்

109 ஆர்ப்ப மறைக ளருண்மூவர் பாடலண்டம்
போர்ப்பவிசைத் தன்பர் புறஞ்சூழப்—பார்ப்புறத்தில்

110 இன்று புதுத்தே ரிசைந்தழுத்திச் செல்வதனால்
துன்றபழந் தேர்வயிறு சூலுளைந்து—நன்றுதவு

---

103. அந்தம்—முடிவு.

102–3. போதநிறைமோனம்: "மோன மென்பது ஞான வரம்பு" கோன்றைவேந்தன்.

104. ஏல—பொருந்த; 177.

106. ஒருமிக்க—ஒருங்கே; 191. விருது—காளம் முதலியன.

107. தத்தளங்கு: தாளக்கட்டு; "மத்தளந் தத்த மழலை யொலிததும்பத், தத்தளந் தத்தந் தளங்கவென" (சீவந்தெழுந்த பல்லவாயனுலா.) பரதம்—பாதநூலிற் கூறிய விதி; ஆகுபெயர்.

108. சுரமண்டலம்—ஒருவகை இசைக்கருவி.

109. மூவர்பாடல்—தேவாரங்கள்.

110. பழந்தேர்—பூமி.

111 பைங்குழவி யொன்றீன்ற பான்மையென மேன்மைதரும்
செங்கதிரோன் றேர்கிட் டிசைதோன்றப்—பங்கயப்பூந்

திருச்சின்னம்.

112 தாட்டுணையா ளங்கயற்கண் சார்கூட லான்வந்தான்
ஆட்டை விடாப்புலியூ ரான்வந்தான்—நாட்டிவைத்த

113 சண்மதத்து மேலான தந்திவனத் தான்வந்தான்
மண்பாவு புற்றிடத் தான்வந்தான் —உண்மையன்பன்

114 ஆவணத்து முற்றும்விலை யாமென் றவன்வந்தான்
பூவணத்து வாசப் பொருள்வந்தான்—மேவினர்தம்

115 துன்பக் கடல்கடத்துந் தோணிபுரத் தான்வந்தான்
இன்பவெள்ளத் தையாற் றிறைவந்தான்—நம்பும்

---

111. கீட்டிசை=கீழ்த்திசை; "கீட்டிசைக்கரியசாத்தனும்" திருவிளை. திருநகரங்கண்ட. 43.

112–9. இக்கண்ணிகளில் தலங்களின் பெயர்களை அழகுபட அமைத் திருத்தல் அறிந்து இன்புறற்பாலது.

112. கூடல்–மதுரை, மணத்தல். ஆட்டை–நடனத்தை; ஆடென்னும் மிருகத்தை. புலியூர்–சிதம்பரம்; "நாட்டுக்கு ளாட்டுக்கு நாலுகா லையநின், ஆட்டுக் கிரண்டுகா லானாலும்–நாட்டமுள்ள, சீர்மேவு தில்லைச் சிவனேயிவ் வாட்டை விட்டுப், போமோசொல் லாயப் புலி" (காளமேகத்தின்வாக்கு); "அம்புலியூ ரென்னு மணிகொள் சிதம்பரத்தே, வெம்புலியொன் றெந்நாளு மேவுங்கா ணம்மானை, வெம்புலியொன் றெந்நாளு மேவுமே யாமாயின், அம்பலத் ஞைத் தான்விட் டகலாதோ வம்மானை, ஆட்டைவிட்டு வேங்கை யகலுமோ வம்மானை" (தனிப்பாடல்); "ஆட்டைப் புலிகாக்கு மம்பலமும்" விறலிவிடு. 131.

113. மதம்–சமயம்; யானையின்மதமென்பது வேறுபொருள். தந்திவனம்–திருவானைக்கா. மண்–பூவுலகம்; புற்றிடத்தான்–திருவாரூர் வன்மீகநாதர்.

114. ஆவணம்–அடிமையோலை, கடைவீதி. பூவணம்–திருப்பூவணமென் னும் தலம். வாசம்–வசித்தல், வாசனை.

115. தோணிபுரம்–சீகாழி.

116 அருங்குமுதச் செவ்வா யறம்வளர்த்த தேவி
மருங்கமருங் காஞ்சிபுரன் வந்தான்—நெருங்குசடா

117 தாரண மாமுனிவோர் தந்தந் துதிக்கைபெற்ற
வாரண வாசி யரன்வந்தான்—பேரணியாய்ப்

118 பாணித் தணிந்தபணிப் பைக்குளடங் காதபெரு
மாணிக்க மாமலை யான்வந்தான்—தாணிறையத்

119 தேங்கோய்வில் லானந்தத் தேனையன்பர்க் கூட்டிவைக்கும்
ஈங்கோய் மலையெம் பிரான்வந்தான்—தீங்கை

120 அடும்பரமன் காளத்தி யந்தாதி கொண்ட
கடம்பைச் சிவசங் கரனும்—நெடுங்கயிலைக்

121 குன்றுடையான் றொண்டர் குழாமுடையான் வந்தானென்
றென்றுதிருச் சின்ன மெடுத்திசைப்ப—மன்றல்

122 இசைந்ததிருத் தேர்வீதிக் கேகவுடன் கூடி
வசந்தன் றிருத்தேர் மருவப்—பசும்பொன்னிப்

குழாங்கள்.

123 பூதலத்துப் பூவையரும் பொன்னாட்டின் மின்னாரும்
பாதலத்தி னாககன்னிப் பாவையரும்—சீதமலி

124 கொண்டன் முழக்கங் குறித்தமயிற் கூட்டம்போல்
எண்டிசையுங் கொள்ளா தெதிர்நின்றே—அண்டர்

---

116. அரு குமுதம். மருங்கு=பக்கம், இடை. காஞ்சி—ஒருநகரம், ஒருவகை மேகலை. முப்பத்திரண்டு தருமங்களும் அம்பிகையாற் காஞ்சியில் வளர்க்கப் பட்டனவென்பது இங்கே அறிதற்குரியது.

117. துதிக்கை—துதித்தல், தும்பிக்கை. வாரணவாசி—காசி.

118. பாணித்து—திருந்தஅமைத்து; இஃது ஆலயபரிபாஷை; 252. பணிப்பை—ஆபரணப்பை, பாம்பின்படம்.

119. தேங்கு ஓய்வு இல். ஈங்கோய்மலை: இஃது ஈக்களாற் பூசிக்கப் பெற்ற தலம்.

122. வசந்தன்—மன்மதன். அவன் திருத்தேர்—தென்றல்.

122-3. பொன்னிப்பூதலம்—சோழநாடு.

125 பெருமானை மானைப் பிடித்திடுபெம் மானைப்
பெருமானைப் போர்வைப் பிரானை—ஒருமானை

126 ஆகத்து வைத்தவனை யந்தகனை யங்கணம்போல்
ஆகத்து வைத்தவனை யங்கணனை—ஏகத்

127 தொருவனையான் போற்ற வுவந்தானை யென்றும்
ஒருவனையான் றன்னையரு ளோனைக்—கருவிழியாம்

128 உற்பலத்தா லர்ச்சித்தா ருள்ளன் புடன்பணிந்தார்
பற்பலவாத் தோத்திரங்கள் பண்ணினார்—பொற்பமநும்

குழாங்களின் கூற்று.

129 பாதாதி கேச பரியந்தம் பார்க்கவிழி
போதாதென் செய்வோ மெனப்புகன்றார்—வேதாதி

130 நூலறியா யாரு நுவலறியா நாடியயன்
மாலறியாத் தேவர் வடிவழகைச்—சாலவே

131 கண்டுதவப் பேறுபெற்றோங் காதலுற்றோங் கொன்றையருள்
கொண்டுதவப் பேறெமக்குக் கூடாதோ—ஒண்டொடியார்

132 எல்லார்க்கு நல்லார்க ளென்ப துமக்கிலையோ
கல்லார்க்கு நெஞ்சு கனியாது—தொல்லுலகில்

---

125. பெரும் ஆனைப்போர்வை. ஒருமானை—உமாதேவியாரை.

126. ஆகத்து வைத்தவனை; ஆகம்—பாதியுடம்பில். அந்தகனை—யமனை. அங்கணம்போல் ஆக—சேறுபோல ஆகும்படி. துவைத்தவனை—மிதித்தவனை.

126-7. ஏகத்தொருவனை: "யாவையுமா மேகத்தொருவன்" (திருக்கோவையார், 71.) ஒருவு அனையான்றன்னை—நீங்கிய தாயையுடையவனை; தாயில்லாதவனை யென்றபடி.

128. உற்பலம் அருச்சித்தற்குரிய எட்டுமலர்களுள் ஒன்று.

130. அறியா என்ற பெயரெச்சங்கள், தேவர் என்பதைக்கொண்டு முடிந்தன.

131. தவப்பேறு—தவத்தாலடையும் பயன். அருள்கொண்டு—தவ. பேறு—பெறுதல்.

132. என்பது—என்று மகளிர் கூறப்படுதல்.

133 தன்னுயிர்போன் மன்னுயிர்க்குத் தானிரங்க வேண்டுமென
முன்ன மனுநூன் முறையுரைத்தீர்—என்னசொல்வோம்

134 மிஞ்சு மதிப்பகைக்கும் வேளிரதத் தென்றலுக்கும்
அஞ்சா தாவி னணிகொண்டும்—குஞ்சரமாம்

135 கங்குலுக்கு மைந்து கணையரும்புக் கும்வேட்கும்
தங்கவிழி யாமுச் சுடர்கொண்டும்—புங்கவர்க்கா

136 ஆக்கங் கருதி யமர்க்குத் துணிந்தமதன்
போர்க்குனிவில் வாளி புறப்பட்டுத்—தாக்கமுன்பின்

137 பார்த்தீர் விழித்தீர் பயந்தலைக்கொண் டீருடலம்
வேர்த்தீ ரொருபாதி மெய்யானீர்—தோத்திரமாச்

138 சொல்லவோ வேளுமக்குத் தோற்றுனோ தோற்றீர்நீர்
அல்லவோ மாலீ தறியானோ—வல்லமையால்

139 ஆண்பெண் ணிருவருமோ ராடைகட்டச் செய்ததுவும்
வீண்பேச்சோ வுங்கள் விளையாட்டோ—நாண்போக்கித்

140 தானையெல்லாம் போக்கித் தாணியிலெங் கொங்கைமத
யானையெல்லாம் வெட்டவெளி யாக்கியே—சேனையெல்லாம்

---

134. சந்திரனையும் தென்றலையும் பாம்பு உண்ணும்; "தென்காற்று மிந்து வுஞ் சமனே கண்டீர், வீரமா லலங்கா ரர்க்கு விடவரா விடவ ராதோ" (அழகர் கலம்பகம், 73.) குஞ்சரமாம்—மன்மதனுக்கு யானையாகிய.

135. மன்மதன்கணைகளை அரும்பாகக்கூறுதல் மரபு; "சுருப்புநாண் கருப்புவி லருப்புக்கணை தூவ" (மணிமேகலை, 18: 105); "கரும்புஞ் சுரும்பு மரும்பும் பொரும்படைக் காமர்வில்வேள்" (சீதம்பாச்செய். 74.) இருளுக்குச் சந்திரனாகிய கண்ணும், அரும்புகளுக்குச் சூரியனாகிய கண்ணும், மன்மதனுக்கு அக்கினியாகிய நெற்றிக்கண்ணும் பகை என்று கொள்க, புங்கவர்க்கா—தேவர்களுக்காக.

136. முன் தாக்க.

136-7. பின் பார்த்தீர். பயந்தலைக்கொண்டீர்; பயம்—நீர், அச்சம்; நிலைடை.

138. மால்—மயக்கம். நீது அறியானோ.

139. 'ஓராடைகட்டச்செய்தது' என்றது அர்த்தநாரீசுவரமூர்த்தத்தை நினைந்து.

140. தானை—ஆடை. சேனையென்றது பெண்களை.

141 கும்பிட்டு நம்பகையைக் கும்பிட்ட தென்றுமதன்
தெம்பிட்டுச் சீறிச் சினந்திட்டான்—வம்பிட்டுத்

142 தையலருந் தூற்றினர் சற்றே கடைக்கணித்தால்
மையலரென் றையலர்க்கு வாடோமே—துய்யபுகழ்

143 ஈசரே யென்றென் றெடுத்துப் பலபலவாப்
பேசு மவரி லொருபேதை—பூசனமதன்

பேதை.

144 விற்குணத்தைக் கண்டறியா மெல்லரும்பு தானுரைக்கும்
சொற்குணத்தை யோராச் சுகப்பிள்ளை—பொற்கை

145 உழையார் கடம்பலர்மட் டுண்டறியா வண்டு
மழையார்ப் புணராத மஞ்ஞை—இழைபுகா

146 மாணிக்க மீசனுக்கு மாரன் பணிக்கு வைக்கும்
காணிக்கை யானதங் கக்கட்டி—நீணிலத்து

147 மன்னுங் கலைபொருந்தா மான்கன்று பாற்படுநீர்
பின்னஞ் செயவறியாப் பிள்ளையன்னம்—புன்கவிஞர்

148 பாட்டி னெழுவாய் பயனிலைபோ லொன்றொன்று
கூட்டி முடியாக் குழலினாள்—வாட்டமுறும்

---

141. கும்பு இட்டு—கூட்டமாகி; கும்பென்பது குழும்பு என்பதன் சிதைவு போலும். நம்பகையை என்றது சிவபெருமானை. இங்ஙனம் நினைந்தவன் மன்மதன். தெம்பு—வன்மை; வழக்கு. வம்பு—பழிமொழி.

142. மை அலர் என்று—குற்றமுள்ள பூக்களென நினைந்து; பாணமாக நினையோம் என்றபடி. ஐ அலர்க்கு—ஐந்து மலர்ப்பாணங்களுக்கு.

144. குணம்—தன்மை, நாணியாகிய வண்டு; நைடதம், அன்னத்தைக் கண்ணுற்ற. 12. சொற்குணங்களாவன: இனிமை மெய்ம்மை முதலியன; குறள். 194, பரிமேல்.

145. உழை—மான். கடம்பு: இத்தலவிருட்சம். மட்டு—தேன். மழை ஆர்ப்பு—மேகத்தின் முழக்கத்தை. இழை—ஆபரணத்தில்.

147. கலை—ஆடை, ஆண்மான். பாற்படுநீர்—பாலோடு சேர்ந்த நீர், பகுதிப் பட்டதன்மை. பின்னஞ்செய—வேறுபிரித்தறிய.

149 அண்டத் தமரரை முன் னஞ்சலெனக் காத்தசிவன்
கண்டத் தமர்விடம்போற் கண்ணினாள்—மண்டுபுனற்

150 செல்லாருஞ் சோலைத் திருவால வாயதனில்
வில்லாரு மிந்த்ர விமானத்துட்—கல்லானை

151 சித்தரரு ளாற்கரும்பு தின்னுமந்நாட் டென்னணணி
முத்துவடம் போலுமிள மூரலாள்—நத்துலவு

152 பாணிக்குட் சிற்றரும்பாம் பங்கயம்போல் வெற்றிமதன்
தூணிக்கு ளக்கணையின் றோற்றம்போல்—வாணிதொழு

153 நாரிசெங்கை யான்மறைத்த நாத னிருவிழிபோல்
சூரியனிற் சந்த்ரகலை தோய்ந்ததுபோல்—வாரிதியில்

154 பண்டமுத கும்பம் பதிந்திருந்தாற் போலவெளிக்
கொண்டினிமேற் றோன்றுங் குவிமுலையாள்—தொண்டர்

155 அரகர சங்கரவென் றுனந்த விண்பக்
குரைகடற்கு ளாகிக் குளித்துப்—பரவசமாய்

156 ஏறுடையான் முன்ன ரிசைநாத் தழுதழுத்துக்
கூறுந் துதிபோற் குதலையாள்—வீறுடைய

157 வள்ள றிருச்சடைமேல் வைத்தபிறை போற்களங்கம்
எள்ளளவு மெய்தா விதயத்தாள்—உள்ளமகிழ்

158 பூவையுடன் பேசியந்தப் பூவைசொன்ன சொல்லைமரப்
பாவைக்குத் தானே பயிற்றுவாள்—ஆவலுடன்

---

149. சிவபிரான் கண்டத்தில் உள்ள விடம் கொல்லுந்தன்மை உடைய தன்றுதலின் அஃது இவள்கண்ணுக்கு உவமை கூறப்பட்டது.

150. செல்—மேகம். வில்—ஒளி. இந்த்ரவிமானம்—இந்திரனுலமைக்கப் பட்ட சோமசுந்தரக்கடவுளது விமானம்.

151. சித்தர்—எல்லாம்வல்லசித்தர். முத்துவடம்—முத்துமாலையை; திருவிளை. 21:23.

152. பாணிக்குள்—நீருக்குள். அக்கணை யென்றது தாமரையரும்பாகிய கணையை.

153. நாரி—உமாதேவியார்.

157. இறைவன் அணிந்த பிறைக்குக் களங்கம் இல்லை.

158. பூவை—நாகணவாய்ப்புள்.

159 முத்து வயிர முழுநீலங் கோமேதம்
வித்துரும மாணிக்கம் வெள்ளிசெம்பொன்—இத்தனையும்

160 அட்டி லடுகலங்க ளம்மி யுரலுலக்கை
வட்டிலெனச் சோறு வகுத்தானுற்—கிட்டமுறும்

161 அன்ப ருலகத் தருந்தா தருந்திடுசிற்
றின்பமெனக் கையா லெடுத்துண்டு—நன்கமைந்த

162 வீதிக் கணித்தாக மேவுதலு நூபுரங்கள்
நாதிக்கக் கைத்தாயர் நற்றாயர்—பேதையுடன்

163 சென்று பரனைத் தெரிசித்தா ரவ்வளவில்
இன்றுபுதுத் தேர்மீதி லீங்கிவரார்—என்றலுமே

164 அண்டம் புவன மருஞ்சக்ர வாளகிரி
விண்டலமேழ் பாதலம்பொன் மேருவரை—மண்டலங்கள்

165 சிற்றிலா கச்சமைத்துச் செல்வவிளை யாட்டயரும்
பற்றுக் குதலைமொழி பாலனென—மற்றிவளும்

166 நாடரிய பாலனுட னுனிருந்து கூடவிளை
யாடநம தில்லி லழையுமெனக்—கோடரத்தில்

167 மையேந்து சோலை மதுரை நகர்க்கவுரி
கையேந்து பாலனருட் காபாலன்—மெய்யடியான்

---

160. வட்டில்—ஒருவகைப்பாத்திரம்; "பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவ னுவேனே"; (பெருமாள்திருமொழி); "கறையடிச் சுவடெனுங் கனக வட்டில்கள்" காஞ்சிப். திருநகரப். 14.

162. நாதிக்க—முழங்க; "மணிமுரசம், நாதிக்கும் பாண்டிவள நாட்டி னுன்" விறலிவிடு. 38.

165. குதலை மொழி பாலன்—அம்பிகையைப் பாகத்தில் உடையவன்; குதலைமொழி—அம்பிகை; பால்—பாகம்; குதலையை மொழிகின்ற சிறுவனென்பது வேறுபொருள்.

166. கோடரம்—மரக்கிளை.

167. மை—மேகத்தை. கவுரி கையேந்துபாலனென்பதன் வரலாற்றைத் திருவிளையாடல் விருத்தகுமாரபாலரானபடலத்தாலுணர்க. காபாலன்—கபால மென்னும் கூத்துடையவன்; "காபால மாடுங்கால்" (கலி. கடவுள்.) அடியான்—திருவள்ளுவர்.

168 திங்கட் சுதையெனவே செய்யுமொரு முப்பாலும்
சங்கத்தி னூட்டுந் தமிழ்ப்பாலன்—அங்கசனுக்

169 காமளவு நாமத் தனங்கனெனப் பின்னுமொரு
நாமந் தரித்தநய னப்பாலன்—மாமறைக்கும்

170 அப்பாலுக் கப்பால னன்பாலுன் பாலணையும்
இப்பால் விளையாட்டி னெய்துமோ—செப்புகெனத்

171 தோர்திரும்ப மற்றோர் தெருவி லிவளைமட
வார்திரும்பக் கொண்டு மனைபுகுந்தார்—மீதொருத்தி

பெதும்பை.

172 பேதைகுணம் பாதிமங்கைப் பெண்குணத்திற் பாதிகலந்
தோது பருவ முறுபெதும்பை—காதலெனும்

173 வித்தங் குரித்துவளர் மென்பூஞ் சிறுகொடிக்குச்
சித்தங் கொழுகொம்பாஞ் செய்கையினாள்—மெய்த்தவங்கள்

---

168. திங்கட்சுதை-சந்திரனிடத்துள்ள அமுதம். முப்பால்-திருக்குறள்; மூவகைப்பாலென்பது வேறுபொருள்; "முப்பாலும், மிஞ்சப் புகட்ட மிகவளர்ந் தாய்" (தமிழ்விடுதூது, 25.) சங்கம்-தமிழ்ச்சங்கம், சங்கு; "அல்லம தேவன் சரிதத் தீம்பால், புண்ணியர்தஞ் செவிவாயிற் றமிழ்ச்சங்கத் தான்முகந்து புகட்டி னானால்" (பிரபு. துதிகதி, 11.) தமிழ்ப்பாலன்-தமிழின் பகுதிகளை உடையவன். அங்கசன்-மன்மதன்.

169. நயனப்பாலன்-கண்ணை நெற்றியிலே உடையவன்; பாலம்-நெற்றி.

170. எய்துமோ-வருவானோ.

167—70. இப்பகுதியோடு, "யாவன் பால னிவன்புக லென்றேன், மேவன் பாநகை மேவுறப் புரிந்து, முன்னிவன் பெருமறை மொழிக்கப் பாலன், மன்னிவன் பாரையின் வளர்கப் பாலன், மூர்த்தி முதலா மொழிமுப் பாலன், சீர்த்திகொ ணீற்றொடு திகழ்கட் பாலன், அறுவகைச் சமயத் தறவகைப் பாலன், மறுவகை சுருதி மணத்தக பாலன், ஆறு றுய வவைக்கப் பாலன், மாறு தியற்றி வயக்குகா பாலன் வளர்தரு தெய்வ மனுச்சா பாலன், தளர்வரு கௌரி தனக் கழும் பாலன், தழைதரு மிந்நாட் சைவபரி பாலன், பிழைதரு தன்மையில் பெருந்தவப் பாலன்" (*அம்பலவாணதேசிகர்கலம்பகம், 51.) என்பது ஒப்பு நோக்கற்குரியது.

173. வித்து அங்குரித்து—விதைமுளைத்து.

---

*இந்நூல் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியது.

174 ஈட்டினு மீசனரு ளெய்தி முடிப்பதுபோல்
கூட்டி முடிக்குங் குழலினாள்—நாட்டநுதல்

175 ஏற்குமெம்மான் கைம்மா னினமோ வெனமருண்டு
பார்க்கும் புதியமருட் பார்வையாள்—சீர்க்கமலன்

176 இவ்வளவு செய்தோ மினிநிகரி லாதவெழில்
அவ்வளவு பூரித் தமைப்பதனுக்—கிவ்வாறென்

177 றேலத்தன் சிந்தையுள்ளே யெண்ணி முடிக்குநிகழ்
காலத் தமைந்த மூலைக் கன்னிகையாள்—சாலநிறை

178 விற்பளிங்கு மாளிகையின் மேனிலத்து மின்னனைய
பொற்பளிங்கு வாருமெனப் புந்திமகிழ்—அற்புடைய

179 தன்னனைய பெண்க டனித்தனியே சூழ்ந்திருக்க
வென்னனைமுற் றுமுலைபங் கீசனெழில்—மன்னுதிருக்

180 கந்தரம்போ னீலக் கழங்குங் களங்கமில்லாச்
சந்திரன்போன் முத்தின் றனிக்கழங்கும்—எந்தையுடற்

181 பாதியன்ன பச்சைப் பசுங்கழங்கும் பாதியெழிற்
சோதிமா ணிக்கச் சுடர்க்கழங்கும்—தாதலரும்

182 கொன்றையந்தே னன்னநிறக் கோமே தகக்கழங்கும்
துன்றுகங்கை போல்வயிரச் சொற்கழங்கும்—மன்றுடையான்

183 வேணியன்ன செம்பவழ மென்கழங்கும் பங்கயப்பூம்
பாணி யதனிற் பரிந்தெடுத்து—நீணிலத்துப்

---

175. கைம்மான் மருண்டு பார்க்கும் என இயைக்க.

176. பூரித்து=நிறைத்து.

177. ஏல=பொருந்த. கன்னிகை=அரும்பு.

178. பொற்பள் இங்கு வாரும் என்று அவர்களை அழைக்க.

179. என் அன்னை.

180. கந்தரம்=கழுத்து.

180-81. உடற்பாதி=உமையின் திருவுருவத்தை. பாதி= சிவபெருமானுடைய திருவுருவம்.

182. கோமேதகம் தேனின் நிறமுள்ளது; "கோமேதகத்தை, மருவுவயிரியத்தின் மீது தூய மதுத்துளிமே வியதென்பர்" திருவால. 25:21.

183. வேணி=சடை. பாணி=கை.

184 பாகாங் குதலைமொழிப் பாவைகுறித் தொன்றையெடுத்
தேகாம் பரத்தி னிசைபாடி—வாகாகக்

185 கூடு மிரண்டெடுத்துக் கொண்டாடி யன்றிருவர்
தேடு மலையின் செயல்பாடி—நாடரிய

186 வள்ளிதழி மூன்றெடுத்து மண்ணு திரிசிராப்
பள்ளி யெனுந்தலத் தைப்பாடி—உள்ளமகிழ்

187 வாடலா னுலென் றடுத்தெடுத்து நான்மாடக்
கூடல்வளம் பாடிமிகக் கொண்டாடித்—தோடவிழும்

188 கிஞ்சுகப்பூஞ் செவ்வாய்க் கிளிமொழியா ளைந்தெடுத்துப்
பஞ்சநதி மாண்மியத்தைப் பாடியே—கஞ்சவிழி

189 அத்திறத்தா லாறெடுத்தன் றாறுமின்னு ரட்டமா
சித்திபெற்ற மெய்த்தலத்தின் சீர்பாடிக்—கைத்தலத்தில்

190 ஏழெடுத்துப் பாரிடத்தி லித்தலங்க ளாதியா
ஏழுலகத் தெம்மா னிசைதலங்கள்—சூழறும்பே

191 றெல்லாங் கடம்பநக ரெய்தினோர்க் குண்டெனவே
எல்லா மொருமித் தினிதெடுத துச்—சல்லாப

---

184. பாகு-தேன்பாகு. ஏகாம்பரம்-காஞ்சியிலுள்ள திருவேகம்பமென்னும் தலம்.

185. மலை-திருவண்ணாமலை.

186. வள்ளிதழி-பெதும்பை. திரி-மூன்று.

187. நான்மாடக்கூடல்-மதுரை; நான்குமாடங்கள்கூடிய இடம் என்பது இதன் பொருள்; நான்குமாடங்களாவன கன்னி, கரியமால், காளி, ஆலவாயென்பன; இவற்றைப்பற்றிய வரலாறு **மதுரைக் காஞ்சி**, 429-ம்அடி உரையின் அடிக்குறிப்பால் உணரலாகும்.

188. கிஞ்சுகப்பூ-முள்ளுமுருங்கைப்பூ. பஞ்சநதி-திருவையாறு. கஞ்சவிழி-தாமரைபோன்ற கண்ணையுடைய பெதும்பை.

189. மெய்த்தலம்-பட்டமங்கை; இது பட்டமங்கலமென இக்காலத்து வழங்கும்; "பட்ட மங்கையிற் பாங்கா வீருந்தங், கட்டமா சித்தி யருளிய வதுவும்" **திருவாசகம்**, கீர்த்தித். 62-3.

191. ஒருமித்து-ஒருங்கே; "காத லிருவர் கருத்தொருமித்-தாதரவு, பட்டதே யின்பம்" **ஔவைபாடல்**.

192 மூக்குத்தி முத்தாட முத்து வடமாட
நோக்கிரண்டு மாட நுசுப்பாட—ஆக்கமகள்

193 கொண்டாட மாதுசெங்கை கொண்டாடும் போதிலே
வண்டாடுங் கூந்தலனை மாரதனைக்—கண்டிங்

194 கமையு மமையுமட வன்னமே யென்னும்
அமைய மதனிலெமை யாளும்—உமைபாகன்

195 அத்த னிருத்த னடிக்கண் மலர்க்கணை
வைத்திட மெச்சி மகிழ்ச்சிபெ—றத்திரி

196 விக்ரம னுக்கு மிகுத்த ப்ரபைக்கன
சக்ரம ளித்திடு தற்பரன்—உக்ரம

197 குக்குட முற்ற கொடிக்கா சைச்சொறு
திக்கை யனைத்தரு சிட்டன—னுக்ரக

198 சச்சிதா னந்தச் சதாசிவனம் பொற்றடந்தோ
விச்சைமணி வீதிதனின் மேவுதலும்—பச்சைமயில்

199 ஆயமன்ன சாய லணியிழைமின் னுருடனே
தாயரும்போற் றிப்பணியத் தான்பணிந்தாள்—தூயனத்தன்

200 மாலளந்து காணு மலையை யிருவிழிக்கோ
லாலளந்தா ளந்த வளப்பறிந்தார்—பாலனைமார்

192–3. நோக்கு–கண்கள். நுசுப்பு–இடை. ஆக்கமகள்–திருமகள். மாது–பெதும்பை. கொண்டு–மேற்கூறிய அம்மானைகளைக்கொண்டு.

194. அமையும்–போதும். அமையம்–சமயம்.

195. மலர்க்கணை–மலர்போன்ற கண்ணை.

195–6. திரிவிக்ரமனுக்கு–திருமாலுக்கு. ப்ரபை–ஒளி. சக்கரம்–சக்கராயுதத்தை.

197. குக்குடம்–கோழி. அரசை–முருகக்கடவுளை. சொல் திக்கை யன்–விநாயகரை.

198. விச்சை–சிற்பவித்தை.

199. ஆயம்–கூட்டம்.

200. கோல்–அம்பு, அளவுகோல். அளப்பு–அளத்தலை. பால்–பக்கத்துள்ள.

201 தன்னை யறியுந் தருணம்வந்த தாற்றலைவன்
தன்னை மனக்குறிப்பிற் றுணறிந்தாள்—மின்னெனவே

202 எண்ணிய போதி லிவர்பாகம் பச்சையாய்
நண்ணியவா றேது நவிலுமெனக்—கண்மணியே

203 சூலிக்குப் பச்சுடம்புஞ் சொன்மூலைப்பா லும்பெருகப்
பாலிக்கு மென்றுசொல்லாற் பாராட்டிச்—சேல்விழிப்பெண்

204 மாலையிட வந்தீரிம் மாதினுக்கு நீர்வலிய
மாலையிட வந்ததென்ன மார்க்கமோ—மேல்பசப்புக்

205 காட்டுமான் காட்டியிசைக் கானமறி யாதவெங்கள்
வீட்டுமான் கைக்கொளவோ வீதிவந்தீர்—கேட்டீரோ

206 நன்றுச்சு தையர் நடத்தைவிடர் புல்லருமே
நன்றுச் சரியமென நாடுவார்—என்றென்று

207 செப்பும் விறுதைந் திறமெனக்கொண் டேயமுதம்
ஒப்புமிள மூரலுட னோர்வீதிக்—கற்புதனும்

208 செல்லக் கனிவாய்ச் சிறுகுயிலு மின்னாரும்
இல்லத் திருந்தா ரினியொருத்தி—வல்லதிரு

---

202. அனைமார் (200) எண்ணியபோதில். என-என்று பெதும்பை கேட்க.

203. சூலி-சூலத்தையுடைய உமை, கர்ப்பம் உடையவள். பச்சுடம்பு-பச்சை உடம்பு, நன்றணிமைத்தாகிய உடம்பு. பாலிக்கும்-அருள்செய்வார். சேல்விழிப்பெண்-அங்கயற்கணம்மை.

203-4. இத்தலத்தில் வேதசன்மாவுக்காகச் சிவபெருமான் மணக்கோலம் காட்டிய வரலாறு இங்கே அறிதற்குரியது; கண்ணி, 27-31. மாலை-மயக்கத்தை. பசப்பு-பச்சைநிறம், எமாற்றுதல் (பாசாங்கு); "இயல் பசப்பும்" சாபேந்தீர. தூதவஞ்சி, 30.

205. மானைக்காட்டி மானைப்பிடித்தல் வேடர்கள் வழக்கம். மான்-உமாதேவியார். கானம்-சங்கீதம், காடு; சிலேடை. காட்டுமானைக் காட்டி வீட்டுமானைக் கொள்ளவந்தீரென்பது இதிலுள்ள நயம்.

206. நன்று ஆச்சுது; ஆச்சுது-ஆயிற்று; 233. நடத்தை-நடை, நடனத்தை. விடர்-விடபுருஷர்கள், விஷத்தையுடைய ஆதிசேட அவதாரமாகிய பதஞ்சலிமுனிவர். புல்லர்-புண்மைக்குணம் உடையவர், புலிக்காலையுடைய வியாக்கிரபாதர்; புல்-புலி. நன்று-மிகுதி.

208. குயில்-பெதும்பை.

மங்கை.

209 மங்கைகலை மங்கைமலை மங்கையெனு மூவருமிந்
நங்கைதனைக் கண்டக்கா னம்பதிகள்—இங்குநமை

210 வஞ்சிப்ப ரென்று மனம்வாக்குக் காயத்தில்
அஞ்சா திருக்கவெழி லார்மங்கை—எஞ்சாது

211 காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரு மயலென்றாற்—போலவே

212 பேதை யரும்பிப் பெதும்பையந்தப் போதாகி
மாது மலர்ந்த வனப்பினாள்—சோதிமணிப்

213 பன்னாகம் பூண்டோன் பாவையிடைத் தூதுசென்ற
அந்நா ளிருள்போ லள்ளகத்தாள்—உன்னுமல்

214 அன்றுநமை வென்றகண்ணென் றுமினிச்செய் கையிதென
நின்றுநின்று பார்த்து நினைத்துமதன்—இன்றுசிவன்

215 முக்கணையும் வெல்ல முழுநீல முக்கணையா
இக்கணையோ டெய்வே னெனுங்கண்ணாள்—தக்கதிறல்

216 நாண்மடமச் சம்பயிர்ப்பா நன்மந் திரர்சூழப்
பூண்முலையா மாமகுடம் பொற்பமைத்து—மாணிழைமார்

---

209. பதிகள்—கணவர்கள்.

208–10. மனம்—மார்பு; அதிலுள்ளவள் திருமங்கை. வாக்கு—இங்கே நாக்கு; அதிலே உள்ளவள் கலைமங்கை. காயம்—உடம்பு; அதிலே உள்ளவள் மலைமங்கை; நிரனிறை.

211. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்னும் திருக்குறளை இக்கண்ணி குறித்துச் சுவைததும்ப நிற்கின்றது.

212. மாது—காதல்; சீவக. 356.

213. பல் நாகம்—பல பாம்புகளை.

214. நின்று நின்று பார்த்து—மிக ஆலோசித்து.

215. முக்கணையும் வெல்ல—மூன்றுகண்களையும் வெல்ல, தன்கையிலுள்ள நீலமலர்ப்பாணம் ஒன்று; இவள்கண்ணாகிய நீலமலர்ப்பாணம் இரண்டு. முழு நீலம்: "மாதே முழுநீலங், கொல்லும்" இரத்தினச் சுருக்கம், 11.

216. மந்திரர்—மந்திரிகள்.

217 அங்கசன் மந்தரமெல்லா மாக்கம் பெறவுரைப்பத்
தங்குமனச் சிங்கா தனத்தேற்றி—அங்கணன்றன்

218 சீர்த்தி யபிடேகஞ் செய்து தலைமைபெறு
மூர்த்திகா முண்டாக்கி மோகமெனும்—பார்த்திபனுக்

219 கிட்ட மிகுந்தநல்லா ரெல்லாருங் கொண்டாடப்
பட்டந் தரித்த பருவத்தாள்—கட்டிசைந்த

220 செம்பதும ராகச் செழுமணிப்பொன் னுடாங்கில்
அம்பதுமை மின்னு ராருகிருக்க—விம்பவிதழ்

221 அன்னமுன்னந் தாருவனத் தங்கனைமா ரேந்தியபால்
அன்னமென முத்தினணி யம்மானை—தன்னிருகைக்

222 கொண்டா ளிசையாற் குயினுணச் செங்குமுதம்
விண்டா ளெடுத்து விளையாடல்—கண்டோர்கள்

223 துன்றனமூன் றங்கையெனச் சொல்வனசப் பூவிரண்டில்
ஒன்றிருக்க வொன்றெழுவ தொக்குமென—வென்றிமழு

224 வல்லா னுருவெளியின் மாலை யெனத்திரண்டு
பல்லாரங் கன்றெழுந்து பார்ப்பதென—வல்லமைசொல்

225 அம்மானை யாடிவென்ற வம்மானைப் பாடியே
அம்மானை யாடு மளவிலே—எம்மானும்

---

218. சீர்த்தியாகிய நீரை அபிஷேகம்செய்து; சீர்த்தி வெள்ளைநிறமுடையது; அதனால் அது வெண்மைநிறமுடைய அபிஷேகதீர்த்தமாகக் கூறப்பட்டது.

217–8. அபிடேகத்தாலும் மந்திரத்தாலும் மூர்த்திகாமுண்டாகுமென்பர்; காஞ்சிப்புராணம், நகரேற்றுப்படலம் 162–70–ஆம்பாடல்களைப் பார்க்க.

219. நல்லார்–பெண்கள், சான்றோர். கட்டு–கட்டுதல்.

220. பதுமை–திருமகள். விம்பம்–கொவ்வைக்கனி.

221. அன்னம்–மங்கை; எழுவாய். பாலன்னம்–பாற்சோற்றுத்திரளை.

222. செங்குமுதம் விண்டாள்–வாயைத்திறந்து பாடினாள்.

223. துன்று அனம் மூன்று–நெருங்கிய மூன்று அன்னப்பறவைகள்.

225. அ மானை–அந்தக் காளியை; அ: உலகறிசுட்டு. ஆடிவென்ற–ஊர்த்துவதாண்டவம்செய்து வெற்றிகொண்ட. அம்மானை–சிவபெருமானை. திருக்காளத்திநாதருலா, 349; திருப்பூவணநாதருலா, 265.

226 சீதள சோம திவாகர லோசன
வேத சொரூப விநோதப—ராதன

227 மாருத பாவக மாதவ சாயக
மேரு சராசன வீரச—ரோருகப்பொற்

228 பாதன் கயிலைப் பரமன் கடம்பவன
நாதன் றிருவீதி நண்ணுதலும்—மாதுகரத்

229 தம்மனையை வைத்தா ளனமனையார் தங்களுடன்
அம்மனைநின் றேகி யடிபணிந்தாள்—சென்மக்

230 கருவிலியைக் கண்ணாரக் கண்டாள்கண் காணு
உருவிலியைக் காணென் றுறுக்கி—மருமத்

231 தொருகோல் செவிமட் டெவாங்கி விட்டான்
குருகோ லிடுங்கரப்பூங் கோதை—வெருவியே

232 அம்புலி யென்ப தழற்க ணுறும்புலியோ
வம்புரைக்கப் பெண்கண்மட மானாரோ—கும்பமுனி

233 குன்றிற் பிறந்த குழவியிளங் காலுடலம்
கன்ற வுதைத்திடும்வன் காலாச்சோ—ஒன்றுகுயில்

---

226. சோம திவாகர லோசனம்—சந்திரனையும் சூரியனையும் கண்ணாக உடைய.

227. மாருத பாவக மாதவ சாயகம்—காற்று, நெருப்பு, திருமால் என்னும் மூவராலாகிய அம்பையுடைய; "வல்வாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண் கல், வில்லாலெயி லெய்தான்" (திருஞா. தே.) மேருசராசனம்—மேருவாகிய வில்லையுடைய. சரோருகம்—தாமரைமலர்.

229. அ மனை நின்று.

229–30. சென்மக்கருவிலியை—பிறப்பில்லாதவரை. உருவிலி—மன்மதன்; இது தன்மைக்கண் வந்தது. மருமத்து—மார்பில்; நெஞ்சில்.

231. ஒருகோல்—ஓரம்பு; என்றது தாமரையரும்பை; அதுவே நெஞ்சி லெய்யப்படுவது; "நெஞ்சி லரவிந்தம்" இரத்தினச் சுருக்கம், 37.

232. வம்பு—பழிமொழி. கும்பமுனி—அகத்தியர்.

233. குன்று—பொதியில்மலை. குழவியிளங்கால்—தென்றற் காற்று; "சிறுகாற் குழந்தாய்கேள்" (பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது, 112.) கால்—காற்று, பாதம்.

234 ஓசையெல்லாங் காளகண்டத் துற்றதோ வுள்ளடங்கும்
ஆசையினி யாசைக் கடங்காதோ—பேசுமொழி

235 அஞ்சுகமன் னீரிரவின் யாமமொரு நாலுமினி
அஞ்சுகமோ வாறுகமோ வாரறிவார்—நெஞ்சுகந்து

236 கூட்டிவைக்க வல்லீரோ கூறுமெனத் தெள்ளமுதம்
ஊட்டிவைத்த சொல்லா ருரைசெய்வார்—கேட்டீரோ

237 பாதி யுடம்பாய்ப் பசப்பையுற்ற பெண்பாலாற்
போதவன்னி யத்தமனப் போதுறலாற்—கோதிலா

238 மீனக் கொடியன் விரைவிற் பயந்ததால்
ஊனக் கொடியகரு வுள்ளடையா—மோனர்

239 இமய வரையளித்த வெந்தையனை யென்னும்
உமையு முமையுமே யொத்த—அமைவால்

240 இவளுக் கொருபா லிசையுமெனப் பாகத்
தவளுக் கறியா தமைக்கும்—உவமை

---

234. காளகண்டம்—குயில்; விஷம்பொருந்திய கழுத்தென்பது வேறு பொருள். ஆசைக்கு—திக்குக்களில்.

235. அம் சுகம் அன்னீர்; சுகம்—கிளி. அஞ்சு உகமோ—ஐந்து யுகங்களோ; "இற்றை நீடிரவொன், றஞ்சுகந் தத்தை விளைக்கும்" திருவேங்கடத் தந்தாதி, 12.

237—9. சிவபெருமானுக்கும் அம்பிகைக்கும் மங்கைக்கும் சிலேடை.

பசப்பு=பச்சைநிறம், பசலை. வன்னி அத்தம் மன்ன போதுறலால்—நெருப்பு கையின்கண் இருக்க வருதலால், கிளி கையின்கண் தங்கியிருப்ப வருதலினால்; அத்தமனப்போது வன்னி உறலால்; வன்னி—நெருப்பாக. மீனக் கொடியன்—மன்மதன், பாண்டியன். விரைவில்—சீக்கிரத்தில், மணம்பொருந்திய பூவாகிய வில்லை. பயந்ததால்—அஞ்சினமையால், பெற்றதால்.

239. இமையவரையளித்த: சிலேடை. எந்தை என்னும் உம்மையும் அனை என்னும் உமாதேவியையும் என முறையே கூட்டுக.

240. ஒருபால்—ஒருபக்கம். என—என்று தோழியர் சொல்ல. பாகத்தவளுக்கு—உமைக்கு. அமைக்கும்—அடக்கும்; பெயரெச்சம்.

241 அபய காத்திலங்க வைந்துருவின் மேலாம்
உபயன்மற்றோர் வீதிதனி லுற்றான்—அபரி

242 மிதமான தாருவன மேவு முனிவோர்
இதமா யிவண்மருவு மின்பம்—உதவாத

243 சங்கைத் தவமே தவஞ்செய்தோ மென்னமன்னும்
மங்கைக்கு மேலான மாமடந்தை—பொங்குகதிர்ச்

மடந்தை.

244 சந்திரனுற் சூரியனுற் றள்ளுண் டுடைந்தோடி
வந்து புகுந்து மறைந்துமறைந்—துய்ந்திடவே

245 வானு ரிருட்கு மலரோன் வகுத்துவைத்த
கானு ராண்போற் கருங்குழலாள்—தேனுரும்

246 சொல்லாண் மதனனுக்குஞ் சொல்லுவாள் புத்திகொங்கை
கல்லாள்கொக் கோகமுற்றுங் கற்றறிந்தாள்—எல்லாம்

240-41. அபயகரமானது போதுமென்று அடக்குதலைக்காட்டினுற் போன்றதென்பது கருத்து; "கூடுங் கதியொருகாற் கும்பிட்டாற் போதுமென, நாடு மபிநயத்தை நன்னிற்றால்-ஓடியகட், காதனுர் காணவொரு கால்காட்டிக் கையமைத்து, நாதனுர் செய்யு நடம்" (சிதம்பரமும்மணிக்கோவை, 29) என்பதில் அபயக்கை போதுமென்னும் குறிப்பைக்காட்டுவதாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

241. ஐந்துரு-பஞ்சகிருத்தியத்திற்குரிய மூர்த்திகளின் உருவங்கள். உபயன்-அருவுருவுடையவர்.

242. முனிவோர்: எழுவாய்.

243. சங்கைத்து-சந்தேகமுடையது. அவமே தவஞ்செய்தோம்; அவமே-வீணுக. மங்கைக்கு-மோகினிக்கு.

245. கானுராண்-காட்டரண்; குழலுக்குக் காட்டை உவமைகூறுதல் மரபு; "குழற்கா டேந்துமிள வஞ்சிக் கொடியே" (மீனுட்சியம்மைபிள்ளைத் தமிழ், வருகைப், 9); "ஐம்பாற் காடேஞ் சுமக்குங் கரும்பே" (சகலகலா வல்லிமாலை, 2.) ஆரும்-ஒக்கும்.

246. புத்தி சொல்லுவாள். கல்-மலை, கல்லாள்.....கற்றறிந்தாள்: சொன்முரண்.

247 கரும்புருவ வில்லாள் கமழ்கமல வில்லாள்
கரும்புருவ வில்லாள்வேற் கண்ணாள்—அரும்பு

248 நகையா டளிரன் னகையாள் பணிமே
னகையாள் புவிமே னகையாள்—சகமகிழும்

249 பூங்குமுதச் செங்கனிவாய்ப் பூவைதனித் தில்லிருந்தோர்
பாங்கிதனைக் கூவியுயிர்ப் பாங்கியே—ஈங்கெழுதும்

250 ஓவியங்கை வந்த வொருவனைமுற் றூதமூலைத்
தேவி மணாளன் றிருவுருவை—நீவகுப்பாய்

251 என்னப் படத்தி லிசைத்துவா வென்னலுமே
அன்னமன்ன தோழி யறிந்துசொல்வாள்—முன்னவன்றன்

252 வேணி யெழுதவல விஞ்சைகற்றா னேனுமதிற்
பாணிதனை யெவ்வாறு பாணிப்பான்—மாணமைந்த

253 நெற்றி யெழுதவல்ல நேர்மைகற்றா னேனுமதில்
உற்றகனற் கண்ணெழுத வொண்ணாதே—மற்றுமிரு

254 கண்ணெழுதக் கற்றாலோ கற்றாலுந் தண்ணருள்கூர்
வண்ண மமைக்க வசமாமோ—உண்மகிழும்

246–7. எல்லாம் கரும்பு உருவ வில்லாள்–உருவமெல்லாம் கரும்பைப் போன்ற ஒளியையுடையவள்; வில்–ஒளி. கமல இல்லாள்–திருமகளைப்போன்றவள். கரு புருவ வில்லாள்–கருமையாகிய புருவ வில்லையுடையவள்.

248. தளிர் அன்ன கையாள். பணி மேல் நகையாள்–ஆபரணங்களால் மேலாகிய விளக்கத்தையுடையவள். புவி மேனகையாள்–பூமியில்வந்த மேனகை போன்றவள்.

249. தனித்து இல் இருந்து.

249–50. எழுதும் ஓவியம் கைவந்த ஒருவனை–ஓவியம் எழுதுவதில் தேர்ச்சிபெற்ற ஒருத்தனை; "ஓவியத் துறைகை போய வொருவனை" (நைடதம், அன்னத்தைத். 6.) வகுப்பாய்–எழுதுவாயாக.

251. என்னலும்–என்று மடந்தை சொன்னவுடன்.

252. விஞ்சை–வித்தையை. பாணி–நீர்; ஆகாயகங்கை. பாணிப்பான்–திருந்த அமைப்பான்; 118. மாண்–மாட்சிமை.

255 தோடெழுத வல்லனென்று சொன்னாலும் வீணைவல்லோர்
பாட லிசைக்கப் படுவதோ—நாடிநின்று

256 செம்பவள வாய்வகுத்துச் செய்தாலு முன்னதா
விம்பவளத் தேனருந்த வேண்டாமோ—நம்பரமன்

257 கந்தாம்போ லேயெழுதக் கற்றானே யானாலும்
முந்தச் சுருதி முழங்குமோ—வந்தவிஞ்சை

258 யாலிங்க னங்கரங்க ளாவெழுதி னாலுமுன்னை
ஆலிங்க னஞ்செயலை யாரமைப்பார்—மாலறியா

259 நித்தன் றிருமார்பு நின்றெழுதி னாலுமுன்மேற்
சித்த மகிழ்வதெனச் செய்யவல—வித்தகனே

260 தாட்டுணைகள் போலெழுதித் தந்தாலுந் தாண்மாறி
ஆட்டுவிக்கப் பாண்டியனா ரல்லவே—வாட்டடங்கண்

261 மின்னே மணியே விளக்கே விலைமதியாப்
பொன்னேநால் வேதப் பொருளாவான்—தன்னுருவைத்

262 தூரிகையி னாலெழுதச் சொன்னதென்ன புத்தியத்த
நாரிதனைக் காணிலுள நாணாதோ—பேரறிஞர்

---

255. தோடு-ஒருவகைக் காதணி. வீணைவல்லோர்-கம்பளர் அசுவதார்; 65-ஆம் கண்ணிக்குறிப்பைப் பார்க்க.

256. அதர விம்ப வளத்தேன்-கீழுதடாகிய கொவ்வைக் கனியின் இனிமையுடைய தேனை.

257. சுருதி-வேதம்; இங்கே சாமகானம்; "சங்கணி குழையர் சாமம் பாடுவர்" (திருஞா. தே.); "மாமலர்த் தெரியலான் மணிமிடற் றிடைக்கிடந்த, சாம கீதம்" (சீவக. 2038); "தங் கண்ட, மீதுல ராத சாம வேதமார்ப் பவர்போல்" (திருவிளை. மாமனுக. 23); தக்க. 610-ஆம் தாழிசையுரையின் அடிக்குறிப்பைப் பார்க்க.

257-8. விஞ்சையால் இங்கனம் கரங்களா எழுதினாலும்; இங்கனம்= இங்ஙனம். ஆலிங்கனம் செயலை-தழுவுதலை.

259. வித்தகனே; ஓகாரம் எதிர்மறை.

262. தூரிகை = எழுதுகோல். அத்த நாரிதனை = பாதி வடிவத்திலுள்ள பெண்ணை; என்றது உமாதேவியாரை.

263 அப்படிய னவ்வுருவ னவ்வணத்த னென்றறிவார்
இப்படிய னிவ்வுருவ னிவ்வணத்தன்—ஒப்புடையன்

264 ஆமென் றெழுதவல்லா ரியாரே மலரிசழித்
தாமந் தரித்தவிண்ணோர் தம்பிரான்—மாண்பியஞ்சேர்

265 உள்ளத்தி னுள்ளன் புடையார் கருத்தறியும்
வள்ளல் வலிய வருமென்னத்—தெள்ளமுத

266 வாரி பவள மலைபோன் மலையனைய
தேரின் வரமகிழ்ந்து சென்றணைந்து—பாரினின்று

267 கண்டா டுதித்தாள் கனிந்தாள்பே ரசைமேன்மேற்
கொண்டாள் பணிந்தெழுந்து கும்பிட்டாள்—எண்டிசையும்

268 கட்டிய தானைக் கருணை கரநிதியே
பட்டிமையில் லாருளத்தின் பாக்கியமே—புட்டிலிலே

269 ஐயம் படைத்தவனு லையா பரிகலத்தில்
ஐயம் படைத்தவர்போ லாயினேன்—மெய்யணியோ

263–4. "மைப்படிந்த கண்ணுளுந் தானுங் கச்சி மயானத்தான் வார்சடையா னென்னி னல்லால், ஒப்புடைய னல்ல னொருவ னல்லன் ஒரூர னல்ல னொருவம னில்லி, அப்படிய மந்நிறமு மவ்வண் ணமும் அவனருளே கண்ணுகக் காணி னல்லால், இப்படிய னிந்நிறத்த னிவ்வண் ணத்தன் இவனிறைவ னென்றெழுதிக் காட்டொ ணுதே" (திருநா. தே.) இதழித்தாமம்—கொன்றைமாலை.

265. வரும்—வருவான்.

267–8. எண்டிசையுங் கட்டிய தானை—திகம்பரம். பட்டிமை—பொய்; "பட்டிமையும் படிறுமே பேசுகின்றார்" (திருநா. தே), "பாவகஞ் செய்து நீட்டிப் பட்டிமை யோலை யுய்ப்பான்" (திருவிளை. 30:13.) புட்டிலில்—அம்பறாத்தூணியில்.

269. ஐ அம்பு அடைத்தவன்—ஐந்து மலர்ப்பாணங்களைச் செருகிவைத்தவன்; மன்மதன். பரிகலத்தில் ஐயம் படைத்தவர்போல்—பிச்சைப்பாத்திரத்தில் பலியிட்ட தாருகாவனமுனிவர்பத்தினிகளைப்போல, ஆயினேன் என்றது காமமயக்கங்கொண்டு ஆடை முதலியவற்றை இழந்ததைக் குறிப்பிட்டபடி. மெய்அணி—மழு உடம்பாகிய ஆபரணம்; என்றது காயாரோகணத்திருவுருவத்தைக் குறிப்பித்தது.

270 டென்பணியுங் கொண்டீ ரிமய மடந்தையைப்போல்
என்பணியுங் கொண்டாலா ரேசுவார்—முன்புபச்சை

271 மாலையளித் தீரெனக்கு மாலையளித் தீரதற்கு
மாலையளித் தீரென்றால் வாழ்த்தேனோ—சூல

272 தாரே யெனவா தரத்தா லுரைக்க
வரதன் மனமகிழ்ந்து மற்றோர்—திருவீதி

273 சென்று னிவளுந் திருமனையிற் புக்கிருந்தாள்
நின்றுரிற் பின்னுமொரு நேரிழையாள்—நன்றிசைந்த

அரிவை.

274 மானை மருட்டிவரி வண்டைச் சிறைப்படுத்தி
மீனைப் பயமுறுத்தி விண்டலர்ந்து—தேனார்

275 வனசத்தைப் பங்கமுற வாட்டிக் குவளை
இனசத் துருவைவன மேற்றிச்—சினமா

276 வடுவை வடுச்செய்து வாருதியோ மேன்மைப்
படுமென் றதோகதியாய்ப் பண்ணிக்—கடுவினுக்கு

---

270. என்பு அணியும்-எலும்பாகிய ஆபரணத்தையும். என் பணியும் கொண்டால்-என்னுடைய குற்றேவலையும் ஏற்றுக்கொண்டால்.

271. மாலை-திருமாலை. அளித்தீர்-காப்பாற்றினீர். எனக்கு மாலை அளித்தீர்-அடியேனுக்கு மயக்கத்தைத் தந்தீர். அதற்கு-அதனை நீக்குதற்கு. மாலை-பூமாலையை.

274. மருட்டி-மருளச்செய்து. சிறை-இறகு; சிறைச்சாலையென்பது மற்றொருபொருள். பயம்-நீர், அச்சம்; "உன் கண்ணோக்கி மீன்பயங் கொண்டலையும்" கோடீச்சுரக்கோவை, 23.

275. பங்கம்-சேறு, பழுது; "புங்கமுற மம்புயத்தைப் பங்கமுற்ற தென்னவொளிர் முகத்தினாள்" (சாபேந்திர. தூதவஞ்சி, 11.) வனம்-தண்ணீர், காடு; தோற்றவர்கள் காட்டில் மறைந்திருத்தல் மரபு; "இனத்தினுடனும்பலெழிற்போது தோற்று, வனத்திருக்க மன்னியசெவ் வாயாள்" (பெருவுடையாநுலா,185) என்பதன் அடிக்குறிப்பைப் பார்க்க. சின-சின்ன; சிறிய; "சின்னவிடைப் பாகா" காசிக்கலம். 79.

276. மேன்மைப்படும்-மேன்மையை அடையும், மேலே மேகம்பொருந்தும். அதோகதியாய்-ஆழமுடையதாக, தாழ்ந்தநிலையுடையதாக. கடு-விடம்.

277 நித்யகண்ட மேவு நிலைகொடுத்து வேன்முனைக்குச்
சத்தியிலை யென்னவெற்றி தான்கொண்டு—கத்தி

278 உறையிடக் காணுதென் றுயிரின் கொலைக்கு
மறலிதன்ம னுமெனப்பேர் வைத்து—விறலார்

279 உருவை யுடையா னுடைய கணைபோன்
றரிவை யுறுகண் ணரிவை—பருவமுற்றும்

280 நாளிகே ரத்தினைத்தன் னல்லடிவீழ்த் திச்சக்ர
வாளத்தை யோட்டிநெடு வான்புகுத்தித்—தாளத்தை

281 ஒன்றொன்று தாக்கவிடுத் தோர்தாளிற் றுமரையை
நின்றிடெனத் தண்ட நியமித்துத்—துன்று

---

277. நித்ய கண்டம்-தினந்தோறும் கழுத்தில், தினந்தோறும் வரும் ஆபத்து. சத்தியிலை-வேலினது இலை, ஆற்றலில்லை; "சுத்தவீ ரத்தரங்கைத் துன்னுவடி வேலதனைச், சத்தியிலை யென்னுந் தடங்கணுள்" (பெருவுடையா நுலா, 225), "வெற்றி வேலைநீ டிதுசத்தி யிலையென வேலை, சுற்று மாநிலஞ் சொல்வுறு துணைமத விழியாள்" திருவிடைமருதூர்ப்புராணம், தேவ விரதச். 24.

278. உறையிடக்காணுது—உறைக்குள் இட்டால் தோற்றுது, உறைக் கணக்கிடவும் பற்றுது; உறை-ஒருவகை எண்; "உறையிடத் தேய்ந்திடு மிவ்வந்தி வானத் துடுக்குலமே" (திருவேங்கடத்தந்தாதி, 34.) மறலி-யமன். தன்மன்—தருமராசன், கொலையே யில்லாதவன்; "கூற்றுவனை யாருங் குலவுந் தரும னெனச், சாற்றிடச் செய்யுந் தடங்கண்ணுள்" (பெருவுடையாநுலா, 183), "தருமனெனக் கூற்றை யெவருஞ் சொல்லக் கூர்த்த நயனத்தாள்" (சாபேந்தீர. குறவஞ்சி, 11), "இயமனைத் தரும னெனவுயிர் வாட்டி ... ... இலகு மடக்கொடி கூர்விழி" திருவிடை. வரகுண. 73.

279. உரு—அழகு. உருவையுடையான்—சிவபெருமான். அரி வை உறு—அரிகளையும் கூர்மையையும் பெற்ற, திருமாலை வைக்கப்பெற்ற.

280. நாளிகேரத்தினை—தேங்காயை. சக்ரவாளத்தை—சக்கரவாகப் பறவையை; "சோணாடர் போற்றிய செம்பொற் றியாகர் துறைசைவெற்பிற், காணு மருங்குனின் பூணாக் கொங்கையைக் கண்டழிந்த, நாணாற் புவியி லொருவர்தங் கண்ணுக்கு நண்ணரிதாய்ச், சேணார் விசும்பிடைச் சக்கரவாகந் திரிகின்றதே" திருவாவடுதுறைக் கோவை, 22.

280-81. "மாயைமுலைக் கிணையெனவென் முன்றானும் வந்ததென வலக்கைத் தாளம், போயிடக்கைத் தாளமதைப் பொருமையினாற் றூக்குதல் போற் புடைத்தொ லிப்ப" (பிரபுலிங்கலீலை, மாயைபூசனை. 50.) தண்டம்—தண்டனை.

282 கரியைக் கிரிவைத்துக் கன்னிகா ரத்தைத்
தெரியலர்தூற் றச்சிறுமை செய்து—பரிய

283 மணிச்செப்பை வாயடைத்து வைத்த பணியுள்
தணிச்சொப்பில் கூவிளத்தைச் சாலக்—கணிப்பரிய

284 வித்தையுள்ள வெல்லாம் வெளிப்படுத்தக் கண்டுசிவ
பத்த ரிடத்திருக்கப் பாலித்து—மொய்த்தமலர்ச்

285 செண்டைப் புலர்த்தித் தினகரர் சூழ்ந்திடும்வே
தண்டத்தைப் போரிற் றலைமடக்கிக்—கண்டித்

286 திணைத்திறுகி விம்மி யிறுமாந் திளகிப்
பணைத்துத் திதலை பாந்து—துணைக்கண்

287 கறுத்து வெளியிடையிற் காணு திடையை
ஒறுத்துப் புனைகச் சுவந்து—மறுப்படாச்

288 சந்தந் திமிர்ந்து தாள வடம்புனைந்து
கந்தங் கமழுங் கனதனத்தாள்—அந்தாத்தின்

289 என்றடுத்து வந்தாலு மென்றுவந்தீ ரென்றெதிர்த்து
நின்றடுத்துக் கேட்குமிரு ணேர்குழலாள்—வன்றிறல்சேர்

---

282. கரி-யானை. கிரிவைத்து:தோற்றவர்கள் மலையை அடைவது மரபு. கன்னிகாரத்தை-கோங்கரும்பை. தெரியலர் தூற்ற-யாவரும் தெரியும் மலர்களைப்பொழிய, பகைவர்கள் பழிக்க. பரிய-பருத்த.

283. வாயடைத்து-வாயை மூடி, பேசாமலிருக்கச்செய்து. பணியுள் தணிச்சு-ஆபரணங்களை அதற்குள் தங்கச்செய்து, குற்றேவலில் அடங்கச் செய்து. கூவிளத்தை-வில்வக்கனியை. கணிப்பு அரிய-அளவிடுதற்கரிய.

284. வித்தை-விதையை, கல்வி. வில்வக்குடுக்கையைத் திருநீறுவைத்துக்கொள்ளுதற்குச் சிவனடியார்கள் பயன்படுத்திக்கொள்வார்கள்.

285. புலர்த்தி-வாடச்செய்து. தினகரர்சூழ்ந்திடும் வேதண்டம்-மேருமலை. தலைமடக்கி-வளையச்செய்து, வெட்கத்தால் தலைகுனியச்செய்து; அது வில்லானபோது வளைந்தமை இங்கே அறியற்பாலது.

286. திதலை-தேமல். 288. சந்தம்-சந்தனம்.

289. என்று-சூரியன். என்று வந்தீர்:ஒருசமயத்தில் பாம்பு கருடனை நோக்கி, 'சுகமா' என்று கேட்டதை இது நினைப்பிக்கின்றது. காஞ்சிப். பணுதரீச். 5.

290 அங்கோல மாரவே ளாக்கினையுஞ் சக்கரமும்
செங்கோலும் போன்ற திறலினுள்—பொங்குகதிர்ச்
291 சித்ரமணி மேடைதனிற் சிங்கா தனத்திருந்து
வித்தாரப் பாடல் விறலிக்கு—முத்தாரம்
292 பூந்துகில் சந்தம் புனைய வளித்துமகிழ்ந்
தேந்திழையே முன்னு ளிசைவாது—சாய்ந்திடவே
293 எம்பிரான் கூட வெறைவனரு ளாற்செயித்த
கும்பமுலை மாமயிலே கூறக்கேள்—உம்பரிலே
294 வீரங் கருணை மிகுந்த சவுந்தரமும்
சேருங் கடவுளர்யார் செப்பென்ன—ஆர்வமுடன்
295 வீணை யிடந்தழீஇ மென்மா டகந்திருத்திப்
பாணினியு மின்னிசையாற் பாடுவாள்—ஆண்மைமிகு
296 காமன் புரத்தைக் கருதார் திரிபுரத்தை
மாமன் சிரத்தைமல ரோன்சிரத்தை—ஏமமுறு
297 அந்தகனை யந்தகனை யாதி யடையலரை
முந்தத் தடிந்த முறைகேட்கின்—விந்தையாம்
298 பார்த்து நகைத்துப் பரிகரித்துக் கிள்ளியுதைத்
தார்த்துவெகு ளாதவிளை யாட்டமரை—நேர்த்திடவே

---

290. "அலகில் சுரபதி மதனர்க ளரசிவர் அவர திகிரியு மனிகமும்..... இவர்" (தக்க. 38) என்பதையும் அதன் உரையையும் பார்க்க.

292. சாயந்திட—தோல்வியுற.

292–3. விறலியைப் பாணபத்திரர் மனைவியாகவே எண்ணிக் கூறியது; இங்கேகூறிய வரலாற்றைத் திருவிளையாடற்புராணம் இசைவாதுவென்ற படலத்தி லறியலாகும்.

294. சவுந்தரம்-அழகு. என்ன-என்று அரிவை கேட்ப.

295. மாடகம்-முதுக்காணி. பாணினி-விறலி.

296. புரத்தை-சரீரத்தை. மாமன்-தக்கன். ஏமம்-இன்பம்.

297. அந்தகனை-யமனை, அந்தகாசுரனை. ஆதி அடையலர்-முதலாகிய பகைவர்; என்றது யானை, சலந்தரன் முதலியவர்களை.

298. பார்த்தல் முதலியவற்றை நிரனிறையாகக் கொள்க. விளையாட்டமரை-விளையாட்டுச்சண்டையை. நேர்த்திட—ஒக்க.

299 எத்தேவர் செய்வா ரிஃதேவ ரான்முடியும்
அத்தேவ ரெல்லா மடலுற்றால்—மெய்த்துணைகள்

300 கூடுவா ராயுதங்கள் கொள்வார் சமரிலடைந்
தோடுவார் மீள்வா ருடற்றுவார்—நாடரிய

301 வஞ்சனையால் வெல்வார் மறுத்தக்காற் செய்வதென்னென்
றஞ்சுவார் வீர மறியோமோ—மிஞ்சும்

302 அரிபிரம ரேனுமுன மாணவமுற் றாரேல்
அரிய னரியதவத் தன்பர்க்—குரியனென்று

303 சொல்லுவது நிற்கமுனந் தும்பி சிலந்தியரா
வல்லமையில் லாதகய வாய்தமக்கும்—வெல்லமரில்

304 அன்னை யிழந்த வடலேனக் குட்டிகட்கும்
என்னையோ ரிக்கு மெறும்புக்கும்—தன்னிடத்தில்

305 அன்புதவி யென்று மழியாப் பெரும்பதவி
பின்புதவி யாள்கருணைப் பெம்மானும்—நம்பரன்காண்

306 பெண்கண்மயக் கற்றதவப் பேறிவு தானிழந்து
பெண்கள் வடிவெடுத்துப் பேரெழில்கண்—டெண்களிப்பி

307 னாலே யொருபதினா றாயிர மாமுனிவோர்
மாலாய்ப் புணர்ந்ததிரு மாலேபெண்—பாலாய்

---

299. இஃது ஏவால் முடியும். அடலுற்றால்-சண்டைசெய்யப்புகுந்தால்,

296-303. இவற்றில் வீரம் கூறப்பட்டது.

303. இனி, கருணை கூறப்படும். தும்பி-யானை. அரா-பாம்பு. தும்பி முதலிய மூன்றும் பூசித்துப் பேறுபெற்ற தலம் காளத்தி. தும்பி சிலந்தி இரண்டும் பூசித்துப் பேறுபெற்ற தலம் திருவானைக்கா. தும்பியென்பதற்கு வண்டென்று பொருள்கொண்டு அது பூசித்துப் பேறுபெற்றது ஸ்ரீசைலம், திருவண்டுறை எனக் கொள்க. பாம்பு பூசித்துப் பேறுபெற்ற தலங்கள்: திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம், திருநாகேச்சுரம், திருநாகைக்காரோணம், திருப்பாம்புரம், திருப்பாம்பணி, திருக்கேதீச்சுரம் முதலியன. கயவாய்-கரிக்குருவி; இது பேறுபெற்ற தலம் திருவாலவாய்.

304. எனக்குட்டி-பன்றிக்குட்டிகள்; இவற்றிற்கு அருள்செய்தது திருவாலவாயில். ஓரி-நரி; நரி அருள்பெற்ற தலம் திருக்குற்றாலம். எறும்பு அருள்பெற்ற தலம் திருவெறும்பீச்சுரம்.

308 மருவி னிமவான் மருக னழகுக்
கொருவரிணை யாவாரு முண்டோ—பொரும்விசய

309 வீரப் பெருக்கழகன் மென்கருணைச் சீரழகன்
ஆரத் திருமேனி யாரழகன்—ஓரழகுக்

310 கெவ்வளவு மீச னிணையிலியென் றேயுரைக்கும்
அவ்வளவிற் பல்லியத்தி னார்ப்பரவம்—கொவ்வையிதழ்

311 மாது செவியுறலும் வந்ததுதே ரென்றெழுந்தாள்
நாத னடிபணிந்து நாடியே—சீதமலி

312 காவெல்லா மாரன் கணையே கணைமுதிரும்
பூவெல்லா நாணின் பொருத்தமே—மேவுவயல்

313 மேடெல்லா மன்மதன்கை வில்லே குடியிருக்கும்
வீடெல்லாஞ் சேனை விளக்கமே—கூடும்

314 இரவெல்லாம் வேள்களிற்றி னீட்டமே கொல்லைப்
பரவெல்லாம் சொல்வாம் பரியே—தரணியிலே

315 எங்கெங்கே பார்த்தாலு மென்னவெளி கண்டவிடத்
தங்கங்கே தேரு மவனுமே—சங்கரரே

316 தேவரீர் சித்தந் திரும்பினு லிக்கணமே
யாவு முறவா யிணங்குமென் று—பாவை

317 புகலக் கடைக்கணித்துப் போந்துபின்னோர் வீதி
திகழ வதிலோர் தெரிவை—மகிழும்

தெரிவை.

318 அயிலு மயிலு மனமுங் கனமும்
குயிலும் வடமுங் குடமும்—இயலும்

306–8. இவற்றில் அழகு கூறப்பட்டது.

309. ஆரம்=சந்தனம்: முத்துமாம்.

310. ஆர்ப்பரவம்: இருபெயரொட்டு. 312. நா=சோலை. நாண்=வண்டு.

313. வில்=கரும்பு. சேனை=பெண்கள்.

314. களிறு=இருட்டு. பரவு=பரப்பு. பரி=கிளி.

315. தேர்=தென்றல்.

318. அயிலும்=வேலும். அனம்=அன்னப்பறவை. கனம்=மேகம். வடம்=ஆலிலை. குடம்=கும்பம். இயலும்=அசைகின்ற.

319 கொடியுந் துடியுங் குளிருந் தளிரும்
படியுமிசைக் காந்தளொடு பாந்தள்—அடிமையெனும்

320 மேன்மைபெறு கண்சாயல் வீதிநடை கூந்தலிசைப்
பான்மை யுதரம் பயோதரங்கள்—வான்மருங்குல்

321 மெல்லடிசெங் கைநிதம்ப மிஞ்சு சவுந்தரஞ்சேர்
வல்லி மதனகலா வல்லியாள்—தொல்லுலகில்

322 வீரப்ர தாப விசயமன்னர் கப்பமிடப்
பாரப்ர தாபம் படைத்தமன்னர்—நேரொக்க

323 வச்ரமணி மேடைதனில் வாளரிச்சிங் காதனத்தில்
இச்சையுடன் வீற்றிருக்கு மேல்வைதனில்—உச்சிதஞ்சேர்

324 அங்குறப்பெண் ணொமொருத்தி யான குறி சொல்வனென்றே
அங்குறப்பெண் ணாமுத மாயினாள்—பங்கமுறு

325 தோர்ந்தென் மனக்குறிப்பி லொன்றுளது சொல்லெனவே
தோர்ந்து மலைக்குறப்பெண் சிந்தைமகிழ்—தாய்ந்துநன்றாய்

326 ஓர்வருட மோர்மாத மோர்நா ளொருவாரம்
ஆர்வமுடன் சொல்லென் றவளிசைப்பச்—சீர்பொருந்த

327 உன்னும் வருட முரைக்கும் பதினொன்றும்
என்னுமுன்னே யீச்சுரன்மே லிச்சைபென்றாள்—பின்னுமவள்

---

319. துடி-உடுக்கை. குளிரும்: பெயரெச்சம்.

320. சாயல்-மென்மை. வீதி-நேரோடல். இசைப் பான்மை-இசைப் பாட்டின் பகுதி. உதரம்-வயிறு. பயோதரங்கள்-கொங்கைகள். வான்-பெருமை. மருங்குல்-இடை.

318–20. கண் முதலியவற்றிற்கு அயில் முதலியவற்றை நிரனிறையாக உவமை கொள்க. இடைக்குக் கொடியும் துடியும் உவமைகள்.

322. படைத்தமன்னர்-சக்கரவர்த்திகள்.

323. அரிச்சிங்காதனம்: இருபெயரொட்டு. வல்லை-காலம். உச்சிதம்-மேன்மை.

324. அம் குறப்பெண்ணாம் ஒருத்தி. அங்கு உற

325. சொல் என-சொல் என்று தெரிவை சொல்ல.

326. நாள்-நட்சத்திரம். வாரம்-கிழமை. அவள்-குறத்தி.

327. பிரபவ முதலிய அறுபதுவருட வரிசையில் பதினொன்றாவது சுக்லர வருடம்.

328 மாதமொரு நாலென்றுண் மன்றாடி தன்மீதிற்
காதலுற்றாற் போலுங் கருத்தென்றாள்—பேதமில்லா

329 நாளினுமோ ராறென்றா ணன்றுதிரு வாதிரையான்
தோளின்மேன் மைபலென்று சொல்லினாள்—கோளிலது

330 வார மிரண்டென்றாள் வாழ்சோம சேகரனைச்
சேர மனதிற் சிறந்ததென்றாள்—ஆரணங்கும்

331 ஆமெனது யோகத்தா லந்தக் காணமுடன்
தாம மனிப்பரோ சாற்றென்ன—மாமிலே

332 வந்தோர் கணப்பொழுதின் மாலை யுதவுமதிற்
சந்தேக மில்லையெனத் தானுவந்து—மிந்தைமிது

333 பொன்னாடை மிக்னுமணிப் பூணுதவு மவ்வளவில்
பன்னகப் பூணு பரணத்தான்—தன்னெடுந்தேர்

334 மங்கலங்கள் சேர்வீதி மன்னுதலு நன்னுதலும்
அங்கலங்கண் மின்னவெழுந் தாங்கணைந்தாள்—செங்கை

335 மலரைக் குவித்து வதனமலர்ந் தாண்மேல்
மலரைக் குவித்துவிட்டான் மாரன்—அலரெடுத்து

336 நல்லாருந் தூற்றினார் நாண்மடமச் சம்பயிர்ப்பாம்
எல்லாமோர் பக்கத் திருத்திவைத்துச்—சொல்லலுற்றாள்

---

328. நாலாவதுமாதம் ஆடி.

329. ஆறாவது நட்சத்திரம் திருவாதிரை. ஆதிரையான்=சிவபெருமான். கோள்=ஞாயிறு முதலியன.

330. இரண்டாவது வாரம் சோமவாரம்; "சோம சுந்தர னுரிய வார மாதலாற் சோம வாரம்" திருவிளை. 14: 7.

331. யோகத்தால்=நல்லூழால். அந்தக்காணமுடன்=மன உவப்புடன். 326-ஆம் கண்ணிமுதலியவற்றில் வருடம் முதலியவற்றைக்கூறியதோடியையு யோகம், காணம் என்பவையும் தொனிக்கும்படி கூறினார்.

334. அம் கலங்கள்=அழகிய ஆபரணங்கள். ஆங்கு=வீதியில்.

337 வில்லிலே வண்டன் விடுங்கணையிற் றப்பிலிபூ
வில்லிலனே யென்றாலு மெய்திடுவான்—சொல்லிலே

338 கூவென்னுஞ் சின்னமுற்றோ ன் கூறுமெய்யே யில்லாதோன்
காவென்றால் வந்தடிக்கக் காத்திருப்பான்—தேவரீர்

339 இவ்வே டனைவிட் டெனைவருத்தி னாலெவர்க்கும்
ஒவ்வாது நீதி யுடையாரே—எவ்வுலகும்

340 போற்ற வரசுரிமை பூண்ட சவுந்தரரே
ஆற்று மயலேனை யாளுமெனக்—கோற்றொடிதான்

341 பேசிய போது பெருமான் றிருவுளத்தில்
நேசம்வைத்தாற் போலமற்றோர் நீள்வீதிக்—கோசைமிகு

342 தூரியம் பேரி தொனிப்பவுற்றா ன் பெண்ணதனிற்
பேரிளம்பெண் ணானவொரு பேரிளம்பெண்—சேரும்

பேரிளம்பெண்.

343 இருட்டறையுட் பல்கணியி னெய்துநிலாக் கூடும்
இருட்டனைநே ரூடுநரை யெய்தும்—திருக்குழலாள்

---

337. வண்டன்-வண்டாகிய நாணையுடையவன், துட்டன். தப்பிலி-தப்புதல் இல்லாதவன், இகழ்ச்சிக்குறிப்புப்பெயர். பூவில் இல்லன்-பூவிலுள்ள மனைவியை யுடையான்; திருமால்; இல்-மனைவி. பூவில் இலனே என்றாலும் எய்திடுவான்-பூமியில் நான் இல்லாதவன் என்றாலும் அம்பால் எய்வான்; "கொள்ளும், பொருளில ராயினும் பொங்கெனப்போந் தெய்யும், அருளின் மறவர்" திணைமாலை. 84.

338. கூவென்னும் சின்னம்-குயில்; கூகூ வென்னும் குறிப்பு. மெய்-சரீரம், உண்மை. கா-சோலை, காப்பாயாக. வந்து அடிக்க-தென்றல் வீச, வருதலைச்செய்து கொள்ளையடிக்க.

339. வேடனை-வேள் தனை, வேடச்சாதியானை.

340. ஆற்றும்-தாங்கும்.

342. தூரியம்-வாத்தியம். பேரிளம்பெண்-பெரிய இளமையையுடைய பெண்; "காமர் கவினிய பேரிளம் பெண்டா" (மதுரைக்காஞ்சி, 465) என்பதையும் அதனுரையையும் பார்க்க.

343. இருட்டு அறையுள். பல்கணி-சாளரம். இருள் தனை.

344 பூணுற் றிறுகும் புணர்முலைக்குப் பூணிலதாற்
காணுறவே சாய்ந்தசையுங் காட்சியென—நாண்முதலா

345 முற்றுப் பெதும்பை முதற்பருவந் தோறும்விஞ்சை
கற்றுய்ந் தமையாக் கவினமைத்துச்—சொற்ற

346 தெரிவை வரைக்குந் திரட்டிவைத்துப் பார்த்துச்
சரியென்றுற் போலுந் தனத்தாள்—அரிய

347 பதுமை யனையாள் பான்சேவை யன்றிப்
புதுமை விழிக்குப் பொருந்தாள்—மதுகரங்கள்

348 ஓலமிடும் பூங்காவி லுற்றுவ் வொருதருவாய்ச்
சாலவெதிர் கண்டுகண்டு தான்மகிழ்ந்தாள்—கோலமிகு

349 மஞ்ஞை யனையமின்னாள் வாழைதனைக் கண்டுதிருப்
பைஞ்ஞீலி யானைப் பரவினாள்—இஞ்ஞாலத்

350 தூற்றார்க் குதவி யுறுபலாக் கண்டுதிருக்
குற்றால நாதனென்று கும்பிட்டாள்—சுற்றியதன்

351 வல்வேலி யாக வளர்வேணுக் கண்டுதிரு
நெல்வேலி யீசனையே நேசித்தாள்—பல்லின்

352 மருமுல்லை வாயாள் வளர்முல்லை கண்டு
திருமுல்லை வாயில்சிந் தித்தாள்—ஒருமாச்

---

344. பூண்-ஆபரணம், தண்டுக்குக் கட்டப்படும் பூண். பேரிளம்பெண் செயற்கை அழகை விடுத்தவளாதலின் அதற்கேற்ப அவளியல்பு கூறப்படும்.

346. சரி:உடன்பாட்டுக்குறிப்பு; சரிவாயாக என்பது மற்றொருபொருள்.

347. புதுமை-புதிய காட்சி, புதிய அஞ்சனம். மதுகரங்கள்-வண்டுகள்.

348. தரு-மரங்கள்.

349. வாழை திருப்பைஞ்ஞீலித் தலவிருட்சம். பின்னர்க் கூறிய மரங்களை அவ்வத் தலவிருட்சமாகக் கொள்க.

350-51. அதன் வல் வேலியாக-அந்தப் பலாவின் வலிய வேலியாக; வேணு-மூங்கில்; "வேரல் வேலி வேர்க்கோட் பலவின், சாரலாட" குறுந்தொகை, 18.

352. முல்லை வாயாள்—முல்லையரும்புபோன்ற பற்களையுடைய வாயுடையாள். முல்லை-முல்லைக்கொடி. முல்லைவாயில்-வடதிருமுல்லைவாயில், தென்திருமுல்லைவாயிலென்னும் தலங்கள். மா-மாமரம்.

353 செறிவுற் றிடலுஞ் சிவனை முலையாற்
குறியிட் டவளைக் குறித்தாள்—முறியாரும்

354 நிம்பமெதிர் கண்டா ணிமல னிராசலிங்கச்
சம்புவைமுன் கண்டதென்னத் தான்மகிழ்ந்தாள்—உம்பரிசை

355 திந்திருணி கண்டா டிருவீங்கோய் மாமலையில்
எந்தைதனைச் சிந்தைதனி லேத்தினாள்—கந்தநிறை

356 வில்வமெதிர் கண்டாள் விரைந்துசொக்க நாயகிசேர்
சொல்வாலி நாதனெனச் சூழ்ந்திறைஞ்சிப்—பல்லுயிர்க்கும்

357 தன்னடியி னீழ றருவாற்குத் தான்மேலாய்த்
தன்னடியி னீழ றருங்கடம்பை—முன்னுறக்கண்

358 டன்பிற் குழைந்தாங் கடிபணிந்து கைகூப்பி
இன்பமுட னெண்ணுவா ளிக்கடம்பின்—நம்பரமர்

359 கூடலாய் வந்திருந்து கொண்டக்கா லிவ்விடையே
கூடலா மென்று குறித்திடுமுன்—நீடும்

360 கலையா னிடைபிங் கலையான் மலைய
மலையான் கயிலை மலையான்—இலகியவெள்

361 ளேற்றினு னின்பமன்பர்க் கேற்றினு னென்றுயரை
ஆற்றினுன் காவிசிப்பே ராற்றினுன்—சாற்றுமறைக்

362 காட்டினுன் போற்றுநெறி காட்டினுன் றன்னுரையை
நாட்டினுன் சோழவள நாட்டினுன்—ஈட்டும்

---

353. குறியிட்டவள்-அம்பிகை. முறி-தளிர்.

354. நிம்பம்-வேப்பமரம். இராசலிங்கச்சம்பு-இரத்தினகிரீசர்; வாட்போக்கிநாதர்.

355. திந்திருணி-புளியமரம்.

349-57. தலவிருட்சங்களைப் பாராட்டிய முறை, திருவானைக்கா உலாப் பேரிளம்பெண்பருவத்திலும், சொக்கநாதருலா அரிவைப்பருவத்திலும் காணப்படுகின்றது.

359. கூடல்-மதுரை, மணத்தல்; சிலேடை. இவ்விடையே-இவ்விடத்திலேயே.

360. கலையான்-மானையுடையவன். மலை அமலையான்.

இதுமுதல் தசாங்கம் கூறப்படும்.

361-2. மறைக்காடு-வேதாரணியம்.

363 துதியா னுதரத் துதியா னிடத்தம்
பதியான் கடம்பைப் பதியான்—சதுர்வேதன்
364 ஆணியன் மெய்யனடி யாணியன் மாவிரதம்
தாணியன் பொன்னிதழித் தாணியன்—ஓர்கை
365 உரியான் பணிவோர்க் குரியானெண் ணாரைப்
பரியானால் வேதப் பரியான்—மருவுசெங்கை
366 வாரணத்தன் கோட்டுவெள்ளை வாரணத்தன் வாணிமரு
வாரணத்தன் போற்றுமயி ராவணத்தன்—பாரப்
367 படியேர் பொருந்தும் படியே செயும்பூங்
கொடியே புணருங் கொடியான்—நெடிது
368 வழங்கும் புவனத்து மன்னுயிர்க்குந் தானாய்
முழங்குமோங் கார முரசான்—எழுங்கதிசேர்
369 சந்திரனுஞ் சூரியருந் தானவரும் வானவரும்
இந்த்ராதி திக்குக் கிறையவரும்—ஐந்துபெரும்
370 பூதமும் பூதப் புணர்ப்பும் புகன்றசதுர்
வேதமும் வேத விதிவிலக்கும்—போதனால்

---

363. உதரத்து உதியான். இடத் தம்பதியான்-இடப்பாகத்திலே மனைவியையுடையான்; தம்பதி-மனைவி; வழக்கு.

364. ஆணியன்-பார்வதியையுடையவன். மெய்யன்-உண்மைப்பொருளாக உள்ளவன். அடியார் அணியன்-அன்பர்களுக்கு அருகிலுள்ளவன். மா இரதம் தாணியன்-பூமியைப் பெரிய இரதமாக உடையவன்; தாணி-பூமி. இதழித் தார் அணியன்-கொன்றைமாலையை அணிந்தவன். ஓர்கை-ஒருகையையுடைய யானை; அறுகாலென்றதுபோல நின்றது.

365. பரியான்-தாங்கான்.

365–6. செங்கை வாரணத்தன்-செங்கையிற் சங்கையுடையவர்; திருமால். கோடு-நாலுகொம்புடைய. வெள்ளைவாரணத்தன்-வெள்ளையானையையுடைய இந்திரன். வாணி—கலைமகளை; ஆணத்தன்-பிரமன். அயிராவணம்-இரண்டாயிரங்கொம்பையுடைய யானை; "அயிராவணமேறுதானேறி" திருநா. தே.

367. படி-பூமிதேவி. கொடி-திருமகள். கொடியான்-துவசத்தையுடையவன்; "பொறிக்கொடி மார்பிற்கொண் மரைக்கட்கொடி" திருவிடைமருதூருலா, 143.

370. பூதப்புணர்ப்பு-பௌதிகம். போதன்-பிரமன்.

371 தானே யமைத்த சராசரமு முற்பவத்தில்
ஆன நிலைபெயரா வாணையான்—மோன

372 முனிக்கணங்கள் சூழ்கருணை மூர்த்திநால் வேதத்
தனிப்பொருளெல் லார்க்குந் தலைவன்—குனிப்புடையோன்

373 வந்தா னெனவே மணிச்சின்னந் தானிசைப்பத்
தந்தா ரிடையாளுந் தான்சென்று—முந்திப்

374 பணிந்தா ளெழுந்து பகருமதன் போர்க்குத்
துணிந்தா ளடித்துநின்று சொல்வாள்—அணிபாரும்

375 மெய்யா நிலத்தினிற்கா வேரியம்பு பாய்ச்சியுழு
தைபமுறு தேபுளக மங்குரிப்பத்—துய்யதாம்

376 காமப் பயிரிலைபாக் காட்சிக் கதிர்தோன்ற
ஏமமுற நெல்வேலி யீசரே—சேமித்து

377 மோக விளைவு முதிரவே ளாண்மைசெப்தால்
போக முமக்கே பொருந்துமே—மாகநுணைச்

378 சுந்தரே யென்னமற்றத் தோகைபர்பல் லாண்டிசைப்ப
அந்தரத்தோர் பாதலத்தோ ரம்புவியோர்—செந்தமிழோர்

379 தேனே கனியே செழும்பாகே தெள்ளமுதே
ஊனே யுடலி னுயிர்க்குயிரே—கோனேயெம்

380 உள்ளமே யுள்ளத்தி னுள்ளுணர்வே பேரின்ப
வெள்ளமே வெள்ளை விடைப்பாகா—தெள்ளுதமிழ்ச்

---

372. குனிப்பு-நடனம்,

373. தந்து ஆர்-நூலையொத்த,

375. மெய்யாம் நிலத்தினில்-தேகமாகிய நிலத்தில். காவேரியம்பு-சோலையிலுள்ள தேனிறைந்த மலர்ப்பாணம், காவிரிநீர். புளகம்-மயிர்சிலிர்த்தல். அங்குரிப்ப-முளைப்ப,

376-7. காட்சி-தோற்றம். மோகத்தை விளைவாகக்கூறுதற்கேற்ப நெல்வேலியீசர் கூறப்பட்டார். வேளாண்மை-மன்மதனது ஆண்மை, பயிர்த்தொழில். போகம்-இன்பம், விளைவு.

378. என்ன-என்று பேரினம்பெண் சொல்ல.

380. "உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற, கருவே" தே.

381 சொல்லே பொருளே துதிசே ரிருநிதியே
எல்லே யஞ்ஞான விருளகற்றும்—வல்லானே

382 எல்றென்று பன்முறைநின் றேந்த வருளிமதி
ஒன்றொன்று செஞ்சடையா னோர்காலும்—குன்றாத

383 சீருடையான் செல்வச் சிறப்புடையான் றென்கடம்பை
ஊருடையான் போந்தா னுலா.

கடம்பர்கோயில் உலா முற்றுப்பெற்றது.

விருத்தம்.

*விருப்பிருக்கு நினதடியார் செய்பணிக்கிங் கிடையூறு விளைக்கும் பாவ
இருப்பிருக்கு மூடர்தம திருப்புமன முருக்கிவிடற் கியல்பாய்ச் செங்கை
நெருப்பிருக்கப் படவரவத் துருத்திபுமன் கிருப்பதென்ன நினையா தென்னோ
திருப்பிருக்கு மூவிலைவேற் படையுடைய கடம்பவனத் தேவர் தேவே.

380–81. தமிழ்ச்சொல்லே பொருளே: "சொல்லானைப் பொருளானை", "சொல்லுகன் பொருளு மாவர்" (திருநா. தே.) எல்லே-ஒளியே.

382. மதி ஒன்று ஒன்று-ஒரு பிறை பொருந்திய.

*இந்த விருத்தம், எட்டுப்பிரதியில் இந்த உலாவின்பின் எழுதப்பட்டிருந்தது.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	8	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
*8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ...	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	அமுதாம்பிகைபின்னைத்தமிழ்	0	8	0
13.*	கலைசைச்சிலேடைவெண்பா	0	5	0
14.	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...	1	4	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ...	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

*1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	கணநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ..	0	8	0
*9.	அதுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை... ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை...	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மகீஷாபஞ்சகம்	... ...	0	8	0
33.	வேளிர்வரலாறு	... ...	0	8	0
34.	அகப்பொருள்விளக்கம்	... ...	1	4	0
36.	உவமானசங்கிரகம்	... ...	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	... ...	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	... ...	0	2	0
39.*	பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)		1	0	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு		0	6	0
42.	அகராதிநிகண்டு		0	12	0
43.	மேகவிடுதூது		0	2	0
44.	திருக்குற்றாலமாலை		0	2	0
45.	தண்டலையார்சதகம்		0	4	0
46.	இராமோதந்தம்		0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)		1	0	0
48.	சேதுநாடுந் தமிழும்		0	6	0
49.	கடைவள்ளலார்காலம்		0	6	0
50.	தமிழரும் ஆந்திரரும்		0	4	0
51.	மதங்கசூளாமணி		1	0	0
52.	கூடற்புராணம்		0	10	0
53.	திருவள்ளுவர்		0	6	0
	ஷை ஆங்கிலத்தில்		0	6	0
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு ...		1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...		0	12	0
56.	பாப்பாவினம்		0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை		0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்		0	3	0
59.	கடம்பர்கோயில் உலா		0	6	0

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வேறு புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப்பெற்றுக்கொள்ளவேண்டும்.

* இவ்வகடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ. 4—8—0. இதுவரை 30 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரகாசம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் மூமுத்தொகுதி—இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

உ

கடவுள்துணை.

மஹா கவிச்சக்கிரவர்த்தி கம்பர் குமாரன்

திருவாய்மலர்ந்தருளிய

அம்பிகாபதிக் கோவை

என்னும்

பெரிய

பலதுரைக்காரிகை

மூலமும் - உரையும்

சி-இராகவமுதலியாரவர்களால்

சென்னை-சூளை:

ஸ்ரீ கணபதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1930.

இதன் விலை காபிரைட். அணா 6,

உ

கடவுள் துணை.

மஹாகவிச்சக்கிரவர்த்தி கம்பன் குமாரன்

திருவாய்மலர்ந்தருளிய

அம்பிகாபதிக் கோவை

என்னும்

பெரிய

பலதுரைக் காரிகை.

மூலமும் - உரையும்

இது கொரக்கோட்டை

ப-வடிவேலு செட்டியார்

அவர்களால் பிழையா பரிசோதித்து

உரை எழுதியதை.

சி-இராகவமுதலியா ரவர்களால்

சென்னை-சூளை:

ஸ்ரீ கணபதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது,

1930.

முகவுரை,

ஆழிசூழ் இப்பூவுலகின்கண் பலபலகோவை, உலா, அந்தாதி, தூதுமுதலிய நூல்களிருப்பினும், அதன் இடையே நமது கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் குமாரனாகிய அம்பிகாபதியின் சரித்திரமும் அவர் பாடல்களும் எவரும் வியக்கத்தக்கதேயாம்.

பல்லோரும் வியக்கத்தக்க அம்பிகாபதியால் பாடிய பாடல்களை பலவிருப்பினும் சமயசிந்தையோடு பாடிய விஷயாதிகளின் ஓர்பகுதியாகியது வசந்தமண்டபத்தில் பாடியதேயாகும்:

அப்பாடல்கள் இருந்துதேயந்ததால் கவனித்து ஆரையுங் கால் சிதறிய பரக்கண்காணபர நம்பரையிலாலும் தனிப்பாடற் றிரட்டாலும் ஒருவாறு ஆராய்ந்தெடுத்து ஒருங்குசேர்த்து திரட்டிவெளியிடலாயினனேம் கம்பர்செய்த நூலுக்கு கம்பநாட்டாழ்வார் இராமாயணமென்றும் வில்லிசெய்த பாரதத்திற்கு வில்லிபுத்தூர் ஆழ்வார் பாரதமென்று விளங்குவதுபோன்று, அம்பிகாபதிபாடிய பாடலுக்கு அம்பிகாபதிக்கோவையென நாமம்சூட்டலாயிற்று அதினும்பலவிஷயங்களை விளக்கியதால் பலதுரைகாரிகையென மகுடம்கொடுக்களாயிற்று. யார்பார்க்கினும் யார்கேழ்க்கினும் இதன்கருத்து சிற்றின்பமென்றும் பேரின்பமென்றும் கவனித்து ஆராய்ந்துஅறிவுடையோர் கருத்தாகும்,

இந்நூல் சிதறுண்டதால் அவ்வவ் அமயங்களில்பாடிய பாடல்களையும் தொடர்புடன்பாடிய பாடல்களையும் திரட்டிசெய்து விடுத்துளேம்.

அம்பிகாபதி சரித்திரச் சுருக்கம்.

சோழநாட்டை அரசுசெய்துவந்த சோழபாண்டியனுக்கு, மகா கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பன் பிரதான மந்திரியாகவும், ஆதீனப் புலவனாகவு மிருந்தார். அரசனுக்கு ஓர் ஆண்பிள்ளையும் ஓர் பெண் பிள்ளையும் உண்டு. கம்பனுக்கும் தக்க பருவத்தில் ஓர் ஆண்மகவைப் பெற்றார், அரசன் குமாரனுக்கும் குமாரத்திக்கும் கம்பனே கல்வி யாசிரியராக கற்றுக்கொடுத்துவந்தார். கம்பன் குமாரனாகிய அம்பி காபதிக்கும் தன் தந்தையாகிய கம்பனே நற்றமிழ் ஆசிரியராக இல் லத்திலேயே கல்விப்பொருளை கற்பித்து தன்போன்று தேர்ச்சி யடையச் செய்தார்.

நிற்க, ஓர்நாள் இரவு நடுஜாமத்தில் அரசன் நகர்சோதனைவரும் போது, இடையில் ஓர் காளிகோயிலில் அநேகம் பேய்கள் காளிக்கும் திருத்தொண்டு பணிசெய்துக்கொண்டிருக்க, அதில் ஓர் பேய் தேவி க்கு சந்தனம் அரைத்துக்கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த ஒரு பேய் அரைத்த சந்தனசாந்தை விரலால்தொட்டு முகர்ந்தது, அதை க்கண்டு மற்றொருபேய் தேவிக்கு அரைக்கும் சாந்தை குற்றமுண் டாகும்படி தொட்டனையாவென்று எதிரேயிருந்த வளைவு கத்தியைக் கொண்டு அதன்விரலை துண்டித்துவிட, இந்த உள்ளன்புடைய பக்தி யும், தக்க தண்டனையுங்கண்ட அரசன் இவ்வாச்சர்யத்தை கம்பன் வாக்கால் கண்டசுத்தியாகக் கேழ்க்க ஆவலுள்ளவனாய் கம்பன் வீட் டிற்குவந்து தெருக்கதவைத் தட்டினான்.

அச்சமயம் கம்பன் வீட்டின் அரையினுள், அவர்குமாரன் அம் பிகாபதி தெரு நடத்திண்ணையிலும் படுத்து உறங்கிக்கொண்டிருக்க, கதவைத்தட்டிய அரவங்கேட்டு, அம்பிகாபதி விழித்துக்கொண்டு, சரஸ்வதிதேவியை சிந்தித்து, வந்தவன் அரசனென்றும், அவன் கோரியது கண்டசுத்தியென்றும் அறிந்தவனாகி, "கரைக்கு வடக் கிருக்கும்" என்ற கண்டசுத்தியை பாதிவெண்பாவாகப்பா, பாதி முடிவதற்குள் பாட்டின் அரவங்கேட்ட கம்பன் உள்ளிருந்தபடியே மற்ற பாதியும் பாடிமுடிக்கக்கேட்ட அரசனானவன் வீட்டிற்குவந்து விட்டான்,

பாடியபாட்டின் குறள் இருவகையுடைத்தா யிருந்ததால், மறு நாள் வித்வசபையில் கம்பனை விளித்து நடந்தவைகளை வினவ, அவரும் ஒளியாது சொன்னார். அம்பிகாபதியின் கல்வித்திறத்தை மெச்சியவராகிய அரசன் மறுநாள் தொடங்கி அம்பிகாபதியை அரசவித்வசபைக்கு அழைத்துக்கொண்டு வரும்படி ஆத்யாபிக்க அது போல் கம்பன் தன்மகனை அழைத்துக்கொண்டே தினம் வரப்போகலாயினன்,

அம்பிகாபதி தினம் சபையில் ஒவ்வொரு அற்புதங்களைப் பாடி வருவதை கம்பனிடம் கல்விபயின்று அதன் சுவையறிந்த அரசிளங்குமரி, அம்பிகாபதிமேல் பூரண காதலுடையவளாகி ஒருநாள் சமயம் வாய்த்தபோது தனித்துவந்த அவனிடம் தன் எண்ணத்தைக் காட்டி மையலூட்டி தன் கருத்திற்கு இணங்கச்செய்ய இருவரும் மனதொத்தவராய் பிரதிதினம் இரவு நடுஜாமத்தில் அரசனிடவசந்த மண்டபத்தில் சந்தித்து தங்கள் கருத்தை முடித்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்வாறு பிரதிதினமும் நடந்தேறிவர ஓர்நாள் அரசன் நகர் சோதனைவந்து அங்கு களவுபுணர்ச்சிக்காக செல்லும் ஓர் பெண்பாலால் அம்பிகாபதியும் தன்மகளும் வசந்தமண்டபத்தில் களவாக இணங்கியிருப்பதை யறிந்து, அதனை சோதிக்கவேண்டி மறுநாள் வாளுடன்சென்று காத்திருக்க, முன்னே தன்குமாரத்தி பலகாரதட்டுடன் வந்தநையும் பிறகு அம்பிகாபதிவந்து தன்மகளை விழைந்து 'மாலேநிகரொத்த' என்னும் பலதுரையாகப் பாடிய நூறு பாட்டுடைய கோவையைக்கேட்டு வெட்டாதுவிடுத்து மறுநாள் அவனது தந்தைக்கு உள்ளதைபுரைக்க அவனும் நம்பாததால், பலவிதத்திலும் சுட்டி நம்பும்படிக்குக் காண்பித்து, ஒட்டக்கூத்தராலும் கம்பராலும்சம்மதிக்கச்செய்து அம்பிகாபதி தன்னால் உயிர்போக்கினன்.

அடுத்தாப்போல தன்மகன் பழிக்கு அரசன் மகனைக்கொன்று பின் கம்பரைக்கொன்று அதனால் இருசந்ததியும் அழிந்தனர்.

உ

கடவுள்துணை.

அம்பிகாபதிக் கோவை என்னும்

பெரிய

பலதுரைக் காரிகை

மூலமும் - உரையும்.

கட்டளைக் கலித்துறை,

மாலேநீகரொத்த வாழ்பாண்டிநாடன் வரையிடத்தே
பாலேறுபாய தேன்மாரிபெய்யநற் பாகுகற்கண்
டாலேயெருவிழ முப்பழச்சேற்றி னமுதவயல்
மேலேமுளைத்த கரும்போ விம்மாதுக்கு மெய்யெங்குமே.

உரை-மகாவிஷ்ணுவுக்குச் சமானமாகிய பாண்டியராஜன் அரசு நடாத்தும் மலைகளின் வளப்பத்தையுடைய நாட்டின்கண் அமுதத்தினால் ஏர்விழுந்து தேனினால் மழைபெய்து கற்கண்டின் பாகினால் யெருவிட்டு மா-வாழை பலாவென்னும் மூன்றுபழங்களினால் சேறு கூட்டி அதின்மீது விளைந்த இனியசுவைபொருந்திய கரும்பாகும் இப்பெண்ணின் சரீரமுழுதும்,

இச்செய்யுள் வசந்தமண்டபத்தில் நடுநிசிவேளையிலே தன்னையும் அரசிளங்குமாரியையும், தனதுவாளால் வெட்டவேண்டுமென்று அரசன் மரத்தின்மீது ஏறிக்கொண்டு கார்த்திருக்கையில் அப்போது முன்னதாகவந்து கார்த்துக்கொண்டிருக்கும் அரசிளங் குமரியை வந்த அம்பிகாபதிமுத்தமி— மாதருதுநாலாநாள் ஆனதினால் அவள் இதழ் இனிக்க சரீரமே இனிப்புடையதென்று பாடியது,

இயற்கையிலேயே கரும்பிற்கு இனிப்பிருந்தும் முப்பழச் சேறும் கற்கண்டின் எருவும் தேனின்மாரியும் பாலால் ஏரும் என்று கூறியது சிறப்பித்தேயாம்.

மய்வடிவக் குழலியர்தம் வதனத்தை
நிகரொவ்வா மதியேமானே
செய்வடிவைச் சிற்றிடையைத் திருநகையை
வேய்த்தோளைத் தெய்வமாக
இவ்வடிவைப் படைத்தவடி வெவ்வடியே
யானரியே னுண்மையாகக்
கைப்படியத் திருமகளைப் படைத்திவளைப்
படைத்தனனற் கமலத்தோனே.

உரை-மேகத்தினுருவமாகிய குழலியர்தம் கூந்தலையுடைய மாதரது முகத்தை ஒவ்வாத சந்திரனே மான்போன்ற மிரண்டபார்வையுடைய பெண்ணே செய்யப்பட்ட உருவத்தையும் நுட்பமாகிய இடையையும் அழகிய பற்களையும் மூங்கில்போல தோள்களையும் தெய்வீகமாக இந்த அழகைப்படைத்த உருவம் எவ்வடிவோ யான் அறியேன் உண்மையாக அழகிய தாமரைமலரில் இருப்பவனாகிய பிரமதேவன் கைபடியும்பொருட்டு திருமகளைச் சிருஷ்டித்து இவளைப்படைத்தனன். இதுவும் அரசன்மகளைப் புகழ்ந்து பாடியது.

உருகி உடல்கருகி யுள்ளீரல் பற்றி
எரிவ தவியா தென்செய்வேன்-வரியரவ
நஞ்சிலே தோய்ந்த நளினவிழிப் பெண்பெருமாள்
நெஞ்சிலே யீட்ட நெருப்பு.

உரை--- நீண்ட பாம்பின்விஷத்தில்தோய்ந்த தாமரை மலர்போன்ற விழிகளையுவடய பெண்களுக்கரசி என்மார்பிலே மூட்டி விட்ட நெருப்பானது மனமுருகி உடம்பு கரிந்து நெஞ்சில் உள்ள ஈரல்மூண்டெரிவது ஆறாது என்னசெய்வேன்.

பூவரசநிழலிலே புதுநிலாவிலே
வேகுதேயேன்மனம் விரக தாபத்தால்
யாவர்மக ளாயினு மருகினி லிருந்தக்கால்
காவலென் றறியுமோ காமவாதையே.

உரை—பூவரசன் மரத்தடி நிழலிலும், மூன்றும் பிறையாகிய புதியநிலவின் வெளிச்சத்திலுமிருக்கும் எனதுமனம் விரகவேதனையால் வேவுகின்றது இப்போது இந்த அரசிளங்குமரி யல்லாமல் வேறுயாவருடைய குமாரத்தியாக இருந்தபோதிலும் எனது இச்சையின்வாதையானது இதற்குயாதொரு காவல் உண்டென்று அறியுமோ அறியாது.

தந்தையைக்காண வரும்போது மாளியின்மேல் உலாவிக் கொண்டிருக்கும் அரசிளங்குமரியைக்கண்டு நெடுநாள் நேசத்தால் மாலைப் பொழுதைச்சுட்டிப் பாடியது.

பூவரசனிழலிலே புதுமடாவிலே
வேவுதுகொழுபயிர் விறகுதீயினால்
யாவர்பயிராயினு மருகினிலிருந்தக்கால்
காவலென்றறியுமோ கையும்வாயுமே.

உரை—பூவரசமரநிழலடியில் இருக்கப்பட்ட நான் என் எதிரில் விறகுதீயினால் கொள்பயிர்வெந்துக்கொண்டிருக்கிறது அதைக்கண்ட என்பசிநோயானது எவர்களுடைய கொள்பயிருக இருந்தபோதிலும் என்கையும் வாயும் இதற்குயாதொருகாவல் உண்டென்று அறியுமோ அறியாது.

மேல்சொல்லிய பாட்டில் அமராவதிபாடியபோது அரண்மனைக்குள்ளே வார்த்தையாடிக்கொண்டிருந்த கம்பன்துணையுள்ள அரசன் பாடியது அம்பிகாபதியென்றுணர்ந்து அவளை அழைப்பித்து கம்பன் முன்னதாகவும் தன்முன்னதாகவும் அப்பாட்டை மறுமுறைபாடச் சொல்ல "சொன்னசொற்களை மாற்றினும் மாற்றுவர்" என்பதற்கிணங்க தன்மீது குற்றமுண்டாகாவண்ணம் மேற்பாட்டை மறைத்து பசியை சுட்டிக்காட்டி மாற்றிபாடியதாம்.

இட்டடிநோவ வெடுத்தடி கொப்பளிக்க
வட்டில்கமந்து மருங்கசையக்-கொட்டிக்
கிழங்கோகிழங்கென்று கூறுவா ளூவில்
வழங்கோசை வையம் பெறும்.

உரை—நிலத்தில்வைத்த அடிநோவவும், நிலத்தில் வைத்து எடுத்த அடி கொப்பளிக்கவும், வட்டிலைச்சுமந்து இடை அசையவும், கொட்டிக் கிழங்கோ கிழங்கு என்று கூறுவாள் நாவிலுண்டாகுங் குரல் உலகமுழுதும் விலைமதிக்கப்பெறும்.

அரசன் மகளை அம்பிகாபதி இச்சித்ததாகக்கச் சந்தேகித்து, சந்தேக நிவர்த்தியின்பொருட்டு ஒரு விருந்துசெய்து, அம்பிகாபதியுடன் மற்றுஞ்சிலரை வரவழைத்து, அவர்களுக்கு தன்குமாரத்தியையே பரிமாறச் சொன்னபோது அக்குமரி பதார்த்தவட்டிலைச் சுமந்துவரக்கண்ட அம்பிகாபதி மோகமிகுதியால், இட்டடி நோவ எடுத்தடி கொப்பளிக்க-வட்டில் சுமந்து மருங்கசைய, என்று அரைப்பாட்டுபாடினதைக்கண்ட கம்பர் தன்மகனுக்கு அபாயம் வருமென்றஞ்சி சரஸ்வதியைத் தியானம்பண்ண, சரஸ்வதி ஒருகிழவியுருவங்கொண்டு கொட்டிக்கிழங்கு விற்பவள்போல்வர அதைப்பொருத்தி மற்ற அரைப்பாட்டு கம்பர் பாடியது.

சற்றேபருத்ததனமேகுலுங்கத்தாளவட்டம்
துற்றேயசையக்குழையூசலாடத்துவர்கொள்செவ்வாய்
நெற்றேனொழுகநடனசிங்காரநடையழகின்
பொற்றேரிருக்கத்தலையலங்காரம்புறப்பட்டதே.

உரை—சற்றும்பெருத்த தனங்கள் குலுங்கவும், முத்துமாலைகள் நெருங்கியசையவும், குண்டலங்கள் ஊசலாடவும், பவளத்தின் தன்மையைக்கொண்ட செவந்த வாசின்கண் நல்ல தேனொழுகவும், நடனசிங்கார நடையழகினையுடைய பொற்றேராகிய உடல் உள்ளேயிருக்க சிரத்தினழகு வெளிப்பட்டது.

இது அரசன் தன்மகளை அம்பிகாபதி இச்சித்தானெனச் சந்தேகித்து சிற்றின்பமாகப் பாடாமல் நூறுகவி சுவாமிவிஷயமாகப் பாடினால் தண்டியாமல் விட்டுவிடுகிறேனென்று சொல்ல, அம்பிகாபதி அவ்வாறே பாடிக்கொண்டுவருகையில் அரசிளங்குமரி மறைவாக இருந்து எண்ணிக்கொண்டுவந்து 99-பாடல் பாடினவுடன் காப்புச்செய்யுளுடன் நூறு என்று நினைத்து எட்டிப்பார்த்தபோது பத்டியது.

நடந்தாளொருகன்னிமகராஜசேகரிநால்டில்ரெண்டு
குடந்தானசையவொயிலானதுகண்டுகொற்றவரும்

தொடர்ந்தார்சந்யாசிகள்யோகம்விட்டார்சுத்தசைவரெல்லாம்
மடந்தானடைத்துசிவபூசையுங்கட்டிவைத்தனரே.

உரை— உலகில் இரண்டு குடங்களைக்கொண்டு மகராஜ சேகரி என்னும் ஓர் பெண் நடந்தாள். அவளது நடையின் அழகைக்கண்டு அரசர்களும் பின்தொடர்ந்தார்கள். சந்நியாசிகள் தாங்கள் அனுஷ்டித்துவரும் யோகங்களை துறந்தார்கள். பரிசுத்தமாகிய சைவர்களெல்லாம் அவளுக்காக மடத்தையடைந்து அவள்பெயரினால் சிவபூசை செய்வதற்கு ஆலயமும் கட்டிவைத்தார்கள்.

மறக்கப்படுவதில்லைகாசியில்வாழிளவஞ்சியைவிட்
டுறக்கம்வருவதில்லையூணில்லையானந்தவூர்குறித்து
பறக்கவென்றாலுஞ்சிறகில்லைபஞ்சபாணனம்பு
பொறுக்கப்படுதில்லையென்றேவண்டேசொல்லும்பூவையர்க்கே

உரை—வண்டே! காசியில்வாழும் வஞ்சிக்கொடிபோன்ற இடுப்பினையுடைய பெண்ணை மறந்துவிடவும் ஆவதில்லை, அவளால் நித்திரையும் வருவதில்லை, போஜனம் உட்கொள்ளுவதுமில்லை, அவ்வூரை நாடிப் பறந்துபோகவென்றாலும் இறக்கையில்லை, பஞ்சபாணன் என்மீது எய்யும் மலர்க்கணைவாதையும் பொறுக்கமுடிவதில்லை யென்று அவளுக்கு சொல்லுவாயாக.

கூரிட்டவேல்விழிமாதரசேயுன்றன்கோபமெல்லாம்
யாரிட்டவஞ்சனையோவறியேனெனதாரிழையே
ஏரிட்டெங்கென்முகம்பாராமனையுமிருப்பதினால்
கோரிட்டுஞாயத்தைசொல்லுவன்பாருநன்கோதையரே.

உரை—கூர்மை பொருந்திய வேல்போலும் கண்களையுடைய பெண்களுக்கு காயகமே! உனது கோபமெல்லாம் யார் சொல்லிக்கொடுத்த வஞ்சனையென்று உணர்ந்திலன், அவ்விடத்தில் என்னை ஏரிட்டுப்பாராமல் இருப்பதால் விவகாரஸ்தர்களைக்கோரி இந்த ஞாயத்தை யெடுத்துரைப்பன் அறிவாயாக.

காத்திருந்தாலுங்கலிதீருமேகண்ணாட்டிமுகம்
பார்த்திருந்தாலும்பசியாருமேயிடபாகமதில்
வீற்றிருந்தாலும்வினைதீருமேமெல்லிகல்லருளைச்
சேர்த்தணைந்தாலும்சிவபோகஞானம்சித்திக்குமே.

உரை—மிருதுவாகிய கண்போன்ற பெண்தெய்வமாகிய சத்திக்காக கார்த்துக்கொண்டிருந்தாலும் மனஆசைதீரும், அவளைப்பார்த்துக்கொண்டிருந்த பசிவிலகும், பக்கமாகவீற்றிருந்தாலும் தீவினையகலும், அவளது திருவருள்சேர அணைந்தாலும் சிவயோகஞானம் உண்டாகும்.

அற்புதமானகொடியாளரசியணிவரைமேல்
பொற்கொடியேவிட்டுளப்படிபோவதுபோகவென்றால்
நெற்கடைதூரமொருகாலைத்தூக்கிநிலத்தில்வைக்க
விற்கடைதூரமிழுக்குதென்னுசைவிதிவசமே.

உரை—கொடிபோன்ற இடையையுடைய பாவாய்! உன்னை விட்டு நான் எவ்வாறு பிரிந்து செல்லுவது. அவ்வாறு செல்லவென்றால் என் ஆசை விதிப்பயனுவது என் ஒருகாலை நெற்கடைதூரம் தூக்கிப் பூமியில்வைக்க அக்கால் விறற்கடைதூரம் பின்னுக்கேயிருக்கிறது.

கொக்கேறிவந்த வரசே யிருவருங்கூடவென்றால்
கொக்கோகணவனுங் காவல்வைத்தானந்த கொக்கெழுந்தாற்
கொக்கேகடித்திடுங் கோவேமருகுருங் கொல்லையிலே
கொக்கேயிருக்கின்ற தங்கனம்வந்திடிற் கூடுவனே

உரை—குதிரைமீது ஏறிவந்த அரசனே நாமிருவரும் சேரவேண்டுமென்றால் என்னுயகன் செந்நாயைக் காவல்வைத் திருக்கிறான் அந்தநாய் விழித்துக்கொண்டால் குதிரையைக் கடித்துவிடும் அது இறந்துவிடும் கொல்லைவெளியில் மாமரம் இருக்கிறது அவ்விடத்தில் வந்திடில் சேருவன்.

போவென்றிரவைச் சிறகாலடித்துப் பொழுதையிங்கே
வாவென்றழைப்பதற்கோ வளர்த்தேன் வாணச்சேவலைநான்
தாவென்றவர்க்குத் தருமுருகையன் றடஞ்சிலம்பில்
ஆவென்றவாய்கிழப்பேன் பொறுத்தேன் வளர்த்தாசைகொண்டே

உரை—வாணச்சேவலே! இரவு பொழுதைபோ வென்றும், விடியற் பகலைவாவென்றும் சிறகை விரித்தடித்து கூவுதற்காகவா நானுன்னை வளர்த்தேன் ஆவென்று கூவியவாயை கிழித்து விடுவேன். வளர்த்த ஆசையினால் மனதுபொறுத்தேன்.

மானேயுனக்கென்று நான்பட்டபாடு மறந்துவிட்டாய்
தேனேயெடுத்துச்செப்பவென்ரு லொருதிங்கள்செல்லும்
கானகம்பற்றும்கடல்நீருவற்றும் கருங்கல்லுருகும்
ஏனேயென்மீது இத்தனைவருமம் ஏந்திழையே

உரை—மான்போன்ற கண்களையுடையமாதே! நான் உனக்காக பாடுபட்டதை நீ மறந்துவிட்டாய் அதை யான் எடுத்துச் சொல்ல வேண்டுமென்ருல் கானகம்பற்றும்,கடல்நீர்வற்றும், கருங்கல்லுருகும் என்மீது இவ்வவவு வர்மம் ஏன்சொல்லுவாய்.

நானேயினி யுன்னைவேண்டுவதில்லை நளினமலர்
தேனேகபாடந் திறந்திடுவாய் திறவாவிடிலோ
வானேறணைய விரவிகுலாதிபன் வாயில்வந்தால்
தானேதிறக்குங் கையிதழாகிய தாமரையே

உரை —தாமரைமலரில் வாழ்கின்ற தேன்போலும் இன்சுவையைத்தருகின்ற மொழியையுடைய லட்சுமியை நிகர்ப்பவளே கதவை திறப்பாயாக திறவாவிடில் மேகத்திலிடிக்கின்ற ஆணிடி போன்ற சூரியகுலத்தரசனுகிய நின்கணவன் வாசலில் வந்தால் நின் விரல்களாகிய இதழ்களையுடைய கைத்தாமரையானது தானே திறந்துவிடப்போகின்றது ஆதலால் நான் இனி உன்னைப் பிரார்த்திப்பதில்லை.

இழையொன்றிரண்டு வகிர்செய்தநுண்ணிடை யேந்துவள்ளைக்
குழையொன்றிரண்டுவிழியணங்கேகொண்டகோபந்தணி
மழையொன்றிரண்டுமானுபரணனின்வாயல்வந்தால்
பிழையொன்றிரண்டுபொருரோகுடியிற்பிறந்தவரே.

உரை—இருபிளவாகக் செய்யப்பட்ட நூலிழையின் ஒரு சிறு கூறுபோன்ற நுட்பமாகிய இடையையும், காதில் அணிந்த குழைகளைச் சென்று தீண்டுகிற இருகண்களையுடைய அணங்கே! நீகொண்ட கோபத்தை நீயே தணித்துக்கொள்ள வேண்டும். கைம்மாறுக்கு வரக் கொடையாகிய மேகத்தின் குணமமைந்த இரண்டு கைகளையும், மானமாகிய ஆபரணத்தையும் உடையவனுகிய நின்கணவன் வாயில் வந்தால் உயர்குலத்திற்பிறந்தமாதர்கள், ஒருபிழை இருபிழைகளைப் பொறுக்கமாட்டார்களா.

மைக்கிணையான விழிக்கணைகொண்டு மருட்டி யழைத்திடலால்
பொய்க்களவாகப் புகுந்ததுமுண்டு புணர்ந்தது மில்லையடா
கய்க்கிசைவான குறுந்தடிகொண்டு கழுத்தைநெரிக்கவரும்
கக்னவாவென் றங்கையடா நீன்றாமடா விடடா

உரை—அஞ்சனத்துக்கு இணையான கண்களாகிய பாணங்களை கொண்டு என்மனதை மருளச்செய்து பொய்யாகிய களவுப் புணர்ச்சிக்காக அழைத்ததினால் நின்வீட்டில் நுழைந்ததும் உண்டு புணர்ந்ததும் இல்லையடா கைக்கிசைவாகிய குறுந்தடியைக்கொண்டு கழுத்தைமுறிக்கவரும் கைக்கோளனே இவள் என்தங்கையடா உன் மனைவியடா என்னை விடடா.

சேலோகணையோ பிணையோநற் றென்னவன்கை
வேலோநமனோ மிளிர்வண்டோ-சாலப்
பளபளென்ற வொளிமிகுந்து பவளமிஞ்சு நகைபுனைந்த
களபகும்பமுலை மடந்தைகண்,

உரை—அதிக பளபளப்பாகிய பிரகாசம்மிகுந்து பவழஆபரணத்தையணிந்து கலவைச்சந்தனம் பூசப்பெற்று குடம்போன்று அழகிய ஸ்தனங்களையுடைய இம்மாதின்கண் வேலாயுதமோ, கருவண்டோ, சேல்மீன்களோ, அம்புகளோ எ-று.

உன்மனதுமென்பனது மோர்மனதா யொன்றிடினே
மன்மதனும் வில்லெடுக்க மாட்டானே-நன்மதிதோய்
குன்றடர்ந்து பந்தைவென்று கொம்படைந்த தும்பிகுறை
வென்றடர்ந்த கொங்கை மங்கையே,

உரை—அழகு பொருந்திய சந்திரன்படியும் மலையை வென்று பந்தைஜெயித்து கொம்பையுடையயானைவருந்தவெதும்பிநெருங்கின ஸ்தனங்களையுடைய பெண்ணே என்மனமும் உன்மனமும் ஒருமனதானால் காமருஜன் வில்லெடுத்து நம்மை வருத்தமாட்டான் எ-று.

வேலவனேநின் கலவி விந்தையதற்கேற்றமங்கை
கோலவரிக்கண்சுழற்றிக் கொஞ்சுகிளி-போலமுலைக்
கச்சுக்குட் சிக்கச்சொக்கப் பொற்சுட்டிக்கடிப்
பச்சைப் பொட்டிட்டு தைப்பார்.

உரை—முருகக்கடவுளே உமது புணர்ச்சிய திசத்திற்கேற்ற இப்பெண் அழகுபொருந்திய ரேகைகளுள்ள கண்களைசுழற்றி கிளிப் பிள்ளையென்று ஸ்தனங்களின்மே லணிந்த கச்சகத்தினுள் அழுந்திக் கிடக்கனம் அகப்பட்டுக்கிடக்கவும் பொற்சுட்டியணிந்து பச்சைச நிற பொட்டிட்டிருப்பதைப் பார்ப்பாயாக எ-று.

சங்கநிதியோகம்வாழ் சண்முகனே நின்மோக
மங்கையெழின் மேனிகளம் வன்மருங்குல்-கொங்கைசெங்கண்
கந்தந்தங்கந் தங்கங் கம்பந் தந்தந்தம்
பந்தந்தண் கஞ்சம் பார்.

உரை—பக்தருக்கு சங்கநிதிபோன்று திருவேரகத்தி லெழுந் தருளிய சண்முகக்கடவுளே உனதுவிருப்பத்தைக்கருதும் இப்பெண் ணின் அழகுபொருந்திய மேனியும் கழுத்தும் குறுகிய இடையும் ஸ்தனமும் சிவந்தகண்களும் முறையே அழகிய தங்கத்தையும் சங் கையும், நூலிழையும் யானைக்கொம்பையும் பந்தையும் தாமரையும் ஒத்திருப்பதையும்யார் எ-று.

கேளந்தநாளையின் மைந்தாநின்னையரை கிட்டிமத
வேள்வந்துபூசலிட மதிகாய வெருண்டெனது
தாள்வந்துபற்றி முன்வாய்புனத்தேநின்று தாழ்மைசொன்ன
நாளந்தநாளல்லவே யிந்தநாளந்த நாயகர்க்கே.

உரை என்னருமை குமாரனேகேள் அந்த காலத்தில் காமஞ் ஜன் உன்தந்தையைநெருங்கி யுத்தம்செய்யவும் குளிர்ச்சியையுடைய சந்திரன் சுடவும் இதைக்கண்டுபயந்து என திருப்பாதங்களைப் பிடி த்து என்னேதிரில் வாய்மூடி பணிவான வார்த்தைகளை சொன்ன அக்காலமல்ல அவருக்கு இந்தகாலம் எ-று.

சேமன்புதல்வன் செழுங்குன்றவேலவன் செழுங்கிரியில்
காமன்பகைவன் கரிமுந்துமாகி னங்கைவளவா
பூமன்கணையு மதியுமிவ்வாடையும் பூசலிட
மாமன்றமையன் றகப்பனென்றெவஞ்சி வாடுவளே!

உரை—பாகனே சிவபிரானது குமாரன் திருச்செழுங் குன்றத் திலுள்ள வேலனது பசுமையான மலையின்மேல் இந்திரன் யானையா கிய மேகம் என்னும் வலியபகைவந்து முந்தினால் நம் பெண்ணாகிய

கொடிபோல்வாள் மன்மதன் கணையும் சந்திரனும் டுதன்றலும் சமர் செய்தால் நகுலனுக்கு தமையனாகிய தருமன் (ஏமன்) என அஞ்சி வருந்துவாள் எ-று.

முக்கனியிதழ்க் கொடடாமுற் கதிரையிற்குமரா
மிக்கநறை மிக்கவினி யிக்கமுது-சர்க்கரைரு
சிக்கிலைகசக்குது நிசிக்கலை யுதிக்கிலதில்
அக்கரை பிறக்கு மடடா.

உரை—முருகர் ஸ்தலங்களில் ஒன்றாகிய கதிரையில் எழுந்தரு ளியிராநின்ற சண்முகக்கடவுளேமுன்னே வாழை, மா, பலா, எனும் முக்கனியின் சுவைடுபான்ற அதரபானத்தை கொடுப்பாய் விக்கும் படி தேனினுமினிய கருப்பஞ்சாறும் அதனுலுண்டாகும் சர்க்கரை யும் இனிப்பதில்லை கைக்கிறது இரவில் சந்திரன் உதித்தால் அதில் அக்கரையுண்டாகும் எ-று.

நித்தமுநினைத்திரவி நித்திரையு மற்றுருகிச்
சித்தசனெடுத்து வருடித்தகணை-தைத்துருவ
மெத்தமயலுற்று பிரமித்து தலைசுற்றுதடி
தத்தையொரு முத்தமது தா.

உரை—பிரதிதினமும் எண்ணி இராக்காலத்தில் நித்திரையின் ருருகி காமருஜன் எடுத்து சரமாரியாக பொழிந்த அம்புகள் மெத்த தைத்து உருவுவதால் மிகவும் மயக்கங்கொண்டு திகைத்து தலைசுழ லுகிறபடியால் கிளியை நிகர்த்த பெண்ணே ஒருமுத்தமாவதுகொடு என்றவாறு.

என்றுதிரும்பி வருவீரெனத்துயி லேந்திழையாள்
நின்றுகுழலொரு கையாலொதுக்கி வெண்ணீறுதந்து
குன்றுநிகர்கொங்கை மீதேயணைத்து கொடுத்தவிடை
ஒன்றுநினைத்தல்லவோ வின்றெனெஞ்சமுருகுவதே.

உரை—என்றைக்குத் திரும்பிவருவீரென நித்திரை செய்துக் கொண்டிருந்த என்நாயகி எழுந்துநின்று தன்கூந்தலை ஒருகையால் விலக்கி விபூதிகொடுத்து மலையைநிகர்த்த கொங்கைமீது அணைத்து கொடுத்த உத்தரவு ஒன்றை நினைத்து என்மனம் உருகுகிறது எ-று.

சீரானவேதபுரிநாதர் கோயிற்றிருகுளத்தில்
நீராடிப்போகின்ற நேரிழையே கியன்றனென்சுவிடாய்
தீராமற்பாம்பற்செவ்வாய் திறவாமற் றிகும்பிமுகம்
பாராமற்போவதனாலே கிடைக்கும் பழியுனக்கே.

உரை—வேதபுரியீஸ்வரரின் கோயில் குளத்தின்நீரில் குளித்து முழுகிப்போகும் பெண்ணே என்மனச்சோர்வை தீராமலும் செவ்வலரிமலர்போன்ற வாயைத்திரக்காமலும் யென்முகத்தைத் திரும்பி பாராமலும் போகுவதால் உனக்கு பழியாகும் எ-று.

சேன்மிஞ்சிப்பாயும் வயற்காஞ்சியூரன் செக்களத்தில்
மேன்மிஞ்சிமையம் பெருமான்மகிபன் வியன்சிலம்பில்
மான்மிஞ்சியான்சொன்ன வாத்தையுமிஞ்சித் தன்மட்டுமிஞ்சி
கான்மிஞ்சிக்காரன் பின்போனாளெனை விட்டுச்சமிஞ்சியே.

உரை—சேல்மீன்களை அதிகமாக நிறம்பெற்ற வயழ்பகூல்ந்த காஞ்சிநகரத்தான் போர்களத்தின்மீது மேன்மைப்படும். ஐயம் பெருமாள் மகிபனது பெரியமலையில் ஆசையால் நான்சொன்ன சொல்லைமீறி தன். அளவும்கடந்து எனையுமிழந்து காலில் அணித்திருக்கும் மிஞ்சியுடன்சென்றாள்.

கட்டாரியேந்திய காளத்திநாதர் கனகவெற்பில்
பொட்டான நத்திட்டு போறபெண்ணே நின்பொலன்கலையை
தொட்டால்மணக்கும் புனுகுசவ்வாது கஸ்தூரியுமே
தட்டானடித்த சிமிழ்போன்றனத்தை தருகுவையே.

உரை— சூலாயுதத்தைத் தாங்கிய காளத்திநாதரது பொன்மயமான மலையின்கண் முகத்தில் திலர்தமிட்டு, போகும்பெண்ணே உனது பெண்மய ஆடையைத்தொட்டால் புனுகும் சவ்வரதும் கஸ்தூரியும் பரிமளிக்கின்றது கம்மாளன்செய்த சிமிளையொத்த உனது கொங்கையைத் வருவாய்.

மதியேயென்பாங்கி தன்வாசலுளேல் யான்வருமளவும்
சதியேநினைத்தங்குத் தான்போனவயேற்குயில் தான்றொளிக்கும்
கதியேமிகுந்த நற்கன்னற்கதிபன் கணைதொடுப்பான்
பதியேபுக்காதிரு சென்றாற்பகைவரும் பாவைக்குமே.

உரை—சந்திரனே நான்வரும் வரையில் என்காதலி வாயிலை அணுகாதே கற்பனையையே நினைத்து அங்குபோகுவையானால்குயில் சப்திக்கும் காமருஜன் மலர்களையெய்வான் ஆதலால் அவளிடத்திற் குப்போகாமலிரு போனால் சித்திரபாவைபோன்ற எனது காதலிக்கு அநேகபகைவரும்.

பைங்கிளியென்றிடுமாதே விழியம்புபட்டவெற்குக்
கொங்கையினொர் தடந்தந்தவள்வாய் மருந்தேகொடுத்துச்
சங்கையில்லாமதன்போற் றேர்கடிதடஞ்சாரவைத்தால்
பங்கமில்காமவிடநோய் தணிந்திடும்பாரமன்றே.

உரை—பசுமைபொருந்திய கிளியெனக்கூறும்பெண்ணே உமது தலைவியின் கண்ணாகிய அம்புபட்ட எனக்கு ஸ்தனங்களினால் ஒத்த டம்தந்து அவளது வாயமுர்தமாகிய மருந்தைக்கொடுத்து வெட்க மில்லாத காமருஜனது அழகிய ரதமாகிய நிதம்பத்தை பொருந்தி னால் பழுதற்றகாமவிஷநோய் தீர்ந்துவிடும் கஷ்டமல்ல.

மையிட்டகூந்தலு மானிட்டகண்ணுமதிமுகமும்
கையிட்டகிள்ளையும் வாரிட்டகொங்கைபுங் காதினிற்பொன்
செய்திட்டவோலையுஞ் சிற்றடியிட்ட செழுஞ்சிலம்பும்
கைதிட்டமாக வருபவளே யென்னைகாண்கிலையே.

உரை—மேகத்தைநிகர்த்த கூந்தலும் மானைநிகர்த்த கண்களும் பூரணச்சந்திரனைநிகர்த்த நெற்றியும் கையினில்பிடித்தகிளியும் கச்ச ணியப்பெற்ற ஸ்தனங்களும் காதில் அணிந்த பொன்னால்செய்திட்ட ஓலையும், சிறியபாதங்களில் அணிந்தசெழுஞ்சிலம்பும் இவைகளுடன் ஒழுங்காக பூணப்பெற்று வருகின்றவளே என்னைப்பார்க்கவில்லையே.

எறிக்குமதிசடை யண்ணுமலைய ரெழிற்கிரியில்
பறிக்கின்றபூவை மிதிக்கப்போருளந்த பாதத்தினால்
பொறிக்கண்பிசாசுக ணெற்கணை தூவி பொரிபொரித்துக்
கொறிக்கின்றபாலையி லெப்படிபோயினள் கோமளமே.

உரை— பிரகாகிக்கும் பூரணக்சந்திரனை சடாபாரத்தில் அணிந்ததிருவண்ணுமலையார் அழகிய மலையின்கண் என்பெண் கொய்யும் மலர்களை மிதிக்கப் பொறுக்கமாட்டாள் அந்த பாதத்தினுல் நெருப்புப்பொறிகளை வீசும் பிசாசுகள் நெற்களைசிந்தி பொரிபொரிக்குமந்த பாலைநிலத்தில் எந்தவிதமாக நடந்து சென்ருள்.

வேம்பைவிரும்பக் கரும்பானதுமந்த வெங்கரும்பு
வேம்பானதுமுன்னை பெற்றலவோ வெண்ணெய்தான்றிருடித்
தாம்பால்வரியுண்ட மாலரங்கேசர் தடஞ்சிலம்பில்
நாம்பாவியாயிருந்தால் யாரைநோவது நன்றல்லவே.

உரை—வேம்பை விரும்பினதும் அவ்வேம்பு கரும்பாக மாறிவிட்டது அந்த மதுரமான கரும்புவேப்பாகி விட்டது ஏனெனில் உனைபெற்றதனுல் மகனே வெண்ணையைதிருடி கோபியரிடத்தில் தாம்புகயிற்றிருல் கட்டுண்டு அடியுண்ட அரங்கேசம்பெருமாளது பெரியமலையில் நான் பாவியானுல் யாரைநோவது ஒருவரை நோவது நன்றல்ல.

அடக்கேன்விரகமறியேன் சமயமதாய்ந்து சற்றும்
படுக்கேனொருவரைப் பாரேனிரவு பகன்முழுதும்
எடுக்கேன்மலரா முடிக்கறியேனும்மை யேநினைக்து
வடக்கேவழியையும் பார்த்திருந்தேன் கண்ணுமாசுற்றதே.

உரை. மன்மதவிவிடும் பாணங்களின் வேகத்தால் உண்டாகும்விரகத்தையடக்கமாட்டேன் சமயபேதத்தடதயும் அறியமாட்டேன் அயர்ந்துசற்று துயிலமாட்டேன் ஒருவரையும் ஏறிட்டுப்பார்க்கமாட்டேன் இரவுபகல் முழுதும் மலர்கொய்யமாட்டேன் தலையில் சூடிக்கொள்ளவும் அறியமாட்டேன் உன்னையே நினைந்து வடக்குமுகமாக வழிப்பார்த்து நீவருமையினுல் என்கண்ணும் பூத்துவிட்டது.

சின்னஞ்சிறுக்கி நற்சிற்ருடைக்காரி யென்சிற்றிடைச்சி
அன்னநடையுடன் கைவீச்சொன்றே பொறுமைம்பதுபொன்
வன்னமுலையும் வின்னெற்றிதிலர்தமு மார்பழகும்
இன்னம்பெரியர் விலைசொல்லவஞ்சுவ ரேந்திழைக்கே.

உரை, இளம்பருவமமைந்தபெண் நல்லசிற்றுடை தரித்தவள் அழகிய சிறு இடைய உடையவள் அன்னதைப் பழித்தநடையுடன் கைவீச்சு ஒன்றே ஐம்பதுபொன் விலைபெறுமானால் அழகிய ஸ்தனமும் வில்லைப்பழித்த நெற்றியிலட்ட பொட்டும் மார்பின் அழகையும் அமைந்த இப்பெண்ணுக்கு இன்னமும் பெரியவர்கள் விலைசொல்ல நாணுவாககள்.

கொத்தோடுமாங்கனி செந்தேனொழுகுங் குருகைவரு
சித்தினிபெண்ணிவ ளன்னாந்துவிம்மிச் செறிந்திலங்கு
முத்தனிகொங்கையை முன்போலவே முகந்தணைய
எத்தனைநாட்செல்லுமோ வறியே னென்ற னேழைநெஞ்சே.

உரை. கொத்துடன்கூடிய மாம்பழத்தில் செழுந்தே னொழுகுங்குருகாபுரியில் தோன்றிய சித்தினிஜாதிப்பெண்ணாகிய இவளின் அண்ணாந்து பருத்து ஒன்றுடனொன்று நெருங்கி விளங்கி முத்தரபாணமணிந்த ஸ்தனத்தை முன்னாள்போலவே ஏகயினாற்தீண்டி தழுவ எத்தனைநாட்கள் பிடிக்குமோ தெரியவில்லையே என் ஏழைநெஞ்சே.

நெஞ்சீரம்வற்றியுள்வாய்வறண்டுநினைவுதப்பி
என்சீவனும்விட்டும்போகுதையோவிளமாமயிலே
வஞ்சிக்கொடியிடைப்பெண்ணாள்குமுதநல்வாயமுதச்
சஞ்சீவிகொண்டுவந்வாள்பிழைப்பேனினிச்சாவில்லையே!

உரை— மனதிலுள்ள ஈரம் காய்ந்து உள்வாயுலர்ந்து நினைவு பிசகி என் உயிரும் என் உடலைவிட்டு நீங்கப்போகிறது ஐயோ! இளமை பருவமமைந்த அழகிய மயிலை நிகர்த்து வஞ்சிக்கொடிபோல இடையையுடைய பெண்ணின் குமுதமலரைப்போன்ற அழகிய வாயிலுண்டாகிய அமிர்தமான சஞ்சீவியைக் கொண்டுவந்து கொடுத்தால் நான் உயிர் பிழைத்துக்கொள்ளுவேன் பிறகு எனக்கு மரணமேகிடையாது.

மங்காதகீர்த்தியன்ருண்டவராயன்மகிபன்வெற்பில்
சங்கீதவல்லியைமார்போடணைத்துசாசஞ்செய்ய
இங்கீதமாகவிருவருங்கூடியிருக்கையிலே
பொங்கோதவாரியின்மீதேநிலவுபுறப்பட்டதே.

உரை—அழகிய பெருமையையுடைய தாண்டவராயனது மலையில் சங்கீதத்தில் சமர்த்துடைய இவனை மார்புறத்தழுவி சரசம் செய்து இருவருமாக கூடியிருக்கையில் பொங்கு அலைகளையுடைய சமுத்திரத்தின்மீது சந்திரன் உதித்தான்.

விடவாளைவென்றவிழியாளைப்பூமியின்மேலதிர
நடவாளைப்பெண்கள்நாயகமாமொருநாயகத்தை
மடவாளையென்னுள்வதிவாளையினபவருவவெனசொற்
கடவாளையென்றெய்வமேயென்றுபோயினிக்காண்பதுவே.

உரை....விஷந்தோய்ந்த வாளைஜெயித்த கண்களையுடைய பெண்ணை, பூமியதிர நடவாதவளை. பெண்களுக்கெல்லா மரசியை மடப்பத்தையுடையவளை, என்மனதில் சதாகுடிகொண்டிருப்பவளை, இன்பம் தணியும்படி என்சொல்லை மீறிநடக்காதவளை நானினிபோய் பார்ப்பதெப்போ.

நாடாதுநாடினையோகல்விகேள்விநலமிலர்பால்
ஊடாடிநெஞ்சந்தளர்ந்தனையோவொன்னலரையெல்லாம்
காடாளவைத்தவன்மால்கருமாணிக்கன்கற்பவெற்பில்
வாடாதுவாடினதேன்மன்னவாநின்வரைப்புயமே.

உரை. விரோதியான யாவரையும் காட்டையாளும்படி வைத்தவன் பெரிய கருமாணிக்கன் அழகிய மலையில் வேந்தனே உமது மலைநிகர்த்த தோள் ஒரு காலத்திலும் வாடாதது இப்போது வாடியிருப்பதேன் கிட்டாததை கிட்டினையோ கல்வி கேள்வியில் பிரயோஜனமில்லாதவரிடத்தில் பழகி மனம்வாடினையோ.

தாராளனெங்கடிருநின்றசேஷன்சயிலத்தின்பால்
நீரார்முகிற்குழன்பெண்பேதைனயவிட்டுநீபிரிந்தால்
சீராமனில்லையமுதில்லையஞ்சனைச்செல்வனில்லை
காரார்பொழில்வளர்காழிப்பிரானில்லைகாப்பதற்தே,

உரை. மலர்மாலைசூடிய எமது திருநின்றை சேஷனது மலையில் மேகத்தை நிகர்த்த கூந்தலையுடைய பேதைமதியாகிய என்பெணைவிட்டு நீ பிரிவாயாகில் அவளை ஏ(இறவாமல்) கர்ப்பாற்றுவதற்கு கல்லை பெண்ணாக்கிய ஸ்ரீராமபிரானில்லை, சஞ்சீவி மலையைக்கொண்டு

வருவதற்கு அஞ்சனாதேவியின் குமாரனான ஆஞ்சநேயரில்லை, எலும்பை பெண்ணாக எழுப்பிக்கொடுத்த மேகங்கள் தங்கிய சோலைகள் சூழும் சீர்காழிக்கு தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளில்லை.

கைத்தலந்தன்னிற்பசும்பொன்வளையல்கலகலென
சத்தமெலிந்திடநூபுரம்பாதச்சதங்கைகொஞ்சத்
தத்திமியென்றுகடனஞ்செய்சம்மீசர்தஞ்சந்நிதிப்பெண்
செத்தகுரங்கைதலைமேற்கமந்துதிரிந்தனளே.

உரை. அஸ்தத்திற் பொன்னாற்செய்த கைகங்கணங்கள் கலகலவென்று சப்திக்க பாதச்சிலம்பும் கிண்கிணியும் சிறு ஒலிசெய்ய தத்திமியென்று நாட்டியம்செய்கின்ற சம்பீசரதுசந்நிதிப்பெண் செத்தகுரங்கை (சாமந்தியை) தலைமேற்றாங்கித் திரிந்தாள்.

கட்பூங்குழல்மாவடுவண்டாய்கழைவிற்புதல்கூரிநாட்டம்
எட்பூத்துண்டமுருக்கோட்டமிலகுவிதுவாகநம்பாணி
தடபூச்சுவர்க்கஞ்சிலம்பியிடைநூணிதம்பமகில்பைவராற்றாள் சொல்
வெடபால்குரல்கோகிலமன்னநடையும்வடமீன்கற்புடையாள்.

உரை. நேனிலுள்ள பூங்குழல் அழகிய வண்டுபோல புருவம் கரும்புவில்லை நிகர்க்கும் கண் கூர்மைபொருந்திய வாளைநிகர்க்கும் நாசியோ எள்பூப்போலிருக்கும் அதரம் முருக்கம்பூப்போ லிருக்கும் முகம் பூரணகசந்திரனைப்போலிருக்கும் கை தாமரைபுஷ்பத்தையொக்கும் ஸ்தனம் மலையைப்போலிருக்கும் இடையானது நூலிழையைப்போலிருக்கும் நிதம்பம் பாம்பின் படம்போலுள்ளது கணைக்கால் வரால் மீளைப்போலுள்ளது சொல் வெண்மைபொருந்திய பாலின் சுவைபோலுள்ளது குரல் குயிலைநிகர்க்கும் நடை அன்னத்தைப்பழிக்கும் இத்துடன் அருந்ததிபோன்ற கற்புக்கரகி,

ஆராகுஞ்செஞ்சடைஅம்பலவாணரணிவரைமேல்
நீராடிப்போகினறகேரிழையேயந்திநேரத்திலே
சீராடிக்குங்குமக்கொங்கையைக்காட்டிசிரித்தொருபெண்
போராள்பிடிபிடியென்றேநிலவுபுறப்பட்டதே.

உரை. கங்கையையணிந்த செஞ்சடையுடைய அம்பலவாணர் அழகிய மலைமீது நீரில் மூழ்கி குளித்துப்போகும் பெண்ணே அந்தி நேரத்தில் சீராடி குங்குமமணிந்த கொங்கையைக்காட்டி நகைத்து ஒருமாது போகிறாள் அவளை பிடிபிடி என்று சந்திரன் தோனறியது.

வண்டுறைசோலைமலைப்பரிகாரிவந்தாலிவளுக்
கண்டுபடாதவிக்காமசுரம்விடுமாதலினால்
பண்டுபழகினர்போலிந்தவேளையிற்பாயசத்தைக்
கொண்டுவந்தீரிதிற்றோஷப்பிறந்திடுங்கோதையரே.

உரை. வண்டுகள் வாழ்கின்ற மகாவிஷ்ணுவின் சோலைமலையில் வைத்தியன் வந்தால் இவளுக்கு கட்டுப்படாத காமாமாக்கினி விலகும் ஆதலால் பழகினவர்கள்போல இப்போது பாயசத்தைக் கொண்டுவந்தீர் இதனால் தோஷமாகும் மாதரே.

பாய் அசம் ஆடு, சோலைமலை பரிகாரி அழகர். அழகர் வந்தால் என் காமாக்கினி றணியும் இந்த ஆட்டை கொல்வதால் தோஷமுண்டாகுமென்பது.

காண்சிலையென்றிடுங்காமனைநேருமென்கட்டழகா
ஆணரசேயெனைக்காணவருபவளாயிரம்பொன்
வேணமட்டுங்கொணர்ந்தேகுவாநீயுங்வ்வாறுசெயின்
வாணகையோடுனைச்சேர்ந்தின்பம்மீகுவன்மானவனே.

உரை. பார்க்கவில்லையென்று சொல்லும் காமனைப்பழித்த கட்டழகு உடையவனே, ஆடவர்க்கு கோவே என்னைப்பார்க்க விரும்பிவருபவர் ஆயிரம்பொன்னை நான்விரும்புவரையில் கொண்டுவந்து கொடுப்பார்கள் நீயும் அப்படி கொண்டுவந்து கொடுப்பாயாயிக் பெருமையுள்ளவனே பிரகாசம்பொருந்திய நகையுடன் உன்னைக்கூடிக் கலந்துசுகந்தருவேன்.

மானேயென்னோடியர்சத்தியமாய்ச்சொன்னவார்த்தையைநீ
தேனேமறந்துதிப்பங்கவைத்தாயதுதீங்கலவோ
வானேர்புதுவைநற்காளத்திநாதர்வரையணங்கே
நானேவலியவந்துன்குறைதீர்ப்பனறுங்கிளியே.

உரை. மானை நிகர்த்தவளே! என்னுடன் மிகுந்த உண்மையா கச்சொன்ன வாக்கியத்தை தேனிலும் இனியவளே மறந்து எனை திகைக்கும்படி செய்தாய், அப்படி செய்தது தீங்கு அல்லவோ மேக த்தை நிகர்த்த புதுவையில் எழுந்தருளிபிருக்கும் அழகு மிகுந்த காளத்திநாதரது மலையிலுள்ள பெண்ணே, கானே வலியவந்துன் குறையை தீர்த்திடுவேன் நல்ல கிளிபிள்ளையை நினைத்தவளே.

ஆடுஞ்சிதம்பர னம்பலவாணவ னணிவரைமேல்
நீடுங்கயற்கண்ணி னுடைந்தமோக நிறைவென்றும்
கோடுங்குளமுங் குளத்தருகேநின்ற குன்றுகளும்
காடுஞ்செடியு மவளாகத்தோன்று மென்கண்களுக்கே.

உரை. திருநடனம்புரியும் அம்பலவர்ணரது அழகியமலையின் மீது நீண்ட கயல்மீனைப்போன்ற கண்களையுடையவள் கொடுத்த சுகம் என்னிடத்தில் நிறம்பி யிருப்பதால் கோடும் குளக்கரைகளும் குளங்களும் குளத்திற்கு அருகே நிற்கும் மலைகளும் காடுகளும்செடி களும் என்கண்களுக்கு அவளாகத் தோன்றுகின்றது,

போரேற்றுவந்த மதன்படைக்கஞ்சி புகுந்தவெனைக்
காரேற்றிநீல்க் கருங்கடலேற்றி கனத்தகொங்கை
மேரேற்றியுந்திச் சுழியாற்றிலேற்றி விரகவல்கில்
தேரேற்றிக்காக்குந் திருவையென்றேகண்டு சேர்குவதே.

உரை. சமர்விளைக்கவந்த காமனது மலர்க்கணைக்குப் பயந்து வந்து அடைக்கலமாக புகுந்த என்னைக்கருணையுடன் பெருத்த ஸ்த னமானமலைமீதேற்றி உந்தியாகிய சுழியாற்றிலேற்றி காமவிரகத்தை யுண்டுபண்ணும் அல்குல்லாகிய ரதத்தின்மீதேற்றி காப்பாற்றும் லக்ஷிமியைப் போன்றவளைப்பார்த்து மகிழ்வது எந்தநாளோ.

போல்லாதமதப்பய லெந்நேரமுஞ்செய்யும் போருமெனை
கொல்லாமற்கொல்லு மதியுங்கடலுங் குயினுமிவை
எல்லாந்தொலைந்த வெனறெண்ணினன்பாவியிப்போதுன்மனம்
கல்லாயிருக்குமென் றெவ்வளவேனு முன்கண்டிலனே.

உரை. பொல்லாத காமன்செய்யும் சமரும்கொல்லாமற் கொல்லும் சந்திரனும் சமுத்திரமும் குயிலுமாகிய இவைகளெல்லாம்நீங்கிவிட்டதென்று எண்ணியிருந்தேன அடிப்பாவி யுன்மனம் கல்லாகயிருப்பதை நான்முன்னமே அறியவில்லையே.

அஞ்சனைத்தையணிவிழிமான்மயிலைவிநாயகதுரைமே
லாசையாலே
நஞ்சனத்தையும்விடுத்தாணன் சமைத்துத்தருமினிய
நலத்ததீம்பால்
மிஞ்சனத்தையும்வெறுத்தாள் வன்குவளைத்தாரினையே
வேண்டுகின்றாள்
கஞ்சனத்தையலையிவ்வாறலைய வமைத்தர்னெனின்யாற்
கருதலென்னே.

உரை, மையணிந்த கண்களையுடைய என்பெண்மயிலை விநாயகதுரையின்மேல் மையல்கொண்டு நமது பந்துக்களைவிடுத்தாள் நான் சமைக்கும் இனிய பால்மிகுந்த சாதத்தையும் வெறுத்து குவளை மலர்மாலையையே விரும்புகின்றாளாதலால் அவளை இப்படிநடக்க பிரமன்செய்தானுல் கம்மால் செய்து முடிப்பதுயாது.

சோமன்பதியுந் திருமால்பதியுந் துலங்குகொன்றைத்
தாமன்பதியு நின்பங்கில்வைத்தாய் தமியேன்புகழும்
வீமன்புகழ்கொண்ட விக்ரமச்சோழன் வியன்கிலம்பில்
காமன்பகைவன் பதியோவென்பங்கின் கடைபிரிவே.

உரை. சோமன்பதியாகிய முகத்தையும் திருமால்பதியெனும் வயிற்றையும் பரமன்பதிமாகிய ஸ்தனத்தையுத் உனதுபக்கம் வைத்துககொண்டாய் நான் புகழும் வீமனுடைய புகழ்படைத்த விக்கிரம சோழனது பெரியமலையில் இந்திரனுக்கு உரைவிடமாகிய மேகத்தை நிகர்த்தகூந்தலைஎன்பக்கம் வைத்தாய்.

கிளியென்றுசொல்லியகாதலனேயோன்றுகேட்டிடுதி
எளியவளாகியயான்செய்தகுற்றமென்னேந்திழையார்
பழிபலசொல்லவும்நின்னுசையானதும்பாலனமும்
தளிரனையேநினைந்தல்லும்பகலும்தவிக்கின்றேனே.

உரை. கிளியேன்றுரைத்த என் நாதனே ஒரு செய்திகேள்' ஏழையான யான்செய்த பிழை என்ன பெண்மார்கள் பல பழியான வசனம் கூறவும் உனது ஆசையினால் நல்ல வாசம்பொருந்திய பாற் சாதமும் தள்ளி இரவும் பகலும் உன்னையே நினைந்துதவிக்கின்றேன்.

தவிக்கின்றகாரணமேதோயான்செய்திட்டதாழ்ச்சியென்னோ
புவிக்குட்சிறந்திடுங்காளத்திநாதர்புதுவைவெற்பில்
தவிக்கின்றவெண்முலைமாதேமறக்கிலன்சாற்றுமென்னைக்
கவிக்கின்றமாமயல்தீரமருந்தொன்றுகாட்டுவையே,

உரை. தவிப்பதற்குகாரணம் யாதோநான் செய்தகுறையாது பூலோகத்தில் உயர்ந்திடும் காளத்திநாதரது புதுவைமலையில் தவித்துக்கொண்டிருக்கும் மெல்லிய ஸ்தனமுடைய பெண்ணே கான்மறக்கேன் சொல்லும் என்னை மூடிக்கொண்டிருக்கும் காமசுரம்தீர மருந்தொன்றை காட்டுவாய்.

காட்டுமருந்திது காலமென்றே யென்றன்காதலனைக்
கூடியபின்புனைக் கூடுவதற் கொருகுற்றமில்லை
நாட்டும்புகழ் புதுவாபுரி காளத்தி நாதர்வெற்பில்
பாட்டுக்கிறைவனே மறவேனுனைப் பல்தினமே.

உரை—மருந்தைக் காட்டுவதற்கு இதுவல்லகாலம் என்நாதனை கூடியபிறகு உனைசேர்வதற்கு ஒருகுற்றமும் இல்லை நிலைபெறுத்தப்பட்ட புகழையுடைய புதுவைநகரின் காளத்திநாதரின்மலையில் உள்ள பாடடுக்குகந்தவனே உனை என்னாளும் மறவேன்:

மறந்தனையான்சொன்ன வாசகந்தன்னை மதர்விழியாய்
கறந்தழைக்கும் புதுவாபுரி காளத்தியப்பன் வெற்பில்
உறந்தருநம்மிரு வோருயிரொன்று டுடலிரண்டாய்
திறந்தரநின்றதை நோக்கினவரெவர் தேன்மொழியே

உரை—மதாத்தகண்களை யுடையவளே! நான் சொன்னவார்த்தையை மறந்துவிட்டாய் தருமம் செழித்தோங்குகின்ற புதுவா புரியில்வாழும் காளத்தியப்பன்மலையில் உருதியைத்தரும் நம்மிருவர் உயிர் ஒன்றாகவும் உடலிரண்டாகவும் திரமாக நின்றதை நோக்கியவர் யார் இனியசொல்லையுடையவளே.

தேமொழியேநிற்குச்சொன்ன நற்புத்தியைதேறுகிலாய்
போமொழியெங்கணும் போவதுசெய்தனை போதவுமே
நீமதமாகிய யின்னமுஞ்செய்ய நினைகுவையேல்
தாமதமின்றிக் கொடுந்தீங்கடைகுவை சாற்றினனே.

உரை—நான் உனக்குச்சொன்ன நல்லபுத்தியை தெரிந்துக்கொள்ளவில்லை போகுமிடமெங்கும் போனாய் நீ மதங்கொண்டு இனிமேலும் அவ்விதமாக செய்ய நினைப்பாயானால் தாமதமில்லாமற்படி சீக்கிரமாக கொடிய துன்பத்தை அடைவாயென்று சொன்னேன்.

இளந்தத்தையேநல்லமுத்ததையேபுசித் தென்கரத்தில்
வளர்ந்தத்தையாது முணர்ந்திலையே மயலாகிமனந்
தளர்ந்தத்தையேயென் றிருவரங்கேசர்க்கு சாற்றச்சொன்னால்
அளந்தத்தையே யளந்தாய் பின்னையாது மளர்ந்திலையே.

உரை—இளமைபொருந்திய கிளியே நல்லபாலையுண்டு என் கரத்தில் வளர்ந்ததை சிறிதளவாவது நினைக்கவில்லையே மோகமாகிமனம்வாடியதை என் திருவரங்கநாதருக்கு சொல்லும்படி சொன்னால் சொன்னதையே சொன்னாய் மற்றொன்றையும் சொல்லவில்லையே.

தேவெனவேந்தர் பணிமுருகையன் றன்னென்சிலம்பில்
ஓவெனத்தேறிப் பிரிவுசொல்வே னொருநாளிரவில்
காவெனவன்றின் பெடைகூவிடக்கை நெகிழ்க்குமுன்னே
ஆவென்றலறிப் பதைத்தனளேயந்த வாயிழையே.

உரை—வேந்தர்கள் தெய்வமாகவெண்ணி தொழும் முருகையனது பொதிகமலையில் இது தகுமென்று துணிந்து எனது பிரிவைத் தலைவிக்குச் சொல்வேனானால் அந்த பெண் ஒருநாளிரவில் அன்றிற் பேடைகள் காவென்று அரற்றினவுடன் அதை யோட்டுவதற்காக தன்னை யிருகத்தழுவின கைகளை நெகிழ்க்குமுன்னே ஆவென்றலறி யழைத்தாளே அவளிடம் என்பிரிவை எப்படிச் சொல்லுவேன்.

சாற்றினேனின்மேலுளவன்பினாலிதைத்தாழ்குழலே
போற்றுவைநீயுமென்பாலன்புளையெனிற்போதநன்காம்
ஆற்றலுறும்புதுவாபுரிகாளத்தியண்ணல்வெற்பில்
தூற்றினையாயினின்மேலுறுமன்புதொலைவுறுமே.

உரை—நீண்ட கூந்தலையுடையவளே, உன்மீதுள்ள அன்பினால் இதைச் சொன்னேன். என்னிடம் நீயும் அன்புவைத்து இருப்பவளானால் நீயும் அங்கீகரிப்பாய். அப்படி அங்கீகாரம் செய்வாயானால் மிகவும் நன்மையுண்டாகும். ஆற்றல்மிகு புலவர்களில் வாழும் காளத்திநாதனது மலையில் தூற்றினையானால் உன்மீதுள்ள அன்பு நீங்கிப்போகும்.

வண்டுமதுவுண்டிசைபாடுஞ்செந்தினின்மாரன்வரக்
கண்டுமிருந்தும்வடிவேலிரண்டுங்கருப்புவில்லும்
குண்டுமருந்தும்பொற்றேருந்தராமற்குழலைதந்தால்
தண்டுகொண்டெப்படிவென்றிடலாமடிதாழ்குழலே.

உரை—வண்டுகள் தேன்குடித்து இராகம்பாடுதற்கு இடமாகிய திருச்செந்தூரில் காமன்வரப் பார்த்திருந்தும் வேல்களிரண்டையும் கம்பு வில்லையும் குண்டுமருந்தும் பொன்தேரும் கொடாமல் குழலையைக்கொடுத்தால் அடிநீண்ட கூந்தலையுடையவளே சேனைகளைக்கூட்டி அவனை எப்படி ஜெயிக்கலாம்.

குண்டு-கொங்கை, கரும்புவில்-புருவம், வேலிரண்டு-கண்கள்' மருந்து-அதாமிர்தம், தண்டு-கோசம்.

அழலைத்தரித்ததிருவிரிஞ்சேசாணிவரையில்
மழலைச்சுரமெனும்மந்த்ரோதயமுமணிமருந்தும்
தழலைப்பொருதியபாம்புங்குடமுந்தராமல்வெறுங்
குழலைத்தந்தாலினிப்பாம்பாட்டுவதெங்ஙனகூறுதிரே.

உரை—சூரியனைச் சூடிய திருவிரிஞ்சை யிறைவது அழகிய மலையில் மழலைச்சுரமான மந்த்ரோதயத்தையும் மணிமருந்துகளையும் அக்கினிபொருந்திய பாம்பும் குடத்தையும் தராமல் வெறுங்குழல் மட்டும் கொடுத்தால் இனி பாம்பையாட்டுவது எப்படி சொல்லும்.

மழலை சுரம்-மழலைச்சொல், குழல்-கூந்தல், மணி மருந்து-அதாமிர்தம்.

அறங்காட்டிபகரத்தைவேலசதியணிவரையில்
நிறங்காட்டுங்கஞ்சத்திருவருளையீர்முசுநீண்டகுமிழ்த்
திறங்காட்டும்வேலுஞ்சிலையுங்கொல்யானையுந்தேருங்கொண்டு
புறங்காட்டவுந்தகுமோசிலைகாமன்றன்பூசலிலே,

உரை—தருமங்களைச் செய்யும் கைகளையுடைய ஐவேல் சதி யென்பவனுடைய அழகியமலையில் ஒலிகாட்டும் செந்தாமரைமலரில் வாழும் லக்ஷிமியைப்போன்றவளே முகத்தினிடம் நீண்டகுமிழம்புஷ்பத்தின் வர்ணத்தைக்காட்டும் வேலும் வில்லையும் கொலைபுரியும் யானையையும் ரதமும்கொண்டு கரும்புவில்லையுடைய காமருஜனது சமரில் தோல்வியடையக் கூடுமோ.

யானை, ஸ்தனம், குமிழ், நாசி, வேல், கண், தேர் கடிதடம் சிலை புருவம்.

ஏழைக்கிரங்கிடும் வான்மீகநாத ரெழில்வரையில்
யாழைவருத்துமொழி மடவீர்நல்லனமிருக்க
வாழைவருக்கைக் கனியிருப்பாற் குடம்வைத்திருந்தும்
கூழையெனக்களித்தீர் மறுமாற்றங்கொடுத்திடுமே.

உரை—ஏழைகளுக்கு அருள்சுரக்கும் வன்மீகநாதரது அழகிய மலையின்கண் வீணையைத்தோர்க்கும் மொழியையுடைய பெண்ணே நல்ல அன்னமிருக்க வாழைத்தண்டு பலாக்கனி இருண்டுபாற்குடங்கள் வைத்துக்கொண்டிருந்தும் கூழை எனக்குகொடுத்தீர் இதுயாதுக்கு மறுவார்த்தை கூறும்.

அப்பளவெவ்வளவே விழியார்ந்தகொவ்வைச்
செம்பளமெவ்வளவே விதழ்சீர்கொள் வஞ்சிக்
கொம்பளவெவ்வள வவ்வளவேயிடைக் கூறெலுமிச்
சம்பளமெவ்வள வவ்வளவே தனந்தையலுக்கே

உரை—இந்தப்பெண்ணுக்கு கண் அம்பினது அளவு எவ்வளவோ அவ்வளவே அதரம் நிறைந்த கோவைப்பழத்தின் சிகப்பு எவ்வளவோ அவ்வளவுதான் இடை சிறப்புற்ற வஞ்சிக்கொடி எவ்வளவு அளவுடையதோ அவ்வளவே ஸ்தனம்சொல்லும் எலுமிச்சம்பழம் எவ்வளவோ அவ்வளவே.

போமேபொழுதுவருமே மதியும் புரண்டெனங்கம்
வேகேமதனன்சாந்தைக்குமே தைத்தபுண்வழியிற்
பூமேவுதென்றல்புகுமேயென் பெண்புத்திபோய்விடுமே
கோமேதகப்பயலே மழவாப் பள்ளிகொண்டவளே.

உரை—கோமேதகத்தை நிகர்த்தமேகமே மழவனே பள்ளிகொண்டவனே பகற்பொழுது போகுமே சந்திரனும் பிரகாசிப்பானே என் அங்கம் வேகுமே காமன் பாணங்கள் தாக்குமே தாக்கிய புண் வழியே தென்றற்காற்று நுழைந்துபோகுமே என் பெண்புத்திமாறி விடுமே நான் யென்செய்வேன்.

சூலேறிச்சங்கமடவார்குடையுந்துறைக்கொதுங்கி
வேலேறுங்கண்ணியர்கைக்குடநீர்புக்குமீண்டுமுழும்
சாலேறிமுத்தந்தனையீறுந்தன்வயலூரானம்பால்
மாலேறுவான்பரிமாவேறினனடிமாமயிலே.

உரை—சங்குகள் கர்ப்பமுதிர்ந்து மாதர் மூழ்குகின்ற துறையில் ஒதுங்கி வேலைநிகர்த்த கண்களையுடைய அம்மாதரது கைக்குடத்தில் ஜலம்புகுந்து மறுபடியும் உழுபடைச்சாலேறி முத்துகளைப்பெறும் வயல்சூழும் ஆரையுடைய நாயகன் நம்மிடம் காமம் பூர்க்கும் பொருட்டு குதிரை ஏறிவந்தவன் அடி அழகு பொருந்திய மயிலை நிகர்த்தவளே.

ஞாயிறுபோய்விழத்திங்கள்வந்தெய்திடநண்ணியசெவ்
வாயனல்தூவப்புதனம்புகாநல்வியாழம்வர
மேயருவெள்ளிக்கலைசோரநானுன்னைமேவுதற்குத்
தாய்சனியாயினளேரகுநாததளசிங்கமே.

உரை—ஆதித்தனாகிய வெய்யோன் மேற்கு கடலில் போய்விழவும் சந்திரன்வந்து பிரகாசிக்க அங்காரகன் அனலைவீச புதன் அம்பு போல் சுட நல்ல வியாழன்வர பெரிய வெள்ளியினால் ஆடை நெகிழ நான் உம்மைக்கூடுதற்கு என் தாய் சனிபகவான்போல் இருக்கின்றாள் ரகுநாத தளவாயாகிய சிங்கமே.

ஆலங்குடியர்சங்கஞ்செறியத்தாஞ்சக்கார்பொன்
மேலம்பரத்தினர்நாகமெடுத்தவர்மேவிடையர்
சூலங்கண்மெய்யினர்பார்பதிகோன்மதிதோய்கவனர்
பாலன்கைக்கோள்படைக்கூர்மைக்கண்ணுமிர்தபைந்தொடிக்கே.

உரை—திருவாலங்குடியிலெழுந்தருளியவர்கங்கணமணிந்தஇடப்பாகத்தையுடையவர் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தையுடையவர் அழகுபொருந்தியஉயர்வான சிதாகாசத்தையுடையவர் பாம்பைத்தரித்தவர் மேன்

மைபொருந்திய இடபவாகனத்தையுடையவர் சூலப்பெருமைபொ
தியவர் நித்தியர் பார்வதிநாயகர் சந்திரனைத்தாங்கிய சடாபாரத்
யுடையவர் அவரது பாலசுப்பிரமணியர் கையிலுள்ளவேலாயுதத்
நிகர்க்கும் கூர்மையையுடைய கண்களோ பசும்பொன்னால் செய்
பட்ட கங்கணமணிந்த இந்த மாதுக்கு.

கலையளவெவ்வளவவ்வளவாம்விழிகாமநுடைச்
சிலையளவெவ்வளவவ்வளவாநுதல்செந்தில்கந்தன்
மலையளவெவ்வளவவ்வளவாமுலைமாறுயிலா
லிலையெவ்வளவாவவ்வளவாமுலையேந்திழைக்கே,

உரை—இப்பெண்ணுக்கு கண்கள் மனின் அளவு எவ்வளவோ
அவ்வளவே நெற்றி காமனின் வில்லெவ்வளவோ அவ்வளவே
னங்கள் திருச்செந்தூர்வாழ் முருகது மலையெவ்வளவோ அவ்வளவ
வயிறு திருமால் படுக்கும் ஆலிலை வெவ்வளவோ அவ்வளவே.

காயுங்கடுஞ்சுரமீதென்றுகாட்டியகையுஞ்சொன்ன
வாயும்புகையெழும்பாலையிலேவணங்கார்மவுலி
தோயுங்கழற்பதச்சுந்தரபாண்டியத்தோன்றல்வெற்பில்
தாயுந்தவருமிலாதவர்போலதவித்தனளே.

உரை—வணங்காதவர்களுடைய கிரீடங்கள் படியும் வீரக்கழ
யணியும் பாதங்களையுடைய சுந்தரபாண்டியனது பெரிய மலையி
சுடும் கடுமையான பாலைநிலம் இதுதானென்று சுட்டிக்காட்டின
யும் சொன்ன வாயும் புகையெழும்பும் பாலைநிலத்திலே தாயும் உற
னரும் இல்லத்தவர்கள்போல் தவித்தாள்.

தேமன்சுதனுக்கிளையோன்பிதாவைத்திரிகியினால்
கோமன்மறைத்துவிசயனுயிரைக்கொடுத்ததுபோல்
காமன்பகைவன்றென்கூடற்சொக்கேசன்கனகிரிமேல்
வீமன்சுடரொளிநம்மாருயிர்மீட்டதுவே.

உரை—இந்திரன் குமாரனுகிய வாலிக்கு இளையவனுகிய சுக்
ரீவனது தந்தையாகிய சூரியனை கிருஷ்ணன் மறையும்படிச்செய்
வில்விஜயனது உயிரைக்காத்தது மன்மதனுக்கு பகைவனுகிய தெ
மதுரைச் சொக்கநாதரது பெரிய மலையின்மீது வண்டினது விள
கொளியைநீக்கி நம்முடைய அரிய உயிரை காத்தது.

கடுவளைக்குங்கண்ணிகாரென்றபோதினிற்கைகழன்று
விடுவளைக்குள்ளவிசையிலையேமிதிலைச்சிலையே
நடுவளைக்குங்கொண்டனுரணன்கேரளநாட்டிலண்டத்
தொடுவளைத்கும்பரித்தேர்வலவாநமதூர்பரிக்கே.

உரை – விஷத்தின் தன்மையை தன்னிடத்திற்கொண்ட கண்க
யுடைய காதிலி கார் என்ற மட்டில் அவள் கையிலுள்ள கங்கணத்
ற்குள்ள விசை மிதிலநகரத்திருந்த சிவன்வில்லை நடுவிற்பிடித்து
ளைத்த மேகவண்ண நாராயணரது கேரளநாட்டில் அண்டங்களை
ல்லாம் சுற்றிவரும் குதிரைகளைப்பூட்டிய தேர்பாகர் நம்மால்
டப்படும் குதிரைக்கு இல்லையே.

பேயோவெயினரமுதாலயத்திற்பிறந்தவுன்னை
யேயோதினைப்புனங்காவல்வைத்தாரெழுபாருமுண்டோ
வாயோன்றிருவுந்திபூத்தோரணங்கண்மணிவரையில்
ஆயோவெனுங்குரலந்தோபுனத்தையழிக்கின்றதே.

உரை - பாற்கடலிற்பிறந்த உன்னைத் தினைப்புனத்திற்கு காவ
க்கவைப்பதற்கு ஏழுலகையுண்ட பெருவாயையுடையவன் திருவுந்
பூர்த்தோன் திருவரங்கன் அழகிய மலைமீது நீ ஆயோவென்று
பாலோட்டுங் குரலானது புனத்தை நாசமாக்குகின்றறே உன்
னிய குரலோசையை அறியாத குறவர்களுக்கு பேய்பிடித்திருக்
ன்றதோ.

நரிக்குப்பொருளை யுபதேசம்செய்தந் நரிகளைப்பின்
பரிக்குச்சரிதந்த வம்பலவாணர் பணிவரைமேல்
முருக்கிற்சிவந்த விதழமுதுண்டு முகமிரண்டும்
நெருக்கிப்பிடித்து விளையாடநல்ல நிலவிதுவே

உரை—நரிகளுக்கு மெய்ப்பொருளை யுபதேசம்செய்லு அந்த
களை பின்குதிரைகளுக்கு பதிலாகத்தந்த அம்பலவாணரது அழ
மலையில் முருக்கம்பூவினும் சிவந்த அதரத்திலுண்டான அமிர்
தை குடித்து இரண்டு முகத்தையும் நெருக்கிப்பிடித்து விளை
ட நல்லநிலா இது.

மார்க்கட்டராதபருவமடா விளவஞ்சிக்கொடி
பூர்க்கட்டடா மதம்பொங்கட்டடா மதம்பொங்கி பொங்கி
வேர்க்கட்டடா தனபாரமிரண்டும் வெளியிலெட்டிப்
பார்க்கட்டடாநீ பொறடா பராக்கிறமபாண்டியனே.

உரை—வல்லமைபொருந்திய பாண்டியனே ஸ்தனங்கள் அடிகோவாத பருவமடா இளவஞ்சிக்கொடி போன்றவள் பேரறிவை அடையட்டுமடா மதம்பொங்கி பொங்கி ஸ்தனபாரம்இரண்டும் வெளியில் எட்டிப் பார்க்கட்டும் அதுவரையிலும் நீ பொறுத்துக் கொள்ளடா.

குடக்கோடக்கொற்றக் குடைநீரிலோடம் கொடித்தடந்தேர்
வடக்கோடவாரியின் வாயோடவின்மத னோடைமைமாத்
தடக்கோடணியுஞ் சிவகயிலாயத்துத் தையலர்வாய்
இடக்கோட நம்மன்பர் தேரோடிவந்த திளங்கொடியே.

உரை—மலையின்மீது தோன்றும் அந்த வெள்ளைக்கொற்றக் கொடை ஜலத்திலோடவும் கொடிகள் புனைந்த பெரியதேர் வடக்கேயோடவும் கடலின்வாய் ஓடவும் கரும்புவில்லையுடைய காமன் ஓடவும் பெரியவிசாலமான சிகரங்களையணியப்பெற்ற சிவகைலாய மலையில் மாதர்களது வாய்மொழியோட நமது அன்பரது தேர் ஓடிவந்தது இளங்கொடியை நிகர்த்தவளே.

அலையாழிநஞ்சை யமுதாவருந்தியமரரெல்லாம்
சலியாமற்காத்த வருணாசலேசர் தருநல்வரையில்
நிலையாயிருக்கும் விலைமாதரே என்னை நீர்கொடுபோய்ப்
புலியூரைக்காட்டிக் கலையூரிற்சேர்த்திடின் புண்ணியமே.

உரை, கடலில் உண்டான விஷத்தை அமிர்தமாயுண்டு தேவர்களைகார்த்த அருணாசலேசரது நல்லமலையின்மீது சதாவிருக்கும் தாசிகளே என்னை நீங்கள்கொண்டுபோய் புலியூரைக்காட்டி கலையூரிற்சேர்த்திடிற் உமக்கு மிக்க புண்ணியமுண்டாகும்.

சொல்லியற்சொல்லிலமுதானசொல்லியைச்சொற்கரும்பு
வில்லியைமோகவிடாய்தணிப்பாளைவிழியம்பினால்
சொல்லியைசொல்லியம்பாவையொப்பாளைக்குளிரொற்றியூர்
வில்லியைப்புல்லியகைக்கேயிவள்வந்துவாய்ந்ததுவே.

உரை. சொல்லப்பட்ட இயற்சொல்லில் அமிர்தமான சொல்லையுடைய புகழ்பெற்ற கரும்புவில்லைபடைத்த மன்மதனது மோகவிடாய்தணிப்பவளை தனது கண்களான அம்பினால் ஆடவரைசொல்லுகிற கொல்லியம் பாவைநிகர்த்தவளை குளிந்த திருவொற்றியூரில் ஒருகொடியைப் போல் வாளைத்தழுவி யகைந்கே இவள் வந்து கிடைத்தது.

அரியெச்சிலசெய்யு மாவெச்சிலும்மை யரியெச்சிலும்
எரியெச்சிலோடு முனியெச்சிலும்பொரவேந்திழையாள்
கரியெச்சிலாயினள் விக்ரமச்சோழன் கனத்தகுன்றில்
புரியெச்சிலுண்ட வரியெச்சினாளும் புரப்பவனே.

உரை. விக்கிரமசோழனது பெரியமலையில் முறுக்கப்பட்ட கயிற்றாற் கட்டுபட்ட திருமாலின் எச்சிலான பூமியைதினமும் காப்பவனே கடலை எச்சிலாக்கின பாம்பின் எச்சலான தென்றற்காற்றும் கருத்தவண்டினது ஓசையும் எரியும்பாம்பின் எச்சிலான சந்திரனோடு அகஸ்தியமுனி யெச்சிலாகியகடலும் பொர என்மகள் யானையெச்சிலான இளங்கனியானாள்.

எறிங்கும்புகழ்க்கச்சி யேகம்பா சம்பனெண்டிசையும்
பொறிகும்புலியான் புயம்வேட்டபின்னிந்தப் பூவையன்னாள்
வெளிக்குங்குமக் கொங்கைமீதே விழிசொரிவெள்ளந்துள்ளித்
தெறிக்குந்திவலை யழிக்குஞ்சிந்தூர திலகத்தையே.

உரை. வீசும் புகழ்படைத்த கச்சியேகம்பா சம்பன் எட்டுதிக்கும் எழுதிய புலிக்கொடியுடையவன் தோள்களை விரும்பிய பிறகு இந்த பூவையை நிகர்த்தவளது வாசம்பொருந்திய குங்குமமணிந்த கொங்கைமீது கண்பொழிகின்ற நீர்பெருக்கானது துள்ளித்தொளிக்கின்ற துளியானது சிந்தூரப்பொட்டினை அழிக்கும்.

சித்தமகிழ்ந்து வருசொக்கநாதர் செழுங்கிரிமேல்
மெத்தைவிரித் ததின்மேலிருவரு மேவிச்செவ்வாய்
முத்தங்கொடுத்து முகத்தோடணைத்து முலைவருடி
நித்தமுங்கொஞ்சி விளையாடிநல்ல நிலவிதுவே,

உரை—சித்தம் மகிழ்ந்துவரும் சொக்கநாதரது செழிப்பான மலையின்மீது மெத்தையை விரித்துப்போட்டு அதின்மீது இருவரும் அமர்ந்து செவ்விய அதரபானம்செய்து முகத்துடனணைத்து முலைவருடி நாள்தோறும் கொஞ்சிவிளையாட நல்லநிலா இது.

அரக்கனலையிலங்கைவை வென்றான் மருமகன்
றணிகேசனன்பர் யானெஞ்
சிரக்தனலையாமலுனைக் காப்பாறென்றனையடி
தேமொழியேமாலை
வரக்கனலைமதிவீச படுமோவவ் வேலைதனில்
வாதுகேம
துரக்கனலைமதப்பயலென் முளங்குளிக்கத்தகுமோ
சொற்றோகை நீயே.

உரை—அரக்கனாகிய ராவணனுடைய இலங்கையை வென்ற திருமாலின் மருகனாகிய தணிகைமலை வேலவன் தன்னிடத்தி லன்பு வைத்தவரிடத்தி லருள்பாளிக்கும் மனமுள்ளவ னாதலால் உன்னைக் காப்பாற்றுவானென்று சொல்லினையே தோழியே மாலைக்காலம் வரனம் சந்திரன் அனல்வீசவும் அதேசமயம் வம்புசெய்யும் மன்மதன் எங்நேரில்நின்று இனிமை தாங்கிய கரும்புவில்லை வளைக்கலாமோ சொல்லடிபெண்ணே.

முந்தனத்தைநூதுவிடடேன் வரவுமில்லை மதராஜன்
முனிந்தேவில்லால்
எந்தனதுக்கிலக்காக வெய்கின்றான் மலர்வாளி
இனியென்செய்வேம்
கனந்தனத்தையகலாத பூம்பாவை வேலப்பன்
கையாற்பூசம்
சந்தனத்தை சவ்வாதை நினைந்துமனமுருகுதடி
தையலாளே.

உரை. பெண்ணாளே முன்னால் அன்னத்தை தூதுவிட்டேன் வரவில்லை காமராஜன் கோபித்து தன்கரும்புவில்லைக்கொண்டு மலர்க் கணையால் எனது ஸ்தனங்களின்மீது குறிவைத்து எய்கிறான் இனி

யென்செய்வேன் செல்வத்தையும் அறிவையும் நீங்காத பூம்பாவை வேலப்பன் கையினால் பூசியசந்தனம் சவ்வாதை நினைந்தல்லவோ என்மனம் உருகுதடி.

செவ்வந்திமாலை சிவந்ததென்றா டிங்கள்
சேர்ந்ததென்றாள்
கைவந்தவண்டு கழன்றதென்றாள்
கலைசேர்ந்ததென்றாள்
மைவந்தகண்ணி திருவொற்றியூரை
மதுரையென்றாள்
எவ்வந்தியோ வறியே னிவள்சொன்ன
விடுவந்தியே.

உரை—அந்தியாகிய பாலைக்காலம் வந்துவிட்டது சந்திரனும் பிரகாசிக்கின்றான் கையிலுள்ள கங்கணம் கழன்றது என்றாள் ஆடை பவிந்ததென்றாள் அஞ்சனமெழுப்பட்ட கண்களையுடையவள் திருவொற்றியூறை மதுரை என்று இவள் சொன்ன அநியாயத்திற்கு எவ்விதமான முடிவு ஏற்படுமோ அறியேன்.

மதிசூடியதில்லையம்பலவாணர்வரையிடத்தே
அதிசயமிக்கவதிசயமேபான்வீதிவரத்
துதிசெய்துழுவெட்டுத்தும்பியுங்டுகாண்டு துவண்டொருபெண்
எதிர்நின்றிரண்டுமரங்கரத்தேபிடித்தேகினளே.

உரை—சந்திரனையணிந்த சிவபிரான் மலையின்கண் அதிசயம் மிக்க அதிசயமே என்னவென்றால் சிவபிரான் வீதியில் பவனிவாக்கண்ட ஒருபெண் துதித்து இருபத்துநான்கு யானையுங் கோண்டு (இரண்டு கரங்களைத்தூக்கி) துவண்டு எதிர்நோக்கி ஆலாத்தியைக் கரத்தில் பிடித்துப்போனாள்.

மாலைதனைப்புனைந்தாலும்மலரணையிற்படுத்தாலும்
மருவார்பன்னீர்
ஏலமுறத்தெளித்தாலுமெவ்வளவேனுங்குளிர
விலையென்செய்வேன்
கோலமுறுமணலியிலேகிளைகளொடுசுகம்படைத்துக்
குலாவுமெங்கள்
சோலைதனைச்சேராமற்காமவிடாய்தணியாதே
தோகைமாரே.

உரை. புஷ்பமாலையைச் சூடினாலும் புஷ்பசயனத்தில் படுத்தாலும் மணம் மிகுந்த பன்னீரை அதிகமாகத் தெளித்தாலும் சிறிதளவும் குளிர்ச்சியாகவில்லையே என்னசெய்வது அழகுமலிந்த மணவியிலே சுற்றத்தாருடன் கூடி சுகவாழ்வைப்பெற்று வாழ்கின்ற எங்கள் சோலையப்ப முதலியாரைக்கூடி சுகிக்காமல் காமயேக்கம் தனியாது மாதர்களே.

மாலாக்கியென்னைப்பெருவயதாக்கியென்மார்பின்முலை
பாலாக்கியங்கம்பசுநரம்பாக்கியப்பாவையரை
மேலாக்கிச்சிக்குவிளக்கெண்ணையாக்கியென்மேனியெங்குந்
தோலாக்கவோமகனேபின் னையாய்த்தோன்றினையே.

உரை. குமாரனே என்னை மயங்கச்செய்து பருவவயதுடைய வளாக்கி என் மார்பினிலுள்ள தனத்தில் பால்சுறக்கவைத்து உடம்பை பச்சைநிற கரம்புகள் தோன்றும்படிசெய்து அந்த மாதரை மேலாகச்செய்து என்மேனி எல்லாம் விளக்கெண்ணையில் சிக்குநாற்றமுண்டாக்கி தோலாகச் செய்வதற்குதானோ பிள்ளையாக வந்து ஜெனித்தனை.

வண்டோவிழிநுதல்வான்பிறை வல்குன்மான்குலம்போ
செண்டோமுலைநித்திலமோ நகையிடைசேர்துடியோ
கண்டுமொழிகுழல் காரோமுகங் கமலப்பவளத்
துண்டோவிதழ்மின்னித் தண்டோதொடையிர்ந்ததோகையர்க்கே

உரை—இம்மாதுக்கு கண்கள்வண்டோ நெற்றிசந்திரனோ அல்குல்மானின்கும்புதானோ ஸ்தனங்கள் புஷ்பச்செண்டுகளோ பல்வெண்முத்துதானோ இடையானது உடுக்கையோவார்த்தை அமிர்தமோ கூந்தல் கரியமேகமோ முகம் தாமரைமலரோ அதரம் பவளத்துண்டுதானோ தொடை வாழைத்தண்டுதானோ.

ஆயத்துறையிற் பிறந்துவந்தந்தனர்
பால்குடித்து
மாயக்கண் வேசையிடத்தே வளர்ந்து
வண்ணனொருநாள்

எயப்புலவ ரிடத்தெட்டு காள்செட்டியே
னென்றுபின்
போயக்கச்சாலை புகுத்தனள்கா ணந்த
பொய்மகளே.

உரை. அந்த பொய்யெனும் பெண் சூதாடுமிடத்தில் பிறந்து பிராமணர்பாலை பருகி தாசியிடத்தில் வளர்ந்து வண்ணன் ஒருநாள் கலக்க வித்துவானிடத்தில் எட்டுநாள் கலந்திருந்து செட்டி ஏனென்றுவார்த்தையாடி கம்மாலையில் பிரவேசித்தாள்,

பூச்சிலைக்கன்னற் கைச்சேஷாசலேந்திரன்
பொருப்பிடத்தே
காச்சியபாலைக் குடிபோவென்றே னந்த
காரிகையும்
பேச்சிலெடுத்துக் கள்ளிபின்கை கைராமற்கு
முன்சொன்னதாய்
வாச்சுதென்றே நடந்தாள் பாலையான
வனந்தனி ல.

உரை. அழகுமலிந்த கரும்புவில்லைத்தாங்கும் கைகளையுடை யசேஷாசலேந்திரனது மலையில் காச்சியபாலை குடிபோ வென்றேன் அந்தப்பெண்ணும் பேச்சில் சமர்த்துடையவ ளானதால் முன்னால் ஸ்ரீராமனுக்கு கைகேசிசொன்னதுபோல் வாய்த்ததென்று சொல்லிக் கொண்டு பாலைவனத்தில் நடந்தாள்.

மேகம்பிறைசிலைவேல் குமிழ்வள்ளை வெண்
முத்தந்தொண்டை
பூகம்பசுங்கழைதேனுமிழ் காந்தன்பொற்
பாலிலைநூல்
நாகங்கதலி யலைவன்வரானன்
னளினமுண்டு
மாகம்பொழிற்றிரு தில்லையிலே ஒரு
வல்லியிலே

உரை. ஆகாயத்தை யளாவிய சோலைசூழ்ந்தத் திருத்தில்லையில் ஒருகொடியில் மேகமும் சந்திரனும் தனுசும் வேலாயுதமும் குமிழப்புஷ்பமும் வள்ளைதண்டும் வெண்மையாகிய மூத்தும் கோவைக்கனியும் கமுகமும் பசுமையாகிய மூங்கில் தேனைப்பொழியும் காந்தள் மலரும் அழகுபொருந்திய ஆலிலையும் நூலும் நாகத்தின்படமும்வாழைத்தண்டும் நண்டும் வரால்மீனும் தாமரைமலரும் இருக்கின்றது.

வல்லியென்பது ஒருபெண் மேகம் பிறை என்றது முறையே கூந்தல் நெற்றி புருவம் கண் நாசி காது பல் தொண்டை அதரம் கழுத்து தோள் கை வயறு இடை அல்குவ் முழந்தாட் கணைக்கால் பாதமாகும்.

பாதாதிகேசமுதலாயிவளைப்படைத்தபலர்
வேதாமருங்குல்வெளிவைப்பனேவிரிபூதலத்துள்
ஆதாரமின்றியிரண்டிளநீர்ந்தரநிற்குமோ
ஏதாகிலுஞ்சற்றங்கில்லாதிராதிடையேந்திழைக்கே,

உரை. பாதம்முதல் சிரசுவரையில் இவளை சிருஷ்டிசெய்த பிரமதேவன் இடையை வெளியாக வைப்பானோ, விசாலமாகிய உலகில் ஆதாரமின்றி யிரண்டு இளநீர்கள் ஆகாயத்தில் நிற்குமோ? நிற்காது, (அதுபோல்) இப்பெண்ணுக்கு இடையானது ஏதாகிலும் சற்று அவ்விடத்தில் இல்லாமலிராது இருக்கும்,

அநுபந்தம்.

நெஞ்சி லரவிந்தம் நீள்பசலி மாம்பூ
துஞ்சும் விழியி லசோகமாம் - வஞ்சியர்தம்
சென்னியிலே முல்லை திகழ்நீலங் குறியினிலே
யன்னவே ளெய்யு மியல்பாம்.

உரை. நெஞ்சியில் தாமரைமலரையும், சூதமலரை ஸ்தனத்திலும்; கண்ணில் அசோகமலரையும், சிரசில் முல்லைமலரையும், பெண்களுக்கு காமராஜன் எய்யும் இயல்பாகும்.

ஆன ஏகாரம் ஐகாரந் தன்னுடன்
வானுயர் அஇஉ என்னு மந்திரம்
தானலர் கணைகளாத் தனது கண்ணினை
யூனவில் வில்லதா யுவந்து பாவித்தே.

உரை, எ ஐ அ இ உ ஆகிய ஐந்தெழுத்தையும் பஞ்சகணைகளாகவும், தன் கண்களை வில்லாகவும், தன்னை மன்மத சொரூபனுகனுகவும், தன் நாயகியை ரதியாகவும் பாவித்து எய்வதாம்.

ஒண்டொடி மகளிர்தம் மார்மை கும்பத்தை
விண்டமைக் கண்களை விரும்பு முச்சியை
யெண்டரு குறியினை யிலக்கந் தாமென
கொண்டெய வின்பநீர் கொழிக்கு மாதர்க்கே.

உரை. பெண்களின் மார்பிலும் ஸ்தனத்திலும் கண்களையும் உச்சியிலும் நிதம்பத்திலும் இலக்கணப்படி எய்ய ஸ்திரிகளுக்கு காம வெள்ளம் பெருகும்.

பெரிய பலதுரைக்காரிகை

மூலமும்-உரையும்.

முற்றிற்று.

சிட்டுக்குருவி லேகியம்.

அசுர குருவாகிய துவஷ்டாவின் புத்திரன் விச்சுவரூபனை இந்திரன் சங்கரிக்க,அவன் மூன்று தலைகளும் சீரகிரி, காடை, சிட்டுக்குருவிகளாயின. எவ்வகையுஞ் சலிப்பறாத சிட்டுக்குருவி ஜிவவர்க்க பொருள்களில் முக்கியமானது. இந்த சிட்டுக்குருவி லேகியம் பல விருத்தி தருவதில் கைகண்டது. சகல நோய்களையும் போக்கி ஆனையைப்போலாக்கும். ஆயிரக்கணத்காய் செலவாகிறது. நல்ல அழகையுப், இரத்த விருத்தியையும், தாது புஷ்டியையும், வீரிய விருத்தியையும் ஆச்சரியமாகக் கொடுக்கும். ஒருதரம் வாங்சிப் பரிக்ஷித்தால் முதல்தினமே இதன் உண்மை தெரியவரும். இதில் அபம், காந்தம், வெள்ளி முதலிய பஸ்பங்கள்சேர்ந்திருப்பதால் அரை அல்லது ஒரு மண்டவம் புசிப்போருக்கு இழந்துபோன ஆண்மையை மறுபடியும் உண்டாக்கி விடுகிறது. அதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. இதற்கு முன் எப்போதும் அடைந்திராத ஆண்தன்மையையும், வீரியவிருத்தியைத் தேகதிடகாத்திரத்தையும், அதிக வலுவையுங் கொடுத்து தேக இரத்தத்தைப் பரவச்செய்து வஜ்ஜிரதேகமாக்கிவிடும். தோயுள்ள ஸ்திரீகளைக் கூடினால்வரும் வெள்ளை, மஞ்சள்வெள்ளை, நீர்சுருக்கு, அரையாப்பு, கொருக்கு முதலிய நோய்களை வாங்கிக் கொண்டு, அந்நோய் நீங்கும்பொருட்டு பலவித மருந்துகளைத்தின்று அதினால் வெட்டை அதிகரித்து இரத்த மூறிந்து மூகம்வெளுத்து கண்-கை-கால்களின் நகங்கள் வெளுத்து, அன்னத்துவேஷம் அக்கினிமந்தம், கைகாலெரிச்சல், சுத்தி, சோம்பல். மூதலிய கொடிய வியாதியையுடையோர் இந்த லேகியத்தை எண்ணிக்கையாக 48-நாள் யாதொரு பத்திய மின்றி சாப்பிட்டு வருவார்களானால் மேற்கண்ட ரோகங்களெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி சந்தானசெல்வமடைந்து மகிழடைவார்கள் என்பதில் தடையில்லை.

24-நாள் மருந்து	விலை ரூபா	2	8	0
48-நாள் மருந்து	,,	3	8	0

சி. இராகவ முதலியார் அண்டி கம்பெனி,

நெ. 360, செவகார்பேட்டை போஸ்ட்,

மதருஸ்.

பாக்கெட் மலையாள மாந்திரீக ஆசான்.

இஃது

ஸ்ரீலஸ்ரீ சைவம்-கிருஷ்ணசாமி பிள்ளை புத்திரர் ஸ்ரீ சத்தி ஷண்முக வீக்ஷண்ய கடகக்ஷ வேலாயுத ஸ்வாமி அவர்கள் சமஸ்கிருதத்தில் இருந்ததை அநேகர் வேண்டுகோளின்படி உலகில் யாவருக்கும் பயன்படுமாறு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் உலக வசியம், தெய்வவசியம், பெண்வசியம், தொழில்வசியம், மோகினிவசியம். திலர்தமை வசியப், அஞ்சனமை வசியம், காட்டேரி வசியம், வராகி வசியம், சத்துருவசியம், மாடன்வசியம், இன்னும் அனேக வசியங்களும் அதற்கு தகுந்தவாறு 108 தத்ரூப சக்கரங்களும் மூல மந்திர பூஜை விதியுடன் அடங்கி இருக்கின்றது சொர்ப்ப காபிகளே தயாரில் இருக்கிறது. உடனே எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 0 6

999-தலைவாங்கிய தளுக்குசுந்தரி.

நமது சுந்தரிசரித்திரம் வாயிலாக அவள் 999-தலையை ஆறு கேழ்வியால்வெட்டி கடைசியில் விவேகாநந்தன் கேழ்விக்குவிடைபகர்ந்து மாலையிடுவதற்குள் உலக அனுபவத்தோடு புத்திரவாஞ்சை பிதுர்வாக்கிய பரிபாலனம் தாயின் தாளாண்மை கல்வி பாண்டித்தியம் தற்செயல் ஆபத்து கற்றறிமோழை காமத்தினியல்பு அதனால் வரும்தீங்கு கள்ளர்களின் சாமர்த்தியம் தாசிகளின் தந்திரம் தாசியின்நட்பு தாசியிற் சம்மாரி அறிவீன அரசன் ஸ்திரீகளின் கற்பு, சம்சார ஒழுங்கு விபசாரவிளைவு பொய் சூது கொலை களவு மூதலிய பலபல அத்தியாயமாக்கி அவைகளின் இடையிடையே சிரிப்பு துக்கம் சந்தோஷமுறைமாக கற்றோரும் மற்றோரும் எளிதில் உணருமாறு தெள்ளிய வசனநடையில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல்விளக்கிச் சொல்லும். படிக்க படிக்க ஆனந்தத்தை தாங்களே கவனிக்கலாம் கையிருப்பில் கொஞ்சம் காப்பிகள் இருக்கிறது மிஞ்சிக்கொள்ளுங்கள். விலை ரூபா 1 0 0

எம். சி. இராகவ மூதலியார்,

360, சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

கொக்கோக முனிவர் திருவாய்மலர்ந்தருளிய

போகர் பாகெட்

கொக்கோகம்

மூலமும் உரையும்.

கலிகோ பயிண்டு ஆப்டன் படங்களுடன்.

கன்னலிள்றிவேம்புநுகர் காமத்துரோகிகள்போல்
பின்னையொருதெய்வத்தைப் பேசோமே - யென்னாளும்
சாற்றுவதுங்காமகலை சாதிப்பதுங்கரணம்
போற்றுவதுங்காமனடிபோற்று.

அனேகர் கொக்கோகம், கொக்கோகத்திற்கு சமானமாகிய சிற்றின்ப பெயர்களை வைத்து வேறு பலவிஷயங்களை வரைந்து அச்சிட்டு ஏமாற்றி வருவதில் பலபேர்கள் வாங்கி பயன்பெறாது விசனிக்கிறார்கள், இது அது போன்றதல்ல. உண்மையாகிய ஆதிகால பழயகொக்கோகம் இதுவே.

இது பூர்வம் உமைக்கு பரமேஸ்வரன் சொல்ல, உமை நந்திகேஸ்வரர்க்குச சொல்ல, நந்தி பதினெண்சித்தர்களில் சிரேஷ்ட போகருக்குச் சொல்ல போகர் கொக்கோகருக்குச் சொல்ல, கொக்கோர் சமஸ்கிருத பாஷையில் எழுதினர். அதனை அதிவீரராமபாண்டியன் தமிழில்பாட்டும் உரையுமாக எழுதினர். அந்நூலே இந்நூலாகும் இது ஐந்து வருஷமாக கஷ்டப்பட்டு சேகரப்படுத்தி பாட்டும் உரையோடு அச்சிடப்பட்டிருக்கிறது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாததால் ஒவ்வொருவரும் இடைவிடாது கைக்கனிபோல் வைத்திருக்கும்பொருட்டு பாக்கெட் சயிசில் அச்சிட்டிருக்கிறது. இன்றே ஒன்று வாங்கி உண்மைவிஷயத்தை தெரியுங்கள் கொஞ்சம் காப்பிகளே கையிருப்பு உடனே காப்பிக்கு முந்துங்கள்.

விலை ரூபா 1-4-0

எம். சி. இராகவ முதலியார் அண்டு கம்பெனி,

360, சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

உ

கடவுள் துணை.

தொட்டிக்கலை

ஸ்ரீ சுப்பிரமணியமுனிவர்

இயற்றிய

கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை.

இது

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்"ப்பத்திராசிரியராயிருந்த

இராமநாதபுரம்

மு. இராகவையங்காரால்

பரிசோதிக்கப்பெற்றது.

செந்தமிழ்ப்பிரசுரம்—உரு.

மதுரை:

தமிழ்ச்சங்கமுத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

இதன்விலை அணா 1.

உ

கடவுள் துணை.

தொட்டிக்கலைக் கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை

முகவுரை.

——(:o:)——

இந்நூல், தொட்டிக்கலை ஸ்ரீ: சுப்பிரமணிய முனிவரால் இயற்றப்பெற்றது. இம்முனிவர், இற்றைக்கு ககடு- வருஷங்கட்கு முன்பு விளங்கியவரென்பதும், திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ: சிவஞான யோகிகளுடைய அருமை மாணாக்கர் பன்னிருவருள் ஒருவரென்பதும், அமிர்தவாக்மி என்பதும் பலரும் நன்கறிந்தவை. இம்முனிவர் வரலாறு,மஹாமஹோபாத்யாயர்: ப்ரஹ்மஸ்ரீ; வே சாமிநாதையரவர்களால், திருவாவடுதுறைக் கோவைப்பதிப்பில், பிரபல ஆராய்ச்சியோடும் விளக்கப்பட்டுள்ளது. இது நிற்க. இம்முனிவர் இயற்றிய பிரபந்தத்திரட்டு என்னும் அரியபிரதியொன்று, நம் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் உள்ளது. இச்சங்கத்து அக்கிராசனாதிபதியும் தமிழருமையறிந்தவள்ளலுமாகிய ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்களால் பெரிதும் அருமை பாராட்டி அளிக்கப்பெற்ற ஏடுகளில் இஃதொன்று. இப்பிரபந்தத்திரடடில்,பல சிறிய நூல்கள் காணப்படுகின்றன. அவற்றுள், தொட்டிக்கலையிற் றிருக்கோயில் கொண்டுள்ள கேசவப்பெருமாள் விஷயமாக, இரட்டைமணிமாலை, வர்ணங்கள், ஆசிரிய விருத்தம், விருத்தம், உலா, தாய்மகள் விணுதல், கலிவிருத்தஅந்தாதி, கொச்சகக்கலிப்பா என்பவைகளும், ஷையூர் பெருந்தேவித்தாயார் விஷயமாக ஆசிரிய விருத்தம், ஊசல் என்பவைகளும், இம்முனிவரியற்றியனவாக உள்ளன. இதனால், சைவசமயப்பெரியாரில் ஒருவராகிய இம்முனிவர் திருமால்பத்தியும் சிறக்கவுடையர் என்பது நன்குவெளியாம். உண்மைப் பெரியோரெல்லாம் இங்ஙனம் இருத்தல் இயல்பன்றோ! ஷை பிரபந்தங்களுள்

முகவுரை.

இரட்டைமணிமாலையைத் தமிழகமறிந்து ஆனந்திக்குமாறு, இப்போது, "செந்தமிழ்" வாயிலாக வெளியிடத்துணிந்தேன். இதன் சொற்பொருணேக்கங்களின் சிறப்பு அறிஞர்க்குப் பெருமகிழ்வளிக்குமென்பது திண்ணம். ஆயினும், ஏனையரும் அவற்றை அறியவேண்டி, அவ்வப்பாடலின் அரும்பதம் விசேடமுதலியவற்றை, என்னறிவிற்கேற்ப, கீழ்க்குறிப்பில் வைத்து விளக்க முயன்றிருக்கிறேன். இம்முனிவர் இயற்றிய பிரபந்தங்களில் வெளிவராதனவற்றை, இவ்வாறே, உரியகாலத்தில் வெளியிட்டுவரவும் எண்ணமுடையேன்,

இங்ஙனம்,

மு. இராகவையங்கார்,

"செந்தமிழ்"ப் பத்திராசிரியர்.

கடவுள் துணை.

திருத்தொட்டிக்கலைக்

கேசவப்பெருமாள்

இரட்டைமணிமாலை.

———:(o):———

காப்பு.

மான்மேவுந் தண்டலைசூழ் வண்ணத் திருக்கலைசை
மான்மே லிரட்டைமணி மாலைசொல்—மான்மருகன்
கந்தனுக்கு முன்னுதித்த கந்தனுக்குஞ் செங்கழுநீர்க்
கந்தமதத் தந்திபதம் காப்பு.

[வெண்பா.]

நீர்பூத்த கந்தரத்தி னீல வடிவழகர்
சீர்பூத்த தென்கலைச்சீ தரனார்—தார்பூத்த
பின்னளகப் பின்னைதன்பூப் பிள்ளையமிர் துண்பதுபோ
லென்னைமணந் தார்வந் திரவு. (க)

[கலித்துறை.]

இருங்கேச வாதிருத் தொட்டிக் கலைநிதி யேமுகிலைப்
பொருங்கேச வாசுகம் போலுங்கண் ணாளொரு பூவையுன்றன்
மருங்கேச வாதணி மார்பேந் தியகுல்லை மாலைக்கிவ்வூ
ரொருங்கேச வாசையுற் றாளருளாசை யுடையவனே. (உ)

காப்பு:—

மால்-மேகம். தண்டலை - சோலை. உதித்த, அனுக்கும் என்னும் பெயரெச்சங்கள் தந்தி என்னும் பெயர்கொண்டன. பின்னதாகிய கந்தனுக்கும் என்பதைக் கந்து + அனுக்கும் எனப்பிரித்து, கட்டுத்தறியை முறிக்கும் எனப்பொருள் கொள்க.

நூல்.

க. கந்தரம்-மேகம். சீதரனார், பின்னிய கூந்தலையுடைய நப்பின்னையின் மணற் சிறுசோற்றை உண்டு திளைத்தமைபோல, இரவில் என்னைத் திளைத்தார்; என்றது-பிராட்டிசிற்றிலிழைத்துச்சமைத்த சிறுசோற்றைக் கண்ணன் பொய்யேஉண்டு விளையாடியது போல, என்னைக்கனவிற் பொய்யேகலந்தார் எனத் தலைவி இரங்கியபடி. நப்பின்னை, திருமகள் இருவர் சுகத்தையும் திளைத்தல் போல என்னை மணந்தார் என்பதுமாம்.

உ. கேசத்தை யுடைய பூவை (பெண்.) ஆசுகம்-அம்பு. குல்லை-திருத்துழாய். ஆசையுடையவன் - பீதாம்பரன். ஆசையுடையவன் ஆசையுற்றவட்கு அருளல் முறையென வேறுமொரு குறிப்புத் தொனித்தல் காண்க.

[வெண்பா.]

உடையாச் செறுந ருயிர்குடிக்கு மாழிப்
படையாண்ட செங்கைப் பரனைப்—புடையார்ந்த
கற்புரிசைத் தென்கலைசைக் கண்மாலைக் கண்டிவளு
மெற்புருக மாலானு ளின்று. (௩)

[கலித்துறை]

இன்னற் பிறப்பறுத் தின்னலங் காட்டு மெழிலரியைக்
கன்னற் கழனிக் கலைசைப் பிரான்றனைக் கைதொழுதோர்
மின்னற் புதமுறுங் கண்ணீர் சொரியும் விதிர்விதிர்க்கு
நென்னற் பொழுதுங் கனவிற்கண் டேனென்னு நெட்டுயிர்த்தே (௪)

[வெண்பா]

நெட்டிலஞ்சிக் கெண்டைகடாய் நீள்கரைமே லோங்கிநின்ற
மட்டிலஞ்சிப் போதுதிர்க்கு மாவளங்கூர்ந்—திட்டமுறும்
பூங்கலைசைக் கேசவமால் பொன்னடியைச் சென்னிமிசைத்
தாங்கினரே செய்தார் தவம். (௫)

[கலித்துறை]

தவளை குதிக்கத்தண் டேன்பாய் வயற்கலை சைக்குளிருந்
தவளைக் காதல னேமுல்லை யாய்ச்சியர் தாங்குறிவைத்
தவளை யெடுத்துண்ட செவ்வாய னேயிந்தத் தையனலத்
தவளை கவருதற் கோபருந் தூர்ந்தித் தலைவந்ததே. (௬)

[வெண்பா]

தேங்காவி மீதே சிறைவண் டுறங்கியநீர்
தேங்காவி சூழ்கலைசைச் சீதரனொந்—தேங்காவி
யாற்றியபா வத்தைநினை யாயுதமல் லால்வேறு
மாற்றுதற்குக் காணேன் மருந்து. (௭)

---

௩. உடையாச் செறுநர்-ஏனையரால் அழியாத பகைவர். உடைத்து எனக் கொள்ளினுமாம். புரிசை - மதில். மாலைக்கண்டி இவளும் மாலானுள் என ஒரு குறிப்புத்தொனித்தல் காண்க.

௪. கன்னல் - கரும்பு. ஓர்மீன்—எழுவாய்.

௫. இலஞ்சி - பொய்கை. மட்டு+இலஞ்சி = மதுவையுடைய மகிழ மரம்.

௬. எதுகைகளை, முறையே, இருந்த+வளை (பாஞ்சசந்நியம்) எனவும், குறிவைத்த+அளை (வெண்ணெய்) எனவும், நலத்த+வளை(மகளிர்கையணி) எனவும் சேர்த்துப்பிரித்துப் பொருள் கொள்க. ஈற்றடியில், பருந் தூர்ந்து வந்தது, தவளை கவர்தற்குப் போலும் என வேறொரு குறிப்புத் தொனித்தல் காண்க.

௭. இரண்டாமடியை, நீர்+தேங்கு+ஆவி(பொய்கை) எனவும், நொந்து+எங்கு+ஆவி (உயிர்) எனவும் பிரித்துப்பொருள் கூறுக. நின்+ஐயாயுதம்; அவை:—சங்கு, சக்கரம், வாள், தண்டு, சிலை.

[கலித்துறை]

மருந்தே விமானத்தி லேறுஞ் சுராரை வளர்கலைசை
யிருந்தேவி யாளு மிறையவ னேயென் னிடர்தவிர்ப்பாய்
முருந்தே விராவிருள் வெண்மூர லம்பக மொய்குழலாம்
பெருந்தேவி மாதை மணந்துல குண்ட பெருந்தகையே. (அ)

[வெண்பா]

கைவரையைக் காத்துக் கராவைக் கடிந்துகுடங்
கைவளைக்கு ளேழிசையுங் கண்டானே—யைவருக்குத்
தூதாதொட் டிக்கலைசைச் சுந்தரவிப் பைந்தொடிக்குத்
தாதாதொட் டித்துளவத் தார். (கூ)

[கலித்துறை]

தாவா தவரும் பொருளேவை குந்தத்திற் றங்குமுகுந்
தாவா தவரு மதியுஞ் செறிபொழிற் றண்கலைசைத்
தாவா தவரும் பருதியுஞ் சங்குந் தரித்தகைப்போ
தாவா தவரு மறியாப் பதத்தைத் தரவெனக்கே. (கo)

[வெண்பா]

கேசவா திக்குநிறை கீர்த்தித் திருக்கலைசை
வாசவா திக்குமனை மார்வசையே—பேசவா
காயமதி யோடுமதன் கைக்கருப்பு வில்கணையுங்
காயமதி சோருமின்னைக் கா. (கக)

அ. (உ, ங-ம்) அடியெதுகைகளை (சுரரை) இருந்து+ஏவி+ஆளும் எனவும், முருந்து (யயிலிறகடி) + ஏ (அம்பு) + இராவிருள் எனவும் பிரித்து, பிற்கூறிய முருந்து முதல் மூன்றற்கும்-வெண்மூரல் (பல்), அம்பகம் (கண்), மொய்குழல்களை நிரனிறையாகக்கொண்டு பொருள் கூறுக. பெருந்தேவி—பிராட்டி திருநாமம்.

கூ. கைவரை—கஜேந்திரன். கரா-முதலை. குடவளைவரை - உள்ளங்கையிற் கொண்ட வேய்ங்குழல். தா+தாது+ஒட்டு + இத்துளவத்தார் எனப்பிரிக்க. தார்தாஎன இயையும்.

கo. எதுகைகளை, முறையே, தா வாத (கெடாத)+அரும் : எனவும், முகுந்தா+ஆதவரும் (சூரியனும்) எனவும், தாவா (இடத்திலுள்ளவனே)+தவரும் (வில்லும்) எனவும், கைப்போதா+வா+தவரும்(தவசிகளும்) எனவும் கூட்டிப்பிரித்துப் பொருள் படுத்துக. மூன்றுமடியில் தாவு உறைவிடம். எனக்குத் தர வாஎன இயையும்.

கக. (சலைசை) வாச+வாதிக்கும் (துன்புறுத்தும்)+அனைமார் எனப் பிரிக்க. வசைபேசலாலும், மதியும் கணையும் காய்தலாலும் மதிசோரும் மின் (பெண்) என்க. மதிசோர்தல் - அறிவழிதல். தோழி இரங்கிக்கூறியது.

[கலித்துறை]

காயா மலரை நிகர்வண்ண னேதென் கலைசையில்வாழ்
மாயா மலரை யுடுக்கும்பொன் னம்பர மன்னவுன்னை
யோயா மலரை யிரவிலுஞ் சிந்தித் தொருத்திசொல்லுந்
தீயா மலரையுற் றுடன மேற்றனந் தேடிக்கொண்டே. (கஉ)

[வெண்பா]

கொண்டலே யொக்குங் குளிர்வடிவாற் றன்னகலங்
கண்டவெழின் மின்னுற் கவுத்துவத்தின்—விண்டகதி
ரண்டுதுழா யிந்திரவில் லாலதுபெய் தேன்மழையான்
மண்டுபுகழ்த் தென்கலைசை மால். (கங)

[கலித்துறை]

மாலைவிட் டோம்வன மாலையைப் பெற்றபின் வன்பிறவி
வேலைவிட் டோமுன்றன் வேலையைச் செய்தபின் வெய்யவிழிக்
காலைவிட் டோமுன்பொற் காலைத் தொழுதபின் காதிலிட்ட
ஓலைமட் டோடுங்கண் ணூர்வாழ்தொட் டிக்கலை யுத்தமனே. (கச)

[வெண்பா]

மனவா சகங்கடந்த வாரீசன் றாய்
மனவா சகங்கடந்த வாழ்வே—யினியடியேன்
காந்தளறு சேராமற் காத்தருள்வாய் தென்கலைசைப்
பாந்தளணை யானே பரிந்து. (கரு)

கஉ. இரண்டாமடியில், மல்+அரை=வளப்பமுற்ற இடை எனக்கொள்க; அதிலுடுக்கும் பீதாம்பரத்தையுடைய அரசனே. அரையிரவு—நடுக்காமம். தீயாம்+அலர்=கெட்டபழிச்சொல். ஒருத்தி உற்றுளென இயையும். பின்வரும் தனம்-பொன்: பசலை என்றபடி.

கங. தென்கலைசைத் திருமால்—வடிவாலும், மின்னுலும், இந்திரவில்லாலும், மழையாலும், கொண்டலே போல்வர். அகலம்-திருமார்பு. ஒருபொருளில், எழில்மின்—இலக்குமி; இந்திரவில் - உயர்ந்த ஒளி என்க. கௌஸ்துபமணியின் விரிந்தபலகிரணங்கள் படுதலால், திருத்துழாய் இந்திரவில் போன்றதென்பது கருத்து. மால் ஒக்கும் எனமுடியும். மால் என்பது மேகத்துக்கும் பெயராதலின், அம்மால் (மேகம்) வடிவு, மின் முதலியவற்றால் மேகம்போன்றது என வேறொரு நயம்பெறப்படுதலுங்காண்க.

கச. மால்-மயக்கம். வனமாலை-துளவமாலை. முதல்வேலை கடல். பின்வேலை கைங்கரியம். வெய்யவிழிக்காலை - தறுகண்மையுடைய யமனை; ஓலை-மகளிர்காதணி. மட்டு - எல்லை: உம்மை தொக்கது.

கரு. முதலடியை—ம (ன்)னவா+சகங்கள்+தந்த+வாரீசன் (பிரமன்) எனப்பிரிக்க. வாரீசம்-தாமரை. காந்து+அளறு - எரி வாய் நிரயம். பாந்தள் - ஆதிசேடன்.

[கலித்துறை]

துரங்கத்தி னூர்ப்புறந் தொட்டிக் கலைமது சூதனனே
தரங்கக் கடற்கு ளிலங்கா புரியினிற் றங்குமரக்
கரங்கத்தைப் பேயுங் கழுகுந் தினக்கொன்று கான்மரத்து
மரங்கத் தினும்பள்ளி கொள்ளும் பிரானுன் னடைக்கலமே. (கசு)

[வெண்பா]

அடுபடைவா ணன்சிரமீ ரைஞ்ஞூறு நேமிப்
படைதொட் டறுத்தருள்கோ பாலா—கொடிதெனைச்செ
யிச்சுதனைப் பெற்ற திசையலவே தென்கலைசை
யச்சுதனே பூமணவா ளா. (கஎ)

[கலித்துறை]

மணங்கொண்ட சோலைக் கலசா புரியின் மணிவண்ணனே
பணங்கொண்ட பன்னகப் பாயலைப் போற்பகு வாயரக்கர்
நிணங்கொண்ட வாழிப் படையுடை யாயிந்த நேரிழைதன்
குணங்கொண்ட கொங்கைக் குவட்டிலு நீபள்ளி கொண்டருளே. (கஅ)

[வெண்பா]

அருந்தமிழ்தேர் தென்கலைசை யாண்டகையே யும்பர்க்
கருந்தமிழ்தே ராயளித்த வையா—வரைந்தெவரு
நாட்டினகை யாதெனையா ணல்வரையை மத்தாக
நாட்டினகை யாமுகில்வண் ணா. (கக)

[கலித்துறை]

நானங் கமழுங் குழலணங் கேநலி யாதிருமோ
வானவில் லோடு முருமோடு மேகம் வருமுன்னமே
யானவில் லேந்திவெண் சங்கத் தொலிசெய் தருட்கலைசை
நீளிறத் தங்க முகில்வருங் காணன்பு நீருண்ணவே. (உ0)

முற்றும்.

கசு. துரங்கத்திளூர்ப்பு- குதிரை களினெலி. தரங்கம்-அலை. அரக்கர்+அங்கத்தை. கான்மரம் - ஆலமரம். அரங்கம் - ஆற்றிடைக் குறையான ஸ்ரீரங்கம் என்னுந் திருப்பதி.

கஎ. என்னைக் கொடுமை செய்கின்ற நின் மகன் : என்றது, திருமால் புத்திரனான மன்மதனைக் குறித்தபடி.

கஅ. பணம் - படம். பன்னகம்- ஆதிசேடன், நிணம் - கொழுப்பு. குணங்கொண்ட—குடத்தின் றன்மை கொண்ட.

கக. அருந்து+அமிழ்து+ஏராயளித்த எனவும், நாட்டில்+நகையாது எனவும், நாட்டின+கையா எனவும் எதுகைகளைப்பிரித்துப் பொருள் கொள்க. வரைந்து - தள்ளி.

உ0. நானம்-கஸ்தூரி. மோ முன்னிலையசை. உரும்-இடி. 'கார்ப்பருவம் வருவதற்கு முன்பே திருமால் நின்னையணையவருவன்; வருந்தற்க' எனத் தோழி தலைவியைத் தேற்றியவாறு.